

# திருக்கோயில்





திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சட்டமேலவைத் தலைவர் மாண்புமிகு *ம.பொ. சிவஞானம்* அவர்கள் தலைமையில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு *இராம. வீரப்பன்* அவர்கள், 98 இலவசத் திருமணங்களை நடத்திவைத்தார்கள். அவ்விழாவில் திருத்தணிகைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. பேரம்பாக்கம் *இரா. சண்முகம்*, M.L.A., சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் திரு. *சி. கோபால்* M.L.A., அறநிலைய ஆணையர் திரு. *யு. சுப்ரமண்யம்*, I.A.S., உயர்நீதிமன்ற நீதிபதி மாட்சிமிகு *செங்கோட்டுவேலன்*, தவத்திரு *குருஜி சுந்தரராமன்*, தவத்திரு *சுந்தர சுவாமிகள்* திருமுருக *கிருபானந்தவாரியார் சுவாமிகள்*, அறங்காவலர் குழுத் தலைவர் திரு *பி. ஜோதி*, உதவியாணையர் நிர்வாக அதிகாரி திரு *வை. சுப்பையன்*, முதலிய பெருமக்கள் பலர் கலந்துகொண்டனர். (5.10.81)







பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் 10.9.81 அன்று நடத்தப்பெற்ற இலவசத் திருமணவிழாவில், மணமக்கள் காட்சி.



பதிவு எண். எம் 7039



அமெரிக்க நாட்டில், நம் பாரதநாட்டுப் பண்பாட்டின் சின்னமாகத் ''தாமரை ஆலயம்'' என்னும் அருட்பெருஞ்சோதி வழிபாட்டுக் கோயிலைச் சுமார் 2 கோடி ரூபா செலவில் அமைத்து வருபவரும், சர்வசமய சமரசப் போதகரும், தமிழகப் பெருஞ் சான்றோருமாகிய, தவத்திரு சுவாமி சச்சிதானந்தா அவர்களுக்கு, திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் கோயிலின் சார்பாக அளிக்கப்பெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன் I.A.S., அவர்களும், கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துதல் (21.10.1981).



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.

முகப்பு

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயிலின் அழகிய
தங்க விமானக் காட்சி.

ர்களின் அடி, என்
சை இராசராசப்
ம், நம்கோயில்
வளர்த்து வர
டமையையும்

# திருக்கோ

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M..

மாலை : 23 & 24 || திருவள்ளுவர் ஆண்டு 2012, துன்மதி ஆண்டு—புரட்டாசி & ஐப்பசி [செப்டம்பர் & அக்டோபர் 1981] ரூ. 2-50 || மணி : 12 & 1

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

*திருக்கோயில்* திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

சமுதாய வளர்ச்சியில் ஆலயங்கள் ஆற்றும் அரும்பணிகள்
—அறநிலையத்துறை அமைச்சர்

உயர்வடைய ஒரு வழி
—திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

சிவம் குருவாய் உணர்த்துதல்
—டாக்டர் திருமதி இராதா தியாகராசன், M.A.Ph.D.

தமிழ்க் கல்வெட்டுக்களில் மருத்துவம்
—டாக்டர் சா. குருமூர்த்தி, M.A.,M.Litt.,Ph.D.

தாயுமானவர் காட்டும் தனிப்பெரு நெறி
—திரு சி. அருணைவடிவேலு முதலியார்

சிவஞானபோதத் தெளிபொருட் பதவுரை
—திரு ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

சிந்தாமணியில் ஒரு செய்யுள்
—பேராசிரியர் திரு செ. வேங்கடராமச் செட்டியார்

வாழ்வின் அடிப்படை
—கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்

அறத்தின் பெருமை
—திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

ஆடவல்லானின் அழகிய செப்புத் திருமேனிகள்
—திரு க. சி. கமலையா

இடும்பைக்கு இடும்பை
—திரு கி. வா. ஜெகந்நாதன், M.A.

கந்தபுராணக் கவிதைநலம்
—திரு ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

சைவ சித்தாந்த தத்துவம்
—புலவர் திரு சி. கந்தசாமி

கம்பன் காட்டும் கடவுள் நெறி
—திரு கோவை அ. கிருஷ்ணசுவாமி

இசையும் கோயிற் சிற்பங்களும்
—டாக்டர் மெ. சுந்தரம், M.A.,M.Litt., Ph.D.

உலகியலில் இறைமை
—டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்,M.A.,Ph.D.

கலையும் சமயமும்
—டாக்டர் சி. கிருஷ்ணமூர்த்தி, M.A.,Ph.D.,

# சமுதாய வளர்ச்சியில் ஆலயங்கள் ஆற்றும் அரும்பணிகள்*

*அறநிலைய அமைச்சர்*

மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்

'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில், தமிழக அரசு என்னென்ன திட்டங்களைத் தமிழகம் வளர்வதற்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்று விளக்குகிற வரிசையில், 'சமுதாய வளர்ச்சிக்கு ஆலயங்கள் ஆற்றும் பணிகள்' பற்றி, விளக்குகிற பொறுப்பை எனக்களித்திருக்கின்றார்கள்.

கல்வி, மருத்துவம், தொழில், வேலை வாய்ப்பு, வேளாண்மை, ஏழ்மையைப் போக்குதல், போன்ற பணிகளில் திட்டமிட்டு, தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் தலைமையில் ஆற்றிவரும் அரும் பணிகளை விளக்க வேண்டிய தலைப்பில், ஆலயங்கள் ஆற்றும் பணி பற்றி எடுத்துச் சொல்வது, ஒரு புதிய கோணத்தில், சமுதாயத்திற்கு அரசு ஆற்றும் பணி, ஆலயங்களின் மூலம் எப்படி நிறைவேற்றப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

ஆலயங்கள் என்பதும், ஆன்மீக நெறி என்பதும், சமுதாய வாழ்க்கைக்கு அப்பாற்பட்டது என்கிற கருத்து எடுத்து வைக்கப்படுகிற இந்தக் காலத்தில், ஆன்மீக நெறியும், ஆலயங்களின் பணியும் சமுதாயத்தோடு இயைந்ததுதான் என்பதை எடுத்துக் காட்ட வேண்டிய கடமையும் எனக்குத் தரப்பட்டுள்ளது. ஆராய்ச்சி அறிவும், ஆன்மீக நெறியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்ல. ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டு நிலைத்து நிற்கிறது என்ற கருத்து, நீண்டகாலமாக இருந்து வருகிறது. உலகம் இயங்குவதற்கு அடிப்படை ஆதாரம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்கள்தான் என்ற கருத்து, ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னால் ஆன்மீக நெறியாளர்கள் சொன்ன கருத்துத்தான்; அது இன்று வரை ஆராய்ச்சியாளர்களால் விஞ்ஞானிகளால் அடிப்படையாகப் போற்றப்பட்டு வருகின்றது. ஆன்மீக நெறியாளர்கள் சொன்னதற்கும் மேலாக, ஆறாவது அடிப்படைப் பொருள் இருப்பதாக இதுவரை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்கவில்லை. விஞ்ஞானம் தோல்வியுறுகிற இடத்திலிருந்து ஆன்மீக உணர்வு ஆரம்பமாகிறது. விஞ்ஞானத்திற்குச் சந்தேகம் தோன்றுகிற இடத்திலிருந்து ஆன்மீக உணர்வு பிறக்கிறது என்ற கருத்தும் வழங்கப்படுகிறது.

எனவே, இறைவழிபாடு அல்லது ஆலய வழிபாடு என்பது, மனித சமுதாயத்தில் ஆதி காலந்தொட்டே ஏற்பட்டுவிட்ட ஒன்று என்பது, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்தகைய இறைவழிபாட்டுக்கும், தமிழன் தான் ஒரு நல்வழிகாட்டி. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற இலக்கணத்தைத் தமிழனே வகுத்திருக்கிறான்.

சுமார் 3,000 ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியம் என்னும் தமிழ்ப் பெரும் இலக்கண நூலில், 'கோயில்' என்னும் சொல்லுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அக்கோயில்களில் தெய்வத் திருவுருவங்களான 'படிமைகள்' என்னும் விக்கிரகங்கள் வைத்து வணங்கப் பெற்று வந்தமை பற்றிய குறிப்பும், தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. அரசனும், மக்களும் மேற்கொள்ளுதற்குரிய பணிகளுள், அறநிலையங்களையும், அவற்றில் நடைபெறும் அறச்செயல்களையும், அவைகள் சரியாக நடைபெறுகின்றனவா ? என்று மேற்பார்வையிட்டுக் கண்காணித்துப் பாதுகாப்பதற்குரிய கடமையாக 'அறப்புறங்காவல்' என்னும் தலைப்பில் தொல்காப்பியம் சிறப்பாகக் கூறுகின்றது.

உலகிலேயே கட்டிடக் கலையில் ஒப்பற்றவர்கள் என்ற பெருமையையும், கோபுரம் கட்டுவதில் தலை சிறந்தவர்கள் என்ற பெரும் சிறப்பையும், ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தில் தமிழகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிற அளவுக்கு, நமது முன்னோர்கள் நமக்கு ஆலயங்களின் மூலம் அரும்புகழை ஈட்டித் தந்துள்ளனர்.

---

* "வளரும் தமிழகம்" என்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள், 4-10-1981 அன்று மாலை, சென்னை வானொலியில் நிகழ்த்திய சிறப்புரை.

தொன்றுதொட்டே தமிழ்நாட்டில், அறநிலையங்களாகிய திருக்கோயில்கள், பொது மக்களின் சமுதாய வாழ்க்கையில், பலதுறைகளில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்ந்து வருகின்றன. பண்டைக்காலம் முதலே தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் இறைவழிபாட்டுத் தலங்களாக மாத்திரமின்றி, அறிவு புகட்டும் கல்விக் கூடங்களாகவும், நடனம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளை வளர்க்கும் பல்கலைக் கழகங்களாகவும், விளங்கி வந்துள்ளன. மேலும், அவைகள் நூலகங்களாகவும், நீதிமன்றங்களாகவும் இருந்து வந்திருக்கின்றன. ஆவணக் காப்பகங்களாகவும், அறச்சாலைகளாகவும் பயன்பட்டன. பிணியாளர்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்கிப் பணிபுரிந்தன; தம்மைச் சார்ந்துள்ள மக்களுக்குப் பலவகைத் தொழில்தரும் நிறுவனங்களாக இயங்கிவந்தன. இக்காலத்தில் உள்ள வங்கிகளைப் போன்று, அவைகள் பணம் கொடுத்தும், வாங்கியும், பொதுமக்களுக்கு உதவி புரிந்தன. போர்க் காலத்தில் பாதுகாப்பு அரணாகவும், படைவீடுகளாகவும் பயன்பட்டன. இதனால்தான் நமது தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள், 'அறநிலையங்கள்' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றன. கோயில்களை மையமாகக் கொண்டே, தமிழ் மக்களின் சமுதாய வாழ்க்கை அமைந்துள்ளது.

இத்திருக்கோயில்களுக்குப் பெருவேந்தர் பலரும் ஆர்வத்தோடு திருப்பணிகள் செய்தனர்; நன்கொடை, மானியங்கள், நிவந்தங்கள் அளித்தனர். ஆங்கிலேயர்கள் பலரும்கூடத் திருப்பணிகளைச் செய்து, நன்கொடைகளை வழங்கியுள்ளனர். திருப்பணி செய்வதன் சிறப்பையும், கடமையையும் விளக்கும் முறையில் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் தென்காசிக் கோயிலைக் கட்டுவித்த அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்பவன், தான் 17 ஆண்டுகள் அரிதின் முயன்று, சிற்பக்கலை நலம் பெரிதும் சிறக்கக் கட்டிய கோயிலைப் பற்றித் தன் மரணப் படுக்கையிலிருந்து பாடிய பாடல், கருங்கல் மனத்தையும் கரைக்கவல்லதாகும்.

''இத்தென்காசி ஆலயம், என் ஆற்றலை மட்டும் நம்பிக் கட்டப்பட்டதல்ல. தெய்வச் செயலாலே அமைந்தது. இதனை இன்னும் விரிவு செய்து, போற்றுகின்ற பெருமக்களை, அவர்களின் திருவடிகளிலே விழுந்து நான் வணங்குகின்றேன்'' என்னும் பொருள்படும்படி,

''சேலே றியவயல் தென்காசி
ஆலயம் தெய்வச்செய
லாலே சமைந்தது;இங்கு என்செயல்
அல்ல; அதனை இன்னும்
மேலே விரிவுசெய் தே,புரப்
பார் அடி வீழ்ந்து,அவர்தம்
பால்ஏவல் செய்து பணிவேன்;
பராக்ரம பாண்டியனே''

எனத் தென்காசி விசுவநாதர் கோயிலைக் கட்டிய பராக்கிரம பாண்டியன் பாடிய உருக்கம் மிகுந்த கல்வெட்டுச் செய்யுளும்,

''இந்த அறம் காப்பவர்களின் அடி, என் முடிமேலது'' என்று கூறும் தஞ்சை இராசராசப் பெருவேந்தருடைய கல்வெட்டும், நம்கோயில்களை நாம் போற்றிக் காத்து வளர்த்து வர வேண்டிய பொறுப்பையும், கடமையையும் நமக்கு உணர்த்துகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது, கோயில்களை நிர்வகித்து வந்தவர்களில் பலர், ஆலயங்களின் வருவாயை நன்முறையில் பயன்படுத்தாமல், வீணடிப்பதை அறிந்து, அரசாங்கமே அறநிலையங்களில் தலையிட முற்பட்டது. எனினும் சமயச்சார்பு வாய்ந்தவர்கள், அச்சமய நிறுவனங்களை நிருவகித்து வந்தால்போதுமென்று, பிறகு கருதினார்கள். அப்போதும் பலன் ஏற்படவில்லை. இப்படிப்பட்ட இடையூறுகளுக்குப் பின்னால் அறநிலையங்கள் நல்லமுறையில் இயங்கவும், பொதுச் சொத்துக்கள் காக்கப்படவும், ஆலயங்களில் வழிபாடுகள் முறையாக நடத்தப்படவும், விதிமுறைகளும், சட்டங்களும் இயற்றப்பட்டு, அறநிலையத்துறை அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

இன்று தமிழக இந்து சமய அறநிலையத் துறையின் ஆணைக்குட்பட்ட ஆலயங்கள், அறநிலையங்கள் சுமார் 33,620 ஆகும். இந்த அறநிலையங்களுக்குச் சொந்தமான நஞ்சை புஞ்சை நிலங்கள் 5 லட்சம் ஏக்கர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை தவிர ஆயிரக்கணக்கான கட்டிடங்கள், காலி மனைகள் உடைமைகளாக உள்ளன. இவ்வளவு சொத்துக்கள் இருந்தும், அறநிலையங்களின் ஆண்டு வருமானம் சுமார் 16 கோடி ரூபாய்தான். இதில் பத்து ஆலயங்களில் மட்டும் சுமார் 5.5 கோடியும், 100 கோயில்களில் சுமார் 2.5 கோடியும் வருமானம் வருகிறது. இது தவிர இவ்வளவு பெரிய சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் சுமார் 8 கோடிதான்.

இவ்வளவு சொத்துக்கள் இருந்தும், வருமானம் முறையாக வராததற்குக் காரணம், ஆலயச் சொத்துக்களை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள், நியாயமான நிலக்குத்தகைகளை, கட்டிடம், மனை வாடகைகளைக் கொடுக்காமல் இருப்பதுதான் என்பதை, வருத்தத்துடன் பொதுமக்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிகிறேன். என்றாலும், கடந்த மூன்றாண்டுகளில், கடினமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வருமானத்தை உயர்த்துவதற்கான செயல்முறைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வளவு நெருக்கடிகளுக்கிடையேயும், கடந்த மூன்றாண்டுகளில் அறநிலையத்துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சுமார் 150 ஆலயங்களில் திருப்பணி முடிந்து, குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. மேலும் சுமார் 1,416 திருப்பணிகளுக்கும், 1,153 இதர வேலைகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டு, சுமார் 20 கோடி ரூபாய் மதிப்புள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவை தவிர, அறநிலையத்துறையின் கீழ் இயங்கி வரும் கல்வி நிறுவனங்கள்—44. பெண்கள் தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளி—1. அன்பு இல்லங்கள்—50, மருத்துவ மனைகள்—24. இவை தவிர, ஆன்மீக நூல் வெளியீடுகள், நாதசுரம் தவில் பயிற்சிப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. பெரிய ஆலயங்களில் ஆண்டுக்கு 15 இலட்சம் ரூபாய் செலவில், சுமார் 2,000 ஆதித்திராவிட, ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட மணமக்களுக்கு இலவசமாகத் திருமணங்களை நடத்தும்திட்டம் நிறைவேற்றப் படுகிறது. அக்டோபர் 5-ந் தேதியில் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் சார்பில் 101 மணமக்களுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்படவிருக்கிறது. சாதி வேறுபாடுகளை ஒழித்துச் சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்துகிற—இடமும் ஆலயங்கள்தான்; ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற தத்துவமும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையொட்டித்தான், கடந்த ஆகஸ்ட் 15-ம் நாளன்று தமிழகம் முழுவதும் சுமார் 5,000 திருக்கோயில்களில் 10 லட்சம் மக்கள் கலந்து கொண்ட சாதிவேறுபாடற்ற பொது விருந்தும், சிறப்பு வழிபாடும் நடத்தப்பட்டது.

இவைகள் அனைத்தும் சமுதாயவளர்ச்சிக்கு அறநிலையங்கள் ஆற்றும் பணியாகும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோயில்களுக்குத் திருப்பணி தேவையா? என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். கோயில்களின் திருப்பணி என்பது, நமது முன்னோர்கள் ஏற்படுத்திய கலைச் செல்வங்களாம் ஆலயங்களைக் காப்பாற்றுவது மாத்திரமின்றி, திருப்பணியின் மூலம் செலவிடப்படும் கோடிக் கணக்கான ரூபாய்களில் பெரும்பகுதி கட்டிட, சிற்பக் கலைஞர்கட்கு வாழ்வளித்து, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் சமுதாயப் பணி என்பதையும், நாம் மறந்துவிடக் கூடாது.

இவை தவிரத் தமிழகம் முழுவதும், சிற்றூர் பேரூர்களிலெல்லாம் எங்கெங்கே வசதி இருக்கிறதோ, அந்த ஊர்களில் எல்லாம், ஆலயங்களின் சார்பில் திருமணக்கூடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளன.

ஆதிதிராவிட மக்கள் தாங்கள் வாழும் குடியிருப்புப் பகுதியில், கிராமக் கோயில்கள் வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கின்றனர். அத்தகைய கோயில்களை அறநிலையத்துறையின் சார்பில் கட்டிக் கொடுக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக, மாண்புமிகு புரட்சித்தலைவர் தலைமையில் இயங்கி வரும் 'அண்ணாவின் அரசு' அறநிலையங்கள் மூலமாகவும், தமிழகத்தின் மரபுப்படி, சமுதாயப் பணிகளை நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

---

## நாம் வணங்கும் கடவுளார்!

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து,
தரணியொடு வான்ஆளத் தருவ ரேனும்,
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்!
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்;
அங்கம்எலாம் குறைந்தஅழுகு தொழுநோயராய்,
ஆஉரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்,
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே!

—திருநாவுக்கரசர்

# உயர்வடைய ஒரு வழி

''அருள்மொழியரசு''

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

நாம் எல்லோரும் உயர்ந்திருக்க வேண்டும், நம் வாழ்வு உயரவேண்டும் என்றுதான் கருதுகின்றோம். ஆனால் உயர்வு பெற்றவர்-பெறுகின்றவர் ஒரு சிலரேயாவர். அதற்கு என்ன காரணம்? உயர்வு அடையவேண்டும் என்று எண்ணுகிறோமேயன்றி அதற்குரிய வழிவகைகளை நாம் நன்கு சிந்திக்கின்றோமில்லை. சிந்தித்து அதனைச் செயல்முறையில் கொண்டு வருகின்றோமில்லை.

நாம் உயர்வு பெறவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? பணத்தினால் உயர்ந்தவர்களும், படிப்பினால் உயர்ந்தவர்களும், குலத்தாலும் பிறநலத்தாலும் உயர்ந்தவர்களும் உலகம் போற்றும் உயர்வு பெறுகின்றார்களில்லை. ஆகவே பணமும் குலமும் பதவியும் நமக்கு நிச்சயமாக உயர்வைத் தரமாட்டா. எனவே அவைகளை உயர்த்தும் முயற்சியுடன் நாம் நின்றுவிடக்கூடாது.

வேறு என்ன செய்தால் விரைவில் உயர்ச்சி பெறலாம் என்று அறிவுள்ளவர்களுக்குத் தோன்றும். நமது உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வு பெறமுடியும்.

ஒரு குளத்தில் பத்து அடி ஆழம் தண்ணீர் இருந்தது. அதில் உள்ள தாமரைத் தண்டின் நீளமும் பத்து அடி இருக்கும். அத்தண்டினை நீளப்பண்ணவேண்டுமாயின் இரு பயில்வான்கள் இருபுறமும் பிடித்து நீட்டக்கூடாது. அது முறையன்று. தாமரைத் தண்டின் நீளம் அதிகமாக வேண்டுமாயின் அதற்கு வழி யாது? மழை பொழிந்தது. குளத்தின் தண்ணீர் இன்னும் பத்து அடி உயர்ந்துவிட்டது. எனவே உள்ளம் உயர உயர நமது உயர்வும் வளரும். இந்த அருமையான கருத்தை நமக்குத் திருவள்ளுவர்,

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய(து) உயர்வு.

என்று அழகாக அறிவிக்கின்றார். இனி உள்ளம் எவ்வாறு உயரும்? என்று சிந்தித்தல் வேண்டும்.

நம்மை நாமே சோதித்துப் பார்க்கும் வழக்கம் ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும். அது அநேகரிடம் இல்லை. சட்டைப்பையில் மணி பர்சு இருக்கின்றதா? என்று அடிக்கடி சோதித்துக் கொள்கின்றோம். பெட்டியில் வைத்த சாமான்கள் இருக்கின்றனவா? என்றும் சோதித்துப் பார்க்கின்றோம். நம்மை மட்டும் இன்னும் சோதித்துப் பார்க்கவில்லை. காந்தியடிகள் கடைசிவரை தன் வாழ்க்கையையும் சத்தியத்தையும் சோதித்துக் கொண்டேயிருந்தார். அதனால் அவர் வரலாற்றுக்குச் **சத்திய சோதனை** என்று பேர் உண்டாயிற்று.

அநேகர் மனைவியைச் சந்தேகித்து அவளைச்சோதிக்கின்றார்கள். மனைவி கணவனைச் சோதிக்கின்றாள். பணியாளைச் சோதிக்கின்றார்கள். ஆனால் தன்னைச் சோதிப்பதில்லை. அன்பர்கள் நன்கு கவனியுங்கள். அப்படி நம்மை நாமே சோதிப்பதனாலே உளத்தில் உள்ள மாசுகள் நீங்கிப் புனிதம் உண்டாகும். முதலில் நம் உள்ளத்தில் என்ன இருக்கின்றது? என்ன இருக்க வேண்டும் ? என்ன அகல வேண்டும்? என்று சோதிக்க வேண்டும்.

உயிரோடு கூடி வாழ்கின்றவன் யார்? மூச்சு விடுவதனாலும் நடமாட்டம் இருப்பதனாலும் ஒருவன் உயிர் வாழ்கின்றவனாக ஆகமாட்டான். அன்பு நிறைந்த உள்ளம் படைத்தவனே உண்மையாக உயிர் வாழ்க்கையுடையவனாவான். அன்பில்லாதவன் எலும்பின்மீது தோல் போர்த்த ஒரு பொம்மையேயாகும்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

என்கிறார் திருவள்ளுவர். அன்பு என்றால் என்ன? அதன் சொரூபம் எது? என்று எண்ணி நுணுக்கமாகச் சிந்திப்போமாக.

தொடர்புடையார் மாட்டு உள்ளத்தில் நிகழும் விருப்பத்திற்கு அன்பு என்று பலர் கருதுகிறார்கள். அது பிழை. தொடர்புடைய மனைவி மக்கள் நண்பர் முதலியோர்களிடம் பயன் கருதி வைக்கும் விருப்பத்திற்கு ஆசை என்று பெயர். அது அன்பாகாது. மனைவிக்கு உயர்ந்த ஆடை அணிகலன்கள் எடுத்துக் கணவன் தருகின்றான். அது அன்பினாலன்று.

தான் கண்டு மகிழவேண்டும் என்ற பயன் கருதிச் செய்வதினால் அது ஆசையேயாகும். அது படியே மகனை நன்றாகப் படிக்கவைக்கின்றான். முதுமைப் பருவத்தில் அவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற நோக்கத்தினாலேயே செய்வதனால் அதுவும் அன்பாகாது. நண்பர்களுக்கு விருந்து வைக்கின்றான். அவர்கள் தன்னை மெச்சிப் புகழ வேண்டும் என்ற நோக்கமே யாதலின் அதுவும் அன்பு அன்று.

பயன் கருதாமல் செய்கின்ற செயலே அன்பாகும். பலர்கோயிலுக்குப் போய்க் கடவுளைத் தொழுவதும் அன்பினாலன்று. கடவுள் நமக்கு வியாபார வளர்ச்சியும், புத்திரப்பேறும், உத்தியோக உயர்வும் தருவார் என்ற நோக்கத்தோடே கோயிலில் கடவுளை வழிபடுகின்றார்கள். ஆகவே அது அன்பு வழிபாடன்று. ஆசை வழிபாடேயாகும்.

''ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்''

எனவே கடவுளிடத்தும், மனைவி மக்களிடத்தும் நண்பர்களிடத்தும் நமக்கு ஆசையிருக்கக்கூடாது. அன்பு இருக்க வேண்டும். இப்போது நீங்கள் உள்ளத்தைச் சோதித்துப் பாருங்கள். நம் உள்ளத்தில் அன்பு இருக்கின்றதா? ஆசையிருக்கின்றதா? என்பதை. அன்பு பிறவியைக் கெடுக்கும். ஆசை பிறவியைக் கொடுக்கும். ஆசை நிறைந்த உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் விளையமாட்டா. ஆசையுள்ள இடத்தில் கோபம் வரும். கோபத்தினால் மயக்கம் வரும். ஆசையைக் கூடுமானவரை களைந்து எறிய வேண்டும். திடீர் என்று ஒரே நாளில் எல்லா ஆசைகளையும் விட்டுவிடமுடியாது. ஒவ்வொன்றாக விடவேண்டும் பணத்தின்மீது ஆசை; புகழ் மீது ஆசை; சிலர் தன்னைப் பற்றிச் செய்தித்தாளில் வந்தால் அதைக் கத்தரித்து எடுத்து வைத்துக் கொண்டு பலருக்கும் காட்டுவார்கள். ஏன்? பெருமையில் ஆசை. இவ்வாறு பல வழியிலும் உள்ள ஆசைகளைச் சிறிது சிறிதாக விடுத்து உள்ளத்தை உயர்த்த வேண்டும்.

''அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல் வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு''

ஆசையால் அநேக அல்லல் விளையும் துன்பங்பங்கள் அத்தனையும் ஆசையினாலேயே உண்டாவதால் ஆசையை யகற்றுந் தோறும் துன்பம் அகலும்.

''அவா வில்லார்க் கில்லாகுந் துன்பம் அஃதுண்டேல்
தவா அது மேன்மேல் வரும்''

''யாதனில் யாதனில் நீங்கியான் நோதல்
அதனில் அதனில் இலன்''

என்ற பொதுமறை வாக்குகளால் அறிக.

இனி தொடர்புடையார் மாட்டுப் பயன் கருதாமல் வைக்கும் விருப்பத்திற்கு அன்பு என்று முன்னே சிந்தித்தோம். அந்த அன்பு தூயது. மனைவியின்பால் பயன் கருதாமல் அன்பு வைக்க வேண்டும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆண்டவனிடத்தும் பயன் கருதாமல் அன்பு செய்ய வேண்டும். அன்புடையவர் நமது அன்பையும் பிறர்க்குப் பயன்படுமாறு புரிவர். அன்புடையார்தான் உண்மையான மனிதர். ஆசையுடையவர் மனிதவிலங்குகள், அன்பு வளர்ந்து வெள்ளமாய் ஊற்றெடுத்து ஓட வேண்டும். அன்பிலிருந்து அருள் பெருகும்.

அன்புக்கும் அருளுக்கும் என்ன வேறுபாடு? அன்பு என்பது தொடர்புடையார் மாட்டுப் பயன் கருதாமல் வைக்கும் விருப்பம். அருள் என்பது தொடர்பில்லாதவர்களிடத்தில் வைக்கும் கருணை. அழுகின்ற தன் குழந்தைக்குத் தாய் பால் தருகின்றாள். அது அன்பு. தெருவில் அழுகின்ற வேற்றுக் குழந்தையை எடுத்து அணைத்துப் பாலும் பழமுந் தந்தால் அது அருளாகும்.

தொடர்புடைய நண்பனுக்கு ஒரு சிறிதும் பயன் கருதாமல் செய்யும் உதவி அன்பின்பாலா னதாகும். தெருவில் உணவும்உடையும் இன்றிக் கோடைப்பயிர்போல் வாடி நிற்கும் ஒருவனுக்கு அவன் கேளாமுன் குறிப்பறிந்து உண்டியும் உடையும் தந்து கடமையுணர்ச்சியுடன் செய்கின்ற உபகாரம் அருளாகும். இந்த அருளுடையார் தெய்வமாக நின்று உலகம் போற்ற விளங்குவார்.

ஆசையுடையார்-விலங்கு
அன்புடையார்-மனிதர்
அருளுடையார்-தேவர்

அருளுடையவர்களே கடவுளைக் காண்பார். இந்த அருட்கண் கொண்டு பார்த்தால் உலகமெல்லாம் கடவுள் சொரூபமாகத் தோன்றும்.

அருளால் எவையும் பார் என்றான் அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்டதல்லால்-கண்ட
என்னையுங் கண்டிலன் என்னேடி தோழி.

என்கிறார் தாயுமானவர். அருட்கண் கொண்டு செய்கின்ற செயல்களுக்குக் கோடி மடங்கு உயர்வு பெறுகின்றது. நாம் ஒரு வறியவனுக்கு அன்பால் செய்கின்ற உதவியிலும் அருளால் செய்கின்ற உதவி அளவற்ற உயர்வுடையதாகும்.

அவன் ஒரு மனிதன். ஏழை; நாம் அவனுக்கு உபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் செய்கின்ற உதவியைக் காட்டிலும், அந்த ஏழை உள்ளத்தில் கடவுளைக் கண்டு அவன் கடவுளுடைய ஆலயம். அவனுக்குச் செய்யும் உதவி கடவுளுக்குத் தந்த காணிக்கையாகும்

என்று செய்வது எத்துணை புனிதமானது என்று சிந்தியுங்கள். நாம் உபகரித்தோம் என்ற எண்ணமே அங்கு தலைகாட்டாது. அவன் தாழ்ந்தவன், நான் உயர்ந்தவன் என்ற மமதை உணர்ச்சிக்கும் அங்கு இடமில்லை. ஒரே அருளுணர்ச்சிதான். அருள் சேராத நெஞ்சினர்கள் இருள் மிகுந்த துன்பவுலகிலே சென்று வேதனைப்பட்டு வெதும்புவர். இறந்த வுடனே நம்முடைய வாழ்வு முடிந்துவிட்டது என்று யாரும் எண்ணிவிடக்கூடாது. தூல வுடம்பு நீங்கியபின் சூக்கும உடம்போடு உயிர், தான் செய்த நல்வினை தீவினைகட்கு ஏற்ப இன்ப துன்ப உலகங்களை யெய்திச் சுகதுக்கங் களை அனுபவிக்கின்றன.

அருளுடையார்க்கு இருளுடைய துன்ப வுலகம் எய்தாது என்று முன்னே தான் கூறிய கருத்து திருவள்ளுவருடைய கருத்தாகும்.

''அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை, இருள் சேர்ந்த இன்னாவுலகம் புகல்.''

இதனைப் பலமுறை படியுங்கள். ஆழ்ந்து சிந்தி யுங்கள். உங்கள் உள்ளம் அன்பாலும் அருளா லும் உயரும்.

அருளில்லாததால் துன்பவுலகம் புகுவார் என்ற கருத்தை, நேரே அவ்வாறு கூறாமல் அருளுடையார் துன்பவுலகம் புகமாட்டார் என்று அருளோடு கூறுகின்றார் வள்ளுவர். அருளுடையார் துன்பவுலகம் புகார் என்றத னால் அருத்தாபத்தி நியாயத்தால் அருள் இல் லாதார் துன்பவுலகம் புகுவார் என்று உறுதி யாகின்றது.

இந்த அருளின் உச்சியில் பழுப்பது தியாகம் என்பது. அருளுடையார் தமது சொல், செயல் தமது உடைமை எல்லாவற்றையும் தியாகம் புரிந்துவிடுவார். தியாகம் புரிந்தோம் என்ற எண்ணத்தையும் தியாகம் செய்வார். இறுதி யில் தம்மையே தியாகம் புரிவார். அவர்களு டைய தியாகத்தால் உலகமெல்லாம் உயர்ந்து இன்புறும்.

இத்தகைய தியாக மூர்த்திகளால் நம் நாடு முன்னேறியவுது. இன்னும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. வறுமையுற்ற புலவனுக்குத் தன் தலையைச் சேதித்துத் தர முயன்ற குமணனின் தியாகமும், அரிதிற் பெற்ற நெடு நாள் வாழச் செய்யும் அருநெல்லிக்கனியை ஒளவையாருக்குத் தந்த அதியமானுடைய தியாகமும், உயிருக்கு உறுதி தந்திருந்த கவச குண்டலங்களை மாற்றான் தந்தையாகிய இந்திரனுக்கு வழங்கிய கர்ணனுடைய தியாக மும், பணபாத்திரருக்குத் தன் கருவூலத்திலி ருந்த நவநிதிகள் அத்தனையும் பொதி செய்து அனுப்பிய சேரமான் பெருமாள் நாயனா ருடைய தியாகமும், என்றும் நின்று இந்த நாட்டில் அணி செய்கின்றன.

இவைகளை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. பணத்தாலும், படிப்பினாலும், குலத் தாலும், பதவியினாலும், அழகினாலும், உய ரத்தினாலும், கனத்தாலும் ஒருவன் பெருமை யடைய முடியாது. தியாகம் ஒன்றாலேயே பெருமையடைய முடியும். தனக்கென்று வாழ் கின்றவன் சிறியவன். பிறர்க்கென்று வாழ்கின் றவன் பெரியவன். தனது சொல், செயல் உடைமை எல்லாம் பிறருக்கே அர்ப்பணஞ் செய்து விட்டுப் புகழையும், புண்ணியத்தையுங் கூட விரும்பாமல் தியாகம் புரிந்து வாழ்கின்ற வர்களே நாட்டைக்காக்கும் நல்ல வைரத் தூண்களாவார்கள்.

சொல்லிலும் செயலிலும் தன்னல மிருக்கக் கூடாது. பொதுநலம் பேண வேண்டும். கடவு ளிடத்தில் வேண்டுகின்ற போதுங் கூட, ''கடவுளே! என்னைக் காப்பாற்று!'' என் குடும்பத்தைக் காப்பாற்று!'' என்று கேட்கக் கூடாது. ''எல்லோரையுங் காப்பாற்று; உயிர் கள் யாவும் வாழ அருள் செய்!'' என்ற பரந்த நோக்கத்துடன் வேண்டவேண்டும்.

''அப்பா நான் வேண்டுதல் கேட்
டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்''

என்று வரங்கேட்கின்றார் வடலூர் வள்ளற் பெருமானார். இத்தகைய தியாகவுணர்ச்சி மனிதனைப் புனிதனாக்கும். தியாக சிந்தையில் சாந்தி நிலவும். உவகை ஊற்றெடுக்கும். அவர் கள் முகத்தில் ஒரு ஒளி வீசும். அவர்கள் பேச் சில் ஓர் அலாதியான இன்பச் சுவை மிளிரும். அவர்கள் புகழ் கலங்கரை விளக்குப் போல் மற்றவர்கட்கு என்றும் நின்று வழிகாட்டும்.

தலைவனில்லாமல் ஒரு தொழிற்சாலை நடைபெறாது. பறவைகளுக்கு ராஜா கருடன். விலங்குக்கு ராஜா சிங்கம். தேவர்களுக்கு ராஜா இந்திரன். மரங்களுக்கு ராஜா கற்பகம். நாகங் களுக்கு ராஜா ஆதிசேடன். அதுபோல உலகிலே முந்தியிருந்த - இப்போது இருக்கின்ற - இனி இருக்கப்போகின்ற எல்லாத் தியாக புருஷர் களுக்கும் ஒரு ராஜா உண்டு. அவர் யார்? அவர்தான் தியாகராஜா. திருவாரூரில் இருந்து அரசு புரிகின்றார்.

அவர் என்ன தியாகம் புரிந்தார்? என்று சிந்திப்பது இன்றியமையாதது. தேவர்கள் நரை, திரை, மூப்பு, மரணம் இவைகளைத் தவிர்க்க வேண்டி அமிர்தத்தை விரும்பித் திருப் பாற்கடலைக் கடைந்தார்கள். மந்தரமலையை மத்தாகவும், வாசுகியைத் தாம்பாகவும், சந்தி ரனைத் தறியாகவும் கொண்டு பன்னெடுங் காலம் கடைந்தார்கள்.

''மாகமுக டோடகில
பாதாள லோகமுட
னேசுழல வாரியதுவே
தாழியா அமரர்
வாலிமுத லானவர்கள்
ஏனோர்களாலமுது கடை நாளில்''

என்கிறார் அருணகிரி நாதர்.

இவ்வாறு கடைந்தபோது எதிர் பார்த்தது அமிர்தம். அங்குத் தோன்றியது நேர் மாறாக ஆலகாலவிடம். அதன் வெப்பம் உலகத்தை யெல்லாம் வருத்தியது. வெப்பத்தைப் பொறுக்க முடியாத விபுதர்கள் மூலைக்கு ஒருவராக ஓடினார்கள். எல்லாருக்கும் முந்தி ஓடினான் இந்திரன். ''ஓடாதீர்கள்; ஓடாதீர்கள்: என்று சொல்லிக்கொண்டே ஓடினார் பிரம தேவர். ஆலகாலவிடத்தால் உடல் கருப்புண்டார் திருமால். அத்தனை பேரும் கயிலை மலையையடைந்து சிவபெருமான் செம்மலர் நோன்றாளை வணங்கி நின்றார்கள்.

''தேவதேவா! மகாதேவா! கருணையங் கடலே! நாங்கள் தேவரீருடைய அடிமைகள், நீர் ஆண்டான். எல்லாம் உம்முடைய உடைமைகள். நீர் உடையவர். அடிமைகள் ஒரு விவசாயம் புரிந்தால் முதலில் விளைந்த விளைவை எஜமானனுக்குத் தருவார்கள். வியாபாரத்தில் முதலில் வந்த லாபத்தைத் தலைவனுக்கே தருவார்கள். எம்பெருமானே! அடியேங்கள் பாற்கடல் கடைந்தோம். அதில் முதலில் விளைந்த விளைவு தேவரீருக்கே உரியது'' என்று பேச வல்ல தேவர்கள் பேசினார்கள்.

சிவபெருமான் அவர்கள் கூறியது உண்மையே என்று திருவுளஞ்செய்து, சுந்தரரை நோக்கி, ''அவ்விடத்தை இவ்விடத்திற்குக் கொண்டு வா!'' என்று கட்டளையிட்டார். அவ்வாறே அவர் கொணர்ந்து கொடுக்கப் பயங்கரமான ஆலகாலவிடத்தை உண்டு, அமரர்கட்கு அமிர்தத்தை வழங்கினார். அமுதம் தேவர்கட்கும்,விடம் தனக்கும் என்று கொண்ட அவர், தியாகராஜாவாக விளங்குவது பொருத்தந்தானே?

பொன்னாபரணத்தை நமக்குத் தந்து அவர் சர்ப்பாபரணத்தைத் தரித்துக் கொண்டார். சந்தனம், களபம், கஸ்தூரி, அர்கஜா, சவ்வாது, இவைகளை நமக்கு வழங்கிவிட்டு அவர் சாம்பலைப் பூசிக் கொண்டார். நம்மை மாளிகையில் வாழ வைத்துவிட்டு அவர் மயானத்தில் இருக்கின்றார். வெள்ளி, பொன், வெண்கலப் பாத்திரங்களை நமக்குத் தந்துவிட்டு, அவர் மண்டை ஓட்டை வைத்துக் கொண்டார். மல்லி, முல்லை முதலிய நறுமண மலர்களை நமக்குத் தந்துவிட்டு அவர் தும்பை, ஊமத்தை மலர்களை அணிகின்றார். மருக்கொழுந்து, தவனம், விலாமிச்சம் இவைகளை நமக்குத் தந்துவிட்டு, அவர் வில்வம், மாவிலிங்கம், நாயுருவி, நொச்சி முதலிய தழைகளைத் தரித்துக்கொண்டார். குளிர்ந்த சந்தனத்தை நாம் தரிக்க, அவர் கொடிய நெருப்பை ஏந்துகின்றார். பெண்ணோடு நாம் ஆட, அவர் பேயோடு ஆடுகின்றார். பட்டாடையை நமக்குத் தந்தார். அவர் தோலை உடுக்கின்றார். நவமணிகளை நாம் அணியக் கொடுத்துவிட்டு, அவர் எலும்பை அணிகின்றார்.

அவருடைய செயல்கள் அத்தனையும் தியாகச் செயல்களே. பாலுக்குப் பாலகன் வேண்டியமுதவுடன் பால் ஒருபடி இருபடியா தந்தனர்? பாற் கடலையே கொடுத்தனர். அவருடைய தியாகம் ஒரு மலையாகக் காட்சி தருகின்றது. அதனால் பரமகுருநாதராகிய அருணகிரியார் சிவபெருமானைத் தியாகப் பொருப்பு என்று கூறுகின்றார். இதோ பாருங்கள் கந்தரலங்காரம்:

''மாகத்தை முட்டிவரு நெடுங்கூற்றன்
வந்தால் என் முன்னே
தோகைப் புரவியில் தோன்றிநிற்பாய்
சுத்த நித்த முத்தித்
தியாகப் பொருப்பை த்ரிபுராந்
தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரம
கல்யாணிதன் பாலகனே''

முக்கட்பெருமான் பொன்னும் மணியும் போகமுந் தருவதுடன் வேறு எவராலுந் தர முடியாத தூய முக்தியையுந் தருவார். அதனால் தான் இவ்வரிய 'சுத்த நித்த முத்தித் தியாகம்' என வருகின்றது. நித்தம் அழிவில்லாதது. இறைவர் நமக்குத் தரும் முத்திப் பேறு அழிவில்லாதது.

ஆகவே நாம் தியாகராஜாவாகிய சிவமூர்த்தியைச் சிந்தித்தும், வந்தித்தும், வாழ்த்தியும் வருவோமாயின், உயிர்கள் சார்ந்த தன் வண்ணமாகும் பெற்றியுடையன. ஆதலின் நாமும் தியாக மூர்த்திகளாகத் திகழ்ந்து உலகம் போற்றும் உயர்வினை அடையலாம்.

— — —

## கம்பர் கவிதைச் சிறப்பு!

''யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை,வெறும் புகழ்ச்சி யில்லை''

—பாரதியார்.

# சிவம் குருவாய் உணர்த்துதல்

டாக்டர் திருமதி இராதா தியாகராசன், M.A.,Ph.D., மதுரை

R. RAJU,
Dy Commissioner
(Retired)
HR&CE

முதல் இரண்டு கட்டுரைகளில் நம் மன மொழி மெய்களைச் சிவ வழிபாட்டில் ஒன்றச் செய்வதால் வினைகள் பையப் பைய நீங்கிச் சிவஞானம் விளங்கும் என்பதைப் பற்றியும், அச் சிவ வழிபாடும் சரியை, கிரியை, யோகங்கள் என்பது பற்றியும் ஓரளவு கண்டோம். இச் சரியை யாதி வழிபாட்டின் பயனாகச் சாலோக, சாமீப, சாரூபமாகிய பத முத்திகளைப் பெற முடியும். அப் பத முத்தியில் இன்பங்களை நுகர்ந்த ஆன்மா எஞ்சிய வினைகளைப் பின்னர் நுகர்தற்பொருட்டும், அந் நுகர்ச்சியின் பயனால் உலகப் பற்றுகளை அறுக்கும் பொருட்டும் ஞானத்தை விளைவிக்கும் நல்ல சூழலில் வந்து பிறக்கும் என்பர். இதனை 'நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதல்' என்று மெய்கண்டார் அருளியுள்ளார்.

'நற்சார்பு' என்று மெய்கண்டார் குறித்திருக்கவும், அவருக்குப் பின் வந்த பெரியோர்கள் தவம் செய்தற்குரிய உயர்ந்த சாதிக் குடிப் பிறப்பின்கண்ணே வந்து பிறந்து தத்துவ ஞானத்தைப் பெறுவர் என்றும், இழிகுலத்தார் அத் தத்துவ ஞானத்திற்கு உரியராகார் என்றும் கூறி, வருணாசிரம தருமத்தை நம் சமயத்தில் நிலைநாட்டி விட்டனர். இவ்வேண்டாச் செயலின் விளைவால்,இன்று நம்முடன் வாழும் கீழ்த் தட்டில் இருக்கும் பெருவாரியான மக்கள் பிற சமயங்களைத் தழுவவும்,அதன் பயனாகத் தம் இழி நிலையைப் போக்கிக் கொள்ளவும் ஏதுவாயிற்று. இனியேனும் இந்து சமயத்தார் திருவள்ளுவர், மெய்கண்டார், ஔவையார் போன்ற தமிழ்ச் சான்றோர்களின் அறிவுரைகளைக் கடைப்பிடிப்பாராக. நம் சமயத்தவர்களும் சமுதாயத் தலைவர்களும் தம் உறக்கத்தினின்றும் விழிப்படைந்து ஆக்கமான செயலைச் செய்ய முனைவாராக. நிற்க.

சரியை முதலிய வழிபாடுகளே ஞானத்தைத்தரும் எனக் கொள்ள வேண்டா: வேதத்தில் சொல்லப்பட்ட வேள்வி முதலியனவும் ஞானத்தை நல்கும் என ஒரு சாரார் கூறுவர். வேள்வியைப் பற்றிக் கூறும் வேத நூல்களே இவ் வேள்வியால் ஏற்படும் பயன்களையும் உடன் கூறுகின்றன. இவ் வேள்விகளும் அவற்றால் பெறும் பயன்களும் சிறிது காலத்தில் அழிவெய்தும். இவ் வேள்வி முதலியன செய்வோர் பசித்துண்டு பின்னும் பசிப்பாரை ஒப்பர். ஆயின் சரியை, கிரியை யோகங்களால் எய்தப் பெறும் பலன் சாலோக சாமீப சாரூபம் முதலிய சிவ பதங்களாகும். இவை பத முத்திகளைத் தருவதோடு நின்று விடாமல், வேறு பலன்களையும் விளைவிக்கும். சரியை கிரியையும், கிரியை யோகத்தையும், யோகம் ஞானத்தையும் தரும். இஞ் ஞானமே சிவத்தால் உணர்த்தப்படும் சிவஞானமாகும். அதனால் சரியை கிரியை யோகங்களை 'இறப்பில் தவம்' என்று ஞான நூல்கள் கூறும்.

புண்ணியங்கள் உயிர்களின் முன்னேற்றம் கருதிச் செய்யப்படுவன எனவும், சிவ பெருமானையே நோக்கிச் செய்யப்படுவன எனவும் இருவகைப்படும். முன்னதைப் பசு புண்ணியம் என்றும், பின்னதைச் சிவபுண்ணியம் என்றும் கூறுவர். மக்கள் தாம் செய்த வினைகட்கு ஏற்ப இறந்தும் பிறந்தும் வினைவட்டத்தில் அகப்பட்டு உழல்வர். வினை வட்டத்தினின்றும் பிழைத்தாலன்றி நம் பிறப்பு அறாது. இவ் வட்டத்தினின்றும் தப்பி உய்ய வேண்டுமாயின் அதற்கு ஒரே வழியுண்டு. அது சிவ புண்ணியம் செய்வதேயாகும். இச் சிவ புண்ணியமே சரியை கிரியை யோகங்களாகும். புண்ணியம் வளர வளர, இரு வினை யொப்பும், மலபரிபாகமும் சத்திநிபாதமும் உயிர் அறிவின்கண் ஏற்படும். இரு வினையொப்பு என்றால் புண்ணிய பாவம் இரண்டினும், அவற்றின் பயன்களாகிய இன்ப துன்பங்களிலும் உயிரறிவின்கண் ஒப்ப உவர்ப்பு ஏற்படுதலாகும்.. மல பரிபாகம் என்றால் அறியாமையின் ஆற்றல் தேய்தற்குரிய நிலையில் உயிர் பக்குவப் பட்டிருத்தல். அதாவது உயிர் உலகியலின் ஈர்ப்பினின்றும் நீங்குதற்குரிய பக்குவம் எய்தி நிற்றல். சத்திநிபாதம் என்றால்,உலகப் பொருள்களில் இதுகாறும் உயிரின் இச்சை பிணிப்புற்றிருந்தது மாறிநின்று வீடு பேற்றின்கண் இச்சையை உண்டுபண்ணி நிற்கும் அருட் பதிவு.

இச் சிவ புண்ணியங்களால் இறைவன் ஆன்மாவின் உள் நின்று வீடு பேற்றிற்குரிய அவாவினைப் பையப் பைய ஏற்படுத்திக் கொண்டு வருவான். உலகியலில் உவர்ப்பும் இறைவனிடத்தில் பேரன்பும் வளரும் நிலையில் உள் நின்று உணர்த்தி வந்த இறைவனே இப்போது குருமூர்த்தமாக எழுந்தருளிஞானத்தைத் தருவான். சிவனே குருவாக எழுந்தருளுவன்

என்பது என்னை ? நம்மனோரில் ஒருவரையே குருவாகக் கொண்டால் என்னை? என்று ஒரு சாரார் கூறுவர். இக் கூற்று, சைவ சித்தாந்தத்திற்கு உடன்பாடன்று. உயிர் தத்துவ ஞானத்தைப் பெறுதற்குரிய பக்குவம் பெற்றிருக்கிறது என்று புறத்திலே உள்ளவர்கள் அறிதலும், அப்பக்குவத்திற்கு ஏற்ப அறிவுறுத்தலும் இயலாததாகும். இறை ஞானத்தை இறைவன் ஒருவனே உணர்த்தல் வேண்டும். அவ்வுயிர் பக்குவம் பெற்றுவிட்டதென்று உணர உயிர்க்கு உயிராக விளங்கும் இறைவன் ஒருவனுக்கே இயலும். உடலில் உயிர் கலந்திருப்பது போல் மலமாசு தீர்ந்த ஞானியின் ஆன்மா சித் துருவம் ஆகையினால், இந்த ஆன்ம சைதன்னியத்தில் சிவ சைதன்னியம் தங்கி நின்று ஞானத்தை உணர்த்தும். இதனை 'தம் முதல் குருவுமாய்... ...உணர்த்த' என்று மெய்கண்டார் கூறுவர்.

மேலும் சிலர், சிவன் குருமூர்த்தமாக உணர்த்துதல் இன்றியும், சிலர்க்கு ஞானம் நிகழ்ந்திருப்பதாக நூல்களில் காண்கிறோம். அவன் குரு வடிவம் கொண்டு உணர்த்தினால் அன்றி ஞானம் நிகழாது என்று வரைந்து ஓதுவது பொருந்தாது என்பர். விஞ்ஞானகலர் என்றும் பிரளயாகலர் என்றும் சகலர் என்றும் ஆன்மாக்கள் மூன்று வகைப்படுவர். விஞ்ஞானகலர்க்கு இறைவன் உள் நின்று ஞானத்தை உணர்த்துவன். இவர்கள் ஆணவ மலம் மட்டும் உடையவர்களாவர். பிரளயாகலருக்குச் சிவன் நாற்றோளும் முக்கண்ணும், கறைமிடறும் கொண்ட திருவுருவத்தைக் காட்டி, முன்னால் தோன்றி நின்று ஞானத்தை உபதேசிப்பன். இவர்கள் ஆணவ மலமும் கன்ம மலமும் உடையவர்கள். சகலர்க்குச் சிவன் மனித வடிவாகிய குரு மூர்த்தமாகத் தோன்றி அம் மனித வடிவின் பின்னாக மறைந்து நின்று ஞானத்தை உணர்த்துவன். இவர்கள் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலமும் உடையோராவர். பழகிய மானைக் காட்டி வேறு மானைப் பிடிக்கும் வழக்கம் போல், சிவம் மனித வடிவம் தாங்கிப் பக்குவம் பெற்ற ஆன்மாக்களை ஈர்த்து ஆட்கொள்வது முறையேயாகும்.

எனவே எல்லாவுயிர்களும் அவரவர்க்குரிய படிவழியின் வைத்து முதல்வன் அறிவித்தாலன்றி அறிவு விளக்கம் அடையமாட்டா. இம் மூவகை ஆன்மாக்களுக்கும் ஆணவ மலமாகிய அறியாமை பொதுவாக இருந்த போதிலும், அவ்வான்மாக்களின் அறிவின் வன்மை மென்மைக்கேற்ப மல ஆற்றல் நுண்மையாகவும் வன்மையாகவும் மிக வன்மையாகவும் பிணித்திருக்கும். விஞ்ஞானகலர் அறிவில் மல ஆற்றல் மென்மையாகப் பிடித்திருக்கும். இவர்களுக்கும் மாயை கன்மம் முதலியன உண்டேனும் இவற்றால் இவர்கள் பிணிப்புற மாட்டார். பிரளயாகலருக்கு மல ஆற்றல் வன்மையாகப் பிணித்திருக்கும். இவர்கட்கு வினையால் பிணிப்பில்லை. சகலர்க்கு மல ஆற்றல் மிக வன்மையாகப் பிணித்திருக்கும். இவர்கள் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும் மலங்களாலும் பிணிப்புற்றோராவர். இப் பாகுபாட்டினால் இறைவன் விஞ்ஞானகலர்க்கு உள் நின்று உணர்த்தினால் அவர்கள் உடனே மல ஆற்றல் நீங்கி ஞானத்தைப் பெறுவர். இறைவன் பிரளயாகலர்க்கு முன் நின்று உபதேச முகத்தால் பாசத்தை நீக்கிச் சிவப் பேற்றை அளிப்பான். சகலர்க்கு உபதேச வாயிலாகவும் நூல் வாயிலாகவும் அனுபவ வாயிலாகவும் இறைவன் உணர்த்தினாலன்றி இவ் வுயிர்கள் பாசம் நீங்கி இம் மூவகைப் பட்ட ஆன்மாக்களுக்கும் ஒரு நெறியில் ஞானத்தை உணர்த்தாமல் தன்மையிலும் முன்னிலையிலும் படர்க்கையிலுமாக வெவ்வேறு வகையில் உணர்த்துவான். 'வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும் நூறு நூறு ஆயிரம் இயல்பினதாகி, ஏறுடை ஈசன் இப் புவனியை உய்யக் கூறுடை மங்கையும் தானும் வந்தருளி' என மணிவாசகப் பெருமான் கூறுதல் ஈண்டுப் பொருந்துவதாகும்.

விஞ்ஞானகலர், பிரளயாகலர் ஆகியோருக்கு இறைவனே உணர்த்தியருளுவான் என்பது பொருந்தும். ஆயின் சகலர்க்குத் தம் முதல் குருவுமாய் உணர்த்தியருளுவன் என்பது உபசாரமேயன்றி உண்மையன்று என்று உரைப்பர் சிலர். மேலும் சகலர்க்கு நூல் வேண்டியிருப்பதால் அவர்கள் ஞான நூல்களை ஓதினாலே இறை ஞானம் உண்டாகும் என்று கூறி, இறைவனே குரு மூர்த்தமாய் எழுந்தருளி உணர்த்த வேண்டாம் என்பர். ஒரு பெண் தாய்மையடைதற்கு முன்னர்க் காணப்படாத தாய்ப்பால், தாய்மை எய்திய பின் வெளிப்படுவதை நாம் காண்கிறோம். அன்பின் அறிகுறியாகிய கண்ணீரையும் காண்கிறோம். தாய்ப்பால் சுரப்பதும் கண்களில் கண்ணீர் வருவதும்அன்பின் அறிகுறிகளேயாகும். அதுபோல நீரினிடத்து நிழல் போல உயிர்களிடத்தில் புலப்படாமல் அருவமாய் நின்ற முதல்வன் தானே குருவடிவாக வந்து தோன்றி நின்று, ஞானம் உணர்த்தானாயின் அவனை யார்தாம் அறிய முடியும்? ஒருவரும் அறிய மாட்டார்கள். அதனால் சிவ ஞானம் சிவனால் உணர்த்தப்பட வேண்டுமேயொழிய, நூல் முதலிய பாச ஞானத்தாலும் ஆன்ம சைதன்யம் அடையாத குருமார்கள் கூறும் பசு ஞானத்தாலும், உணர்த்த முடியாது என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும்.

''இல்லா முலைப்பாலும் கண்ணீரும்
ஏந்திழைபால்
நல்லாய் உளவாமல் நீர் நிழல்போல்-இல்லா
அருவாகி நின்றானை யாரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று''.

என்னும் சிவஞான போதத் திரு வெண்பா, தமது முதல் குருவுமாய் வந்து ஞானத்தை அருளும் என்பதைத் தெளிய வைத்தல் காண்க.

# தமிழ்க் கல்வெட்டுக்களில் மருத்துவம்

டாக்டர் சா. குருமூர்த்தி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்டி.

மனித இனம் எத்துணைத் தொன்மை வாய்ந்ததோ, அத்துணைப் பழமை நோய்களுக்கும் உண்டு. இந்த அளவிற்கு நெடிய வரலாற்றினைக் கொண்ட நோய்களிலிருந்து தன்னை முழுவதுமாக விடுவித்துக் கொள்வதென்பது இயலாதெனினும் அவற்றை அகற்றும் முயற்சிகளை மனிதன் கைவிடாமல் பின்பற்றி வந்திருக்கிறான். நமது நாட்டின் மருத்துவத்துறை மிகத் தொன்மையானதொன்றாகும். வேதகால நூல்களுள் அதர்வ வேதம், வியாதிகளுக்குக் குணமளிக்கும் வழிமுறைகளை நிரம்பப் பெற்றுள்ளதொரு பொக்கிஷமாகும். ஆனால் இதில் காணப்படும் வழிமுறைகள் மந்திரஜாலங்களைப்போல் இருப்பதாக நாகரிக உலகம் கருதுகின்றது. இருப்பினும், இந்த வழிமுறைகளைக் கொண்டு நமது மூதாதையர்களின் துல்லிய மருத்துவ அறிவை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

நமது நாட்டு மருத்துவத் துறையில் சித்த வைத்தியம், ஆயுர்வேதவைத்தியம் என்று பல்வேறு பிரிவுகள் உண்டு. இவ்விரண்டில் ஆயுர்வேத வைத்தியத்திற்குத் தொடர்ச்சியான வரலாறும், மக்களிடையே நல்ல வரவேற்பும் இன்றளவில் இருந்து வருகின்றது. மத்திய கால இந்தியாவின் வரலாற்றினையும், நாகரிகத்தினையும் அறிந்து கொள்ளவும், குறிப்பாகத் தென்னிந்திய வரலாற்றினைப் புரிந்து கொள்ளவும் பெரிதும் துணைநிற்கும் தொல்பொருள் சான்றுகளுள், கல்வெட்டுச் சான்றுகளே முதன்மையானதும், முக்கியமானதும்மாகும். இச்சான்றுகள் மத்திய கால இந்தியாவில் நிலவிய அரசியல் சமூக பொருளாதார சமய நிலைகளைத் தெளிவாக எடுத்தியம்புகின்றது. மத்திய காலத் தென்னிந்தியக் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் புதைந்து கிடக்கும் மருத்துவ இயலைப்பற்றிய செய்திகளை வெளிக்கொணர எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவே இக்கட்டுரையாகும்.

வடஇந்தியாவில் புகழ்பெற்று விளங்கிய குப்தர் காலத்திய வாக்பட்டர், சரகர் மற்றும் பிற்காலத்தில் சுஸ்ரதர் போன்றோர்களின் மருத்துவ முறைகள், இடைக்காலத் தென்னிந்தியாவில் விளங்கி வந்த உள்நாட்டு மருத்துவ முறைகளில் பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதைக் கல்வெட்டுச் சான்றுகள்மூலம் உணர முடிகின்றது. மேற்கூறப்பட்ட ஆசிரியர்கள் குப்தர் காலத்தைச் சார்ந்தவர்களாயினும், இவர்கள் விட்டுச் சென்றுள்ள விலை மதிக்கமுடியாத மருத்துவக் குறிப்புக்கள் மத்தியகாலத்தில் தரமான நூல்கள் என்று கருதப்பட்டன.

வாக்படர், சரகர் போன்றோர்களின் வைத்தியக் குறிப்புக்கள், மருத்துவத் துறையில் பெருமளவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன என்பதைக் கல்வெட்டுச் சான்றுகள்தெளிவுபடுத்துகின்றன. மேலும், வியாதிகளின் தன்மைக்கேற்ப அவற்றை ஒரு சில கூறுகளாகப் பிரித்து முறையான சிகிச்சை, கடைப்பிடிக்க வேண்டிய உணவு பற்றிய குறிப்புக்களையும் எழுதி வைத்திருந்தனர். இக்குறிப்புகளின் துணைகொண்டு வியாதிகளின் குணங்களை அடையாளம் தெரிந்து கொண்டு சிகிச்சைகள் கொடுக்கப்பட்டன. நோய் வருமுன் காப்பதற்கும், வந்தபின் அதனின்று விடுபடுவதற்குமான பொது மருத்துவமும், அறுவை சிகிச்சை முறைகளும் பழக்கத்தில் இருந்திருக்கின்றன. வாயு, பித்தம், கபம் போன்றவற்றின் நிலையைக் கொண்டு வியாதியின் மூலகாரணத்தை நிர்ணயித்துக்கொண்டு பின்னர் சிகிச்சையைத் தொடங்குவர்.

நோயினால் அவதியுறும் மனித சமுதாயத்திற்கு இலவச மருத்துவ உதவி அளிப்பதையே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு மருத்துவ மனைகள் இயங்கியதாகக் கல்வெட்டுச் சான்றுகள் உணர்த்துகின்றன. மருத்துவர்கள் நீதிநெறி பிறழாது எளிமையான வாழ்க்கையைக் கடைப்பிடித்து வந்தார்கள். எடுத்துக்காட்டாகச் சமயப்பற்றுடையவர்கள் பலரும் மருத்துவர்களாகப் பணியாற்றியிருப்பதைக் காட்டலாம். குலோத்துங்க சோழ மங்கலாதி

ராச சீராளன் என்பவர், சமயப் பற்று நிறைந்த மருத்துவராவார். மேலும் கூத்தபிரான், சிவ கீர்த்தி, சைவசிகாமணி போன்ற விருதுகளை யும் அவர் பெற்றிருந்தார். இதைத் தவிர மடங் களில் வாழ்ந்து வந்த துறவிகளும் மருத்துவப் பணியைச் செய்து வந்தனர்.

மருத்துவப் பணியை மரபு வழியிலும், சுயமாகவும் செய்து வந்தனர். வழிவழியாக வந்த மருத்துவர் ''சவர்ணா'' என்றழைக்கப் பட்டார். சவர்ணா என்ற வார்த்தை ஒரு வகுப்பினரையோ, ஒரு ஜாதியினரையோ அல் லது ஒரு குலத்தையோ குறிப்பதாகும். ஒரு அந்தணருக்கும் சத்திரியகுலப் பெண்மணிக்கும் மகனாகப் பிறந்தவர் 'சவர்ணா' என்றழைக் கப்பட்டதாகக் கூறுவர். கால்நடைகளைப் பாதுகாப்பதும், மருந்துகளைத் தயாரிப்பதும் சவர்ணாவின் முக்கியப் பணிகளாக இருந்திருக் கின்றன என்றும் அறிகிறோம். மரபு வழியில் லாமல் சுயமாக மருத்துவத் தொழிலைச் செய்து வந்தவர்களைப் பொதுவாக 'மருத்து வர்' 'வைத்தியர்' என்று அழைத்து வந்தனர். அறுவை சிகிச்சை செய்பவர்களைச் 'சல்லியக் கிரியை செய்வார்' என்று கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன. மேற்கூறியதிலிருந்து மருத்துவ ருக்கும் அறுவைச்சிகிச்சை செய்பவருக்கும் உள்ள வேறுபாட்டை அக்காலத்தில் உணர்ந் திருந்தார்கள் என்பது புரிகிறது.

மருத்துவர்களை அரசாங்கம் பெரிதும் போற்றிப் பாதுகாத்ததுடன் அவர்களது வரு வாய்க்கு வரியிலா நிலங்களை அளித்தது. மருத்துவர்களுக்குப் பணமாகவோ. தானிய மாகவோ ஊதியமும் அளிக்கப்பட்டது. மருத் துவர்களுக்கு அளிக்கப்பட்ட வரியிலா நிலங்கள் 'விருத்தி' அல்லது 'காணி' என்றழைக்கப்பட் டன. அவற்றை 'வைத்தியக்காணி' 'வைத்திய விருத்தி' என்றும் கூறுவர். இந்த நிலதானங்கள் கிராம மக்களுக்குப் பயனளிக்கும் பணியைச் செய்து வந்த தனிப்பட்ட மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்டனவாகும். ஆலயங்களும், நோயுற்றோர்களைக் கவனிக்க மருத்து வர்களை அமர்த்தியிருந்தன என்பதும் குறிப் பிடத்தக்கது.

மருத்துவத் தொழில் புரிந்து வந்தவர் களுக்கு அளிக்கப்பட்ட ஊதியத் தொகை ஓரள விற்குத் தற்காலத்தில் மருத்துவர்கள் பெற்று வரும் ஊதியத்தை ஒக்கப் பார்க்கும் அளவிற்கு இருந்திருக்கிறது. நெல்லாகவோ, பணமாகவே ஊதியம் அளிக்கப்பட்டது. தமிழகத்திலே செங்கை மாவட்டத்திலுள்ள திருமுக்கூடல் என்னுமிடத்தில் சோழ மன்னன் வீர ராசேந்திரனின் கல்வெட்டொன்று, உள்ளூர் ஆலயமொன்று நிர்வகித்து வந்த மருத்துவ மனையில் பணியாற்றிய மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியத் தொகையினை விரி வாகக் குறிப்பிடுகின்றது.

மருத்துவமனை ''ஆதுலசாலை'' என் றழைக்கப்பட்டது. ஏராளமான மருத்துவ மனைகள் நாடு முழுவதிலும் ஏற்படுத்தப்பட்டி ருந்த செய்தியைக் கல்வெட்டுக்கள் தெரிவிக் கின்றன. இந்த மருந்தகங்கள் இலவசமாக மருந்துகளை அளித்து வந்தன. இவை பெரும்பாலும் ஆலயங்களாலும் மடங்க ளாலும் நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்தன என்பதையும் கல்வெட்டுச் செய்திகள் குறிக்கின்றன. நோயாளிகள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, சாதி, சமய வேறுபாடு கருதாமல் ஒரே வகையான மருத் துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த மருந் தகங்கள் பெரும்பாலும் புறநோயாளிகளையே கவனித்து வந்தன. இருப்பினும், நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கேற்பப் படுக்கை வசதிகள் கொண்ட பெரிய மருத்துவமனை களும் இயங்கி வந்தன. வீரராசேந்திர சோழ னது காலத்தில், திருமுக்கூடல் என்ற இடத்தில் மருத்துவ மனை இருந்ததாகக் கல்வெட்டுச் செய்திகள் பகர்கின்றன. மேற்கூறிய மருத்துவ மனை உள்ளூர் பெருமாள்கோவிலினால் நடத் தப்பட்டு வந்த வடமொழிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டிருந்தது. வீரசோழன் என் றழைக்கப்பட்ட அந்த மருத்துவ மனை 15 படுக்கைகள் கொண்டதாக விளங்கியது. இதற்குத்தலைமை மருத்துவர் ஒருவர் நிய மிக்கப்பட்டிருந்தார். இத் தலைமை மருத்து வரைத் தற்காலத்தில் மருத்துவமனையிலே தங்கிப் பணிசெய்துவரும் மருத்துவ அதிகாரி யுடன் ஒப்பிடலாம். தலைமை மருத்துவருக்கு ஊதியத் தொகையுடன் குறிப்பிட்ட அளவு நிலமும் அளிக்கப்பட்டிருந்தது. அவரைத் தவிர ஒரு அறுவைச் சிகிச்சையாளர், இரு கம் பவுண்டர்கள், இரு பெண்தாதிகள், ஒரு சவரத் தொழிலாளி, தண்ணீர் கொண்டுவர ஒருவர் போன்றோரும் நியமிக்கப்பட்டிருந்தனர். நோயுற்றவர்களுக்கு நாள் ஒன்றிற்கு, ஒருவ ருக்கு ஒரு நாழி அரிசிவீதம் (400)கிராம் ஒதுக் கப்பட்டிருந்தது. அங்கு ஒரு மருந்துக்கிடங்கும் இருந்திருக்கின்றது. இதில் இருபது வகையான மருந்துகள் தயார் செய்து வைக்கப்பட்டிருந் தன. அம்மருந்துகளின் பெயர்களும், அவை குணமளிக்க வல்ல வியாதிகளைப்பற்றியும் கல் வெட்டுக்கள் செய்திகளைக் கொண்டுள்ளன.

மருந்துகள், தைலம், பொடி, மாத்திரை போன்ற வடிவங்களில் செய்யப்பட்டிருந்த தாகத் தெரிகின்றது. மருந்து தயாரிப்பதற்குத் தேவையான மூலிகைகளை வாங்குவதற்கென ஒரு நாளைக்கு 40 காசுகள் ஒதுக்கப்பட்டிருந் தன. இந்த மருந்துகளைத் தயாரிக்கும் முறை கள் பற்றி ''சரக சம்மிதை'' ''அஷ்டாங்கஇரு தயம்'' ''சுஸ்ருதசம்மிதை'' போன்ற மருத்துவ நூல்களில் விளக்கமாகக் காணலாம். இந்நாளி லும் இத்தகைய மருந்துகளே ஆயுர்வேத சிகிச்சையில் பெரிதும் பயன்படுத்தப்படுகின் றன என்பதும் நாம் கவனிக்கத்தக்கதாகும்.

அக்கால மருத்துவமனைகளில் பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. அவற்றுள் மஞ்சள்காமாலை, காசநோய், சோகை, சிறுநீரகக் கோளாறுகள், தோல் மற் றும் கண் சம்பந்தப்பட்ட வியாதிகள் ஆகியவை

குறிப்பிடத்தக்கன. பாம்புக்கடி, விஷ மூலிகைகளை உட்கொள்ளுவதால் ஏற்படும் உயிரைப் பழிவாங்கும் நச்சுத்தன்மை போன்றவற்றிலிருந்து மனித உயிரைக் காப்பாற்றுவது எளிதல்ல. ஆனால், அக்கால மருத்துவர்கள் இத்துறையில் கற்றறிந்த நிபுணர்களாக விளங்கி வந்திருக்கின்றார்கள். அதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் பல உள்ளன. மனித உடலிலிருந்து இரத்தத்துடன் கலக்கும் நஞ்சை எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மருத்துவர்களுக்கு இறையிலி நிலம் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டிருப்பட்டிருந்ததைக் கல்வெட்டுக்கள் பல உணர்த்துகின்றன.

அரசர்கள் தங்களுக்கென மருத்துவர்களை நியமித்துக் கொண்டார்கள். அத்தகையவர்களின் பெயர்கள் கல்வெட்டுக்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சோழ மன்னர் முதலாம் பராந்தகனுடைய அரசு மருத்துவரை ''இராஜ திராஜ தேவருக்குப் பன்மருந்திடும் மருத்துவர்' என ஒரு கல்வெட்டுச் சுட்டுகிறது. முதலாம் பராந்தகருடைய மகன் இராஜாதி ராஜதேவர் என்பதை நாமறிவோம். எனவே பராந்தகரின் குடும்பத்திற்கென ஓர் அரசு மருத்துவர் இருந்ததாக இதன்மூலம் அறிகின்றோம். இந்த மருத்துவர் பல்வேறு வகையான நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் வல்லவர் என்பதையும் நாம் அறிகின்றோம். இதுபோன்ற இந்தியக் காலனிகளாக இயங்கி வந்த தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றில்கூட இம்முறை வழக்கில் இருந்திருக்கிறது. அதற்கான கல்வெட்டுச் சான்றுகளும் உள. இந்திய மருத்துவ முறை அந்நாடுகளில் ஊடுருவி இருந்தமைக்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. கிறித்தவ நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே அந்நாடுகளில் இவ்வழக்கம் இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுவர்.

ஆயுர்வேத மருத்துவமுறையை இரகசியமாக ஒருசில குடும்பங்கள் மட்டும் பேணி வளர்த்து வந்தன என்று சிலர் கூறுவர். ஆனால் கல்வெட்டுச் சான்றுகள் அதற்கு எதிர்மாறான கருத்தையே காட்டுகின்றன. சமுதாயத்தில் மருத்துவக்கல்விக்கு ஒரு சிறப்பான இடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. சாதி சமய வேறுபாடுகளின்றி அக்கல்வி போதிக்கப்பட்டது. திருவாவடுதுறையிலுள்ள திருவாவடுதுறையார் கோவிலைச் சார்ந்த ஒரு மடத்தில் மருத்துவக் கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பதை, ஒரு சோழர் காலக் கல்வெட்டுக் குறிக்கின்றது. இதன் காலத்தைக் கி.பி.1120 எனக் கணிக்கலாம். இங்கு மாணவர்கள் பலர் தங்கி இலவசமாகப் படிப்பதற்கேற்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. 'அஷ்டாங்க இருதயம்', 'சரகசம்மிதை' போன்ற மருத்துவ நூல்கள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருந்ததையும் நாம் காணுகின்றோம். மருத்துவக் கல்வியுடன் வியாகரணம் (இலக்கணம்), ரூபாவதாரம் போன்ற வடமொழி இலக்கியங்களையும் மாணவர்கள் கற்று வந்தார்கள். சோழர் காலத்தில் மருத்துவக் கல்வியின் இன்றியமையாமையை மக்கள் உணர்ந்திருந்தமைக்கு இக் கல்வெட்டு ஒரு சான்றாகும். மருத்துவப் பணிக்கு மாணவர்களைத் தயார் செய்வதில் அக்கால அரசும் சமுதாயமும் கொண்டிருந்த ஆர்வத்தையும், அக்கறையையும் இதன்மூலம் அறியமுடிகின்றது.

மனித உயிர்களைப் போன்று விலங்குகளையும் அக்காலமக்கள் போற்றி வளர்த்து வந்தார்கள். விலங்குகளைத் தாக்கும் நோய்களைப் பற்றியும் அவற்றை அகற்றுவதற்கு வேண்டிய சிகிச்சை முறைகளைப் பற்றியும் தெரிந்து வைத்திருந்தார்கள். பொதுவாகமடங்களில் வாழ்ந்த துறவிகள் இப்பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

---

## திருக்குறளில் மருந்து

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு; அருந்தியது*
*அற்றது போற்றி உணின்.* (1)

*மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு.* (2)

*மிகினும் குறையினும் நோய்செய்யும்; நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று* (3)

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்.* (4)

*உற்றவன், தீர்ப்பான், மருந்து,உழைச் செல்வான்என்று*
*அப்பால்நாற் கூற்றே மருந்து.* (5)

— திருவள்ளுவர்.

# தாயுமானவர் காட்டும் தனிப்பெரு நெறி

'மகாவித்துவான்'

திரு. சி. அருணை வடிவேலு முதலியார்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

நம் தண்டமிழ் நாடு தொன்றுதொட்டே சீரிய பண்பாடுற்றுத் திகழ்வதோடு, 'பண்பாடுகள் அனைத்திலும் ஆன்மீகத் துறையே தலையாய பண்பாடு' என்னும் கொள்கையை யுடையது. இந்நிலைமை கி. பி. 4ஆம் நூற்றாண்டு முதலாகத் தொடர்ந்து தெளிவாகக் காணப் படுகின்றது. உயர்திரு மறைமலை யடிகள், கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் முதலியோரது கருத்துப்படி நோக்கினால், மாணிக்கவாசகர் காலம் முதலாக-அஃதாவது, கி.பி. 3 அல்லது 4ஆம் நூற்றாண்டு முதலாக இந்நிலை தெளிவாய்ப் புலப்படுகின்றது எனலாம்.

அறுபான் மும்மை நாயன்மார்களுள் சண்டேசுரரும், கண்ணப்பரும் இன்றைய வரலாற்று முறையில் 'எக்காலத்தவர்' என்பதை அறிய இயலவில்லை. ஆயினும், 'அவர்கள் பண்டைக் காலத்தவர்' என்பது தெள்ளியது. காரைக்கால் அம்மையாரது காலப் பழமையையும் அவ்வாறானதாகக் கூறலாம். அவர்கள் நிற்க, கோச் செங்கட் சோழ நாயனார், புகழ்ச் சோழ நாயனார், மூர்த்தி நாயனார் ஆகியோர் கி.பி, 5ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர்கள் என்பது இன்றைய வரலாற்று முறையிலே அறியப் படுகின்றது. திருமூலர் அவர்களையடுத்து வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றார்.

திருமூலரை அடுத்துத் தேவார ஆசிரியர் மூவர், பின்னர் ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள், அவர்கட்குப் பின் னர்ப் பட்டினத்தடிகள், அவருக்குப் பின் நம்பியாண்டார் நம்பிகள், அவருக்குப் பின் சேக்கிழார் நாயனார் என்ற இவர்கள் திருமுறை ஆசிரியர்களாய் விளங்குகின்றார்கள். இவர்களது காலப் பின்னெல்லை கி.பி. 12ஆம் நூற்றாண்டாகச் சொல்லப்படுகிறது.

கி.பி.13,14ஆம் நூற்றாண்டில் சந்தானாாரியார்களும் அவர்களோடு ஒத்த பிற சாத்திர ஆசிரியர்களும் தமிழ் நாட்டில் பெருஞ் சிறப்புற்றுத் திகழ்ந்தனர். அருணகிரிநாதரும் இக்காலத்தில் தவறாது குறிப்பிடத்தக்கவர்.

அவர்கட்குப் பின் கி.பி. 15, 16ஆம் நூற்றாண்டுகளிலும் சைவ சாத்திரங்களை அருளிச் செய்த பரம்பரை ஆசிரியன்மார் விளங்கினர். கி.பி. 16ஆம் நூற்றாண்டிலும் 17ஆம் நூற்றாண்டிலும் முறையே தோன்றியருளிய குமர குருபர அடிகளும், மாதவச் சிவஞானயோகிகளும் தங்கள் அருள் நலம் கனிந்த அரிய தமிழ்ப் பாடல்களாலும் ,சித்தாந்த நுண்பொருட் கருவூலங்களாய் அமைந்த உரைகள் உரைநடைகளாலும் சைவத்தின் தனிச் சிறப்பு விளங்கச் செய்தமை நாடறிந்தது.

கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டினரான திரிசிரபுரம் மகாவித்துவான், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கடல்மடை திறந்தாற்போலச் சைவ உலகிற்கு வழங்கிய சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் தாம் எத்துணைய!

இவரெல்லாம் செந்தமிழ்ப் பாடல் பற்றிச் சிறப்பாகஅறியப்பெறுபவர். இவ்வாறன்றி,அநுபூதியளவிலேயே நின்று உலகிற்கு அருள் நலம் கனிய அருள்செய்த பெரியோர்கள் எத்துணையர்! இவர்களுள் சைவ ஆதீன முதலாசிரியர்களையும், வழிநிலை ஆசிரியர்களையும் சிறப்பாகக் குறிக்கலாம்.

'சித்தர்' எனப் போற்றுகின்ற பெரியோர்கள் பற்பல காலங்களில் தோன்றித் தமிழ் நாட்டிற்கே உரிய தனிச் சிறப்பினராய் வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றனர்.

இவ்வாறு வழிவழி வழக்கினராய் வந்த பெரியோர்களுள் குமர குருபர சுவாமிக்குப் பின் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தாயுமான அடிகளைப் பற்றிய சில சிந்தனையே இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

சந்தான குரவர்கட்குப் பின் தமிழில் பக்தி இலக்கியங்கள் பல்க, அவற்றுள் தோத்திரப் பாடல்கள் சிறப்பிடம் பெற்றன. அத்தகைய பாடல்களுள் தாயுமான அடிகள் பாடல்கள் ஒரு தனிச் சிறப்பிடத்தைப் பெற்று, மக்கள் உள்ளங்களைப் பக்தித் துறையில் பெரிது

ஈடுபடச் செய்தன. அதனால் அப்பாடல்கள் தமிழ்நாட்டில் மிக்க செல்வாக்கைப் பெற்று, எவ்விடத்திலும், எவ்வகை மக்களிடத்தும் பரவலாக வழங்கின.

தாயுமானவருடைய பாடல்கள் பக்தித் துறையோடு தத்துவத்துறையையும் பற்றினவாகும். ஆகவே, பக்தி காரணமாகத் தாயுமானவர் பாடலில் ஈடுபட்ட மக்கள் அவரது பாடலில் சொல்லப்பட்ட தத்துவத்தையே, 'உண்மை நெறி' எனக் கொள்ளும் நிலை, தானாக அமைந்தது. ஆயினும், அவரது 'தத்துவ நெறி இன்னது' என்பதை அறிதல் பொது மக்கட்கு இயலாததாயிற்று.

'தத்துவம்' —என்றாலே வேதாந்தந்தான் என்றும், 'வேதாந்தம்' என்பது ஏகான்மவாதக் கொள்கைதான் என்றும், 'அக்கொள்கையே அத்துவித மதம்' என்றும் எண்ணுகின்ற ஒரு நிலை தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் பொதுவாக ஏற்பட்டது. 'ஒருகாலம்'—என்பதை, கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டு என்றே சொல்லலாம். அந்நிலையில் தாயுமானவர் சுட்டும் தத்துவ நெறி ஏகான்ம வாத நெறியே, எனப் பலர் பொது மக்கள் உள்ளத்தில் பதிவித்தலை மேற்கொண்டனர். அதற்கு அவருடையபாடல்களில் அமைந்துள்ள சில தத்துவச் சொல்வகைகளும், சில பாடல்களில் கடவுளைச் சிறப்பாகப் பெயர் சொல்லிச் சுட்டாது, பொதுவாகக் கூறுதலும் காரணங்களாய் அமைந்தன.

தமிழ்நாட்டில் சிறந்து விளங்கும் மதங்கள் இரண்டு. அவை சைவமும், வைணவமும் ஆகும். இவை தங்களுக்குள் ஒன்றை ஒன்று மறுப்பனவாயும் உள்ளன. எனினும் தத்துவத் துறையுள் ஏகான்ம வாதம் இவை யிரண்டனுள் எந்த ஒன்றிலும் சேராமல் தனித்து நிற்பதாயினும், பக்தித் துறையில் இந்த இரண்டையும், 'சமம்' எனக் கூறிவருகின்றது. தாயுமானவர் பாடலில் சிலவற்றில், 'வேதாந்த சித்தாந்த சமரச நிலையே நன்னிலை' எனக் கூறப்படுகின்றது. இந்தச் சமரசத்திற்கும், சைவ வைணவ சமரசத்திற்கும் யாதும் தொடர்பில்லை. எனினும், 'சமரசம்' என்று கூறியவுடன், 'அஃது அத்துவித மதத்தின் நிலை',— அஃதாவது 'ஏகான்ம வாத மதத்தின் நிலை' என்று மக்கள் கருதிவிடுகின்றனர். அதை வாய்ப்பாகக் கொண்டு ,ஏகான்ம வாதிகள் சிலர் 'தாயுமானவர் ஏகான்ம வாத அநுபூதிமான்' என்று பறை சாற்றுகின்றனர்.

இனி, 'இவ்வுலகம் உண்மையன்று; கானற் சலம் போல வெறுந் தோற்ற மாத்திரமாய்க் காணப்படுகின்ற ஒரு பொய்ப் பொருள்' என்பது ஏகான்ம வாதக் கொள்கை. தாயுமானவர் பாடல்கள் சில அக்கருத்தைக் கூறுவனபோலக் காணப்படுகின்றன. இதுவும் ஏகான்மவாதிகள் கூற்றிற்கு ஒரு துணையாகின்றது. தாயுமானவர் பாடல்களுள் சில இத்தகையன வாதலை, இங்குச் சிறிது நினைவுகூர்தல் பொருந்துவதே.

''அத்துவித வத்துவைச்
சொற்பிரகா சத்தனியை
அருமறைகள் முரசறையவே
அறிவினுக் கறிவாகி
ஆனந்த மயமான
ஆதியை அநாதி ஏக
தத்துவ சொரூபத்தை
மதசம் மதம்பெறாச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல
நிராலம்ப ஆலம்ப
சாந்தபத வியோம நிலையை
நித்தநிர் மலசகித
நிட்பிரபஞ் சப்பொருளை
நிர்விடய சுத்தமான
நிர்விகா ரத்தைத்
தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தம் அறியாதபடி
சித்தத்தில் நின்றிலலகு
திவ்விய தேசோமயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர்
தற்பரம தானபர
தேவதையை அஞ்சலிசெய்வாம்'' (1)

''நிர்க்குண நிராமய
நிரஞ்சன நிராலம்ப
நிர்விடய கைவல்யமாம்
நிட்கள அசங்கசஞ்
சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்த முத்த
தற்பரவிச் வாதீத
வியோமபரி பூரண
சதானந்த ஞான பகவ
சம்புசிவ சங்கர
சர்வேச என்றுநான்
சர்வகா லமும்நினைவனோ?
அற்புத அகோசர
நிவர்த்திபெறும் அன்பருக்
கானந்த பூர்த்தி யான
அத்துவித நிச்சய
சொரூப சாட்சாத்கார
அனுபூதி அனுசூதமும்
கற்பனை அறக்காண
முக்கணுடன் வட நிழற்
கண்ணூ டிருந்த குருவே
கருதரிய சிற்சபையில்
ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே'' (2)

''நித்தியமாய் நின்மலமாய்
நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச்
சமீபமுமாய் துரியநிறை
சுடராய் எல்லாம்
வைத்திருந்த தாரகமாய்
ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்ற ஒன்றைச்
சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம்'' (3)

இப்பாடல்களில் வடசொற்கள் மிகுதியாய் வந்துள்ளன; அச்சொற்கள் எல்லாம் அத்துவித மதத்தின் வழக்கம் என்பதும், அதனால் அவை களில் சொல்லப்பட்ட பொருள்களும் அத்துவித மதச் சார்புடையனவே என்பதும், ஏகான்ம வாதிகள் கூறுவன.

இனி, இவைகளேயன்றி

''இந்திரசா லங்கனவு
கானலின்நீர் என உலகம்
எமக்குத் தோன்றச்
சந்தமும் சிற்பரத்தால்
அழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க'' (4)

என்னும் பகுதியும்,

''தானான தன்மயமே
யல்லால் ஒன்றைத்
தலையெடுக்க ஒட்டாது
தலைப்பட் டாங்கே
போனாலும் கற்பூர
தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது
புலம்வே றின்றாம்;
ஞானாகா ரத்தினொடு
ஞேயம் அற்ற
ஞாதிருவும் நழுவாமல்
நழுவி நிற்கும்;
ஆனாலும் இதன்பெருமை
எவர்க்கார் சொல்வார்;
அதுவானால் அதுவாவார்;
அதுவே சொல்லும்'' (5)

என்னும் பாடலும், இவைபோல்வன பிறவும் முற்றிலும் ஏகான்ம வாதப் பொருளையே வலியுறுத்திக் கூறுவன எனவும், 'அதனால் தாயுமானவர் நெறி ஏகான்ம வாத நெறியே' எனவும், சிலர், தாம் மயங்கியோ மயங்காதோ கூறி, மக்களை மயக்குவர்; அதனால் ,அடிகள் சுட்டும் நெறி உண்மையான் உணர்தற்பாலதாகும்.

அடிகள், திருமறைக் காட்டில் வாழ்ந்த சைவ வேளாண்குடி மக்களுள் ஒருவராய்ச் சிறந்து விளங்கிய 'கேடிலியப்பப் பிள்ளை' என்பவர்க்கு இரண்டாம் மகனாராகத் தோன்றியவர். இவர் தமையனார் 'சிவ சிதம்பரம் பிள்ளை' என்பவர். இவரை இவர் தம் தந்தையார், பெரிய தகப்பனார்க்குச் சுவீகாரப் புதல்வராகக் கொடுத்துவிட்டுப் பின்னர்த் தமக்கு மகப்பேறில்லாமையால் வருந்தித் திருச்சிராப்பள்ளி இறைவனாகிய தாயுமானப் பெருமானை வேண்டி நின்றதன் பயனாகத் தமக்குப் பிறந்த இரண்டாம் திருமகனார்க்கு, 'தாயுமானவர்' என்று அவ் இறைவன் பெயரே இட்டு மகிழ்ந்தார். எனவே 'தாயுமானவர்,பிறந்தது,வளர்த்தது எல்லாம் சைவசமயச் சூழலியேயாகும். வளர்ந்து கல்வி கற்றுச் சிறந்த காலங்களிலும் ஓதியும். உணர்ந்தும் உளம் மகிழ்ந்தன சைவ சமய தோத்திர சாத்திர நூல்களேயாகும்.

தந்தையார் திருச்சிராப்பள்ளியில் அரசு செலுத்திய விசய ரகுநாத சொக்க லிங்கநாயகர்பால் உயர் அலுவலராய் இருந்தவர். அதனால் மகனாராகிய தாயுமானவர்க்கு இளமையில் திருச்சிராப்பள்ளித் தொடர்பே இருந்தது. முன்னைத் தவமுதிர்ச்சியால் தாயுமானவர் நூலறிவோடு நில்லாது குருவருளால் அனுபூதி நிலையைப் பெறப் பெரிதும் விரும்பினார். அதற்கு ஏற்பத் திருவருளால், 'அங்கு மௌன குரு' என்னும் ஞானாசிரியர் அவருக்குக் குருவாக வாய்த்து, ஞானத்தை யுணர்த்தினார். அவர் உணர்த்திய ஞானம் சைவ சித்தாந்த ஞானமே யன்றி, ஏகான்ம வாத ஞானம் அன்று என்பது, அடிகளது பாடல்களிலேயே அங்கை நெல்லியென இனிது விளங்கிக் கிடக்கின்றது.

''எந்தைவட வாற்பரம
குருவாழ்க! வாழஅரு
ளியநந்தி மரபு வாழ்க!
என்றடியார் மனம்மகிழ
வேதாக மத்துணி
பிரண்டில்லை; ஒன்றென்னவே
வந்தகுருவே! வீறு
சிவஞான சித்தி நெறி
மௌனோப தேசகுருவே?
மந்த்ரகுருவே! யோக
தந்திர குரு வே!மூலன்
மரபில்வரும் மௌன குருவே''

என்னும் அவரது குருவணக்கப் பகுதி குறிக்கொண்டு நோக்கத் தக்கது. சிவஞான சித்தி நெறி—சிவஞானத்தால் அடையப்படும் வீடு பேற்றைப் பொருந்தியுள்ள நெறி. முத்தியைச் 'சித்தி' என்றலும் ஒருவகை வழக்கு. இனி இங்கு இவர், ''சிவஞான சித்தி'' என்றது அப்பெயருடைய சித்தாந்த நூலையே எனக் கொண்டு ,அந்நூலையே மௌனகுரு இவருக்கு உபதேச நூலாகத் தந்தார் எனவும் கூறுவர்.

அடிகள் தமது திரிசிரகிரி தட்சிணா மூர்த்தி வணக்கம் பத்துப் பாடல்களிலும் அம் மூர்த்தியைச் ''சித்தாந்த முத்தி முதலே'' என விளித்துள்ளார். தமது ஞான குருவாகிய மௌன குருவை, அந்தச் சித்தாந்த முத்தி முதல்வர்பால் உபதேசம் பெற்ற திருமூலர் மரபினராக அடிகள் குறிக்கின்றார். இவ்வாற்றால் இவரது குடிப் பிறப்பு ஞானமும், கல்வி ஞானமும், உபதேச ஞானமும் ஆகிய எல்லாம் சைவ சித்தாந்தத் தனிப்பெரு ஞானமாகவே அறியப்படுகின்றனவன்றி, ஏகான்மவாத ஞானத்தோடு ஒருசிறிதாயினும் தொடர்புடையதாகத் தோன்றவில்லை. மேலும், அவரது பாடல்கள் அனைத்தினிலும் அவரது ஞானானுபவம், சைவ சித்தாந்த ஞானாநுபவமேயன்றி வேறாகாமையைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன.

# சிவஞானபோதத் தெளிபொருட் பதவுரை

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

'சிவஞானபோதம்' நமது அருமைச் செந்தமிழ் மொழியிலுள்ள தலைசிறந்த நூல்கள் பலவற்றில் ஒன்று. இலக்கண நூல்களில் தொல்காப்பியமும், நீதிநூல்களில் திருக்குறளும், நெஞ்சையள்ளும் செஞ்சொற் காப்பியங்களிற் சிலப்பதிகாரமும், யோக அனுபவ நுட்பங்களை உணர்த்துதலில் திருமந்திரமும், வரலாற்று உண்மைகளை வளம் பெறப் பாடுதலிற் பெரியபுராணமும், கற்பனைத்திறன் செறிந்த கவிதை நலத்திற் கம்பராமாயணமும், பிறவும் தந்நிகரற்றுச் சிறந்து திகழ்தல்போல, நம் அருமைச் செந்தமிழ் மொழியின்கண் ஒப்புயர்வற்ற மெய்ப்பொருள் நூலாக வீறுற்று விளங்குவது, சிவஞான போதம் ஆகும்.

''திருக்குறள்போல் நீதிநூல்;
சிறந்துயர்தொல் காப்பியம்போல்
பொருத்தமிகும் இலக்கணநூல்;
**சிவஞான போதம்** போல்
சுருக்கமிகும் தத்துவநூல்;
தூயதிரு வாசகம்போல்;
உருக்கமிகும் பக்திநூல்,
உலகினில் வேறு எங்குமில்லை''—ந.ரா.மு.

சிவஞானபோதம் ''நூலாருள் நூல்வல்லார்'' நுணுகி ஆராய்ந்து கற்றுணர்தற்குரிய நூல். பல நூல்களையும் பயின்றுணர்ந்து கைவந்த பெரும் புலமை மிக்க பெருமக்களே, அதனைக் கற்றுணர்தல் இயலும். ஒவ்வொரு கலைத்துறையிலும் ஒரு சிலரே தனிப்பயிற்சியும் உணர்வும் பெற்ற நுண்தேர்ச்சியர் (Specialists & Experts) களாக விளங்குதலைக் காண்கின்றோம். தனித்தனிப் பண்பும் முயற்சியும் பயிற்சியும் கொண்டு அடையவேண்டிய அக்கலைத்துறைகளில், பொது மக்கள் சுவையோ உணர்வோ அடைவதென்பது இயலுவதன்று. பொதுமக்களுக்குச் சுவை பயவாமையாலோ, அவற்றை அவர்கள் நன்கு அறியமாட்டாமையாலோ, அக்கலைகளுக்கு எத்தகைய இழிவும் சிறுமையும் இல்லை. சிறப்பும் நுட்பமும் வாய்ந்த அரிய பெரிய கலைகள், பெரும்பாலான பொதுமக்களுக்குச் சுவைகுன்றித் தெளிவின்றிக் கடினமாகவே இருக்கும் (Caviare to the general). அவற்றை எத்துணைதான் எளிமைப்படுத்தி விளக்கினாலும், அவற்றில் உண்மை ஈடுபாடும் உழைப்பும் இல்லாதவர்க்குச் சிறிதும் தெளிவு பிறக்காது. எளிமைப்படுத்தினால் நுண்பொருள்கள் விடுபட்டுப் போகும்; நுண்பொருள்களை விளக்க முயன்றால் எளிமைத்தன்மை இன்றிச் சிக்கல் மிகுந்துவிடும். ''விரிப்பிற் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்'' எனப் புறநானூற்றுப்புலவர் ஒருவர் பாடிய நிலைமை போன்றது இது. *

இலக்கண அறிவு - இலக்கியப் புலமை - தருக்க நெறிப்பயிற்சி - திருமுறைகளிற் செறிந்த உணர்வு- பல்வேறு சமயநூல்களின் ஆராய்ச்சி - பண்பட்ட மனநிலை - உள்ளார்ந்த சமய நெறி ஒழுக்கம்- அறிவு முயற்சிகளில் அளவிலா ஆர்வம் - முதலியன பலவும் சிவஞானபோதச் செம்பொருட்டெளிவுக்கு இன்றியமையாதனவாக உள்ளன. 'பேணுபல் கலைகள் என்னும் பெருகு சோபானம் ஏறிய' பின்னரே, சிவஞானபோதச் செம்பொருட் சிகரக்காட்சி நம்மனோர்க்குக் கைகூடுவதாக உள்ளது.

சிவஞானபோதம், கேட்டல் - சிந்தித்தல்- தெளிதல் -ஒன்றி ஒழுகுதல் என்னும் நான்குவகை நெறிகளால் உணரற்பாலது. வெறும் நூல்களைப் படித்தல் ஒன்று மட்டுமே கொண்டு, தத்துவ நுண்பொருள்களைத் தகவுற அறிந்து கொள்ளுதல் இயலாது. காய்கறிக் கடைக்குச் சென்று கத்தரிக்காய் வாங்குவது போன்று, அத்துணை எளிமையில் சமய நூல்களின் தத்துவப் பொருள் நுட்பங்களை அறிந்து கொண்டு விடுதல் வேண்டும் என்று எதிர்பார்த்தல் முறையன்று. ** கடல் நீரைப் பருகினால் விடாய் தணியாமல் மேலும் மிகுதிப்படுதலே போன்று, வெறும் நூல்முகமாகப் படிப்பதனால், நமக்குத் தெளிவு பிறப்பதற்கு மாறாக ஐயங்கள்தான் மிகுதிப்படும்.

---

* "Any one who has ever tried to present a rather abstract scientific subject in a popular manner knows the great difficulties of such an attempt. Either he succeeds in being intelligible by concealing the core of the problem and by offering the reader only superficial aspects or vague allusions, thus deceiving the reader by arousing in him the deceptive illusion of comprehension; or else he gives an expert account of the problem, but in such a fashion that the untrained reader is unable to follow the exposition and becomes discouraged from reading any further"

—Dr. Albert Einstein,
in Dr. Einstein & Universe.

** "Most of us wish to pick up religion as easily as a shell from the sand. We have not the patience or the persevering energy for the laborious quest. As we get books from Blackwell, eggs from the farmer or medicines from the chemist, we expect the parson or the priest to provide us with religion at the cost of a few shillings or an hour a week. But it costs a good deal to be religious..."

—Dr. S. Radhakrishnan,
East and West in Religion.

''சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன மாத்திரத்தே வாய்க்கும்நலம் வந்தறுமோ?—
ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ?
தெண்ணீர்மையாய்? இதனைச் செப்பு''

என்று திருக்களிற்றுப்படியார் கூறுதலும், இங்குச் சிந்திக்கத் தக்கது. ''ஒண்குருவால் இன்று இந்நூல் மும்மை மலர்க்கு'' என்னும் திருமொழியால், சிவ ஞானபோதத்தினைக் குருமுகமாகவே பயிலுதல் வேண்டும் என்று, பெரியோர்கள் வலியுறுத்தியுள்ளமையும் காணலாம். நூலறிவு மட்டுமே யன்றிச் சிவானுபவமும் உடைய சிறந்த சான்றோரையே இங்கு 'ஒண்குரு' என்று பெரியோர்கள் குறித்துள்ளனர். இதனாலெல்லாம் சிவஞானபோதத்தினைப் பயிலும் நெறியும், பயிற்றும் நெறியும், இனைய என்று ஒருவாறு உணர்தல் கூடும். எனினும், சிவ ஞானபோதம் கற்க விரும்பும் ஆர்வலர்களுக்கு ஓரளவேனும் பயன் படத்தக்க நிலையில், பின் வரும் எளிய தெளிவுரை ஒன்று இங்குத் தரப்பெறுகின்றது.

## சிறப்புப் பாயிரம்

**மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்**
**பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்**
**காண்டல் செல்லாக் கண்போல், ஈண்டிய**
**பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் இருள்தீர்ந்து**
**அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி,**
**மயர்வுஅற நந்தி முனிகணத்து அளித்த**
**உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்;**
**பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன்**
**பொய்கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்**
**பவநனி வன்பகை கடந்த**
**தவர்அடி புனைந்த தலைமை யோனே**

**பதவுரை:**

மலர்தலை உலகில் - விரிந்த இடத்தை உடைய உலகத்தில்
மாஇருள் துமிய - பெரிய புறஇருள் அழியும்படி
பலர்புகழ் ஞாயிறு - பல சமயத்தாராலும் புகழப் படுகின்ற சூரியன்
படரின் அல்லதை - தோன்றினால் அல்லாமல்
காண்டல் செல்லா - காணும்தன்மை எய்தாத
கண்போல் - கண்ணொளியைப்போல,
அருந்துயர் - பொறுத்தற்கரிய துயரங்களைக் கொண்ட,
குரம்பையின் - உடம்பினால்,
ஆன்மா - சீவான்மாவையும், பரமான்மாவையும்
நாடி - கருதல் அளவையால் ஆராய்ந்து,
கண்இருள் - கருதி உணரப்படும் அகஇருள் ஆகிய ஆணவமலம்
தீர்ந்து - நீங்கி விடுபட்டு,
ஈண்டிய - எல்லா நூல்களும் தன் பொருளாகத் திரண்டு கூடிய
பெரும்பெயர் - மகாவாக்கியம் புகழ்கின்ற
கடவுளில் - முதற்கடவுளின் திருவருளால்
கண்டு - பொருள்களின் சிறப்பியல்புகளை உணர்ந்து,
மயர்வுஅற - மலமயக்கம் அழிய
நந்தி - திருநந்திதேவர்
முனிகணத்து - சனகர் சனந்தனர் சனாதனர் சனற் குமாரர் என்னும் முனிவர் கணங்களுக்கு
அளித்த - அறிவுறுத்தியருளிய
உயர்சிவஞானபோதம் - உயர்ந்த சிவஞானபோதம் என்னும் நூலை
உரைத்தோன - இயற்றியருளியவர்;
பெண்ணைப் புனல்சூழ் - பெண்ணையாற்றின் நீராலே சூழப்பட்ட
வெண்ணை - திருவெண்ணெய் நல்லூரில் தோன்றியருளிய
சுவேதவனன்-சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருப்பெயர் கொண்டவரும்;
பொய்கண்டு - பொய்ச் சமயங்களின் பொருள் இது என்று உணர்ந்து
அகன்ற - அவற்றை அகற்றிய
மெய்கண்ட தேவன் - மெய்கண்டதேவர் என்னும் சிறப்புத் திருப்பெயர் கொண்டவரும்;
பவநனி வன்பகை - பிறவியாகிய மிக்க வலிய பகையினை,
கடந்த - வென்ற
தவர்அடி புனைந்த - சிறந்த தவமுனிவர்கள் தனது திருவடியைப் புனைந்து கொள்ளுவதற்கு ஏதுவாகிய
தலைமையோன் - தலைமைப்பாட்டை உடையவரும் ஆவார்

குறிப்பு:

இருட்கேட்டிற்கும், நிருவிகற்பம் சவிகற்பம் என்னும் இருவகைக் காட்சிக்கும், ஞாயிறு இன்றியமையாச் சிறப்புடையதாதல் போல, மலத்தீர்விற்கும், ஆராய்ச்சி அனுபூதி என்னும் இருவகை உணர்விற்கும், இன்றியமையாச் சிறப்பை உடையது சிவ ஞானபோதம் என்பது கருத்து.

புறஇருளை நீக்கிக் காட்டுதற்குப் பன்னிரு வகைப்பட்ட ஞாயிறு உளதாதல்போல, அகஇருள் நீக்கி உணர்த்துதற்குச் சிவஞானபோதமும் பன்னிரு சூத்திரங்களால் அமைந்தது.

## மங்கல வாழ்த்து

**கல்ஆல் நிழல்மலை**
**வில்லார் அருளிய**
**பொல்லார் இணைமலர்**
**நல்லார் புனைவரே**

பதவுரை :

கல்ஆல் - கல் ஆலமரத்தின் நிழலில் அமர்ந்து
மலைவு இல்லார் - நந்தி தேவருக்கு ஐயப்பாடு இல்லையாகச் செய்தருளியவர் ஆகிய சிவபெருமான்,
அருளிய - அருள் செய்தற் பொருட்டு
பொல்லார் - பொல்லாத பிள்ளையாருடைய
இணைமலர் - இரண்டு திருவடித் தாமரைகளை
நல்லார் - கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்
புனைவர் - தமது தலைமேல் சூடிக்கொண்டு வணங்குவர்

குறிப்பு :

''மலைவில்லார்' என்னும் தொடர், மலை-வில்லார் என்றும், மலைவு-இல்லார் என்றும் இரு வகையிற் பொருள்படும். சிவபெருமான் மேரு மலையை வில்லாகக் கொண்டவர். 'இல்லார் - இல்லாமல் செய்தவர்' என்று பண்பு அடியிற் பிறந்த வினையாலணையும் பெயர். 'அருளிய' என்னும் சொல், 'கொடுத்த' என்று பெயரெச்சமாகவும், அருளுவதற்காக என்று செய்யிய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாகவும் பொருள்படும். பொல்லுதல் - பொள்ளுதல், செதுக்குதல். பொல்லார் - உளியால் பொள்ளிச் செய்யப்படாதவர்; தானே தேன்றியவர்; சுயம்புமூர்த்தி. மெய்கண்ட தேவர் வாழ்ந்திருந்த திருவெண்ணெய்நல்லூரில் உள்ள பிள்ளையாரின் திருப்பெயர், பொல்லாப் பிள்ளையார் என்பது.

உலகத்தில் புதல்வர்கள்பால் செய்யும் வழிபாடு தந்தையர்க்குக் கழிபேருவகை பயக்குமாதலின், 'மலைவில்லார் அருளிய பொல்லார் திருவடி புனைவர்' என்றார்.

சிவஞானபோதம் பலவகைகளில் தனிச் சிறப்பியல்பு உடைய நூல். சிறப்பாகக் குறிக்கலுறின், தமிழ் நூல்களுள் முதன் முதலில், மங்கல வாழ்த்துக் கூறுவதாக அமைந்தது சிவஞானபோதமேயாகும். நூலினுட் கூறப்படும் பொருட் பாகுபாடுகளைக் குறிப்பால் தன்னகத்தே அடக்கி நிற்றல், மங்கல வாழ்த்துக்கு இலக்கணம் என்பர். இனையதொரு மங்கல வாழ்த்துப்பாடல், சிவஞானபோதத்திற் காணப்படுதல்போல, முன்னைய தமிழ் நூல்களில் எதன்கண்ணும் காணப்படவில்லை.

இதன்கண், சிவஞானபோத நூலின்கண் விளக்கப்பெறும் பொருட்பாகுபாடுகள் அனைத்தும் குறிப்பாற் புலப்படுத்தப் பெற்றிருத்தல் காணலாம். (1) சிவஞானபோதம் சுருங்கிய நூலாதல் புலப்பட இச்செய்யுள் மிகக் குறுகிய 'வஞ்சித் துறை' யில் இயன்றுள்ளது. (2) இந்நூல் 12 சூத்திரங்களால் இயன்றுள்ளமை தோன்ற, இப்பாடல் 12 சொற்களால் அமைவதாயிற்று. (3) இச்செய்யுளகத்துள்ள 'அருளிய', 'புனைவர்' என்னும் இரண்டு வினைச்சொற்களால், இந்நூல் 'பொது' என்றும், 'உண்மை' என்றும் இரண்டு அதிகாரங்களையுடையதாதல் சுட்டப்பட்டது. (4) மூன்று மூன்று சொற்கள், ஒவ்வோர் அடியாக வைத்து நான்கடிகளால் இச்செய்யுள் யாக்கப்பட்டிருத்தலின், இந்நூலும் மும்மூன்று சூத்திரம் ஒவ்வோர் இயலாக, நான்கு இயல்களால் வகுக்கப்பெற்றமை தெளியலாம். (5) இச்செய்யுளில் 'மலைவில்லார்' என்னும் தொடர் 'மலை-வில்லார்' எனக் கொள்ளப்படுவதேயன்றி, 'மலைவு - இல்லார்' எனவும் பிரித்துரை நிற்கும் திறனால், இந்நூலின் மூன்றாம் சூத்திரமும், நான்காம் சூத்திரமும், தம்முள் தொடர்புடையனவாய் 'இதுவும் அது' என மாட்டெறிய நிற்கும் தன்மை புலனாம். (6) அன்றியும் இச்செய்யுளிற் 'கல்லால் நிழல்மலை' என இடமும், 'அருளிய' எனச் செய்கையும், 'இணைமலர்' எனத் திருவடியும், 'புனைவர்' எனப் பேறும் உணர்த்தப் பெற்றிருத்தலால், இந்நூலின் நான்கு இயல்களும் முறையே பிரமாணம்-இலக்கணம்-சாதனம்-பயன் என்பனவற்றை உணர்த்துதல் கொள்ளப்படும்.

ஆசிரியர் பாண்டிப்பெருமாள் என்பவர் இயற்றிய விருத்தியுரையிற் காணப்பெறாமல், ஆசிரியர் சிவஞான சுவாமிகள் அவர்களால் மட்டுமே திறந்தெரிந்து விளக்கப்பெற்றுள்ள, இன்னோரனைய சிறந்த நுண்பொருட் குறிப்புகளுக்கு இடனாக யாக்கப்பெற்ற இம் மங்கல வாழ்த்துப்பாடல் ஒன்றே, சிவஞானபோத நூலின் அருமைபெருமைகளை விளக்கப் போதியதாகும்.

## அவையடக்கம்

**தம்மை உணர்ந்து தமைஉடைய தன்உணர்வார்**
**எம்மை உடைமை எமைஇகழார்; — தம்மை**
**உணரார் உணரார்; உடங்கு இயைந்து தம்மிற்**
**புணராமை கேளாம் புறன்**

பதவுரை :

தம்மை - உடைமைப் பொருள் ஆகிய தம் இயல்பினை

உணர்ந்து - குருமுகத்தால் தத்துவஞான நூல்களால் அறிந்து

தமைஉடைய - தம்மை உடைமைப் பொருளாகக் கொண்ட

தன்(ஐ)உணர்வார் - தலைவனை உணரும் சிவஞானிகள்

எம்மை உடைமை (இன்) - எம்மை உடைமைப் பொருளாகக் கொண்டவர்கள் ஆதலின்

எமை - எம்முடைய குற்றங்களை

இகழார் - (குணமாகக் கொண்டு கோதாட்டுவது அன்றி), இகழ்தல் செய்யார்;

தம்மை உணரார் - தம்முடைய இயல்பினை உணராத அறிவிலிகள்,

உணரார் - தம்மை உடையவனாகிய தலைவனையும் உணரமாட்டார்கள்;

உடங்கு இயையந்து - அவர்கள் தம்முள் ஒருங்கே கூடிக்கொண்டு,

தம்மில் புணராமை (இன்) - தங்களுக்குள் தாங்களே ஒன்று சேராது முரண்படுதலால்,

புறன் - அவர்கள் எம்மையும் இந்நூலையும் புறத்தே இகழ்ந்து கூறும் மொழிகளை,

கேளாம் - யாம் ஒரு பொருளாகக் கொள்ளமாட்டோம்

குறிப்பு :

உடைமைப் பொருள், அடிமையும் உடைமையும் என இருவகைப்படும். அவற்றுள் உயிரினங்கள் எல்லாம் இறைவனுக்கு அடிமைப்பொருள் எனவும், மாயையும் கன்மமும் அவற்றின் காரியங்களும், உடைமைப்பொருள் எனவும் வழங்கப்பெறும். உடைமை-உடையவர் ஆகும் தன்மை. 'உணரார் உணரார்' என்னும் தொடரில், முன்னையது எதிர்மறை வினையாலணையும் பெயர்; பின்னையது எதிர்மறை வினைமுற்று. கேட்டல்-பொருளாகக் கொள்ளுதல்.

'புறன்' - முன்னிலையில் அன்றிப் புறத்தே இகழ்ந்து கூறும் புறங்கூற்றுமொழி. புறச்சமயம் பற்றி இகழ்ந்து கூறும் மொழியும், புறங்கூற்று மொழியும் என்று, இரட்டுற மொழிதலாற் கொள்க.

## (முதற் சூத்திரம்: பதியுண்மை)

**அவன்அவள் அதுஎனும் அவை,மூ வினைமையில்**
**தோற்றிய திதியே; ஒடுங்கிமலத்து உளதாம்;**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்**

பதவுரை :

அவன் அவள் அது எனும் - அவன் அவள் அது (ஆண் பெண் அலி) என்று சுட்டிக் கூறப்படுகின்ற

அவை - தொகுதியாகிய உலகம்

மூவினைமையில் - தோன்றுதல், இருத்தல், மறைதல் என்னும் மூன்று தொழில்களை உடைமையினால்,

தோற்றிய - ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட

திதியே - உள்பொருளேயாகும்;

மலத்து (ஆல்) - (அவ்வுலகம்) கன்ம மலத்தினால்

ஒடுங்கி(யின்) - தான் ஒடுங்குதற்கு இடமாகிய கடவுள் இடத்தினின்று

உளதுஆம் - (ஆணவமலத்தினால்) மீண்டும்தோன்றுவது ஆகும்; (இங்ஙனம் ஆதலின்),

அந்தம் - அந்தம் ஆகிய அழித்தற்றொழிலைச் செய்யும் கடவுளே,

ஆதி - முதற்கடவுள்,

என்மனார் புலவர் - என்றுகூறுவர் அளவைநூல் அறிவுடையோர்.

குறிப்பு :

திதி-உள்பொருள். ஒடுங்கி-ஒடுங்குவதற்கு இடமாக உள்ள கடவுள், பெயர்ச்சொல். 'ஒடுங்கியின் நின்று உலகம் உளது ஆகும்' என இயையும். அந்தம்-சங்காரம், அழித்தற்றொழில்; சங்கார காரணன். அந்தத்தைச் செய்யும் கடவுளை 'அந்தம்' என்றது உபசாரம் அல்லது ஏற்றுரை என்னும் முறையாகும்.

கருத்து:

உலகம் ஆண் பெண் அலி என்னும் அவயவப் பகுப்புடையது; சுட்டி உணரப்படுவது; சடமுமாய்ப் பலவுமாய் இருப்பது. ஆதலின் உலகமானது தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில்களை உடையது. அஃது ஒருவனால் தோற்றுவித்துக்காத்து அழிக்கப்படுகின்ற உள்பொருளேயாகும். உலகம் ஆணவ மலம் பரிபாகம் ஆதற்பொருட்டு மாயையினின்று தோன்றி, கன்மமலம் பரிபாகமாதற் பொருட்டு மாயைக்கு நிலைக்களனாகிய இறைவன்பால் ஒடுங்கி நிற்கும். உலகை ஒடுங்கச் செய்யும் சர்வ சங்கார காரணன் எவனோ, அவனே உலகிற்கு முதற் கடவுள்; ஏனையோர் முதல்வர் அல்லர். வினைமை -வினையுடைமை. உடைமை - உடையதாகும் தன்மை. அவை-தொகுதி. தோற்றிய - தோற்றுவிக்கப்பட்ட. திதிப்படும் உலகத்தைத் திதி எனவும், அந்தத்தைச் செய்யும் கடவுளை அந்தம் எனவும் உபசரித்தார்.

உலகில் மூவினையும் ஒருகாலத்தில் நிகழ்தலை யாண்டும் கண்டிலேம் என்பாரை நோக்கி 'மூவினையின்' என்னாமல், 'மூவினைமையின்' என்று தன்மையில் வைத்து ஓதினார். காணப்பட்ட உலகத்தால், காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின், 'தோற்றிய திதியே ஒடுங்கி உளதாம்' என உலகின்மேல் வைத்துக் கூறினார். திருவள்ளுவரும் 'ஆதி பகவன் முதற்றே உலகு' என உலகின்மேல் வைத்துக் கூறியமை காண்க. உலகம் தானே தோன்றியதன்று என்பார் 'தோற்றிய' எனப் பிறவினை வாய்ப்பாட்டாற் கூறினார். இல்லாததாகிய உலகம் பின்னர்த் தோன்றவில்லை, முன்பு நுண்ணியதாக இருந்த ஓர் உள்பொருளினின்றே உலகம் தோன்றியது என்பார், ''தோற்றிய திதியே'' என்றார். 'அந்தம் ஆதி' என்புழி, 'அந்தமே ஆதி' என்னும் தேற்ற ஏகாரம் தொக்கு நின்றது. இவ்வாறே ஒடுங்கி என்புழி இன் உருபும், மலத்து என்புழி ஆல் உருபும் தொக்கு நின்றன.

## முதல் அதிகரணம்

''ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம், உற்பத்தி திதி நாசம் உடைத்தென்றது; தோற்றமும் ஈறும் உள்ள தன்பாலே கிடத்தலின்''

(வெண்பா)

**பூதாதி ஈறும் முதலும் துணையாகப்**
**பேதாய் திதிஆகும் பெற்றிமையின்—ஓதாரோ?**
**ஒன்றுஒன்றில் தோன்றி உளதாய் இறக்கண்டும்,**
**அன்றுஎன்றும் உண்டுஎன்ன ஆய்ந்து.**

பதவுரை :

பேதாய் - காட்சியளவையானும் அறியாத மடவோனே

பூதாதி - பூதத்தை முதற் காரணமாக உடைய உலகத்திற்கு

திதி - நிலைத்தற்றொழில் ஆனது,

ஈறும் முதலும் - இறுதியும் தோற்றமும்

துணையாக ஆகும்-தனக்குத் துணைக்காரணமாகக் கொண்டே நிகழாநிற்கும்.

ஒன்று ஒன்றில் - ஒவ்வொரு காலச் சிறப்பில்

பெற்றிமையின் - ஒவ்வோர் இனம்பற்றி

தோன்றி - உலகப் பொருள்கள் ஒருங்கே தோன்றி,

உளதாய் - ஒருங்கே நிலைபெற்று,

இறக்கண்டும் - ஒருங்கே அழிவதைக் கண்ணாற் கண்டு வைத்தும்,

என்றும் - என்றாயினும்

அன்று - அதற்குரிய முடிவுகாலம்

உண்டு என்ன - உண்டாகும் என்று

ஆய்ந்து - ஆராய்ந்து பார்த்து

ஓதாரோ - அறிவுடையோர் கூறமாட்டார்களோ? கூறுவர்.

குறிப்பு :

பூதாதி (கு) - பூதங்களை முதற்காரணமாக உடைய உலகத்திற்கு

பெற்றிமையின் - இனத்தின் சார்பினால்

'ஓதாரோ' என்புழி, ஓகார வினா, ஓதுவர் என்னும் பொருள் குறித்து வந்தது.

## இரண்டாம் அதிகரணம்

''இனி, இல்லதற்குத் தோற்றம் இன்மையின் உலகம் உள்ளது; உள்ளதற்குச் செய்வோர் இன்றிச் செய்வினையின்மையின், உலகம் செய்வோனை உடையது; ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தியில்லை, ஆண்டு ஒடுங்குதலின் என்றது''.

(வெண்பா)

**இலயித்த தன்னில், இலயித்ததுஆம்; மலத்தால்**
**இலயித்த வாறுஉளதா வேண்டும்;—இலயித்தது**
**அத்திதியில் என்னின் அழியாது; அவை அழிவது**
**அத்திதியும், ஆதியுமாம் ஆங்கு.**

பதவுரை :

இலயித்தது - கன்மமலம் பக்குவமாதற்கு ஒடுங்கிய தாகிய உலகம்

இலயித்த தன்னில் - தான் ஒடுங்குதற்கு நிலைக்கள மான இறைவனிடமிருந்து

மலத்தால் - ஆணவமலம் பக்குவமாதற்பொருட்டு

ஆம் - படைப்புக்காலத்தில் மீளவும் உண்டாகும்;

இலயித்தவாறு - எப்பொருள் எவ்வாறு ஒடுங் கிற்றோ, அப்பொருள் அவ்வொடுங் கியவாறே,

உளது ஆ வேண்டும் - மீளவும்உளதாதல் எல்லோ ராலும் விரும்பப்படும். (அதுவே அறிவிற்குப் பொருத்தம் ஆகும்).

இலயித்தது - உலகம் ஒடுங்கியது,

அத்திதியில் என்னின் - அந்த மூலப்பகுதிவடிவாகிய திதிக் கருத்தாவினிடமேயாம் என்பையாயின்,

அவை - அம்மூலப்பகுதிக்கு மேலுள்ள புவனங்கள்,

அழியாது - அந்தத் திதிகருத்தாவின்கண் ஒடுங்கா.

அத்திதியும் - அந்தத் திதிக் கடவுளும்,

ஆதியும் - படைப்புக் கடவுளும்,

ஆம்அங்கு - தோன்றுதற்குக் காரணமாகிய அவ் வழித்தற்கடவுளினிடத்தில்,

அழிவது - (அவ்விருவரோடும்கூட) அத்தொகுதி அழிவதாகும்.

குறிப்பு :

(ஆ) -ஆதல்; முதல்நிலைத் தொழிற் பெயர். வேண்டும் - விரும்பப்படும். அவை-அந்த மாயா காரியத் தொகுதி. அழிவது-ஒடுங்குவது; திதி-திதிக் கடவுள். ஆதி-படைப்புக்கடவுள்; ஆம்அங்கு-ஆவ தற்குக் காரணமாகிய அவ் அழித்தற் கடவுள். ஆதல்-தோன்றுதல்.

(வெண்பா)

**வித்துண்டா மூலம் முளைத்தவா, தாரகமாம்**
**அத்தன்தாள் நிற்றல், அவர்வினையால்**
**—வித்தகமாம்;**
**வேட்டுவனாம் அப்புழுப்போல் வேண்டுருவைத்**
**தான்கொடுத்துக்**
**கூட்டானே? மண்போற் குளிர்ந்து.**

பதவுரை :

மண் குளிர்ந்து - நிலம் குளிர்ந்தவழி

வித்து உண்டா - அந்நிலத்தின்கண் விதை உள்ளது ஆக

மூலம் - முளையானது

முளைத்தவா - (அவ்விதையினின்று) தோன்றிய வாறுபோல,

தாரகம் ஆம் - (மாயையானது) தனக்கு ஆதாரம் ஆகின்ற

அத்தன்தாள் - இறைவனது திருவருட் சக்தியின் இடத்தில்,

நிற்றல் - உள்ளதாய் நிற்றலால்,

அவர்வினையால் - அவரவர்களின் வினைக்கு ஏற்ப

வித்தகம் ஆம் - அவ்வச் செயல்களைப் பயக்கும் சதுரப்பாடு உடையதாகும்.

வேட்டுவன் ஆம் அப்புழுப்போல் - வேட்டுவன் (குளவி) ஆதலை விரும்பும் புழு விற்கு, வேட்டுவன், அப்புழு விரும் பிய வடிவைக் கொடுப்பதுபோல,

வேண்டு உருவை - அவரவர்கள் விரும்புகின்ற உரு வத்தினை

தான் - முதல்வன்,

கொடுத்து - (அவரவர்களின் வினைகளுக்கு ஏற்ப) அளித்து

கூட்டானே? - வினைப்பயனைக் கூட்டுவிக்கமாட் டானோ? கூட்டுவன்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

குறிப்பு :

நிலம் குளிர்ந்த வழி அதன்கண் இருந்தாலன்றி விதையானது முளையாதவாறு போல, மாயையும் தனக்கு ஆதாரமாய் நிற்கும் இறைவனது சக்தியின் கண்ணதாய் நின்று, அச்சக்தி சங்கற்பித்தபடியே அவ்வச்செயல்களைப் பயக்கும் சதுரப்பாடு உடைய தாகும். ஆதலின், மாயையின் ஒடுங்கித் தோன்றும் உலகம், அதற்கு ஆதாரமாகிய இறைவனின் சக்தி யில் ஒடுங்கி, அதன்கண் நின்றும் தோன்றியதேயா கும். கிழங்கினின்றும் தோன்றும் தாமரையை, அக்கிழங்கிற்கு ஆதாரமாதல் பற்றிச் 'சேற்றினின் றும் தோன்றியது' என்னும் கருத்திற் 'பங்கயம்' என்ற பெயரால் வழங்குதல் காண்க. குடம் உண்டாவதற்கு மண் முதற்காரணமும், தண்டசக்க ரங்கள் துணைக்காரணமும், குயவன் நிமித்தகாரண மும், ஆதல்போல, உலகிற்கு மாயை முதற்காரண ணம்; இறைவனின் திருவருள் ஆகிய சக்தி துணைக் காரணம்; இறைவன் நிமித்தகாரணம்.

அன்றியும் முளைக்கு ஆதாரமாயிருப்பது வித்து. வித்துக்கு ஆதாரமாயிருப்பது நிலம். வித் தைப் போன்றது மாயை. முளையைப்போன்றது உலகம். நிலத்தைப் போன்றது சிவசக்தி. வித்திலி ருந்தே முளை தோன்றினாலும், அவ்வித்துக்கு ஆதாரமாகிய நிலம் குளிர்ந்தாலன்றி முளை தோன் றாது. அதுபோல், மாயையிலிருந்தே உலகம் உண் டாயினும், அம்மாயைக்கு ஆதாரமாகிய சிவசக்தி சங்கற்பித்தாலன்றி, மாயை (சடமாகையால்) தானே உலகைத் தோற்றுவிக்காது. சக்தி சிவத்தினின்றும் வேறாகாமையினாலும், சக்தி சிவத்தில் ஒடுக்கம் ஆதலாலும், சிவனே உலகத்திற்குக் கர்த்தா வென்று துணியப்படும்.

உலகம் ஒரு தன்மைத்தாயன்றி, பலவேறு வகைத்தாய்ப் படைக்கப்படுதல் துணைக்காரண வேறுபாட்டாலேயே ஆதலின், அதுபற்றி இறைவ னது அருளுடைமைக்கும் நடுவுநிலைமைக்கும் இழுக்கு இல்லை என்பது கருத்து.

'மண்போல்' என்புழி 'போல்' என்பது அசை. மூலம்-காரணம். குளிர்ந்து-குளிர்ந்தவழி. நிற்றல்-நிற்றலால். கூட்டானே என்னும்வினா, கூட்டுவன் என்னும் பொருள் குறித்தது. மேலை வெண்பாவில் 'இலயித்த' என்றதனால் மாயையுண்மை பெறப் பட்டமையின், அஃது ஈண்டுத் தோன்றா எழுவா யாக வருவிக்கப்பெற்றது.

(வெண்பா)

**நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில்**
**தாக்காது நின்றுளத்தில் கண்டிறைவன்**
**— ஆக்காதே**
**கண்ட நனவுணர்வில் கண்ட கனவுணரக்**
**கண்டவனில் இற்றின்றாம் கட்டு.**

பதவுரை:

இறைவன் - முதல்வன்

காலத்தின் - காலதத்துவம் போல

தாக்காது நின்று - விகாரப்படாமல் நின்று

ஆக்காதே கண்டு - உலகத்தைக் கரணத்தால் படையாது, கருத்தினால் மாத்திரம் படைத்து

நொடியாது நொடித்து - அழியாது அழித்தலால்,

கட்டு இன்று ஆம் - இறைவனுக்குப் பிணிப்பு இல்லை ஆகும். (இது எது போலும் என்னில்?),

உளத்தில் - கற்றநூற் சொல்லும் பொருளும் தன் கண் தோன்றுங்கால் தொடக்கு உறாத உள்ளம் போலும்;

கனவு கண்ட - கனவின்கண் கண்டவற்றை,

நனவு உணர்வில் - புறத்து விடயங்களை அறிந்து வந்த நனவுஉணர்வின்கண்,

உணரக் கண்டவனில் - விளங்க அறிந்தவன் (அவற்றில் தொடக்கு உறாதவாறு) போலும்;

இற்று - இத்தன்மைத்து

குறிப்பு:

ஆக்குதல், காண்டல்-படைத்தல். நோக்குதல் -காத்தல். நொடித்தல்- அழித்தல்; ஆக்காது ஆக்கி, நோக்காது நோக்கி என்றதனால், 'நொடியாது நொடித்து' என்பது வருவிக்கப்பட்டது.

காலத்தின் - காலதத்துவம் போல. உளத்தின் -உள்ளத்தைப்போல. கண்டவனில்-கண்டவனைப் போல என்று, இல்உருபுகள் மூன்றும் உவமைப் பொருளில் வந்தன. தாக்குதல்-தாக்கப்படுதல், விகாரம் எய்துதல். இறைவன் உலகத்தை முத்தொழிற் படுத்தினும், விகாரப்படாமல் இருப்பதனை விளக்குவதற்கு, காலம்-உள்ளம்-கனவு கண்டவன் ஆகிய இம்மூன்று உவமைகளும் எடுத்துக் காட்டப்பட்டன.

கட்டு-பிணிப்பு, பந்தம். அன்றே-அசை, அநாதியே எனினும் அமையும். உளத்திற் கண்டு-சங்கற்ப மாத்திரத்தினால் படைத்து, என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். திருக்குறளில் 'அருங்கேடன்' என்பது 'கேடுஅரியன்' என மாற்றிஇயைத்துப் பொருள் கொள்ளப்படுதல் போல, இங்கு 'இன்று ஆம் கட்டு' என வருவதும், 'கட்டு இன்று ஆம்' என மாற்றி இயைத்துப் பொருள்கொள்ளப் படும். சிவஞானசித்தியாரில்,

''கற்றநூற் பொருளும் சொல்லும்
கருத்தினில் அடங்கித் தோன்றும்

பெற்றியும்; சாக்கி ராதி
உயிரினில் பிறந்து ஒடுக்கம்

உற்றதும் போல; எல்லா
உலகமும் உதித்து ஒடுங்கப்,

பற்றொடு பற்றது இன்றி,
நின்றனன் பரனும் அன்றே''

எனவரும் பாடல்,இச்சிவஞானபோத வெண்பாவின் பொருளையே விரித்துரைத்து விளக்குகின்றது.

## மூன்றாம் அதிகரணம்

''இனிச் சங்காரமே முதல் என்றது, சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்தரம் இன்றி நிற்றலான்''.

(வெண்பா)

**ஒன்றலா ஒன்றால் உளதாகி நின்றவாறு**
**ஒன்றலா ஒன்றில்அவை ஈறாதல்;—ஒன்றலா**
**ஈறே முதல்; அதனின் ஈறலா ஒன்று**
**பலவாறே தொழும்பாகும் அங்கு.**

பதவுரை:

அவை-சேதனப் பிரபஞ்சத் தொகுதியாகிய உயிர்கள்எல்லாம்,

ஒன்றுஅலா- உருவம் அருவம் என்னும் ஒன்றும் அல்லாத

ஒன்றால் - ஒப்பற்ற பரம்பொருளால்,

உளதாகி நின்றவாறு - பிறப்பித்துக் காக்கப்பட்டவாறுபோல,

ஒன்று அலா ஒன்றில் - சடசித்துக்களில் ஒன்றும் அல்லாத பரம் பொருளில்,

ஈறுஆதல் - அழிவு எய்துவதினால்,

ஒன்றுஅலா ஈறே - ஒன்றும் அல்லாத அவ்வழித் தற் கடவுளே,

முதல் - முதற்கடவுள் ஆவார்.

அதனின் - அப்பரம்பொருள் போல்

ஈறுஅலா ஒன்று - அழிவின்றி நித்தமாகிய உயிர்த் திரள்கள்

அங்கும் - அவ்வீடுபேற்றின் கண்ணும்

பலவாறே-பலவகைகளினாலும்,

தொழும்பு ஆகும் - பரம்பொருளுக்கு அடிமை ஆகும்.

குறிப்பு:

இது சொற்பொருட் பின்வருநிலை அணி. செயற்படும் உலகம் (காரியப்பிரபஞ்சம்), அறிவில் பொருள் (சடம்) ஆதலானும்; அறிவுடைப்பொருட்கள் (சேதனப்பிரபஞ்சம்) ஆகிய உயிர்கள், அறியாமையினால் கட்டுற்றுச் சுட்டுணர்வில்லாமையானும்;இவற்றைத் தொழிற்படுத்துவதற்கு இவற்றின் வேறாகப் பேராற்றலும் பேரருளும் பேரறிவும் முதலியனவற்றை உடைய, ஒரு முழுமுதற்கடவுள் உண்டு என்பது பெறப்படும்.

இத்தன்மையன் ஆகிய முழுமுதற்கடவுள், ஒருவனே அமையும் ஆதலின், வேறும் அத்தன்மையர் பலர் உண்டு என்று கொள்ளின், அது மிகை என்னும் குற்றமாகும். அன்றியும், இலக்கணத்தில் ஒருவாற்றானும் வேற்றுமை இல்லாதபோது இலக்கியம் பலவாதல் செல்லாது என்னும் தருக்கநூற் கருத்தால், முழுமுதற்பொருளாகிய கடவுள் ஒன்றே என்பதனை வலியுறுத்த, 'ஒன்றுஅலா ஒன்று' என்று வரையறுத்து,முடிந்தது முடித்தலாகக் கூறினார். இதனால் ஈறு எனப்பெற்ற அழித்தற் கடவுளே, முழுமுதற்பொருளாவார் என வலியுறுத்தப் பெற்றது.

இருள் நீங்கிய போதிலும் கண்ணுக்குக் காணும் தன்மை, சூரியனை இல்லாமல் அமையாதவாறு போல, மலம் நீங்கிய முக்தி நிலையினும் உயிர்

களுக்கு அறிவுத்துணையாய் உடன்நின்று அறிவித்து நிற்கும் முதல்வனை இன்றி அமையாது. கண், படிகம் ஆகாயம் என்பவற்றைப் போலச் சார்ந்ததன் வண்ணமாய் அன்றி, உயிர்கள் முதல்வன் போலத் தனித்து நிற்கும் இயல்புடையன அல்ல. மேலும் உயிர்கள் இறையருள் இன்ப அனுபவ நுகர்ச்சிக்கு மட்டுமே உரியன; இறைவனைப்போல ஐந் தொழில்கள் இயற்றும் ஆற்றலுடையன அல்ல. விளக்கொளியுள் அடங்கி நிற்கும் கண்ணொளி போல, உயிர்கள் முதல்வனின் வியாபகத்தில் அடங்கி நிற்கும் வியாப்பியமாக அன்றித் தனித்து நிற்கும் தன்மையுடையன அல்ல. இக்காரணங்களால், உயிர்கள் வீடு பேற்றின் கண்ணும் இறைவனுக்கு அடிமையேயாகும், என்பதனை வலியுறுத்த 'ஈறுஅலாஒன்று பலவாறே தொழும் பாகும் அங்கும்' என்றார். முதற் சூத்திரம் முற்றிற்று.

## (இரண்டாம் சூத்திரம்: பாசஉண்மை)

**அவையே தானே யாய், இரு வினையிற்**
**போக்கு வரவு புரிய, ஆணையின்**
**நீக்கம் இன்றி நிற்கும் அன்றே**

பதவுரை:

அவையேயாய் - (முதல்வன்) உயிர்களோடு உயிரேயாய்க்கலப்பினால் ஒன்றாகியும்,

தானேயாய் - (பொருட்டன்மையால்) உயிர்களினின்று தான் வேறேயாகியும்,

அவையே தானேயாய் - (உயிர்க்கு உயிராதற்றன்மையால்) அவ்வுயிர்களே தானேயாக உடனாகியும்,

ஆணையின் - தனது சிற்சித்தியால்,

இருவினையின் - நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளால்

போக்கு வரவு புரிய - (உயிர்கள்) இறத்தல் பிறத்தல்களைப் புரியும்படி

நீக்கம் இன்றி - (ஆணையாகிய சிற்சக்தியினின்று) பிரிப்பு இல்லாமல்,

அன்றே - தொன்று தொட்டே

நிற்கும் - (சமவேதம் ஆக) நிற்பன்.

குறிப்பு:

'அவையே தானேயாய்' என்பது இரட்டுற மொழிதல். ஆதலின் அத்தொடர் 'அவையேயாய் -தானேயாய்-அவையே தானேயாய்-' என்று தனித் தனியே பிரித்தும் கூட்டியும் மூன்று வகையிற் பொருள் கொள்ளப்படும். சமவேதம்-பிரிப்பின்றி இணைந்து நிற்கும் தன்மை.

'ஆணையின்' என்பது 'இருவினையின்' என் பதனோடும், 'நீக்கமின்றி' என்பதனோடும் இயைந்து, சிங்கநோக்காக நின்றது. 'இன்' உருபுகள் இரண்டினுள் முன்னையது ஏதுப்பொருட் கண்ணும், பின்னையது நீங்கற்பொருட்கண்ணும் வந்தன.

மேலைமுதற்சூத்திரத்தில் 'அந்தம் ஆதி' என் புழிப் பிரிநிலை ஏகாரத்தால் விலக்கப்பட்டு நின்ற சேதனப் பிரபஞ்சம் ஆகிய உயிர்களே, ஈண்டு 'அவை' எனச் சுட்டப்பெற்றன.

ஆணை-இறைவனின் திருவருளாகிய சிற்சக்தி. புரிதல்-எப்பொழுதும் மேற்கொள்ளுதல். போக்கு வரவு-இறத்தல் பிறத்தல்.

கருத்து:

முதல்வன் கலப்பினால் உடலின் உயிர் போல் உயிர்களோடு ஒன்றாகியும், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன் போல வேறாகியும், உயிர்க்குயிராதல் தன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம் போல உடனாகியும் நிற்பான் என்பது கருத்து. மேலே 'அந்தம்' என்று பெயரளவில் உத்தேசமாகக் குறிப்பிடப்பெற்ற முதல்வனுக்குத் தடத்தலட்சணம் எனப்படும் பொதுஇயல்பு, இவ்விரண்டாம் சூத்திரத்தால் கூறப்பட்டது.

சங்கற்பம் என்னும் நினைவு மாத்திரத்தால் படைப்புத் தொழிலைப் புரிகின்ற இறைவன் உலகிற்கு நிமித்த காரணம் (Efficient cause), ஆதலால், அவனுக்குத் துணைக் காரணம் (Instrumental cause) சிற்சித்தி என்றும், இரு வினைகள் அச்சிற்சக்தியின் வழித்தாய துணைக் காரணம் என்றும் கூறினார். முதற் சூத்திரத்தில் 'மலத்துளதாம்' என்று ஆணவமலம் உண்மை உணர்த்தினார்; இங்கு 'இருவினையின்' என்பதால், கன்மமலம் உள்ளமை கூறினார். இருவினைக்குப் பற்றுக்கோடு மாயையே ஆதலால் மாயாமலம் உண்மையும், ஈண்டுக் கூறியதாயிற்று. குடத்துக்கு மண்போல, மாயை உலகிற்கு முதற்காரணம் (Material cause) ஆகும். இவ்வாற்றால் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்கள் ஆகிய பாசத்தின் உண்மை, இந்நூற்பாவால் உணர்த்தப்பட்டது.

## முதல் அதிகரணம்

''ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும்; அத்துவிதம் என்ற சொல் லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின், அத்துவிதம் என்ற சொல்லே, அந்நிய நாத்தியை உணர்த்தும் ஆயிட்டு.''

(வெண்பா)

**கட்டும் உறுப்பும் காணமும் கொண்டுள்ளம்**
**இட்டதொரு பேர்அழைக்க என்என்றாங்கு;**
**—ஒட்டி**
**அவன்உளமா கில்லான்; உளம் அவனா**
**மாட்டாது;**
**அவன்உளமாய் அல்லனுமாம் அங்கு**

பதவுரை:

உள்ளம் - உயிரானது

கட்டும் உறுப்பும் - நரம்பு முதலியவற்றால் கட்டப்படும் உடம்பினையும்,

கரணமும் கொண்டு - ஐம்பொறி முதலிய கருவிகளையும் கைக்கொண்டு நின்று,

இட்டது ஒருபேர் அழைக்க - உடம்பிற்கு இட்ட பெயரால் அழைத்தபோது,

என் என்றாங்கு - உயிரானது ஏன் என்று கேட்பது போல,

ஒட்டி - முதல்வன் உயிர்களில் வேறல்லனாய்க் கலந்து ஒட்டி நிற்பவனாம்!

அங்கு - அவ்வாறு ஒட்டியவழியும்,

அவன் உளம் ஆகில்லான் - முதல்வன் உயிர் ஆக மாட்டான்.

உளம் அவன் ஆமாட்டாது - உயிர் முதல்வன் ஆக இயலாது.

அவன் உளமாய் - (ஆனால்) அம் முதல்வன் உயிர் ஆகியும்,

அல்லனும் ஆம்-உயிர் அல்லாதவனும் ஆக நிற்பான்.

குறிப்பு:

உறுப்பு-உடம்பு. கரணம்-கருவி, ஐம்பொறிகள் முதலியன. உள்ளம்-உயிர். ஒட்டி-ஒட்டிக்கலந்து நிற்பவன், இறைவன்; வினையால் அணையும் பெயர். அவன்-இன்றவன்.

கருத்து:

உடம்பும் உயிரும் கலந்து ஒன்றாக நிற்பினும் உயிர் உயிரே; உடம்பு உடம்பே; உயிர் உடம்பு ஆகாது; உடம்பு உயிர் ஆக மாட்டாது. ஆயினும் உயிர் உடம்பாயும், அதனின் வேறாகியும் நிற்கும்; உடம்பு அங்ஙனம் நிற்காது. அதுபோல இறைவன் இறைவனே; உயிர் உயிரே; இறைவன் உயிர் ஆகான்; உயிர் இறைவன் ஆகமாட்டாது. ஆனால் இறைவன் உயிராயும் அதனின் வேறாயும் நிற்பான். உயிர் அங்ஙனம் நிற்க இயலாது. இவ்வெண்பாவால் இறைவன் உயிர்களோடு கலந்து ஒன்றாய் நிற்கும் தன்மை உணர்த்தப்பட்டது.

(வெண்பா)

**ஒன்றென்ற தொன்றேகாண்; ஒன்றே பதி;**
**பசுவாம்**
**ஒன்றென்ற நீபாசத் தோடுளைகாண்;**
**—ஒன்றின்றால்**
**அக்கரங்கள் இன்றாம் அகரஉயிர் இன்றேல்;**
**இக்கிரமத்து என்னும் இருக்கு.**

பதவுரை:

இருக்கு - வேதம்

ஒன்று என்பது - ஒன்று என்று கூறுவதற்குப் பொருள்,

ஒன்றேகாண் - ஒன்று என்பதேயாம். (அதற்குக் கருத்து),

பதி ஒன்றே - பதிப்பொருள் ஒன்றே; இரண்டில்லை என்பதாகும்.

ஒன்று என்ற நீ - பதிப்பொருளை ஒன்று என்று கருதிச் சொல்லுகின்ற நீ,

பசு ஆம் - அப்பதியின் வேறு ஆகிய பசு ஆவாய்.

பாசத்தோடு உளை காண் - நீ மலத்தோடு கட்டுற்று இருக்கின்றாய்; இதனை அறிந்து கொள்க.

அகர உயிர் இன்றேல் - அகரம் ஆகிய உயிர் எழுத்து ஒன்று இல்லையாயின்,

அக்கரங்கள் இன்று ஆம்-பிற எழுத்துக்கள் யாவும் இல்லை ஆகும்.

என்னும் - என்று சொல்லுகின்ற

இக்கிரமத்து - இம்முறைமை பற்றி

ஒன்றும் இன்றால் என்னும் - பிரமப்பொருள் இல்லையாயின் ஒருபொருளும் இல்லை என்று வேதம் கூறும்.

குறிப்பு:

'அகரஉயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாம்' என்றது, இறைவன் உயிர்களின் வேறாகியும் வேறன்மைக்கு அனுபவம் காட்டியவாறு. அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இல்லை என்பது, 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' என்னும் தொல்காப்பியத்தானும், 'அகர முதல எழுத்தெல்லாம்' என்னும் திருக்குறளானும், 'அகர உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து' என்னும் திருவருட்பயன் என்னும் நூலானும்.

''ஒன்றுஎன மறைகள் எல்லாம்
உரைத்திட, உயிர்கள் ஒன்றி

நின்றனன் என்று பன்மை
நிகழ்த்துவது என்னை?' என்னின்,

அன்றுஅவை பதிதான் ஒன்றுஎன்று
அறையும்; அக்கரங்கள் தோறும்

சென்றிடும் அகரம் போல
நின்றனன், சிவனும் சேர்ந்தே.''

என்னும் சிவஞானசித்தியாரின் செய்யுளானும், தெள்ளிதிற் புலனாகும். இவ்வெண்பா இறைவன் உயிர்களோடு (தானேயாய்-அபேதமாய்) கலந்து நிற்கும் இயல்பை இனிது உணர்த்துகின்றது.

(வெண்பா)

**பண்ணையும் ஓசையும் போலப். பழமதுவும்**
**எண்ணும் சுவையும்போல், எங்குமாம்—**
**அண்ணல்தாள்**
**அத்துவிதம் ஆதல், அருமறைகள்**
**ஒன்றென்னாது**
**அத்துவிதம் என்றறையும் ஆங்கு**

பதவுரை :

பண்ணையும் ஓசையும் போல - பண்ணும் அதனின் வேறு அன்றாக எண்ணப்படும் இசையும் போலவும்;

பழம் அதுவும் எண்ணும் சுவையும் போல் - பழமும் அதனின் வேறு அன்றாக எண்ணப் படும் சுவையும் போலவும்.

எங்கும்ஆம் அண்ணல் தாள் - எங்கும் வியாபகமாக விளங்கும் இறைவனின் திருவருள்

அத்துவிதம் ஆதல் - உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதனால்

அருமறைகள் - வேதங்கள்,

ஒன்று என்னாது - ஒன்று என்று கூறாமல்,

அத்துவிதம் என்று - பிரம்மம் அத்துவிதம் என்று,

ஆங்கு அறையும் - அவ்வவ்விடங்களில் கூறும்.

கருத்து:

வேதமானது பதிப்பொருள் ஒன்றே என்பதனை, ஏகம் என்னும் சொல்லாலும், அஃது உயிர்களோடு இரண்டறக் கலந்து நிற்றலை அத்துவிதம் என்னும் சொல்லாலும் விளக்கிற்று என்பது கருத்து. இதனால் பிரமப்பொருள் ஒன்றே உள்ளது, இரண்டாவது பொருள் இல்லை என்று கூறும் மாயாவாதக் கொள்கை மறுக்கப்பட்டது.

ஒரு பொருளே அவயவ அவயவிகள் ஆகவாவது, குணகுணிகள் ஆகவாவது, வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்றற்கு ஏதுவாகிய தாதான்மியமும், அதுபோல இருபொருள்கள் அதுஅதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற்கு ஏதுவாகிய

(தொடர்ச்சி 50-ஆம் பக்கம்

# சிந்தாமணியில் ஒரு செய்யுள்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

''செந்தமிழ் இலக்கியச் செல்வர்''
பேராசிரியர் திரு செ. வேங்கடராமச் செட்டியார், சிதம்பரம்

## முன்னுரை :

தமிழ் இலக்கியச் சுவையை நுகர எண்ணும் தமிழ்ச் சான்றோர் எவரும் 'சீவக சிந்தாமணி' என்னும் செந்தமிழ்க் காப்பியத்தைப் படிக்காமல் இருத்தல் இயலாது. சங்கத் தமிழ் நூல்களைப் போலவே பழுத்த சுவையுடைய முத்தமிழ்ச் சொற்களாலியன்று, கற்பனை வளங் கனிந்து, ஓசைநயம் மிக்குக் கற்பவர் நெஞ்சுக்குக் கற்கண்டுபோல் இனிப்பது சீவகசிந்தாமணி. சோழன் அநபாயன் இந்தக் காப்பியத்தின் சுவையில் ஈடுபட்டு மற்றை நூல்களையெல்லாம் நோக்காதிருந்தான் என்பதே, இந்நூலின் சிறப்பிற்குப் பெரிய சான்றாகும். நச்சினார்க்கினியர் இதற்கு எழுதியுள்ள உரை. இந்நூலில் வரும் ஐயங்களைப் போக்கி நயங்களை நன்கு புலப்படுத்தும் நல்லுரையாக அமைந்துள்ளது. அருக சமயத்தின் சிறந்த கொள்கைகளைப் புலப்படுத்தும் நூலாகச் சீவகசிந்தாமணி அமைந்திருப்பினும், அந்தச் சமய வேறுபாட்டை உளங்கொளாமல் தமிழிலக்கியச் சுவை ஒன்றையே கருதி, அதைப் பன்முறை படித்து மகிழ்தல் சைவப் பெருமக்கட்கும் வைணவப் பெரியார்கட்கும் இயல்பாகும்.

## சீவக சிந்தாமணி :

திருத்தக்கதேவர் என்ற செந்தமிழ்ப் புலவர் தம் புலமை நலம் முழுதும் தோன்ற, எல்லாவகையான அழகு நலங்களும் அமைய, இக்காப்பியத்தை அமைத்துள்ளார். கதையின் போக்கும், கற்பனை நோக்கும், சுவைமிகு வாக்கும் நிறைந்து, படிப்போரை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் சிறப்பினது சீவக சிந்தாமணி. சீவகசிந்தாமணியைப் படிக்காத புலவர்களைக் குறைபாடுடைய புலவர் எனக் கருதிய காலமும் உண்டு. அத்தகைய சிறப்புச் சீவகசிந்தாமணிக்கு உண்டு.

இந்தக் காப்பியத்தைப் படித்து மகிழும் வாய்ப்பை யான் பெற்றதுண்டு. சிற்சில பகுதிகளை ஆழ்ந்து சிந்தித்ததுமுண்டு. அந்த ஆழ்ந்த சிந்தனையில் ஒரு பகுதியையே இங்கு எழுதுகின்றேன்.

## ஏமாங்கத நாடு :

நாமகள் இலம்பகம் முதல் முத்தியிலம்பகம் ஈறாகப் பதின்மூன்று இலம்பகங்களையுடையதாக இப்பெருங்காப்பியத்தை விரித்துக் கூற விரும்பிய திருத்தக்கதேவர், இசையால் திசைபோய ஏமாங்கதம் என்னும் நாட்டின் வளத்தைக் கூறத் தொடங்குகின்றார்.

''காய் மாண்ட தெங்கின் பழம்
வீழக் கமுகின்எற்றிப்,
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி
வருக்கை போழ்ந்து,
தேமாங் கனிசிதறி வாழைப்
பழங்கள் சிந்தும்,
ஏமாங் கதமென் றிசையாற்
றிசைபோய துண்டே''

என்று கூறுகின்றார். இப்பாடல் ஏமாங்கத நாட்டு மருதநிலத்து வளத்தை நமக்குக் காட்டுவதாக அமைந்துளது. எழில் பொங்கும் தெங்கும், கவின்மிக்க கமுகும், பயன் மிக்க பலாமரங்களும், தேனினு மினிய தேமா மரங்களும், வளங்கனிந்த வாழைகளும் செறிந்துள்ள ஒரு சூழலைத் திருத்தக்கதேவர் நம் மனக்கண்முன் நிறுத்துகின்றார். விண்ணை முட்டும் தென்னையிலிருந்து தேங்காய் நெற்று காம்பற்று வீழ்கின்றது.

தெங்கு மிகவுயர்ந்து வளர்ந்திருப்பது. கமுகு அந்தத் தெங்கினும் சிறிது குறைந்த வளர்ச்சியுடையது. பலாமரம் கமுகினும் குறைந்த உயரமுடையது. தேமா மரம் பலா மரத்தினும் சிறிது குறுகியது. வாழை மரம், தேமா மரத்தினும் தாழ்ந்துள்ளது. இங்ஙனம் தெங்கும், கமுகும், வருக்கையும், தேமாவும், வாழையும் ஓரிடத்தே நெருங்கி வளர்ந்துள்ளனவாயினும், முறையே ஒன்றின் ஒன்று தாழ்ந்துள்ள நிலைமையை நாம் உளங்கொளல் வேண்டும். தெங்கின்பழம் விழும்போது அதன் அருகிலுள்ள கமுகின் நெற்றியில்படுகின்றது. அதனால், அந்தக் கமுக மரத்தில் தேனீக்கள் கட்டியிருந்த தேனிறால் கிழிகின்றது. தேனிறாலைக் கிழித்த தெங்கின்பழம் கமுகின் அருகிலுள்ள

பலாமரத்தில் படுகின்றது. அதனால், பலாப் பழம் பிளவு படுகின்றது. பலாப்பழத்தைப் பிளந்த தெங்கின் பழம் பலாவின் அருகில் வளர்ந்துள்ள தேமா மரத்தில் படுகின்றது. தேமாங்கனியைச் சிதற வடிக்கின்றது. அதன் பின் மாமரத்தின் அருகிலுள்ள வாழை மரத் தில்படுகின்றது. வாழைப்பழங்கள் சிந்துகின் றன.

தெங்கின்பழம் இப்படித் தேனிறாலைக் கீறிப் பலாப்பழத்தைப் பிளந்து தேமாங்கனி யைச் சிதற வடித்துக்கொண்டு, வாழைப் பழங்களைத் தரையில் சிந்தும் இயல்புடையது ஏமாங்கதநாடு. இந்த ஐவகை மரங்களும் ஒரே இடத்தில் நெருங்கி வளர்ந்துள்ள வள மிக்க நிலையைத் திருத்தக்கதேவர் நமக்குக் காட்டுகின்றார். எந்த நாட்டிலும் காணப் படாத இந்த வளத்தைப் பெற்றிருப்பதால், ஏமாங்கதநாடு இசையினால் (புகழினால்) திசை யுள்ள அளவுவரை போய்ப் பரவியுள்ளது என் கின்றார் தேவர். முக்கனிகளும் கனிகின்ற வேனிற்காலத்து மருதநிலத்துக் காணப்படும் காட்சியையே இங்குக் கூறுகின்றார் என்பது தெளிவு. நாட்டுவளம் காட்டத் தொடங்கும் போதே மிக இனிமையான காட்சியை நமக்குக் காட்டுகின்றார். தேனும், பலாப்பழமும் மாம்பழமும், வாழைப்பழமும், தேங்காய் நெற்றோடு நம் மனக்கண்முன் காட்சியளிக் கின்றன. தேங்காய்த் துருவலும் தேனும் முக்கனிகளும் கலந்த கலவையை-பஞ்சாமிர் தத்தை உலக வடிவாகிய இறைவனுக்குத் திருமஞ்சனமாட்டுகின்றாரோ தேவர் என்ற எண்ணம் உண்டாகின்றது அன்றோ !

## புறநானூறு :

மேலிருந்து கீழ்வீழ்கின்ற தெங்கம்பழம் இவ்வாறு தேனிறால்களைக் கீறி, வருக்கை போழ்ந்து, தேமாங்கனி சிதறி வாழைப்பழங் களைச் சிந்தும் இந்தக் கற்பனை தேவர்க்கு எப்படித் தோன்றியிருக்கலாம் என எண்ணிய போது வன்பரணர் பாடிய பாடல் ஒன்று நினைவிற்கு வந்தது.

வல்வில்லோரி என்ற வள்ளல் காட்டில் வேட்டையாடுகின்றான். ஓரியின் வலிய வில்லினின்று புறப்பட்ட அம்பு யானையை நோக்கித்தான் விடப்பட்டது. ஆனால், யானையை வீழ்த்திய அந்த அம்பு அதனோடு அமையாமல் அந்த யானையைக் கொல்லத் திறந்த வாயொடு நின்றிருந்த புலியையும் கொன்றுவிட்டது. புலியைக் கொன்றதோடு அமையாமல், பின்னும் விரைகின்றது. அப் புலியைக் கண்டு அஞ்சிநடுங்கிக் கொண்டிருந்த புள்ளிமானையும் தரையில் உருளச் செய்தது. கொல்லக் குறிபார்த்திருந்த உரல்போன்ற தலையையுடைய காட்டுப் பன்றியின் உடம் பில் நுழைந்து அதனை வீழ்த்தியது. அதன் பின்னும் விரைந்து சென்று, அப்பன்றிக்குப் பயந்து ஆழ்ந்த புற்றில் ஒளிந்திருந்த உடும்பின் உடம்பில் தைத்து அமைந்தது என்ற கருத்த மைந்த—

''வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்''

என்ற பாடற் பகுதியில் வரும் அம்பின் செய லோடு, காய்மாண்ட தெங்கின் பழத்தின் செயல் ஒத்திருத்தலைக் காணலாம். வல்வில்லோரி தேரிலிருந்து யானையின்மேல் அம்பினை விடு கின்றான். தேர், யானையினும் உயர்ந்திருப் பது ஆதலின், அங்குநின்று, விடப்பட்ட அம்பு அதனினும் தாழ்ந்துள்ள யானையின் உடம்பில் புகுந்து வெளிப்பட்டு, அவ்யானையினும் குறுகியதாக, இருக்கும்புலியைக் கொல்லுதலும் புலியினுடம்பிலிருந்து உருவி அப்புலியினும் குள்ளமாக இருக்கும் புள்ளிமானையுருட்டுத லும், பின்பு அம்மானினும் குள்ளமாகிய காட்டுப்பன்றியைத் தாக்கிக் கொன்று சென்று, பின் தரையில் ஆழ்ந்துள்ள புற்றில் இருந்த உடும்பின் உடம்பில் தைத்து அமைதலும் ஆகிய செயல்கள், அந்த அம்பினை எய்த வல் வில்லோரியின் வில்வலியையும் மெய்வலியை யும் காட்டுகின்றன. தேர்மேலிருந்து யானை யிருந்த திசைநோக்கிவிட்ட அம்பு, அவ் யானையை யுருவிப்பின் புலியை யுருவிப் புள்ளி மானையும் யுருவிப் பன்றியை யுருவிப் புற்றில் உள்ள உடும்பில் தைத்தது என்ற இப்பாடற் கருத்தே கம்பரை,

''உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன்
னுரனுருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றொருவாளி''

என இராமனது அம்பைப் பற்றிக் கூறச் செய் தது எனலாம். மேலும் குறிஞ்சிக் கலியில் கபிலர்,

''யானை, அடியொதுங் கியக்கம் கேட்ட கானவன்
நெடுவரை ஆசினிப் பணவை யேறிக்
கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்
இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை யுதிராத்
தேன்செய் இறாஅல் துளைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துண ருழக்கிக்
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்துள் மலைகெழு வெற்பனைப்
பாடுகம் வா வாழி தோழி''

எனக் கூறியுள்ள கவணின் செயலும் நினை விற்கு வந்தது.

## திருத்தக்க தேவர்:

வன்பரணர் காட்டும் அம்பு வல்விலோரி யின் முயற்சியால் விடப்பட்டுப் படிப்படியே யானை முதலிய ஐந்துயிர்களைக் கொன்றது. கபிலர் காட்டும் கானவன் கவண்கல், கான வனது முயற்சியால் புறப்பட்டுக் குறிபார்க்க யானையை ஓட்டுதலும் செய்யாது, ஓரறிவுயிர் களாகிய வேங்கை மரம் முதலியவற்றை அலைத்துவிட்டுப் பலவின் பழத்தில் தங்கிவிட் டது. ஆனால், கொல்லாநோன்பு மேற்

கொண்ட திருத்தக்கதேவர் காட்டும் தெங்கின் பழத்தை யாரும் தள்ளவில்லை. தானே பழுத்து வீழ்கின்றபோது கமுகிலிருந்து தேனி றாலில் படுகின்றது; அந்த இறால் கிழிகின்றது; பலாப்பழம் பிளக்கின்றது. பின்பு மாமரத்தின் மேல் வீழ்கின்றது; தேமாங்கனி சிதறுகின்றது; பின்பு வாழையின் மேல் விழுகின்றது, வாழைப் பழங்கள் சிந்துகின்றன. இறுதியில் அந்தத் தெங்கின் பழம் எங்குத் தங்கியது என்பதைக் கூடத் தேவர் சொல்லவேயில்லை. வாழைப் பழங்களைச் சிந்திய நிலையில் அவ்வாழைப் பழங்களோடு தரையில் வீழ்ந்து அமைந்தது என்று கொள்ளலாம். திருத்தக்கதேவர் தம் காப்பியத்தில் சிறந்த பழைய இலக்கியக் கருத்துக்களை எடுத்தாளும்போதும், தம் சமய நெறி கடவாது, கொலையொடுபடாத செயல் களையே எடுத்தாண்டுள்ள சிறப்பு, நினைத் தொறும் வியத்தகும் நீர்மையதாகும். வன் பரணரின் பாடலமைப்பைப் பின்பற்றியதாக இப்பாடலைத் தேவர் அமைத்திருந்தாலும், அப்பாடலில் அமைந்த கொலைச் செயல்களை ஓர் அறிவுயிர்களின் இயல்பான செயல் களாகவே அமைத்துள்ளமை காணலாம்.

## நச்சினார்க்கினியர் :

தெங்கின் பழத்தால் தேனிறால் முதலியன சிதைவுற்றன என்ற பொருளும் இச்செய்யுளில் தோன்றுமாயினும், நச்சினார்க்கினியர் தெங் கின் பழத்திற்கும் அக்கொடுஞ்செயலை ஏற்றிக் கூற விரும்பாது சீறுதல் முதலிய வினைகள் தேன்தொடை முதலியவற்றிற்கே யேற்றிப் பொருள் கூறியுள்ளார். ''வீழ'' என்னும் எச்சம் காரண காரியப் பொருட்கண் இறந்த காலம் உணர்த்திற்று. ''ஒழிந்த எச்சம் ஈண்டுச் செய்வதன் தொழில் மேலன'' என்ற இலக் கணக் குறிப்பின்படி நோக்கினால் தேன் தொடை கிழிவுற்றது; வருக்கை பிளவுற்றது; தேமாங்கனி சிதறியது; வாழைப்பழங்கள் சிந்தின என அவ்விறால் முதலியவற்றின் தொழில்களாகவே கூற வேண்டும் என்பது பெறப்படும்.

## பரிமேலழகர் :

தெங்கின் பழம் வீழ்தலால்தானே தேனி றால் முதலியன சிதைந்தன எனின், அஃ தொக்கும். தெங்கின் பழம் வீழ்ந்தபோது கமுகின் மடல் சிதையவில்லை; பலா இலை உதிரவில்லை; மாவின் காய் சிதறவில்லை; வாழையின் காய் சிந்தவில்லை; என்பதையும் சிந்தித்தல் வேண்டும். இவ்விடத்தில் பரிமேலழ கரின் உரைத்திறம் நினைத்தற்குரியது. ''என் பிலதனை வெயில் போலக் காயுமே அன்பில தனை அறம்'' என்ற குறளுரையில், வெறுப் பின்றி எங்கும் ஒரு தன்மைத்தாகியவெய்யிலின் முன் என்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறு போல, அத்தன்மைத்தாகிய அறத் தின்முன் அன்பில்லது தன்னியல்பாற்கெடும் என்பதாம்'' என்று எழுதியுள்ளார். இந்த உரையைத் தெளிந்தால், நச்சினார்க்கினியர் உரையும் நன்கு தெளிவாகும். தெங்கின் பழம் வீழ்கின்றபோது அவ்வீழ்ச்சியைத் தாங் கிக் கொள்ளும் வன்மையின்மையால் தேனி றால் முதலியன சிதைந்தனவேயன்றி, தெங் கின் பழ வீழ்ச்சியால் மட்டுமன்று; ஆதலின் அவை அவற்றின் தொழில்களேயாம். தெங் கின்பழம் வீழ்தலும் ஒருவகையில் காரணமாக லாம். அவ்வளவே. இயல்பாக முதிர்ந்து வீழ் கின்ற தெங்கம்பழத்திற்குத் தேனிறால் முத லியவற்றைச் சிதைக்கும் தீச்செயலை ஏற்றிக் கூறலாகாது என்ற எண்ணத்தால் நச்சினார்க் கினியர், சீறி முதலிய எச்சங்களைச் செய்வதன் தொழிலாகக் கூறினர் என்பது தெளிவு. இத னால் திருத்தக்கதேவரின் குறிப்பை நச்சினார்க் கினியர் எவ்வளவு நன்றாகத் தெளிந்து எழுது கின்றார் என்பது புலனாம். திருத்தக்கதேவர் இப்பாடலில் தாவரங்களும் ஒன்றை ஒன்று வருத்தின என்ற கருத்திற்கு இடமில்லாதபடி செய்துள்ளார் என்ற நுட்பமும், அந்நுட்பத்தை அறிந்து நச்சினார்க்கினியர் எழுதியுள்ள இலக் கணக் குறிப்பும் நினைந்து நினைந்து உருகத் தக்கன. காணா உயிர்க்கும் கையற்றேங்கும் இயல்பினரல்லரோ தேவர் !

## கலித்தொகை :

''யானையின் அடியோசையைக் கேட்ட கானவன் உயர்ந்த மலையில் ஆசினிப் பலா வின் மேல் இட்ட பரணிலே ஏறிக் கடிய விசை யுனையுடைய கவணில்கல்லை எறிகையினாலே, அக்கல் முறிந்த வரையிடத்து நின்ற வேங்கை யினது ஒள்ளிய பூக்களைச் சிதறி, ஆசினிப் பலாவினது மெத்தென்ற பழம் நெகிழ்ந்த வற்றை உதிர்த்து, தேனினம் வைத்த இறாலை துளையுண்டாம்படி உருவி நறிய வடுவையுடைய மாவினது பசிய கொத்துக்களை உழக்கிக் குலையை யுடைத்தாகிய வாழையினுடைய கொழுவிய மடலைக் கிழித்துப் பலவினது பழத்துக்குள்ளே தங்கும் சிறிய மலைகள் பொருந்தின பெரிய கலையினையுடையவனைப் பாடுவோமாக'' என்பது இப்பாடற் பகுதியின் பொருள்.

வன்பரணர் வல்லிவில்லோரியினது அம் பின் வலிமை புலப்படக் கூறிய பாடலின் அமைப்பும் கபிலர் கானவனது கவண் வலிமை தோன்றக் கூறிய இயற்கை வருணனையின் அமைப்பும், காய்மாண்ட தெங்கின் பழம் வீழ்ந்தமையால் நிகழ்ந்தனவாகத் திருத்தக்க தேவர் கூறியுள்ள அமைப்பும், தம்முள் ஒப்பு மையுடையனவாகக் காணப்படுதல் காணலாம். வன்பரணர் பாடலுக்கும் திருத்தக்க தேவரின் பாடலுக்கும் இருக்கின்ற ஒப்புமையைக் காட்டி லும், கபிலரின் பாடலுக்கும், தேவரின் பாட லுக்கும் உள்ள ஒப்புமை பெரிதாகத் தோன்று கின்றது.

வல்விலோரியின் அம்பு தன் வலியாலும் விரைவாலும் யானை, புலி, மான், பன்றி, உடும்பு என்ற உயிர்களை முறையே ஊடுருவிச் சென்று கொன்றது. ஆனால், கபிலர் காட்டும் கானவன்விட்ட கவண்கல் குறிவைத்த யானை யின்மேல் படவேஇல்லை. கானவன் யானை

யைக் கண்ணால் பார்க்கவேயில்லை. யானை நடக்கும் ஒலியையே கேட்டுப் பரணில் ஏறி விரைந்து எறிந்த கவண்கல், மரச்செறிவு மிக்கிருத்தலால், யானைமேல் படுவதற்கு முன் பூத்த வேங்கையின் ஒளிமிக்க மலர்களைச் சிதறடித்தது; பின்பு வேங்கை மரத்தை அடுத்திருந்த ஆசினிப்பலாவின் அளிந்த கனியை உதிர்த்தது; அம்மரத்தின் மற்றோர் மருங்கில் தேனீக்கள் கட்டியிருந்த தேனிறாலைத் துளைத்துக்கொண்டு சென்று, அதன் அருகேயிருந்த மாமரத்தின் பசுமையான மாவடுக்களின் கொத்துக்களை அலைத்தது; அந்த மாமரத்தின் அருகிலிருந்த குலை வாங்கிய வாழையின் கொழுவிய மடலைக் கிழித்தது; அதற்கருகே நின்ற வேர்ப்பலவின் அடியில் பழுத்து வெடித்திருந்த பலாப்பழத்தில் தங்கிவிட்டது.

## கபிலர்:

கவண்கல், தினைக்கதிரை மேய வந்த யானைகளை ஒன்றுமே செய்யவில்லை. எனவே கபிலர் காட்டிய கானவன் கவண்கல் ஓருயிர்க்கும் ஊறுசெய்யவில்லை. வேங்கையின் மலர்களைச் சிதறுதலும், தேனிறாலைத் துளைத்தலும், பலவின் கனியை உதிர்த்தலும், மாவடுக்களின் கொத்துக்களை உழக்குதலும், வாழையின் மடலைக் கிழித்தலும், வேர்ப்பலவின் பழத்தில் தங்குதலும் கொலையாகாமைதெளிவு. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு புலவுத் துறந்த அந்தணராகிய கபிலர், தாம் கூறும் இயற்கை வருணனையிலும் கொலைச் செயலைக் கூறவில்லை என்றுதான் கொள்ள வேண்டும். வன்பரணர் அம்பின் ஐந்து செயலைக் குறிப்பிடக் கபிலர் கவண்கல்லின் ஏழு செயல்களை இயம்புகின்றார். ஆனால், கொலையொடு படாத செயல்களாகவே கூறியுள்ளார்.

எனவே, வல்விலோரியின் அம்பு செய்த செயலினும் கானவன் கைவிடு கவண்கல்செய்த செயல் கொடுமையுடையதன்று என்பது தெளிவு. பெரும்பாலும் ஓரறிவுயிர்களையே மேலிருந்து கீழாக-படிப்படியாகச்-சிதைத்துச் சென்று இறுதியாகத் தரையில் பழுத்திருந்த வேர்ப்பலாப்பழத்தில் தங்கிவிட்டது. திருத்தக்கதேவரின் தெங்கின் பழம் செய்தசெயல்கள், கபிலர் காட்டிய கானவன்விட்ட கவண்கல்லின் செயல்களைப் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றன.

## உள்ளுறை பொருள் :

இனி, அகப்பொருள் துறையமைந்த கபிலரின் கலிப்பாட்டில் தலைவனுடைய வெற்பிற்குத் தோழி கூறிய அடைமொழிகளில் ஆழ்ந்து கிடக்கும் கருத்துக்களைச் சிந்தித்து நச்சினார்க்கினியர் விளக்கம் தந்துள்ளார். இப்பாடற் பகுதியை வெறும் இயற்கை வருணனையாகக் கொள்ளாமல், இவ்வியற்கை வளத்தைப் புலப்படுத்தும் முகத்தால் தோழி, உள்ளுறுத்துப் புலப்படுத்திய வேறு கருத்தும் இருத்தல் வேண்டும் என்று கொண்டு ஆழ்ந்து சிந்தித்து அகப்பொருள் துறைக்கேற்றவாறு நுண்ணிய கருத்துக்களை நுவன்றிருக்கின்றார். அவற்றைக் காண்போம்.

இயக்கம் கேட்ட கானவன் கல் கைவிடுதல் என்பது, தலைவன் தலைவியொடு புணர்ந்த நிலைமையை அவரால் அறிந்த செவிலி, தன் மனையிடத்தே இருந்து கடுஞ்சொற் சொல்லித் தலைவியை இற்செறித்தலை யுணர்த்தியதாகவும், கானவன் கைவிட்ட கல் வேங்கையினது செவ்விப்பூவைச் சிதறின என்பது செவிலியின் கடுஞ்சொல் தலைவனது மன வெழுச்சியைக் கெடுத்ததாகவும், ஆசினிப் பலவின் பழத்தைப் பயன்படாமல் உதிர்த்தது என்பது, அத்தலைவன் நுகர்கின்ற களவின்பத்தைக் கெடுத்ததாகவும், அக்கல் இறாலின் தேனைப் பயன்படாது உகுத்தமை, தலைவி நலம் தலைவற்குப் பயன்படாது கெடுத்ததாகவும், அந்தக் கல் மாவின் குலையைச் சிதறச் செய்தமை, செவிலியின் கடுஞ்சொல் ஆய வெள்ளம் தலைவியொடு கூடிவிளையாடாமல் நீக்கினதாகவும், கவண்கல் வாழை மடலைக் கிழித்த தன்மை, செவிலியின் அக்கடுஞ்சொல் தோழியை வருத்தியதாகவும், அக்கல் வேர்ப்பலவின் பழத்துள் தங்கினது என்பது, அக்கடுஞ்சொல் இன்புறுதற்குரிய தலைவியின் நெஞ்சத்தே தங்கியதாகவும் கொள்ளவேண்டுமென உள்ளுறை உவமத்தைப் பொருத்தமாக விரித்துக் கூறியுள்ளார். கபிலர் காட்டிய கல்லை நச்சினார்க்கினியர் கடுஞ்சொல்லாக அமைத்துக் கொண்டு காட்டும் உள்ளுறை உவமைப் பொருளைப் படிக்குந்தோறும் நச்சினார்க்கினியரின் புலமைநலத்தை-நுட்பத்தை-பாராட்டாமல் இருத்தல் இயலாது.

## காப்பியத்தின் முதற் செய்யுள் :

கபிலரது கலிப்பாட்டில் காணப்பட்ட இயற்கை வருணனையைக் கொண்டு, கூர்ந்து நோக்கி, நச்சினார்க்கினியர் கூறிய உள்ளுறையைப் படிக்கும்போது, திருத்தக்கதேவர் கூறிய 'காய் மாண்ட தெங்கின்பழம்' எனத் தொடங்கும் பாடலிலும் ஏதேனும் நுண்ணிய கருத்து மறைந்து இருக்குமோ என்று எண்ணிப் பார்க்கலானேன். சீவகசிந்தாமணி என்ற காப்பியத்தின் தொடக்கப் பாடலாக இது அமைந்துள்ளது. காப்பியம் செய்யும் கவிஞர்கள், தாம் செய்யப்புகும் காப்பியத்தின் குறிக்கோளாக உள்ள கருத்தினை முதற்செய்யுளில் குறிப்பாக அமைத்தல் இயல்பு. கம்பரும் ஆற்றுப்படலத்து முதற் செய்யுளில் தாம் உணர்த்தக் கருதிய உயர்ந்த கருத்தைக் குறிப்பாக அமைத்துள்ளார் என்பர்.

> ''ஆசலம்புரி ஐம்பொறி வாளியும்,
> காசலம்பு முலையவர் கண்ணெனும்
> பூசலம்பும் நெறியின் புறஞ்செலாக்
> கோசலம்புனை ஆற்றணி கூறுவாம்''

என்பது அப்பாடல். ''குற்றங்களை நிறையச் செய்கின்ற மெய் வாய் கண் மூக்குச் செவி என்கின்ற ஐம்பொறிகளாகிய அம்புகளும், பொற்காசுகள் ஒலிக்கின்ற மார்பினையுடைய மகளிர் தம் கண் என்கின்ற போர் செய்யும்

இயல்புடைய அம்பும், நல்ல நெறியினின்று புறத்தில் செல்லாமைக்கு இடமாகிய கோசல நாட்டை அழகுபடுத்துகின்ற சரயு என்னும் ஆற்றின் அணி நலனைச் சொல்வோம்'' என்பது, இப்பாடலின் பொருளாகும். கோசல நாட்டில் வாழும் ஆடவரும் பெண்டிரும் நன்னெறியில் திறம்பாதவர் எனக் கூறி இக்காப்பியத்தில் வற்புறுத்தும் சிறப்புடைய கருத்து, ஆடவர்க்கு ஏகதார விரதமும், பெண்டிர்க்குக் கணவன் சொற்பிறழாக் கற்புமே என்பதனை, இப்பாடல் குறிப்பாற் பெற வைத்துள்ளமை காணலாம்.

இம்முறையை யுளங்கொண்டு நோக்கின் சீவகசிந்தாமணியின் தொடக்கச் செய்யுளாகிய இப்பாடலில் திருத்தக்கதேவர் தாம் செய்யும் காப்பியத்தின் குறிக்கோளாக உள்ள சிறந்த கருத்தைக் குறிப்பால் புலப்படுத்தியே யிருத்தல் வேண்டும். திருத்தக்கதேவர் இளமையிலேயே சமணத் துறவியாக வாழ்ந்தவர். இவர் தம் வாழ்க்கைக்கு ஏலாத, இழிந்த சிற்றின்ப நிகழ்ச்சிகளே மிகுதியாகச் சீவகசிந்தாமணியில் பேசப்பட்டுள்ளன.

## சச்சந்தன் :

சச்சந்தன் என்னும் அரசன் எழில் நலம் மிக்க விசயை என்பவளை மணந்து அவள்பால் பெறும் இன்பத்தின் வேட்கை மிகுதியால் தன் அரசாட்சியையே தன்னமைச்சன் கட்டியங்காரனிடம் கொடுத்துவிட்டு, அந்தப்புரத்தை விட்டகலாது இன்புற்றுப் பின் கட்டியங்காரனுடைய சூழ்ச்சியால் கொல்லப்படுகின்றான். மயிற்பொறியில் ஏற்றி அனுப்பப்பட்ட விசயை புறங்காட்டில் சென்று கருவுயிர்க்கின்றாள். சீவகன் பிறக்கின்றான். கந்துக்கடன் என்ற வணிகனால் எடுத்துச் செல்லப் பெற்று அவன் வீட்டில் வளர்கின்ற சீவகன் அரசனுக்குரிய கலைகளையெல்லாம் கற்று வலிமைமிக்கவனாய்-எழில் மிக்கவனாய் விளங்குகின்றான். எல்லாக் கலைகளிலும் வல்ல சீவகன் காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்ற மகளிர் எண்மரை மணந்து கொள்கின்றான். கட்டியங்காரனை வென்று தன் தந்தைக்குரிய அரசபீடத்தை அடைந்து மனைவியர் எண்மரோடு பல்வகையான இன்பங்களைத் துய்த்து வாழும் வாழ்க்கையைத் திருத்தக்கதேவர் மிக விரிவாகக் கூறுகின்றார். அப்பகுதியைப் படிப்போர் இது காமநூலே என்று கருதுவர் என்பது திண்ணம். எப்புலவருங் கூறாத சிற்றின்ப வகைகளையெல்லாம் அப்படி விவரிக்கின்றார் தேவர்.

## திருத்தக்க தேவர் திருவுள்ளம் :

இளமையிலேயே துறந்து துறவுநெறியில் பிறழாது வாழ்ந்த திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி என்ற பெருங்காப்பியத்தின் மூலம் உலகுக்கு உணர்த்தக் கருதிய உயர்ந்த கருத்து, பனிமலர்க்குழல் பாவை நல்லார் இன்பமாகவோ, தனி முடி கவித்தாளும் அரச இன்பமாகவோ, இருத்தல் இயலாமை தெளிவு. நீரா நோயைத் தீர்க்கும் மருந்தைக் கொடுக்கும் மருத்துவர் அக்கசப்பான மருந்தை இனிப்புச் சுவையுள்ளவற்றால் மறைத்து உண்பிப்பது போலத் திருத்தக்கதேவர் தாம் உலகுக்கு உணர்த்தக் கருதியது துறவறமேயாயினும், அதனை உலகவர் பெரிதும் விரும்பும் காமச் சுவையென்னும் கட்டியை மிகுதியாகப் பூசி, உலகவர்க்கு ஊட்டுகின்றார் என்பதுதான் உண்மை. நாமகள் இலம்பகம் முதலிய பன்னிரண்டு இலம்பகங்களிலும் மகளிர்பால் நுகரும் சிற்றின்பத்தையும் மணிமுடி சூடி மாநிலத்தை ஆளும் அரச இன்பத்தையுமே பரக்கக் கூறியவர், முத்தி இலம்பகத்தில்தான் தாம் கருத்திற் கொண்ட துறவின் சிறப்பை உணர்த்துகின்றார். சிற்றின்பத்தையே விரும்பிச் செல்லும் சிந்தையுடையாரும் இக்காப்பியத்தைக் கடைபோகப் படிப்பாராயின், சிற்றின்பத்தின் இயல்புகளை யுணர்வதுபோலவே, அச்சிற்றின்பம் நிலையிலாதது என்பதையும் உணர்வார்கள். இவ்வுலக இன்பம் நிலையாது என்பதை யுணர்ந்தபின் நிலைத்த இன்பம் எது என்பதையும் அதைப் பெறும் வழி எது என்பதையும், ஆராய்ந்துணரத் தலைப்படுவார்கள் என்பது தேவரின் எண்ணம்.

சீவகன் எழில்மிக்க மங்கையர் எண்மரை மணந்து, அவர்களோடு அனுபவித்த பலவகை இன்பங்களினும், சிறப்பாக இவ்வுலகில் யாருமே இன்புறல் இயலாமை காட்டி, அங்ஙனம் நுகர்ந்த சீவகன், நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப்பின் அவ்வின்பங்களை எல்லாம் அறவே துறந்து பேரின்ப நிலையை யெய்தினான் என்பதே முத்தியிலம்பகத்தில் தேவர் குறிப்பிடும் சிறந்த கருத்தாகும்.

R. RAJU
(Retired)
Administration Dept

## சீவகனின் உயர்வு :

தன் தந்தையாகிய சச்சந்தனைக் கொன்ற கட்டியங்காரனை வென்று அரசுகட்டிலேறி அறநெறியில் நின்று செங்கோலோச்சிக்கொண்டு எழில்மிகு மனைவியர் எண்மரோடும் ஈடிலா இன்பம் துய்த்துக்கொண்டிருந்த சீவகன், துறவு மேற்கொண்டது எப்படி? என்பதைச் சிந்திக்க வேண்டும். சீவகனைப் புறங்காட்டில் பெற்று விட்டுச் சென்ற விசயை மீண்டும் சீவகனை கண்டு தாயன்பு புலப்பட அவன் பக்கல்வாழ்ந்து தான் விரும்பிய நல்லறங்களையெல்லாம் செய்கின்றாள். முன் தன் கணவனை இழந்தமையால் யாக்கை நிலையாமையையும் இன்பம் நிலையாமையையும் செல்வம் நிலையாமையையும் நன்குணர்ந்திருந்த விசையை, தன் மகனது ஆட்சியைக் கண்டு மகிழ்ந்திருந்த நிலை நீடிக்கவில்லை. வயதின் முதிர்வாலும் நிலையாமையை அனுபவித்து உணர்ந்தமையாலும் துறவு பூணுதலையே விசயையின் உள்ளம் விரும்பிற்று. தன் அன்புறு மகனாகிய சீவகனை அருகழைத்து இருக்கச் செய்து தன் கருத்தைத் தெரிவிக்கின்றவள், தன் கணவன் சச்சந்தன் சிற்றின்ப வேட்கையால் அடைந்த கேடுகளையெல்லாம் விளக்குகின்றாள். ''நின் தந்தை போல நீயும் சிற்றின்பத்தில் மயங்காது அறம் மேற் கொண்டு ஒழுகுதல் வேண்டும். யான் துறவு மேற்கொள்ளப் போகிறேன்'' என்று

நல்லுபதேசம் செய்துவிட்டுப் பெண்டிர் பலரோடு சிவிகையில் ஏறிப் பம்மை என்னும் தவமுது மகளின் தவப்பள்ளிக்குச் சென்று சேர்கின்றாள். அங்கு பம்மை கூறிய அறவுரை கேட்டு. கூந்தலை நீத்துத் துறவு மேற்கொண்டு தவத்தில் இருக்கின்றாள் விசயை.

## சீவகன் துறவு:

சீவகன், சில நாள் கழித்துத் துறவு மேற்கொண்ட தாயின் திருவடியில் மலர்தூவி வழிபட்டுவர விரும்பித் தன் தேவிமார் எண்மரோடும் தம்பி நந்தட்டனோடும் தோழரோடும் சேனையோடும் சேர்ந்து பம்மையின் தவப்பள்ளிக்குச் செல்கின்றாள். தாயின் திருவடியில் மலர்தூவி வழிபட்டு, ''யான் அடிக்கடி வந்து கண்டு வணங்குமாறு சின்னாள் இந்நகரத்திலேயே இருத்தல் வேண்டும்'' என்று கேட்டுக் கொள்கிறான். விசயையோ தன் மகனைக் கண்ணெடுத்தும் பாராமல் செய்துவைத்த பாவைபோல் தியானத்திலிருக்கின்றாள். அவள் குறிப்பறிந்த பம்மை,

''காதல னல்லைநீயும் காவல! நினக்கு யாமும்
ஏதில மென்று கண்டாய் இருந்தது நங்கை''

என்று சீவகனுக்கு விளக்கம் தருகின்றாள். 'அரசே, நீயும் எம்மால் காதலிக்கப்படுபவனல்ல; நினக்கு யாங்களும் சுற்றம் அல்லம்; என்று காண் நங்கையிருந்தது' என்று விளக்கியவுடனே, சீவகன் தேவியருடன் கண்ணீர்விட்டுப் புலம்புகின்றான். ''யான் தேவிக்குச் சுற்றம் அன்றேனும் இறைவர் அறத்தைத் துணிந்து நிற்கின்ற நிலைமையைப் பார்க்க அதனால் காதலிக்கும் தன்மையுடையேன்'' என்று உளம் நெகிழ்ந்து கூறுகின்றான். அவன் துயர் கண்டு பொறாத மாதவ மகளிர் எல்லாம் மன முருகி, விசயை நோக்கி, ''நீங்கள் நம்பிக்கு மறுமொழி கொடுங்கள், அதனால் ஏதமொன்றுமில்லை'' என்று வேண்டுகின்றாள். பின்பு விசயை, வேலோய்! ''வேண்டிய வேண்டினோம்'' என்று சுருக்கமாகக் கூறிச் சீவகன் விரும்பியபடி அந்நகரை விட்டு அகலாது சில நாள் தங்குவதாக உடன்படுகின்றாள்.

தன் தாய் முன் செய்த உபதேசங்களும், அவர் நிற்கும் துறவறத்தின் உறுதியும் சீவகன் உள்ளத்தில் பெரிய மாற்றத்தைத் தோற்றுவித்துவிட்டன. உலகையாளும் அரச வாழ்வும் மனைவியரோடு துய்க்கும் இன்பமும் நிலையிலாதன என்பதும் துறந்து இறைவனடி சேர்தலே நிலைத்த பேரின்பமாகும் என்பதும் அவன் உள்ளத்தில் நிலைத்த எண்ணங்களாகிவிட்டன. மனைவியரோடு மகிழ்ந்து அரசனாக வாழ்வது போல வெளிக்குத் தோன்றினாலும் சீவகன் உள்ளம் துறவறத்தையே நாடி நின்றது. அவனுடனிருந்த தேவிமார்களும் தம்பி நந்தட்டனும் தோழர்களும் அங்ஙனமே மனமாற்றம் பெற்றார்கள். பின்பு அரண்மனையடைந்து வாழுங்காலத்து ஒருநாள், எழில்மிக்க பொழில் பூத்துக் குலுங்கும் இனிய காட்சியைக் காண மனைவியரோடு சென்று கண்டு மகிழ்ந்திருந்த போது ஒரு நிகழ்ச்சியைக் காண்கின்றான் சீவகன்.

ஒரு கடுவன், தன்னைப் புலந்து நின்ற பெண்குரங்கு மகிழும்வண்ணம் அங்குப் பழுத்திருந்த பலாப்பழத்தைக் கொணர்ந்து பிளங்கு சுவைமிக்க சுளைகளை எடுத்து அதற்கு ஊட்டிக் கொண்டிருந்தது. அப்போது அப்பொழிற்காவலன், ஓடிவந்து அந்த மந்தியையும் கடுவனையும் அடித்து ஓட்டிவிட்டு அவை தின்றுகொண்டிருந்த பலாவின் பழத்தை அவன் உண்பதைச் சீவகன் பார்க்கின்றான். அந்நிகழ்ச்சியோடு தன் வரலாற்றையும் ஒப்பிட்டுக் காண்கின்றான்.

''கைப்பழம் இழந்த மந்தி
  கட்டியங் காரன் ஒத்தது;
இப்பழம் துரந்து கொண்ட
  சிலதனும் என்னை ஒத்தான்!
இப்பழம் இன்று போகத்து
  இன்பமே போலும்''

என்று எண்ணுகின்றான். மேலும்,

''மெலியவர் பெற்ற செல்வம்
  வேரொடுங் கீழ்ந்து வெளவி
வலியவர் கொண்டு மேலை
  வரம்பிகந்து அரம்பு செய்யும்
கலியது பிறவி கண்டாம்!
  காலத்தால் அடங்கி நோற்று
நலிவிலா வுலகம் எய்தல்
  நல்லதே போலும் அன்றே''

என்று தெளிகின்றான். பொழிலிலிருந்து இக்காட்சியைக் கண்டு தெளிந்த சீவகன் அரண்மனை சென்று தங்கிப் பின் அருகன் கோயிலை வணங்கி அங்கிருந்த சாரணர்பால் நல்ல கேள்வியையுணர்ந்து பிறப்பின் பயன் துறவுமேற்கொள்ளுதலே என்பது தேறித் தம்பி நந்தட்டனை அழைத்து,''வளமிக்க இந்த நாட்டைநீ யாள்க'' என்று கூற, நந்தட்டன், ''எனக்கு அரசு வேண்டாம் நீ விரும்பும் துறவையே யானும் விரும்புகின்றேன் '' என்று கூறிவிட்டான்.

பின்பு, சீவகன் தன் மக்களில் மூத்தவனாகிய சச்சந்தனை அழைத்து அரசேற்கச் செய்து வாழ்த்திவிட்டு, மனைவியரின் சென்று தன் துறவை யுணர்த்த, அவர்கள் சீவகனைப் பிரிய இயலாது பெரிதும் வருந்தவும், தன் மனம் நெகிழாமல் துறத்தலிலே உறுதிகொண்ட அவன் நிலைமையை அறிந்து யாமும் நின்னோடு துறக்கின்றோம் என்கின்றார்கள். அவர்களையெல்லாம் தன் தாய் விசயைபால் சென்று துறவேற்கச் செய்துவிட்டுப் பின்பு மலையுச்சியில் நின்று தவஞ் செய்து வீடு பெறுகின்றான் சீவகன். சீவகன் மனைவிமார்கள் அங்ஙனமே துறந்து தவஞ் செய்கின்றான். சீவகன் தோழர்கள் அவ்வாறே துறந்து தவஞ்செய்கின்றார்கள் இவர்கள் அனைவரும் முறையே வீடுபேறு அடைகின்றார்கள் என்பது முத்தியிலம்பகத்தில் கூறப்படும் வரலாறு.

இந்த வரலாற்றின் குறிப்பு மேற்குறிப்பிட்ட 'காய் மாண்ட தெங்கின் பழம்' என்ற பாடலில் அமைந்திருத்தலை நுணுகிக் காணலாம். இயல்பாகவே பழுத்துக் காம்பற்றுத் தெங்கின் பழம் வீழ்தல் என்பது, வயதும் அனுபவமும் முதிர்ந்த விசையை நிலையாமையு

ணர்ந்து பற்றற்றுத் துறத்தலையும், அத்தெங்கின் பழம் வீழக் கமுகினெற்றிப் பூ மாண்ட தீந்தேன் தொடை கீறுதல் என்பது, விசயையின் துறவு வலிமையையறிந்து மனம்மாறி எல்லோர்க்கும் இனிமை செய்கின்ற சீவகன் தான் துறத்தலையும், பின்பு இனிமை மிக்க பலவின் சுளைகளையுடைய வருக்கை போழ்தல் என்பது கொண்டானுக்கு இன்பந்தரும் தேவிமார் எண்மரும் துறவுபூணுதலையையும், 'தேமாங்கனி சிதறி' என்றது, சீவகன் தம்பி நந்தட்டன் துறத்தலையும் 'வாழைப்பழங்கள் சிந்தும்' என்றது, சீவகன் தோழர்கள் துறவு பூணுதலையும் உணர்த்தின என்க.

## தெங்கின் பழம் வீழ்தல் :

தெங்கின் பழம் விசையை, தேன்தொடை சீவகன்; வருக்கை, தேவிமார்; தேமாங்கனி நந்தட்டன்; வாழைப்பழங்கள் சீவகன் தோழர் எனக் கொள்க. தேன்தொடை கீறுதற்கும், வருக்கை போழ்தற்கும், தேமாங்கனி சிதறுதற்கும், வாழைப்பழங்கள் சிந்துதற்கும் தெங்கின் பழம் முதிர்ந்து காம்பற்று வீழ்ந்ததே காரணம் ஆயிற்று. அதுபோலவே, எல்லோர்க்கும் இனியனாய் அரசாண்டு கொண்டிருந்த சீவகன் துறப்பதற்கும், அவன் மனைவிமார் துறப்பதற்கும், நந்தட்டன் துறப்பதற்கும், சீவகன் தோழர் துறப்பதற்கும் நிலையாமையை அனுபவித்துணர்ந்த மூதாட்டியாகிய விசயையின் கடுந் துறவே காரணமாயிற்று என்பதையுணர்தல் வேண்டும்.

விசயை முதலிய அரச குடும்பத்தைச் சேர்ந்த ஐவகையோர் துறந்து வீடுபெறும் நிகழ்ச்சியையே இக்காப்பியத்தின் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு கூறக் கருதிய திருத்தக்க தேவர், அந்தச் சிறந்த உயிர் போன்ற கருத்து இக்காப்பியத்தின் தொடக்கப்பாடலாகிய இப் பாடலில் குறிப்பால் தோன்றுமாறு அமைத்துத் தம் நுண்ணிய புலமையைப் புலப்படுத்தியுள்ளார். பின்கூறப்போகும் துறவு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் நோக்கம் திருத்தக்கதேவர்க்கு இல்லையாயின் தெங்கின் பழம் வீழ்தலையும் தேன்தொடை கீறுதலையும் வருக்கை போழ்தலையும் தேமாங்கனி சிதறுதலையும் வாழைப் பழங்கள் சிந்துதலையும் நாட்டுவளம் கூறப் புகும் முதற் பாடலிலே கூறியிருப்பாரோ? தெங்கு குலையீன்றன; கமுகு குலையீன்றன; தேனடைகள் முதிர்ந்துள்ளன; மாம்பழங்கள் பழுத்துள்ளன; வாழைக் குலைகள் பழுத்துள்ளன என்றன்றோ கூறியிருப்பார்.

## முடிவுரை :

தெங்கின் பழம் வீழ்தல் முதலியவற்றையே இத்தொடக்கச் செய்யுளில் குறிப்பிட்டதால் இக்காப்பியத்தின் கருவாயமைந்த கருத்தையே நுண்ணிதின் உணர அமைத்துக் கூறியுள்ளார் என்பது தெளிவு. ஓரறிவுயிர்களாகிய தெங்கு முதலியவற்றின் பற்றறுதல் கூறி ஆறறிவுடைய அரசகுடும்பத்தார் ஐவகையினரின் பற்றறுதலையுணர்த்திய தேவரின் புலமை நுட்பம் நினையுந்தோறும் தேன் சுரக்கும் நீர்மையதாகும். இந்த நுண்ணிய கருத்தை யுணர்ந்தபோது, என்னுள்ளம் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தது.

---

# தேவாரம்

தேவாரம் என்பது சைவசமய ஆசிரியர்கள் ஆகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும்மூவரும் பாடிய பாடல்களைக் குறிக்கும். இச்சொற்குப் பலவகைகளிற் பொருள் கூறலாம்.

*(1)* தே—வாரம். தே—தெய்வம். வாரம்—அன்பு. தெய்வத்தினிடத்து அன்பை விளைவிக்கும் பாடல்கள்.

தம்மை ஓதுபவர்க்குத் தெய்வத்தின் அன்பு, அருள் என்பவற்றை எளிதிற் கிடைக்கும்படி செய்யும் தன்மை வாய்ந்த பாடல்கள்.

தெய்வத் தன்மை பொருந்திய சிறந்த அன்பின் பயனாகப் பொங்கி எழுந்து வெளிப்பட்டருளிய பாடல்கள்.

*(2)* தே—வாரம். வாரம்—இசை இயக்கம் நான்கனுள் ஒன்று. எனவே தெய்வம் சுட்டிய இசைத்திறன் (வாரம்) அமைந்த பாடல்கள்.

*(3)* தே—வாரம். வாரம்—உரிமை. தெய்வத்திற்கே உரிமையுடைய பாடல்கள். அதாவது பிற புலவர்கள் பலர், போரும் காதலும் போன்ற பொருள்களைக் குறித்துப் பாடிப் போந்த பாடல்களைப் போல் அல்லாமல், தெய்வத்தினையே தமக்குரிய குறிக்கோட் பொருளாகக் கொண்டு வழுத்துதற்காக அருளிச்செய்யப்பட்ட பாடல்கள்;

*(4)* தே—ஆரம். ஆரம்—மாலை. தெய்வத்திற்கு மாலைபோல விளங்கும் சிறந்த பாடல்கள்.

பூமாலை பொன்மாலை முதலிய மாலைகள் போல்வனவற்றினின்று வேறுபட்டு உயர்ந்து, தெய்வத்தன்மை பொலியும் சிறந்த பாமாலைகள்.

திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் தம்முடைய உரை நூல்களில், 'தேவாரம்' என்பதைத் திருநாவுக்கரசர் பாடல்களுக்கேயுரிய சிறப்புப் பெயராக வழங்குவர். திருஞானசம்பந்தர் பாடல்களைத் 'திருக்கடைக்காப்பு' என்றும், சுந்தரர் பாடல்களைத் 'திருப்பாட்டு' என்றும் குறிப்பிடுவது, அவர் வழக்கம்.

—ஆசிரியர்.

# வாழ்வின் அடிப்படை

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்

மானிட வாழ்வில் நான்கு நான்கு வரிசையாகச் சாதனங்கள் நிகழ்கின்றன. அவை அனைத்தும் நான்கு வேதப் பொருளைக் கொண்டன. மனித வாழ்வின் நாலறிவு முதன்மையானது. ''நாலும் தெரிந்தவன் ஞானி'' என்பதுண்டு. வேதங்கள் நான்கு, அவையாவன:

இருக்கு வேதம்—தேவர்களின் விளக்கம்
எசுர் வேதம்—வேள்வி விளக்கம்
சாம வேதம்—வேதக் கலை விளக்கம்.
அதர்வண வேதம்—மந்திர விளக்கம்.

இந்த நான்கு வேதங்களுக்கும் நான்கு மகா வாக்கியங்கள் உண்டு.

1. இருக்கு வேதத்திற்குப் ''பிரக்ஞானம் பிரம்மம்''-''உள் விழிப்பே பிரமம்''.

2. எசுர் வேதத்திற்கு "அகம்பிரம் மாஸ்மி" – நான் பிரமம். நான் என்பது இதயத்தில் உணரும் அகவுணர்ச்சியே.

3. சாம வேதம் ''தத்வமசி''. அதுவே நான். நான் பிரம்மமானால் என் எதிரே நிற்கும் நீயும் அதுவே.

4. அதர்வண வேதத்திற்கு ''அயம் ஆத்மா பிரமம்''. இந்த ஆத்மாவே பிரமம். அதாவது எது ஆன்மாவாக உள்ளத்தில் இருந்து அனைத்தையும் சாட்சிசேதனனாக இயக்குகிறதோ அதுவே பிரமம்.

இந்த பிரம்ம ஞானத்தை அறிய நான்கு சாதனங்கள் உண்டு. (1) நித்ய அநித்ய விவேக விசாரம்: உள்ளது இல்லது எது என்ற பகுத்தறிவு .(2) இகபர பலபோக விராகம்: இங்கு இவ்வுலகிலும் இறந்தபிறகு செல்லும் விண்ணிலும் எந்தப் பயனையும் விரும்பாமை. (3) ஷட்கசம்பத்தி: ஆறு ஒழுக்கங்கள்; சமம்-மன அடக்கம், தமம்-புலனடக்கம், உபரதி-பற்றின்மை, திதிட்சை-இன்பதுன்பங்களைப் பொறுத்தல், சிரத்தை -உறுதிப்பாடு, சமாதானம் - உள்ளமைதி. இவற்றால் மனத்திட்பமும் வினைத்திட்பமும் உண்டாகும். முமுட்சுத்வம்-விடுதலையார்வம், மோட்சம் பெறத்துடித்தல். இந்த நான்கு சாதனங்களால் மனத்தெளிவும், சித்தசுத்தியும், ஆன்ம மலர்ச்சியும் பெறலாம். இவற்றை உறுதியாக்க நான்கு யோகப் பயிற்சிகள் உண்டு அவைகளாவன.

(1) இராசயோகம்: இது இயமம், நியமம் ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டுச் சாதனங்களாலே மனத்தை வென்றுஉள்ளமைதி பெற்று, உள்ளத்தானுடன் ஒன்றும் ஒருமை வழியாகும்.

(2) கர்மயோகம்: கடமையைக் கடவுள் வழிபாடாகச் செய்வது. 'யோக கர்மசு கௌசலம்' என்பது பகவத்கீதை.

(3) பக்தியோகம்: அன்பாலே இறைவனைச் சரண்புகுந்து, எதைச் செய்தாலும் இறைவனுக்கே வழிபாடாகச் செய்யும் செயலொருமையாம்.

(4) ஞானயோகம்: தியானத்தாலே சித்த அலைகளை நீக்கி, மனந்தெளிந்து உள்ளம் மலர்ந்து தன்னை அறிவது ஆகிய அறிவொருமை.

இனி இவைகளேயன்றி, மற்றும் நாலு மார்க்கங்கள்: முனிவர்களால் விளக்கப் படுகின்றன.

(1) தாசமார்க்கம்: தொண்டு வழி-என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் வழி, துளசிவனம் வளர்த்துத் திருமாலுக்கு மாலையனுப்பிய பெரியாழ்வார் வழி, இது சரியை, கர்மயோகம்.

(2) சற்புத்திரமார்க்கம்: இது சம்பந்தரும் திருமங்கையாழ்வாரும் காட்டிய கிரியை வழி. பக்தியோகம். இவை இரண்டும் பத முத்தியளிக்கும்.

(3) யோகமார்க்கம்: இது சுந்தரரும் ஆண்டாளும் விளக்கிய இராசயோக வழி. 'மற்றுப் பற்று எனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்' என்ற சுந்தரர் தேவாரம் இந்த வழியை விளக்குகின்றது. ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்னோடு உற்றோமே யாவோம். உனக்கே நாம் ஆட் செய்வோம,

மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்'' என்றாள், ஆண்டாள்.

*(4) சன்மார்க்கம்:* ஞானவழி. மாணிக்கவாசகரும் ஆண்டாளும் பயின்றவழி. 3,4 வழிகளும் பரமுத்தி தருவன. நானார் என் உள்ளமார் என்ற ஆத்ம விசாரத்தைத் தூண்டும் ஞான மார்க்கம், சாயுச்சிய பதவியளிப்பது மனிதன் தனது வாழ்வில் அடைய வேண்டிய நாற்பொருள்கள் (புருடார்த்தம்) அறம். பொருள், இன்பம், வீடு என்பதாகும்.

மேற்குறிப்பிட்ட அடிமைநெறி மகன்மை நெறி தோழமைநெறி காதல் நெறி என்னும் இந்த நான்கு முறைகளையும் பயின்று காட்ட நான்கு ஆசிரமதருமங்கள் வகுக்கப்பட்டதாகும்,

*(1) பிரமசரியம்:* பொறிபுலனடக்கத்துடனே அறிவினை வளர்க்கும் பருவம்,

*(2) கிரகத்தம்:* கல்வி முடிந்து; கன்னியைத் தேர்ந்து மணந்து நிறைமுறை யான இல்லறங் காத்தல், இல்லறத்திற்கு அன்பும் அறமும் பண்பும் பயனுமாகும். இல்லறத்தில் நன்மக்களைப் பெற்று மரபை வளர்க்க வேண்டும்.

*(3) வானப்பிரத்தம்:* பிள்ளைகள் முன்னுக்குவந்ததும், அவர்களிடத்திலேயே வீட்டுப் பொறுப்பை விட்டுத் தபோவனங்களிலே மனைவியுடனே பிரமசரிய நியமத்துடனே தவம்புரிதல்.

*(4) சந்நியாசம்:* இறுதியிலே அனைத்தும் துறந்து தானே தானாகத் தனித் தவத்திலே ஆழ்ந்து கடவுட் கலப்படைதல். இறுதியில் யோகத்தாலே உடலை நீத்துச் செல்லல்.

இளமையிற் கல்வி, வாலிபத்திலே இல்லற இன்பம், முதுமையில் முனிவருக்கான ஒழுக்கம், இறுதியில் யோகியாகி உடலைவிட்டு முத்தி பெறுதல். இதுதான் வேதாகம இந்து தருமத்தின் நியதியாகும். இதில் இல்லறம் ஒன்றிலே தான், மனிதனும் மனிதியும் சிற்றின்பம் நுகர்ந்து, மரபை வளர்க்கின்றனர். இதிற்கூட இன்னநாள் சேரவேண்டும், இன்னநாள் தனித்துறங்க வேண்டும், இன்னநாள் இன்னவிரதம் காக்க வேண்டும் என்ற விதிமுறைகள் உள்ளன. திருமணம் புரிந்தவரும் இரண்டு மூன்று மக்களை ஈன்று வளம்பெற வளர்த்து ஆளாக்கியதும், அவர்களிடம் பொறுப்பேற்றித் தாம் விடுதலை பெறுகின்றனர்.

**ஆன்மக் காதல் :**

பிரமசரியகேம மானிட வாழ்வின் வேர். இல்லறம் கிளை. பூ, வானப் பிரத்தம் காய், சந்நியாசம் கனி. கனிந்த பழம் தானே மரத்தினின்று உதிர்கிறது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பிரமசரியம் காத்தனர். சுந்தரர் மணவினையை நீத்துப் பரவை சங்கிலியாரை மணந்ததும், தாந்திரிக யோகத்தாலே புலன்களை வெல்லவேயாம். சிவபெருமானே உமையுடன் வாழ்கின்றான், ''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'' என்று திருஞான சம்பந்தர், மண்ணில் நல்லவண்ணம் வாழும் வகையை வலியுறுத்துகின்றார். நமது காலத்தில் இந்த திவ்வியதாந்திர யோகத்தை உலகிற்கு விளக்கியவர் இராமகிருஷ்ணபரமஹம்சரும், சாரதாதேவியும் ஆவார். அதே மாதிரியே அரவிந்தரும், அன்னை மீராவும் பூரணயோகம் புரிந்தனர். யோகபலத்தால் புத்துலகையும் புது மரபையும் பொலிவித்தனர்.

அதே மாதிரி பைபிளில் நால்வர்; மாத்யூ, லூக்கா, பார்த்தலோமியூ, ஜான் ஆகிய நால்வரும் துறவுபூண்டு தூய பிரமசரியம் போற்றிக் கிறிஸ்து சேவை செய்தனர். பிளேடோ, அரிஸ்டாட்டில், காண்டு ஆகிய அறிஞர்கள். பிரமசரியத்தால் அரிய அறிவுப் பணிபுரிந்தனர். சங்கரர் தூய பிரமசாரி. மத்வாசிரியரும் அவ்வாறே. இராமாநுசர் இல்லறந்துறந்து பிரமசரியம் காத்தே சீர்பாடியம் எழுதினார். வல்லபாசாரியும் அவ்வாறே கண்ணனை உபாசித்து, புஷ்டிமார்க்கத்தை அனுட்டித்துப் பக்திநெறியைப் பரப்பினார். அவ்வாறே குருநானக்கும் சிலகாலம் இல்லறத்திலிருந்து பிறகு துறந்து நாடெல்லாம் சுற்றி, மெக்கா வரையில் சென்று கடவுள் ஒன்றே (ஏக் நிரஞ்சன்), மக்கள் ஒரு குல அன்புநேயராக வாழவேண்டும் என்று உபதேசித்தார். நைட்டிகப் பிரமசாரியான சுவாமி விவேகானந்தர், முப்பது வயதில் (1893) சிகாகோ சர்வமதமேடை ஏறி, ''நீங்கள்அமிர்த புத்திரர். மதவெறிப் பிரிவினைப் பீடைகளை ஒழித்து ஒன்று சேருங்கள். தன்னையே பிறரிலும் பிறரையே தன்னிலும் காணும் சமரச ஞானியே தெய்வத் திருவருளைப் பெறுகிறான். ஆறுகளெல்லாம் எப்படி வளைந்து வளைந்துமேடு பள்ளங்களிலே தாவிச் சென்றாலும், ஒரே கடலிலே கலந்து கடலாகின்றனவோ, அது போல எல்லா உயிர்களும் ஒரே இறைவனைக் கலந்து இன்புறுகின்றன. கிணற்றுத் தவளை போலக் குறுகிய மனப்பான்மையின்றி எல்லோரும் ஒரே ஆன்ம நேயராகச் சேருங்கள்'' என்று முழங்கினார், விவேகானந்தர். அந்த பிரமசாரியின் குரல்பத்து ஆண்டுகளில் உலகைக் கவர்ந்து வேதாந்த சமரசத்தை நாட்டியது.

சுவாமி இராமதீர்த்தர் சிவாம்பாளைச் சிறுவயதிலேயே மணந்தார். இரண்டு மக்களுக்கும் தந்தையானார். ஆனால் மனைவியைப் பிரமசரியத்திலே பழக்கித் தாமும் பிரமசரியம் பூண்டு துறவியாகி, அமெரிக்காவில் வேதாந்த முழக்கம் செய்து வந்து இமாலயத் தனிமையில் தவம் புரிந்தார். விவேகானந்தரின் அமுதவாக்குப் போலவே, இராமதீர்த்தர் குரலும் இன்றும் நம்மை ஆவேசப்படுத்துகின்றன. சைதன்ய பிரபு தன் மனைவியை நீத்துத் துறவுபூண்டு, பிரமசரியம்காத்தார். அவர் பாகவதப்புலவர். ''ஹரிபோல் அரேராம அரேகிருஷ்ணா'' என்ற மந்திரத்தால் நாடு முழுவதும் பக்திப் பரவச அலைகள் எழுந்து கூத்தாடச் செய்தார். அன்றும் இன்றும் பிரமசரிய சக்தியே மனித சமுதாயத்திற்குப் புத்துணர்வளிக்கிறது. எல்லாச்

R. RAJU,
Dy Commissioner (Retd)
HR&CE Administration Dept

சமயங்களிலும் கர்ம வெற்றி, பிரமசரிய சக்தியே தெய்வ ஒளிபரப்புகிறது.

தாந்தேயின் திருக்காட்சி :

ஐரோப்பிய மகாகவிகளுள் ஓமர், தாந்தே இருவரும் முன்னணி மகாகவிகள். இவர்கள் பிரமசரிய பலத்தாலேயே மகா காவியம் செய்தனர். தாந்தே இளமையிலேயே பேதிரை (Beartice) என்ற அழகியைக் காதலித்தான். அழகி இறந்து போனாள். அவள் சுவர்க்கத்திலே தேவதையாகவிளங்கினாள். தாந்தேயின் கவிக்கற்பனை நரகத்தைத் தாண்டி, பாவனத்தைத் (Purgatory) தாண்டி, சுவர்க்கத்தை அடைகிறது. அங்கே பேதிரையின் திருக்காட்சி கற்புக் கனல் வடிவுடன் தேவதை கேட்கிறது. ''தேவதையே, இளமையில் நின்னை ஆசைக் கண்ணாலே கண்டேன், இப்போது அறிவுக் கண்ணாலே காண்கிறேன், கருணையுள்ளமே, எனது மாசற்ற பிரமசரியப் பெருமையாலேயே இந்தக் காட்சி கிடைத்தது'' என்று வணங்குகிறான் மகாகவி. பேதிரை தாந்தேயைச் சுவர்க்க தேவதைக்கு அறிமுகப்படுத்துகிறாள். ''அமரர்காள் இதோ நம் மிடையே நிற்கும் பேறுபெற்ற தாந்தே அற்புத மகாகவி தான். அது மண்ணானது. உடல்அழகுகரைந்து மறைந்தது. சிலகாலம் மாயக்காட்டில் அலைந்தான். இப்போது இங்கே வந்ததும் மாய மயக்கம் மறைந்தது, தூய நினைவு எழுந்தது'' என்றாள். தாந்தே ''என் பிழைகளைநினைத்து வருந்துகிறேன். நின்னைக் கண்டதும்தூய்மையுற்றேன். உன் அழகிலே அருளைக் காண்கிறேன். உடலழகில் மயங்கிலேன். உன் உள்ளழகை வணங்குகிறேன்'' என்கிறான்.

உபநிஷத்தில் யாக்ஞவல்கி மைத்ரேயிக்குச் சொல்கிறார். ''அம்மா காம இச்சையால் இல்லை. என் ஆன்மாவே உன் ஆன்மாவை விரும்புகிறது. இந்த ஆன்மக் காதலே தெய்வப் பொலிவாம்'' என்கிறார். அதே மாதிரி மைத்ரேயியும் ஆன்மஒருமையைக் காண்கிறாள். இது தான் மாசற்ற வாழ்வின் அடிப்படையாகும்.

## "நமக்குக் கடவுள் நம்பிக்கை வேண்டும்"

இவ்விருபதாம் நூற்றாண்டின் அறிவியற் பேரறிஞர்கள் எல்லோருள்ளும், இணையற்றவராகத் தலைசிறந்து திகழ்ந்திருந்தவர், ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன் [Albert Einstein 1879—1955] அவர்கள் ஆவார். அணுஆற்றலைக் கண்டுணர்ந்து பயன்படுத்துதற்கு வழிகோலியது, ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன் வகுத்த '' சார்பியற் கோட்பாடு '' (Relativity Theory) என்பதே யாகும். அண்மைக் கால அறிவியல் அறிஞர்களில் மிகவும் பெரியவர் என்றும், நியூட்டனுக்குப் பின்னர்த் தோன்றிய மிகப் பெரிய அறிவியற் பேரறிஞர் என்றும், உலகம் இவரை உளமுவந்து போற்றிப் புகழ்கின்றது. ஐன்ஸ்டைன் மிகப் பெரிய விஞ்ஞானியாக விளங்கிய போதிலும், புகழையும் பொருளையும் ஆடம்பரத்தையும்வெறுத்தொதுக்கி, எளிய இனிய புனிதமான வாழ்க்கை நடத்தினார். கடவுளுணர்வும் நம்பிக்கையும் உடையவராக விளங்கினார். நம் காந்தியடிகள்பால் அவருக்குப் பெருமதிப்பும் அன்பும் உண்டு. 'உலகியற் பொருள்கள் ஒவ்வொன்றையும் ஊன்றி ஆராய ஆராய, இறையுண்மையின் இயல்பினை உள்ளவாறு உணரப் பெறுபவன், அறிவியல் அறிஞனேயாவன்' என்பது ஐன்ஸ்டைன் கருத்து. அத்தகைய சிறந்த விஞ்ஞான வித்தகராகிய ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன் கூறியுள்ள பின்வரும் கருத்து, நம்மனோர் ஆழ்ந்து சிந்தித்து உணர்தற்கு உரியது :

''நாம் எல்லோரும் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்று, நான் நினைக்கின்றேன். ஏனெனில், கடவுள் நம்பிக்கையானது, முடிவாக ஆராய்ந்து பார்க்கும்போது, இரண்டு செய்திகளில் நம்பிக்கை கொள்வதாக அமைகின்றது. அவையாவன: நாம் விரும்புகின்ற குறிக்கோள்கள் உண்மையாகவே உள்ளன என்பதும்; நீதி அமைதி உடன்பிறப்புமை இரக்கம் அருள் நேர்மை தூய்மை போன்ற உயரிய பண்புகளெல்லாம், சமுதாயம் வகுக்கின்ற வசதிக்குரிய வெறும் ஏற்பாடுகள் அல்ல. ஆனால் இவைகள் உண்மையிலேயே இந்தப் பேருலகத்தின் சிறந்த அடிப்படை அமைப்பைப் போன்று, அதனோடு ஒப்புமை உடையனவாய் விளங்குகின்றன என்பதும் ஆகும். கடவுளை நம்புவது என்பது, இந்த உயர்ந்த ஆன்மீகக் குறிக்கோள்களின் உண்மைத்தன்மையை நம்புவதே யாகும். இரண்டாவதாக, கடவுளை நம்புவதென்பது, இந்தக் குறிக்கோள்களெல்லாம் முடிவில் எப்படியும் வெற்றி பெற்றே தீரும் என்பதில் அசைவிலா உறுதிப்பாடுடைமையாம். அதாவது, எத்தகைய பெருந் தடைகள் ஏற்படினும், எத்தகைய ஊக்கக் குறைப்புகள் எதிர்ப்படினும் ஒரு பொருட்டன்று; நாம் ஒருவரை யொருவர் ஊக்கப்படுத்திக் கொண்டு தொடர்ந்து முயன்று உழைத்தால், இந்தக் குறிக்கோள்கள் இறுதியாக உணர்தற்கும் அடைதற்கும் உரிய இயல்பினவேயாகும் என்பது திண்ணம்.''

தமிழாக்கம் : **ந. ரா. முருகவேள்**

# "அறத்தின் பெருமை"

'அருள்மொழியரசு'
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

அறமாவது நீதி நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். திருவள்ளுவர், பூதஞ்சேந்தனார், கணிமேதாவியார், குமரகுருபரர் முதலிய ஆன்றோர்களால் செய்தற்பாலன இன்னவென வரையறுக்கப்பட்டதே அறமாகும். அஃது ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைப்படும்.

(1) ஒழுக்கமாவது, அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று அந்த அந்த நிலைக்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.

(2) வழக்காவது ஒரு பொருளைத் தனித் தனியே எனதென தென்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள் மேற் சொல்லுவது. அது கடன் கோடல் முதல் பதினெட்டுப் பதத்ததாம்.

(3) தண்டமாவது, அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந் நெறிநிறுத்துதற்பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தக்க ஒறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும், உலக நெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம் போல் உயிர்க்கு உறுதிசெய்யாது. அதலால் உயிர்க்கு உறுதிபயக்கும் அவ்வொழுக்கத்தையே அறமென ஆன்றோர் வலியுறுத்தினர். கற்பிற் சிறந்த இல்லாளுடன் மனமொருமித்திருந்து செல்விருந்தோம்பி, வருவிருந்து நோக்கித் தருமங்களை மேற்கொண்டு ஒழுகுவதே சிறந்த அறமாம். இதனாலன்றோ அறத்தின் நுட்பத்தை நன்கு நுணுகி ஆராய்ந்து உலகினருக்கு அறிவுறுத்திவந்த தெய்வப்புலவராந் திருவள்ளுவர் 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று திருவாய்மலர்ந்தருளினார்.

இங்ஙனம் இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொண்டால் பொய் வஞ்சனை களவு முதலிய தீவினைகளை ஒழித்து நல்வழியில் பொருளையீட்டி, பிரமசரியம், வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்களில் நின்ற இயல்புடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணையாக இருந்து உதவி செய்தல் வேண்டும். இதுவேயுமன்றித் தென்புலத்தார்தேவர் விருந்தினர் சுற்றத்தார் ஆகிய நால்வர்களுக்கும் பகுத்துப் பின் எஞ்சி நின்றதை ஒருவன் உண்டு வருவானேயானால் அவனுடைய மரபு இந் நிலவுலகில் எப்போதும் நிலைபெற்று நிற்கும்.

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின், வாழ்க்கை
வழியஞ்ச லெஞ்ஞான்று மில்.

அறத்தின் வழிநிற்பான் எக்காலத்தும் அழியாத புகழையும் இன்ப வீட்டையும்எளிதிற் பெறுவன். இதனையுன்னியே நீதிநூல்கூறவந்த ஔவைப் பிராட்டியார் முதலாவதாக 'அறஞ் செய விரும்பு' என்றனர். இல்லறமார்க்கத்தின் முதல் அங்கமாவது பிற உயிர்க்கு இடர் புரியாமையேயாம். எல்லாவுயிர்களுக்கும் நன்மையே செய்தல் வேண்டும். அருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க சுவாமிகள் இறைவனிடத்தில் ஒரு வரம் வேண்டுமென்று கேட்கிறார். என்ன வரத்தை விரும்பினார்? தனக்கு முத்திவீடு வேண்டுமென்று விரும்பினாரில்லை. சித்தி வேண்டு மென்றும் கேட்டாரில்லை.

''அப்பா நான் வேண்டுதல் கேட்டு
அருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்''

அன்பர்களே! நன்கு நோக்குங்கள். இராமலிங்க அடிகளுடைய உள்ளத்தில் கருணை ஊற்றெடுத்துத் ததும்புகிறது. விரதங்களுக்கெல்லாம் சிறந்த விரதம் கொல்லா விரதமேயாகும். அகிம்சா தருமமே மிகமேலான அறமென்று அறநூல்கள் முழங்குகின்றன. தாயுமானவரும் ''கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்கும்' என்றருளியிருப்பதையும் உய்த்துணர்க. இக் கொல்லாமையே அறவினையென்றதோடமையாது உயிர்க்கொலையொன்றே மற்ற பாவச் செய்கைகள் எல்லாவற்றையுந்தரும் என்றனர் பொய்யில்புலவர்.

அறவினை யாதெனிற் கொல்லாமை, கோறல்
பிறவினை யெல்லாந் தரும்

இத்தகைய அறத்தின் பெருமையையுணர்ந்து அறஞ்செய்ய எண்ணுவான் ஒருவன், யாம் இப்பொழுது இளமையாகலின் இறக்குஞான்று செய்து மெனக் கருதாது, எக்கால் தருமசிந்தை யுண்டாயிற்றோ அத்தருணமே அறம் புரிய வேண்டும். அங்ஙனஞ்செய்த அறம் இவ்வுடம்பினின்று உயிர் பிரிகின்ற காலத்தும் பிரியாது நம்முடன் வந்து மறுமைக்கும் உதவி செய்யும்.

கைப்பு,இனிப்பு,புளிப்பு,உவர்ப்பு,துவர்ப்பு, கார்ப்பு என்ற அறுசுவையால் அமைந்த உணவு களைப் பரிசாரகர் பலரிருந்தும் இல்லாளே அன்புகூர்ந்து பல இன்சொல்கூறி வேண்டி உண் பிக்கையில், ஒருவகை யுண்டியில் ஒருகவளமே யன்றி மற்றொன்றை நீக்கிப் புசித்த அத் துணைப் பெருஞ் செல்வராயிருந்த பெருமக்க ளும், ஒரு காலத்தில் தரித்திரர்களாகி வேறோ ரிடத்திற் போய்க் கூழை யிரந்து உண்பார்கள் என்னில், செல்வம் நிலைத்திருப்பதாக எண்ணி அதனைக் காப்பாற்றத் தக்கதன்று.

அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறு சிகை நீக்கியுண் டாரும்—வழிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்திற் கூழெனிற்
செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

நாலடியார்.

குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.

—அதிவீரராமர்

என்று செல்வ நிலையாமையைக் குறித்து ஆன் றோர் கூறிய அமுத மொழிகளை உன்னிச் செல்வம் உள்ளபோதே பகிர்ந்தளித்துப் பல் லோரோடும் உண்டு பரகதிக்கு வழிதேட வேண் டும். இங்ஙனமின்றி நாளைக்கு அறஞ்செய் வோம். அடுத்த ஆண்டில் வருகின்ற தைப்பூசத் திருநாளன்று அன்னதானஞ்செய்வோம் என்று எண்ணுவானேயானால், அவன் அதுகாறும் இருப்பது நிச்சயம் ஆகுமா? அவன் மறுகணமே மாளினும் மாள்வான். பின்புறத் திலேயே கூற்றுவன் நிற்கிறான். உயிர் நீர் மேற் குமிழிக்கு நிகரானது. ''இன்றைக்கோ நாளைக்கோ இன்னும் அரைநாழிகைக்கோ என்றைக்கோ ஆவி இழப்பு'' என்ற முது மொழியை நினைத்து தீயவைகளைவிட்டு இயன்ற அளவில் தருமத்தைப் புரிதல் வேண் டும். இதனையே நம் அருணகிரியாரும் ''இன் றைக்கு அன்றைக்கென நாடாது இடுக கடிது'' என்று. மரமானது மிகவும் ஓங்கி வளர்ந்து பல கிளைகளுடன் தழைத்து நின்று பெரிதும் நிழ லைத்தருவதுபோல, தக்கார் கைப்பட்ட அற மானது அற்பமாயினும், ஆகாயமும் அற்ப மாகும்படி மிகவும் வளர்ச்சியுறும்.

உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்-கறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்து விடும்.

—நாலடியார்.

''நொய்யிற்பிளவளவேனும்பகிர்மின்கள்'' என்ற அருணகிரிப் பெருந்தகையின் அமுத மொழியையுங் காண்க.

தக்கார் தகாதவர் என்று பகுத்தறிந்து ஈவதே தானம் எனப்படும். அங்ஙனமின்றி வறியராய் வந்துற்றார் யாவராயினும்இன்னார் இனியார் என்று நோக்காது ஈதலே தருமம் எனப்படும். தருமம் புரியும் ஆற்றலில்லாதார் தமக்கு எவ்வளவு சக்தியுண்டோ அவ்வளவா வது கரவாதளித்தல் வேண்டும். இதனை நோக்கியே நம் மூதாட்டியார், 'இயல்வது கர வேல்' என்றனர். அதுவும் செய்யச்சக்தியில்லை யென்னில் பிறர் தருமம் புரியுங்கால் குறுக்கே விழுந்து எதற்காக இப்படி தருமம் புரிகிறாய்? சிறுது கொடுத்தால் போதாதோ? என்று தடுக் காமலிருந்தால் போதும். அதுவே தருமம் புரிந்தது போலாகும். இதுபற்றியே ஒளவைப் பிராட்டியார் 'இயல்வது கரவேல்' என்று கூறினதோடு அமையாது அடுத்தாற்போல் ''ஈவது விலக்கேல்'' என்றனர். இதனைத் திருவள்ளுவரும்.

''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பது
முண்பது மின்றிக் கெடும்''

என்றனர்.

அங்ஙனமாயின் நான் ஒருவரையுந் தருமம் புரியுங்கால் தடுப்பதில்லை, அதுவே போதும் எனத் தகுதியுடையான் ஒருவன் எண்ணிவாளா கிடத்தல் கூடாதென ''ஐயமிட்டுண்'' என்றும் உபதேசித்தனர். இங்ஙனம் நமக்கு அறமார்க் கத்தின் பொன்மொழிகளை வற்புறுத்திக் கூறி யருளிய அப்பெரியோர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யவல்லேம்? ''குன்றிற பிள வளவு தினையளவு பங்கிட்டுண்கை'' என்று நம் அருணகிரிநாத சுவாமிகள் அருளியபடி நம்முடைய வருவாயில் ஒரு சிறி பாகமாவது ஏழைகளுக்கென்று ஒதுக்கி வைத்து அதனை அவர்களுக்கு அன்புடனீந்து மறுமைக்கு மாறா நலனைத் தேடிக் கொள்ளல் வேண்டும்.

கடவுள் அறத்தின் வடிவமாக விளங்கு கிறார். சிவபெருமானுக்கு 'அறவன்' என்றே ஒரு திருநாமம் உண்டு. நமது காரைக்கால் அம்மையார் கயிலாயவரை சென்று, கண் ணுதற் கடவுளைக் கண்டுகளித்து வரங்கேட் குங்கால் 'அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க' என்றார். சிவபெருமானுடைய ஊர்தி யாகிய இடபம் அறத்தின் வடிவு, தருமவிடை என்று அதற்குப் பெயர். அத்தகைய அறவடிவு ஆண்டவனை யடைதவற்கு அறத்தினை மற வாது உஞற்றுதல் வேண்டும். ''அறவினை அறவேல்'' என்ற திருவாக்கையும் உற்று நோக்குக. இத்தருமமே எல்லா நலன்களையும் தந்து இறைவன் திருவடியிற் சேர்க்கும்.

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்.

—கந்தபுராணம்

# ஆடவல்லானின் அழகிய செப்புத் திருமேனிகள்

'கலைமாச் செல்வன்'
திரு. க. சி. கமலையா, அசோக்நகர்

## ஆடவல்லான்

தமிழ்நாடெங்கும் சிவன் கோயில்களில் ஆடவல்லான் செப்புத் திருமேனிகள் வழிபாட்டில் உள. இடைக்காலத்தில் கோயில்கள் சரிவரப் பாதுகாக்கப்படாமலிருக்கவே, பலவழிபாட்டுத் திருமேனிகள் நிலத்துக்கடியில் புதைபட்டுக் கிடந்தன. அகழ்வாராய்ச்சித் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளிற்பல அருங்காட்சியகத்தில் இடம் பெற்றன. உலகின் பல இடங்களிலுமுள்ள கலையன்பர்கள், அருமை தெரிந்து சிலவற்றைத் தத்தம் நாடுகளுக்குக் கொண்டு செல்வாராயினர். எனினும் பல செப்புத் திருமேனிகள் சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியச் செப்புத்திருமேனிகள் மிகுதியாக இங்குக் காணப்படுகின்றன. அவைகளில் பெரும்பான்மை, தமிழகச் செப்புத்திருமேனிகள். ஆடவல்லானின் செப்புத்திருமேனிகள் பதினைந்துக்கும் கூடுதலாகக் காட்சியில் இங்கு உள.

சோழர்காலத்துச் செப்புத்திருமேனிகள், உலகக் கலையரங்கில் தமிழ்நாட்டுக்குச் சிறப்பான இடத்தைப் பெற உதவின. குறிப்பாக ஆடவல்லான் செப்புத் திருமேனிகளின் அழகில் உள்ளத்தைப் பறிகொடாத கலையன்பர்களைக் காண்பது அரிது. இறைவன்; கூத்தன்-நடேசன்-நடராசன், கூத்தப்பிரான், அம்பலவாணன் என்ற பெயர்கள் ஆடும் அழகனைக் குறிக்கும் பெயர்களாகும். ''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என்று மாணிக்கவாசகர் பாடுவார். அவ்வாயிரம் பெயர்களில் 'நடராசா' என்ற பெயர் கலையன்பர் நெஞ்சங்களைக் கவர்வதாயிற்று. இப்பணியை ஆற்றியவர் ஆனந்தக் குமாரசாமி என்ற அருங்கலை வினோதர்.

நடராசத் திருமேனி பற்றிய ஆராய்ச்சி தமிழிலக்கியத்துடன் நெருங்கிய தொடர்புடையது. சோழர் ஆட்சி ஓங்கிய காலத்தில் பல திருமேனிகள் வழிபாட்டுக்காக வடிக்கப்பட்டன. நடராசத் திருமேனி அவற்றின் ஒன்றாகும். நடராசத் திருமேனியை உருவாக்கிய சிற்பிகளுக்கு உறுதுணையாக நின்றது இலக்கியமாகும். அத் திருமேனியின் அமைப்புக்கூறுகள் பற்றித் தெரிந்துகொள்வது இன்றியமையாததாகும். ஆடும்கூத்தன் திருவடியில் சிலம் பொலிக்கிறது. ''திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்புகிறது'' என்று கி. பி. இரண்டாம் நூற்றாண்டுச் சிலப்பதிகாரம், கூத்தப் பெருமானின் சிலம்பைப் பற்றிய குறிப்பை அளிக்கிறது. இறைவனுடைய கையில் உள்ள பறை முழங்குகிறது என்ற தகவலும் அதே நூலில் கிடைக்கிறது. ''பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்'' என்று அந்நூல் பேசுகிறது. ''செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்'' என்று மேலும் உரைக்கிறது.

## சிலப்பதிகாரம்

இறைவன் ஒரு கையில் நெருப்பை வைத்துள்ளான் என்பதை ''அனலேந்தி யாடுவாய் இதனைச் செப்பு'' என்று காரைக்காலம்மையார் சொல்வதினின்றும் தெரிந்துகொள்ளலாம். 'பித்தா பிறைசூடி' என்றுசுந்தரமூர்த்திநாயனார் பாடுவதிலிருந்து இறைவன் பிறைச்சந்திரனை அணிந்திருக்கிறான் என்பது விளங்கும். இறைவனுடைய ஒரு பாதி பெண்ணன்றோ! தன்னுடைய பெண்மை விளங்க இடது காதில் தோடணிந்திருக்கிறான். ''தோடுடைய செவியன் விடையேறியோர் தூ வெண்மதிசூடி'' என்று திருஞானசம்பந்தர் இறைவனைப் பாடுவார். இறைவன் ஆட, அவன் ''அங்கைக்கனலாடும், சடையாடும், பாதிமதியாடும்'' என்று திருமூலர் கூறுவார். முயலகனை மிதிக்கும் முக்கட்பெருமான் இறைவன் என்பதை ''ஆகாசமாமுடல் அங்கார் முயலகன், மோகாய முக்கண்கள் மூன்றொளி தானாக மாகாய மன்றுள் நடஞ் செய்கின்றானே'' என்று அவர் திருவாக்கு இயம்பும். ''வீசி எடுத்த பாதம் அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள் அப்பனிடம் திருஆலங்காடே'' என்ற காரைக்காலம்மையார் திருவாக்கு, அவன் காலைத்தூக்கி நின்றாடும் தெய்வம் என்பதை உரைக்கின்றது. தூக்கிய திருவடியை ''இனித்தமுடைய எடுத்த பொற்பாதம்'' என்று திருநாவுக்கரசரும் திருவாய் மலர்ந்தருளினார். கூத்தப்பெருமான் ஒரு கையை மார்புக்குக் குறுக்கே உதறி மற்றொரு கையால் 'அஞ்சேல்' என்று அன்பருக்கு ஆதரவு தருகின்றான்.

''திருந்துநற் சீயென் றுதறிய கையும்
அருந்தவா வாவென் றணைத்த மலர்க்கையும்''

என்று விளக்குவார் திருமூலர். இதுவரை கூறியவற்றான் நடராசத் திருவுருவத்தைப் பற்றிய அடிப்படையான தகவல்கள் கிடைக்கின்றன. திருமுறைகளிலிருந்து மேற்கோள்கள் மேலும் காட்ட முடியும். ஆடவல்லான் திருவுருவ அமைப்புக்கூறுகளை மனத்தில்கொண்டு உலகப் புகழ்பெற்ற சென்னை அருங்காட்சியகத்தை அணிசெய்யும் செப்புத் திருமேனிகளைக் கண்டு கண்களுக்கு விருந்தளிக்கலாம்.

### புல்லவர்காலத்துச் செப்புத் திருமேனி

செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கூரம் என்ற ஊரிலிருந்து கிடைத்த நடராசர் செப்புத் திருமேனி கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்தது. 53 சென்டிமீட்டர் உயரமும், 29 செ. மீ. அகலமும் உடையது. இத்திருமேனி திருவாசியில் அமையவில்லை. அனலேந்தும் கையினிடத்தில் பாம்பு காணப்படுகிறது. பாம்பினுடைய மேற்பகுதி உடைந்து போய்விட்டது. இத்திருமேனியில் கங்கை இல்லை. நடராசத்திருமேனிக்கே உரிய ஏனைய பகுதிகள் உள. 'என்று வந்தாய் என்னும் திருக்குறிப்பு' எனத் திருநாவுக்கரசர் இறைவனுடைய காக்கும் கையைக் குறிப்பிடுவார். மற்றொரு கீழ் இடது கை மார்புக்குக் குறுக்கே அமையவில்லை. ஊன்றிய திருவடி நேராகக் கிடக்கும் முயலகனை மிதித்துள்ளது. வேண்டாத ஒன்றை மிதித்துக் காலைத் தூக்கியது போன்ற தோற்றம். எனவே இடதுகால் நேராகத் தூக்கப்பட்டுள்ளது. காலத்தால் பிற திருமேனிகளுக்கு முற்பட்டதாகச் சொல்லப்படும் இத்திருமேனியில் காணப்படும் அணிகள் நினைத்துப் பார்க்க வேண்டியவை. கழுத்தணிகள், கைகாப்புகள் பாதசரம் ஆகியவை தெளிவாக உள. பூணூல் பட்டையாக இருந்தாலும் பொலிவுடன் விளங்குகிறது. மேலிரண்டு கைகளும் அகன்றுள்ளன. இறைவனுடைய பெண்மையை விளக்கும் தோடு இடது காதில் காணப்படுகிறது. தலையலங்காரம் சிறப்பாக அமைந்து பின்புறம் பூவையொத்து ராக்கடியால் இணைக்கப்பட்டிருக்கிறது. தோள்களின் பின்புறம் தொங்கும் சடைகள் திருமேனிக்கு மேலும் அழகை ஊட்டுகிறது. கழுத்தைச் சுற்றி மார்பில் தொங்கும் அணிகள் 'மார்படைத்த கோடு பளீர் பளீரென' என்ற அருணகிரிநாதரின் சொற்களை நினைவூட்டுகின்றன. இரு துடைகளுக்கும் நடுவில் 'உத்தரீயம்' - மேல்துண்டு மாலைபோன்று அசைந்தாடுகிறது. நீண்ட முகமும் மற்றும் செவ்வனே அமைந்துள்ள உறுப்புகளையும் கொண்ட செப்புத் திருமேனியாகும் கூரத்து நடராசர்.

### பழமையான சோழர் காலத்துச் செப்புத்திருமேனி

கூத்தப்பெருமானைப் பற்றித் திருமுறைகள் குறிப்பிடும் வர்ணனைகளை ஒக்கூரிலிருந்து கிடைத்த நடராசர் செப்புத் திருமேனியில் காணலாம். தூக்கிய திருவடி பிற்காலச் செப்புத் திருமேனிகளில் காணும் பொலிவுடன் இல்லை. முட்டை வடிவமான தாமரை மேடையில் இறைவன் முயலகனை மிதித்திருக்கிறான். வீசிய கையும் மிக்க அழகாய் அமைந்துள்ளது என்று சொல்லமுடியாது. மேல் வலது கையில் துடி இறுக்கிப் பிடிக்கப்பட்டிருக்கிறது. மேல் இடது கையில் நெருப்புச் சட்டியை வைத்திருக்கிறது. முடியின் வலது புறம் அரைநிலை உளது. ஆகாயத்தைக் குறிக்கும் பத்தொன்பது சுடர்களுள்ள திருவாசியுள் திருமேனி அமைந்திருக்கிறது. ஒவ்வொரு சுடரிலும் மூன்று தீ நாக்குகள் காணப்படுகின்றன. திருவாசி குடைவண்டியின் மேற்பகுதிபோன்று தோற்றமளிக்கிறது. முகம் நீண்டு சதைப்புடைப்புள்ளதாயிருக்கிறது. கவர்ச்சியானது என்று சொல்ல முடியாது. ''எளிய பழங்கால உருவம்; கலைநயமில்லாக் கரடுமுரடான சிலை என்று சொல்வது பொருந்தாது'' என்று தொல்பொருள் துறையறிஞர் சீநிவாசன் எழுதுகிறார்.

பிற்காலத்தெழுந்த திருமேனிகள் செப்பமுற எழிலுடன் அமைவதற்கு ஒக்கூர்த் திருமேனியை ஒரு முன்னோடி எனலாம். ஆடவல்லான் செப்புத்திருமேனிகள் பற்றிய ஆராய்ச்சியில் தொடக்ககாலம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் இத்திருமேனியைக் கூர்ந்து நோக்குதல் நன்று. சோழர்காலத் திருமேனிகளில் இது பழமையானது. இது சோடனையில்லாத திருமேனியாகும். இத்திருமேனியில் கங்கை இல்லை. சடைகள் நான்கு புரிகளாக வளைந்து இடப்பக்கமும் வலப்பக்கமும் பறக்கின்றன. அவை திரித்த கயிறுகள்போல் உள. ''மெல்லிய உறுப்புக்கள் கலைவண்ணம் அருகிய சடைகள், சதைப்பிடிப்புள்ள முகம் ஆகியவை சற்பியின் கவனத்தை ஈர்த்திருக்குமாயின் இத்திருமேனி ஒருபடி அழகுடன் அமைந்திருக்கும். ஒக்கூர்த்தபதி கலைத்திறனற்றவன் என்றும் சொல்லிவிட முடியாது. ''திருவாசியில் சுடர்கள் தாமரைப்பீடத்தில் தாமரைமலரின் இதழ்கள் நடராசப்பெருமானின் முகம் ஆகியவற்றின் அமைப்பு உயர்தரமானது'' என்று சிவராம மூர்த்தி புகழ்கிறார்.

### இறைவனின் எழில்மிகு தோற்றமும் ஏற்றமும்

வேளாங்கண்ணியிலிருந்து கிடைத்த நடராசத் திருமேனி கி.பி. பத்து அல்லது பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாயிருக்கலாம். மேலிருந்து கீழ்வரை 112 செ. மீ. உயரம் உள்ளது. அகலம் 99 செ.மீ. இச்செப்புத் திருமேனி அடியிலிருந்து முடிவரை 84 செ.மீ. இடைவெளியில் உள்ளன. இவ்விருகைகளும் இறைவன் ஊன்றிய திருவடியிலிருந்து 66 செ. மீ. இருபுறமும் மேலே தள்ளி இருக்கின்றன. தலையலங்காரம் 'மகுடமா'யமைந்துள்ளது. கங்கை இல்லை. தலையின் இருபுறமும் பறக்கும் விரித்த செஞ்சடைகள் வேலைப்பாடுடனும் உவகையூட்டுமாறும் காணப்படுகின்றன. கொற்றங்குடி, கண்கொடுத்தவனிதம் ஆகிய இடங்களிலிருந்து கிடைத்த திருமேனிகளில் காணப்படும் சடைகளைப் பார்க்கிலும் இவை எழிலுடன் விளங்குகின்றன. குடைவண்டியின் மேற்பகுதியைப் போன்ற திருவாசியில் இருபத்தொன்பது சுடர்களும், சுடர் ஒவ்வொன்றிலும் மூன்று தீ நாக்குகளும் உள்ளன. உச்சியில் உள்ள சுடர் மட்டும் ஐந்து தீ நாக்குகளைக் கொண்டிருக்கிறது.

காக்கும் கையில்படமெடுத்தபாம்பொன்று நேராகப் படத்தை உயர்த்தி இருக்கிறது. முட்டை வடிவமான-சிறிய தாமரை மேடையில் முயலகனை நசுக்கி ஆடுகின்றான். நீண்டு உருண்ட இறைவனுடைய முகம் வலதுபுறம் சாய்ந்துள்ளது. வீசிய கை திருவாலங்காட்டுத் திருமேனியிலுள்ளது போலிருக்கிறது. ஊன்றிய

தூக்கிய திருவடிகள், வயிற்றைச்சுற்றிப் பறக்கும் துணி, மேல்துண்டு, உடலுறுப்புகளின் அமைப்பு இவையனைத்தும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. வேளாங்கண்ணிச் செப்புத் திருமேனி திருவாலங்காட்டு நடராசத் திருமேனிக்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூடிய அத்தனை எழில்கொழிக்கும் திருமேனி என்றுசொல்வது மிகையன்று. ''இத்திருமேனியைத் திருவாலங்காட்டுத் திருமேனியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நேர்த்தியான தோற்ற நிலையிலும் உறுப்புக்களின் கூடுதலான கட்டமைப்பிலும் வேற்றுமை காணமுடியும். ஆனால் இவை அருகி இத்திருமேனிக்கு ஊறுகளாயின. திருவாலங்காட்டுச் செப்புத் திருமேனியிலும் இத்திருமேனி மரபுச் சிறப்பு வாய்ந்தது; கலை குறைவு. எனினும் அளந்து பார்த்ததில் நூல்கள் விதித்துள்ளபடி திருவாலங்காட்டுச் செப்புத்திருமேனிதான், வேளாங்கண்ணித் திருமேனியைவிடக் கிட்டத்தட்ட சரியான அளவுகளைக் கொண்டது'' என்று ஹாடவே கருத்துத் தெரிவிக்கிறார்.

### வெள்ளியம்பலத்தில் கால்மாறியாடியவர்

சென்னை அருங்காட்சியகத்தை அணிசெய்யும் கூத்தப்பெருமானின் செப்புத்திருமேனிகளுள் வெள்ளியம்பலத்தில் இறைவன் கால்மாறியாடியதைக் காட்டும் அரிய செப்புத் திருமேனி ஒன்றுள்ளது. வலதுகாலை ஊன்றி, இடது காலைத் தூக்கி நின்றாடும் நடராசத் திருமேனிகளைப் பார்த்துப் பழகியவர் மக்கள். பொறுப்பு மேட்டுப்பட்டியிலிருந்து கிடைத்த இத்திருமேனியில் இறைவன் இடதுகாலை ஊன்றி, வலது காலைத் தூக்கியாடுகின்றான். குமரகுருபரர் இறைவன் இடது காலைத் தூக்கியாடுவதைச் சிதம்பர மும்மணிக்கோவையில் குறிப்பிடுகின்றார்.

''தக்கனார் வேள்வி தகர்த்துச் சமர்முடித்த
நக்கனார் தில்லை நடராசர்-ஒக்கற்
படப்பாயலான் காணப் பைந்தொடிதாள் என்றோ
இடப்பாதம் தூக்கியவா இன்று''

இறைவன் வலது காலைத் தூக்கியாடுவதேன்? கால்மாறியாடுவதைக் கூறும் கதையொன்று 'ஹாலாஸ்ய மகாத்மியம்' என்ற நூலிலும், திருவிளையாடற் புராணத்திலும் காணப்படுகிறது. மதுரை மன்னனாய் விக்கிரமபாண்டியனுக்குப் பிறகு அவன் மகன் இராஜசேகரன் அரசாண்டான். அறுபத்துநான்கு கலைகளுள் அறுபத்திமூன்றில் முதிர்ந்ததேர்ச்சி பெற்றான். ஆடற்கலை இறைவனுடையதாதலால் அதை அரசன் தவிர்த்தான். சோழநாட்டை அக்காலத்தில் கரிகாலன்ஆண்டுவந்தான். அவனுடைய அரசவையிலிருந்து வந்த புலவனொருவன் சோழமன்னன் ஆயகலைகள் அறுபத்திநான்கினையும் கற்றிருக்கப் பாண்டிய மன்னனுக்கோ ஆடற்கலைபற்றிய கல்வியில்லை என்று சொன்னான். அக்குறையைப் போக்கத் தென்னவன் ஆடற்கலையை முழுமூச்சாகப் பயிலத் தொடங்கினான்.

''பாவமொடு ராகம் தாளம் இம்மூன்றும்
பகன்றிடு முறையினாற் பரதம்''

பாவம், ராகம், தாளம் என்ற இம்மூன்றாலாகியது தானே பரதம். இக்கலையைப் பயிலும் பொழுது உடம்பின் உறுப்புகளுக்கு உண்டாகும் வேதனையை அரசனுணர்ந்தான். ஊழிதோறும் இடைவிடாது வலதுகாலை ஊன்றி, இடது காலைத் தூக்கியாடும் இறைவன் கால்தான் நோவாதோ? என்ன கொடுமை! ''இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கியாடவேண்டும் எம்பெருமானே! கால்மாறியாடுவதால் ஓய்வு கிட்டும். இல்லையேல் வாளில் பாய்ந்து நான் உயிர்துறப்பேன்'' என்று அரசன் இறைவனை வணங்கினான். அருள் வள்ளலாகிய இறைவன் தூக்கிய இடது திருவடியை முயலகன்மீது வைத்து வலக்காலைத் தூக்கியாடலானான். மதுரை வெள்ளியம்பலத்தில் ஆடும்பிரான் நிகழ்த்திய அரிய கூத்து இதுவாகும்.

கால்மாறியாடியதைக் காட்டும் பொறுப்பு மேட்டுப்பட்டிச் செப்புத் திருமேனி 53 சென்டிமீட்டர் நீளமும் 34.5 செ.மீ. அகலமும், 18.5 செ. மீ. உயரமும் உள்ள நீண்ட மேடையில் அமைக்கப்பட்டுள்ளது. மேடையில் இடப் பக்கத்துக்கும் வலப்பக்கத்துக்கும் நடுவில் வெளி நோக்கி நிற்கும் இரண்டு யாளிகள் உள. குழிந்த முன்புறத்தில் சிங்கங்கள் வரையப்பட்டுள்ளன. பக்கங்களில் பூ வேலைகளைக் காணலாம். குப்புறக் கிடக்கும் பெரிய அளவு முயலகன்மீது இறைவன் இடதுகாலை ஊன்றியிருக்கிறான். முயலகன் அளவுக்கேற்பப் படமெடுத்த பாம்பொன்றை அவன் கையில் பிடித்திருக்கிறான். ஆடும் பெருமான் கவலையின்றி வலதுகாலைத் தூக்கிக் கணைக்கால் இடது துடைக்குக்குறுக்கே செல்லுமாறு ஆடுகின்றான். கீழ்வலது, இடது கைகள் காக்கும் கையாயும் வீசிய கையாயும் பிற நடராசத் திருமேனிகளில் உள்ளதுபோன்று இருக்கின்றது. மேலேயுள்ள இரண்டு கைகளிலும் மாறுதல்களைக் காண்கின்றோம். வலக்கையில் நெருப்பும் இடக்கையில் துடியும் உள. கால்மாறிய நிலையில் இறைவன் உடம்பு சற்று இடப்பக்கம் சாய்ந்து தலை வலப்பக்கம் நோக்கியுள்ளது.

இடப்பக்கம் மேலுள்ளகையில் பெருவிரலுக்கும் மூன்று விரல்களுக்கும் இடையில் துடி இருக்கிறது. வலது மேற்கையில் நெருப்பு ஐந்து தீ நாக்குகளுடன் காணப்படுகிறது. கழிக்கப்பட்ட சங்கைப்போன்று நெருப்பு தோன்றுகிறது என்று சொல்லப்படுகிறது. இறைவன் புன்முறுவல்பூத்து ஆடுகின்றான். தலையலங்காரத்தில் சடைகள் இருபுறமும் எழிலுடன் காணப்படுகின்றன. பிறைநிலா முடியின் வலப்பக்கம் இருக்கிறது. இச்செப்புத் திருமேனியில் கங்கை இல்லை.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் வழிபாட்டிலுள்ள இரண்டு நாயக்கர் காலச் செப்புத் திருமேனிகளைத் தவிர வேறெங்கும் கால்மாறி யாடும் ஆடவல்லான் திருமேனிகள் கிடைத்தில. எனவே பொறுப்பு மேட்டுப்பட்டியிலிருந்து கிடைத்துள்ள கால்மாறியாடும் நட

ராசர் செப்புத் திருமேனி ஓர் அரிய வைப்பு. திருவாலங்காட்டு ஆடவல்லான் செப்புத் திருமேனியொப்ப இக்கால்மாறியாடும் திருமேனி சிறப்புடையதாகும். இத்திருமேனியை நோக்குமிடத்துப் பல உயர்தரமான-கலைச்சிறப்பு வாய்ந்த பொருள்களைப் படைப்பவர் இருந்தனரென்பது உறுதி. ''பாண்டிய மன்னன் ஆணையின் பேரில் இத்திருமேனி ஆக்கப்பட்டிருந்தால் அத்தகைய அரசனின் கலையார்வத்தையும் சாதனையையும் எடுத்தியம்ப வேறு சான்று வேண்டியதில்லை.'' இச்செப்புத் திருமேனி கி. பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

### அணங்கு காட்டில் கணங்களோடு ஆடும் பெருமான்

''பெருங்காடரங்காப் பெயர்த்து நட்டம், போய்நின்று பூதந் தொழச் செய்யும் மொய் கழற்புண்ணியன்'' ஆடும் அழகனாம் இறைவன் கூளிக் கணங்கள் குழலோடியம்பக் குழகனாடும் மேலப்பெரும்பள்ளத்திலிருந்து கிடைத்த நடராசத் திருமேனியில் ஒரு புதுமையைக் காணமுடிகிறது. திருவாசிக்கடியில் இருபக்கமும் சிவகணங்களைப் பார்க்கின்றோம். ஒருகணம் ஒற்றைமுகக் கொட்டு ஒன்றை முழக்குகிறது. மற்றொன்று தாளம் கொட்டுகிறது. பதினொன்றாம் நூற்றாண்டு அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டுச் செப்புத் திருமேனியாயிருக்கலாம். இருபக்கமும் திருவாசியில் மூன்று தீ நாக்குகளுள்ள சுடர்களும் மேலே உச்சியில் உள்ள சுடரில் ஐந்து தீ நாக்குகளும் இருக்கின்றன. இத்திருமேனி 90 செ. மீ. உயரம். எளிய அலங்காரமின்றி அமைந்த இத்திருமேனியின் அழகை நெகிழ்வற்ற உறுப்புக்கள் குலைத்து ஆடும் உருவத்தைப் பருமனாகக் காட்டுகின்றன. சடைகள் தோள்களின் பின்புறம் அசைந்தாடுகின்றன. காக்கும் கையும், அதனைச் சுற்றியுள்ள பாம்பும் துடியதனைப் பிடித்த கையும் கலைஞனின் கைவண்ணத்தைக் காட்டுகின்றன. மேல் இடதுகையிலுள்ள நெருப்பைப் பெருவிரலும் சுட்டுவிரலும் பிடித்திருக்கின்றன. இத்திருமேனியில் கங்கை இல்லை. அரைநிலா தலையின் வலப்பக்கமிருக்கிறது. நடராசத் திருமேனியில் காணப்படும் அனைத்தும் இத் திருமேனியிலும் காணப்படுகின்றன.

### உவகையூட்டும் எழிலுருவம்

கண்கொடுத்த வனிதம் என்ற ஊரிலிருந்து கிடைத்த நடராசரின் செப்புத் திருமேனி கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தாமரை மேடையின் அடியிலிருந்து உச்சிவரை அதன் உயரம் 115 செ. மீ., அகலம் 109.5 செ. மீ. திருவடியிலிருந்து திருமுடிவரை உயரம் 86 செ. மீ. துடியேந்திய கையும், அனலேந்திய கையும் ஊன்றிய திருவடியின் நடுவும் ஒன்றுக்கொன்று 67 செ. மீ. தள்ளியுள்ளன. இறைவன் முட்டை வடிவமான தாமரை மேடையில் குறளனை இடுப்பிலிருந்து கழுத்துவரை வலது காலால் மிதித்து, இடது காலைத் தூக்கியாடுகின்றான். தாமரை மேடை இரண்டு பிரிவுகளாக அடிப்பகுதி கவிழ்ந்த தாமரை இதழ்களாயும், மேற்பகுதி மலர்ந்த தாமரை இதழ்களாகவும் அமைந்துள்ளது. சடைகள் தலையின் இருபுறமும் மேல்நோக்கிப் பறந்தாடுகின்றன. இறகுகளைச் சூடிய தலைக்கு மேல் மலருள்ளது. காக்கும் கையின் முன்பக்கம் படமெடுத்தாடும் பாம்பு இருக்கிறது. அனலேந்தும் கையுடன் இவையனைத்தும் திருவாசியைத் தொடுகின்றன. தோளைச் சுற்றி மேல்துண்டு தொங்குகிறது. ஒற்றைச் சதங்கை தூக்கிய திருவடியில் கணைக்காலுக்கு மேலே கட்டப்பட்டிருக்கிறது. பூணூல் கலைவண்ணத்துடன் மார்பிலிருந்து கீழே செல்கிறது. தொங்கலுடன் கழுத்தணியொன்றும் கழுத்துடன் ஒட்டிய மற்றுமொரு அணியும் காணப்படுகின்றன. நான்கு காப்புகள் நான்கு மணிக்கட்டுகளிலும் உள. நடுவிரலைத் தவிர எல்லாவிரல்களிலும், மோதிரங்களும்நடுக் கால்விரலைத் தவிர இரண்டு கால்விரல்களில் மெட்டிகளும் உள. திசைகளைத் துருவும் சடையில் கங்கை நீர்மங்கை உருவில் தோற்றமளிக்கிறாள். சடைகளின் நான்கு புரிகள் முதுகின் பின்னால் தொங்குகின்றன. உருண்டை முகத்தில் நேராக உயர்ந்த மூக்குடன் புன்னகை தவழ இறைவன் காட்சி அளிக்கின்றான்.

வட்டமாய் அமைந்த திருவாசியின் இருபுறங்கள் ஒவ்வொன்றிலும் பத்தொன்பது சுடர்களும், மேலே உச்சியில் ஒரு சுடரும் உள. உச்சியிலுள்ள சுடரில் ஒன்பது தீ நாக்குகளும், பிற ஒவ்வொன்றிலும் ஐந்து தீ நாக்குகளும் காணப்படுகின்றன. இடது பக்கத்திலிருந்து வலதுபக்கம் வரை குறளனை அடக்கி நிற்கும் திருவாசியின் நடுவில் பட்டையான இடத்தில் நூற்றிருபத்தேழு மலர் வளையங்கள் காணப்படுவது இத்திருமேனியில் ஒரு புதுமை. மேலப்பெரும்பள்ளத்துத் திருமேனியிலும் இம்மலர் வளையங்கள் உள. பேரழகுப் பிழம்பு என்று குறிக்க முடியாதெனினும் இத்திருமேனியை உவகையூட்டும் எழிலுருவம் எனலாம். **

---

## மனித்தப் பிறவியும் வேண்டுவதே!

குனிந்த புருவமும், கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்,
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெறால்,
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே!

—திருநாவுக்கரசர்.

# இடும்பைக்கு இடும்பை

'வாகீச கலாநிதி'
திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள், M. A.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

நாம் கோபத்தால் ஒரு சிறுவனை அடிக்கக் கையை ஓங்குகிறோம். அவன் தப்பிக்கொண்டு ஓடிவிடுகிறான். ஓங்கிய வேகத்தில் கை கீழே அடிக்கிறது. அங்கே ஒரு கல் இருக்கிறது. அதில் பட்டுக் கை வலிக்கிறது. நமக்குக் கோபம் அதிகமாகிறது. கல்லை அடித்தால் கைவலிக்காமல் என்ன செய்யும்?

ஒரு சர்க்கஸ் நடைபெறுகிறது. அதில் ஒருவர் தம்முடைய தசைப்பலத்தை நிரூபித்துக் காட்டுகிறார். ஒரு பலகைக் கல்லை அடிக்கிறார். இரண்டாகப் பிளந்து விடுகிறது. பார்க்கிறவர்கள் வியப்பில் ஆழ்கிறார்கள். நாம் கல்லை உடைக்கப்புகுந்தால், நம் கை எலும்பு தான் உடைகிறது. ஆனால் அந்தச் சர்க்கஸ் காரரோ தம் கையைக் கொண்டு கல்லையே உடைத்துவிடுகிறார். ஏன்?

அவர் பிறக்கும்பொழுதே அத்தகைய வலிமையுடன் பிறக்கவில்லை. அவரும் நம்மைப் போல்தான் பிறந்திருப்பார். ஆனால் அவர் தன் உடல் வலிமை பெறும் வகையில் பலவகை யான பயிற்சிகளைச் செய்து வந்திருக்கிறார். முதலில் கீரைத் தண்டை உடைத்துப் பிறகு வாழைத்தண்டை உடைத்திருக்கிறார். பிறகு உளுத்துப்போன பலகையையும், அப்பால் சாதிக் காய்ப் பலகையையும், உடைத்துப் பின்பு மாம் பலகையை உடைத்திருப்பார். அதன்பின் அதிகக் கனம் இல்லாத கல்லை உடைத்து, முடிவில் பலகைக் கல்லை உடைக்கும் அளவுக்கு வந்திருக்கிறார். பல காலமாகச் செய்த பயிற்சியினால் இந்தத் தீரச்செயலை அவ ரால் செய்ய முடிகிறது.

''கல்லை உடைத்துவிடுகிறேன், பார்'' என்று ஒருவர் சொன்னால் நமக்கு நம்பிக்கை உண்டாவதில்லை. அவர் அதை உடைத்துக் காட்டுகிறபோது நாம் வியப்படைகிறோம். இவ்வாறு உடல்பலத்தைப் பயிற்சியினால் அதிகமாக்கிக் கொள்வது நமக்குத் தெரிகிறது. இவ்வாறே உள்ளத்தில் வலிமையை மிகுதி யாக்கிக் கொள்வதற்கும் பயிற்சி செய்ய வேண்டும்.

சிறிய சிறிய தொல்லைகள் வரும்போது, வருமே என்று எதிர்பார்த்து அஞ்சுகிறோம். வந்துவிட்டாலோ துடிதுடித்துப் போகிறோம். அவை வந்து துன்பம் அடைந்த பிறகும், அவற்றையே நினைந்து மனம் அல்லற்படுகிறோம். இது நம்முடைய மனம் வலிமையற்றது, திண்மை இல்லாதது என்பதைக் காட்டுகிறது.

மனம் திண்மை பெற்றால், பெரிய காரியங்களைச் சாதித்து விடலாம். திருவள்ளுவரைச் சித்தர்கூட்டத்தில் ஒருவராகச் சொல்வது உண்டு. அந்தச் சித்தர், ''நீங்கள் நினைத்ததை நினைத்தபடியே அடையலாம்'' என்று சொல்கிறார். அதைக் கேட்கிறபோது நமக்கு அதற்குரிய தந்திரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை எழுகிறது. ஆம்; அவர் ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப'' என்று தொடங்குகிறார். எண்ணியவற்றை எண்ணிய படியே அடைவார்கள் என்றால், யாருக்குத்தான் ஆவல் பிறக்காது. ''அப்படியா?? எவ்வாறு எய்துவது?'' என்று ஆவலோடு மேலே அவர் சொல்வதைக் கேட்கச் சித்தமாக இருக்கிறோம். அவர் மேலே சொல்லப்புகுகிறார். 'எண்ணியார்' என்று அவர் தொடர்ந்து சொல்லும்போது நம் ஆவல் மிகுதியாகிறது. ஓர் அற்புதமான சித்து விளையாட்டல்லவா தெரிந்து கொள்ளப் போகிறோம்? ''எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் என்று சொல்லி முடிக்கிறார். 'எண்ணுகிறவர் திண்மையுடையவராக இருந்தால்' என்ற பொருள் நமக்குப் புரிகிறது.

அப்படியானால் உடல் வலிமை உள்ளவர்கள் தாம், நினைத்தவற்றை நினைத்தபடியே அடையலாமா? என்ற கேள்வி நமக்குள் தோன்றுகிறது. சற்றே யோசித்துப் பார்க்கிறோம். எவ்வளவோ பேர்கள் உடல் உலிமையுடையவர்களாக இருந்தாலும், மனத்தால் திண்ணியராக இருப்பதில்லை; கோழைகளாக இருக்கிறார்கள். சிங்கத்தைவிட யானை பெரியது; உடல் வலிமையும் உடையது. ஆனால் யானையால் சிங்கத்தை வெல்ல முடிவதில்லை. ஆகவே, வள்ளுவர் சொல்லும் திண்மை, உடம்பைப் பொறுத்தது அன்று என்றே தோன்றுகிறது. அந்த எண்ணம் வலிமை பெறவேண்டும்.

ஒருவன் ஓர் அவையில் யாரோ பெரியவர் பேசுகிறார் என்று அறிந்து, அந்த அவையில் போய் அவர் பேச்சைக் கேட்டுப் பயன்பெற வேண்டும் என்று எண்ணுகிறான். அங்கே செல்வது கடினமான காரியம் அன்று. அங்கே போவதற்குரிய வழியும், போவதற்கேற்ற கால்

வலிமையும் இருக்கின்றன. அவன் புறப்படு கிறான். ஆனால் இடையிலே வேறு எண்ணம் வந்து குறுக்கிடுகிறது. இடையிலே அவன் ஒரு சினிமா விளம்பரத்தைக் காணுகிறான். இப்போது அவன் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு, சினிமாவுக்குப் போய்விடுகிறான்.

அவன் தான் எண்ணியதைச் செய்வதற் குரிய வாய்ப்பு இருந்தும் அவ்வாறு செய்வ தில்லை. ஒரு பெண் கருவுற்றால் பத்துமாதம் தக்க வண்ணம் உணவுண்டு, பாதுகாப்பாக இருந்தால், கரு வளர்ந்து குழந்தையாக உருப் பெற்று வெளிவருகிறது. இடையிலே ஏதேனும் விபத்து நேர்ந்தால் கருச்சிதைவு ஏற்படுகிறது. குழந்தை பிறக்காமல் போவதுமட்டும் அன்று; கருச்சிதைவினால் அந்தப் பெண்மணியின் உடல் நலமே கெட்டுவிடுகிறது; உயிருக்கும் ஆபத்து நேர்கிறது.

நம் மனத்தில் ஓர் எண்ணம் கருவாகத் தோன்றுகிறது. அந்த எண்ணத்தைச் செய லாக்குவதில் ஊக்கம் கொண்டு, மனம் தளரா மல், மீட்டும் மீட்டும் சிந்தித்துச் செயலில் முனைந்தால், எண்ணிய காரியத்தை நிறை வேற்றிவிடலாம். ஆனால் இடையில் எண்ணம் மாறினால், கருச்சிதைவு போன்ற நிலையே உண்டாகிறது. நாம் எண்ணியதை நம்மாலே செய்ய முடியாமற் போகிறது. 'என் பிள்ளை, நான் எண்ணுகிறபடி செய்கிறதில்லை, என் மனைவி, நான் எண்ணுவதுபடி நடப்பதில்லை' என்று பல சமயங்களில் நாம் குறைபட்டுக் கொள்கிறோம். நாம் எண்ணுகிறபடி நாமே செய்யாதபொழுது மற்றவர்களைக் குறை கூறு வதற்கு நமக்குத் தகுதி உண்டா ?

ஆகவே, எண்ணத்தை எண்ணியவர், அந்த எண்ணத்துக்கு உறுதி ஏற்றிச் செயலாக்குகிற வரையில் விடாப்பிடியாக இருந்தால், எண்ணம் செயலாக உருப்பெற்று நற்பயன் உண்டாகும். இவ்வாறு அமையும் மனமே திண்மையுள்ள மனம். ''எண்ணியார் திண்ணியராகப்பெறின்' என்று வள்ளுவர் சொல்லும் திண்மை மனத் திண்மையையே குறிக்கிறது.

ஒன்றை எண்ணி, அதைச் செயலாக்க முற்படும்போதும் இடையில் பல தடைகள் நேர்வது இயல்பு. அவற்றைக் கண்டு அஞ்சி நம் எண்ணத்தை நழுவவிடக்கூடாது. மனத் திண்மை இருந்தால் இடையூறுகளைக் கண்டு அஞ்சாத உறுதி உண்டாகும். இவ்வாறு வரும் சிறியதடைகளையெல்லாம் பொருட்படுத்தா மல் உறுதியாக நின்று முயற்சியிலே ஈடுபட் டால் எடுத்த காரியம் நிறைவேறும். வந்த தடைகள் போய்விடும். முதலில் இடும்பை வரும்போது எதிர்த்து நின்று உறுதியுடன் காரி யத்தைச் சாதிக்கும் மனவலிமை இருந்தால், இறுதிவரை நின்று கைகொடுத்துச் செயலை வெற்றிபெறச் செய்யும்.

இத்தகைய மனத்திண்மையைப் பெறுவது எப்படி? வள்ளுவர் காட்டுகிறார். 'முதலில் வரும் இடும்பைகளைக் கண்டு அஞ்சித் துன்பப் படாமல் எதிரேற்று உறுதியுடன் இருந்தால், அந்த இடும்பைகள் ஒழிந்துவிடும்.' என்கிறார். அதைக் கவிச்சுவையோடு சொல்கிறார். கல் கையை உடைக்காமல், கையால் கல்லை உடைத்துவிடலாம் என்று சொல்வதைப்போலச் சொல்கிறார். 'செயலைச் செய்யத் தொடங் கும்போது உண்டாகும் இடர்ப்பாடுகளுக்கு அஞ் சாமல், தொடர்ந்து செயலில் உறுதியுடன் ஈடு பட்டால், இடும்பையால் இடும்பை நமக்கு உண் டாகாமல், நாமே இடும்பைக்கு இடும்பை உண் டாக்குவோம், என்கிறார். துன்பம் துன்பப் பட்டு நீங்குமாம்.

''இடும்பைக்கு இடும்பை படுப்பர்; இடும்பைக்கு இடும்பை படாஅ தவர்''

என்பது குறள். இது ஒரு சூத்திரத்திரத்தைப் போல இருக்கிறது. இடும்பை என்ற சொல் நான்கு முறை வருகிறது. 'முன்னேவரும் சிறிய இடும்பைகளைக் கண்டு துன்பப்படாதவர்கள், பின்னேவரும் பெரிய இடும்பைக்கு இடும்பையை உண்டாக்குவார்கள், என்பது பொருள்.

'இடும்பைக்கு இடும்பை படாதவர், இடும்பைக்கு இடும்பைபடுப்பர்' என்று மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். படிப்படியாக ஏறி மலையுச்சியில் நிற்பதுபோல, சிறிய இடும்பைகளை மனஉறுதியால் ஏற்றுக்கொண்டு தம் முயற்சியினின்றும் நழுவாமல், மேலும் மேலும் அந்த முயற்சியில் ஈடுபடுகிறவர்கள் என்பதே, இந்தக் குறளின் கருத்து. 'இடும் பைக்கு இடும்பை படுப்பர்' என்பது கவிச்சுவை தோன்ற இருப்பது. 'ஐயோ இந்த மனிதனிடம் தெரியாமல்போய் இவனை எதிர்த்தோமே' என்று அந்த இடும்பையே வருத்தம் அடையு மாம்! இவ்வளவு சிந்தனைக்கும் இடம்வைத்துச் செறிவுள்ளதாக மேற்கண்ட குறள் அமைந் திருக்கிறது.

---

## "ஓர் இறைவன் உண்டு"

கடற்காட்சி, வான்காட்சி, கார்வரைசூழ் காட்சி,
உடற்காட்சி, அவ்வுடல் ஒண்சூற் — படற்காட்சி
உய்த்துய்த் துணர்ந்தக்கண் ஓர்இறைவன் உண்டுஎன்னும்
மெய்த்தன்மை நெஞ்சில் மிகும்!

—ந. ரா. முருகவேள்.



# கந்தபுராணக் கவிதைநலம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

சமயச்சார்பான பலவகை இலக்கியங்களுள் புராணங்கள் என்பனவும் ஒருவகையாகும். சமயத்துறையிற் புராணங்களுக்குச் சிறப்பிடம் உண்டு. ஒருசிலர் 'புராணம்' என்னும் சொற் கேட்ட மாத்திரத்திலேயே, அவற்றை மிக எளியனவாக எண்ணி இகழ்ந்துரைத்து ஒதுக்கி விடுவதுண்டு. இறையனார் களவியல் என்னும் நூலில், ஆசிரியர் நக்கீரனார் ''களவு என்னும் சொற்கேட்ட துணையானே, களவு தீயது என்று இகழ்ந்து விடுதல் கூடாது. களவும் நன்றாமாறு உண்டு'' எனக் கூறுகின்றார். அது போல, புராணங்கள் என்னும் சொல்லைக் கேட்ட அளவிலேயே, நாம் அவற்றையெல்லாம் இழிந்தனவாகவே துணிந்து கொண்டு, அறவே இகழ்ந்து ஒதுக்குதல் முறையன்று எனலாம். ''அழகென்பது பொருளில் இல்லை. அதனைக் காண்பர் கண்ணைப் பொறுத்தேயுள்ளது'' (Beauty lies in the eyes of the bebolder) என்று அறிஞர்கள் கூறுவர். அதுபோல, புராணங்களின் சிறப்பும் பிறவும், அவற்றை ஆய்ந்துணர்ந்து பயன் கொள்ளும் நம் அறிவின் திறனுக்கும், நலனுக்கும் ஏற்பவே அமைவன ஆகின்றன.

புராணங்கள் :

'புராணம்' என்பது புராதனம் (பழைமை) என்னும் சொல்லின் அடியாக அமைந்தது என்பர் அறிஞர். எனவே, பழைய காலந்தொட்டு வழங்கிவரும் வரலாறு (தொல்கதை)களே புராணங்கள் எனப் பெயர் பெற்றன எனக் கொள்ளுதல் பொருந்தும். புராணங்கள் பதினெட்டு என அறிஞர்கள் புகலுவர். அவற்றுள் சைவம் பவிடியம் மார்க்கண்டேயம் இலிங்கம் காந்தம் வராகம் வாமனம் மச்சம் கூர்மம் பிரமாண்டம் என்னும் பத்தும் சிவபிரானுக்குரிய புராணங்கள் ஆகும்; பிரமம் பதுமம் என்னும் இரண்டும் பிரமதேவனுக்குரிய புராணங்கள் எனப்படும். கருடம் நாரதம் பாகவதம் விஷ்ணு என்னும் புராணங்கள் நான்கும் திருமாலுக்கு உரியவைகள்; ஆக்கினேயம் என்பது அக்கினிதேவனுக்கு உரியது; பிரம்மகைவர்த்தம் என்பதோ சூரியனுக்கு உரிய புராணம் ஆகும்.

புராணங்களின் இயல்பு :

இங்ஙனம் புராணங்கள் பதினெட்டு எனப் பொதுவாகக் கூறப்படுமாயினும், இவற்றுள் மிகவும் சிறப்புடையனவாகப் பெரிதும் போற்றி வழங்கப்பெற்று வருவன, ஒரு சிலவேயாகும். அவற்றுள்ளும் கந்தபுராணம் என்பது, மிகவும் சிறப்புடைய ஒன்றாகும். சமயத்துறையில் புராண இலக்கியங்கள் மிகப்பெரிதும் போற்றப் பெறுகின்றன. புராணங்கள் மிக நுண்மைத் தன்மை வாய்ந்த கருத்துக்களை யாவரும் உணரும்படி, பருமைமிக்க வடிவில் விளக்குகின்றன. அருவமும், கடினமும் ஆன செய்திகளை விளக்க, அவற்றுக்கு ஓர் உருவம் கொடுத்து, எளிய இனிய கதைகளாக ஆக்கிக் கூறுகின்றன. மனித வாழ்வியலின் உண்மைகளையும் அனுபவங்களையும் சுவைமிக்க இனிய அழகிய கவிதைகளில், அரியமுறையில் அறிவுறுத்தும் பழம் பெரும் இலக்கியங்களே புராணங்கள் எனலாம்.

புராணங்கள் இறைவனது பெருமையினையும், இறையருளின் திறனையும் விளக்குவதோடு, ஒழுக்க நெறியில் தவறுதலாகிய குற்றம் முதலியன எய்தாதபடி, உயரிய பல நீதிகளையும் செய்திகளையும், மக்கள் உளங்கொளப் புகட்டுகின்றன. வேதப் பொருளை உள்ளபடி அறிவது மிகவும் கடினம். மழைத்துளி சிப்பியின் வயிற்றில் விழுந்தால் முத்தாகின்றது. நெருப்பில் விழுந்தால் சுவறிப் போகின்றது. பிற இடங்களில் விழுந்தால் அவ்வவற்றிற் கேற்ப அமைகின்றது. அதுபோல, வன்சொற்களினாற் புணர்க்கப்பட்ட வேதங்கள், அவ்வவர்தம் வினைக்கேற்பப் பலர்க்கும் பலவகையிற் பொருள் கொள்ளக்கிடக்கும். எனவே, அவற்றின் உண்மைப்பொருளையுணரப் புராணங்களின் துணை இன்றியமையாததாகின்றது. இவற்றாலும் புராணங்களின் சிறப்புடைமையை நாம் இனிதறிந்து கொள்ளலாம்

கனிவுரை :

வேதம் எஜமானன் கட்டளை இடுவது போல்வது. ''சத்தியம் வதா; தர்மம் சரா'' (உண்மையே பேசுக: அறநெறியிலே நடக்க) என வேதம் கட்டளையிடும். மனிதர்கள் செய்யத் தக்கவற்றை விதித்தும், செய்யத் தகா

தனவற்றை விலக்கியும், கட்டளை இடும் முறையில் வேதங்கள் அமைந்துள்ளன. ஆதலின் அவற்றை அலங்கார நூலார் அரும்பெருந் தலைவனின் ஆணையுரை (பிரபுசம்மிதை) என்பர். அன்பிற் சிறந்த நண்பர்கள் தமக்குள் அகங்கலந்து ஒன்றி அளவளாவி மகிழ்ந்து உரையாடுவது போல்வன, இதிகாசங்கள். ஆதலின் அவற்றை நண்பர்களின் நயவுரை (சகிருத்சம்மிதை) என வழங்குவர். மனைவி கணவன்பால் இனிமை பெருகக் கலந்துரையாடி, அவனைத் தன் கருத்திற்கு இணங்கச் செய்யும் காதற் கனிவுரைபோல, வேதங்கூறும் விதி விலக்குகளைச் சுவைபெருகச் சொல்லி இன்பம் பயந்து, அவற்றை யாவரும் அகமகிழ்ந்து கடைப்பிடிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தவை, புராணங்களேயாம். ஆதலின் புராணங்களைக் காதல் மனைவியின் கனிவுரை (காந்தாசம்மிதை) என அறிஞர்கள் புகலுவர். கசப்பு மருந்தை உண்ண மறுப்பவனுக்கு, அவன் விரும்பியுண்ணும்படி அதன் மீது தேனும் சருக்கரையும் தீற்றித் தருதல் (குளஜிக்வாநியாயம்) போல, இனிமை பயவாத் பொருள்களையும் இன்பம் பெருக நன்கினிது இயம்ப வல்லன, புராணங்களே எனலாம்.

### புராணங்களின் சிறப்பு :

இச்சிறப்பியல்பில் இந்தியப் புராணங்கள் மிகவும் தலைசிறந்து விளங்குகின்றன. அவைகள் செழித்தோங்கிப் பரந்து விரிந்து, சிறந்த அழகுடனும் நிறைந்த வளத்துடனும் மிளிர்கின்றன. அவைகளை நாம் உணர உணர அவற்றின் ஒளிமிக்க கனவுகளும், உயரிய இனிய கற்பனைகளும், நம்மனோர்க்கு வியப்பும், விம்மிதமும் விளைவிக்கின்றன. அவற்றிற்கு அழகிய உருவம் கொடுத்த நம் முன்னோர்களின் நுண்மாண் நுழைபுலத்தினை, அவைகள் அழகுற வெளிப்படுத்துகின்றன.

தாளாண்மை (முயற்சி) இல்லாதவர்கள் வேளாண்மை (உழவுத் தொழில்) செய்வதும்; வாளாண்மை இல்லாதவர்கள் போரில் வெற்றி பெறுதலை விரும்பிப் போர்க்களத்திற்குச் செல்வதும்; புராணங்களைப் படித்தும் கேட்டும் அறியாதவர்கள், அறம் பொருள் இன்பங்களின் முடிந்த பயனாகிய வீடுபேற்றை அடையவிழைவதும், கண்ணில்லாத குருடர்கள் வழியறிந்து நடந்து செல்ல இயலாது இடர்ப்படுதல் போல, இடர் விளைவிக்கும் பயனில் செயல்களேயாகும்.

தாளாண்மை இல்லாதார் வேளாண்மை
செய்குவதும், தரைமேல் என்னும்
வேளாண்மை இல்லாதார் மனைவாழ்க்கை
செலுத்துவதும், விசயம் வேட்டு
வாளாண்மை இல்லாதார் மண்டுசமர்க்கு
ஏகுவதும், வளர்பு ராணம்
கேளாதார் கதிவிழைவும்; விழியில்லார்
வழிநடக்கும் கிரமம் ஆமால்

—திரிகூடராசப்பக்கவிராயர்

இதனால் மக்கள் தம் வாழ்க்கையில் சமய உணர்வு எய்தி இறையருள் நெறியில் நின்று, வாழ்வாங்கு வாழ்ந்து மகிழ்வதற்கு வழிகாட்டும் வான் பொருள்களாக வயங்குவன, நம்முடைய பெரியவர்கள் வகுத்தளித்துப் போந்த சிறந்த புராணங்களே என்று, நாம் நன்கினிது தெளியலாம். புராணங்களைப் பயிலுங்காலும் கேட்குங்காலும் அவற்றின் நுட்பங்களை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். வெறுங் கதையை நோக்காது, அவற்றின் கருத்தையே நோக்குதல் வேண்டும். கருத்தை விளக்குதற்கே கதை போந்தது. கதை உடலும், கருத்து உயிரும் ஆகும். சிலர் கதையை மட்டும் பிடித்துக் கொண்டு கருத்தை விட்டுவிடுவர். அவர் தம் செய்கை நெய்யரிபோல்வதேயாகும். நுட்பமான ( Abstract ideas ) அரும்பெருந் தத்துவக் கருத்துக்களை, யாவரும் இனிதுணர்தற் பொருட்டுப் பெரியார்கள் பருவடிவில் (Concrete forms ) அழகுற அமைத்து, விளக்கியுதவி புரிவனவே புராண கதைகள்.

### கந்தபுராணம் :

கந்தபுராணம், புராணங்களில் மிகவும் சிறப்புடைய ஒன்று. கவிதைச் சுவைமிக்கது; சாத்திரக்கருத்துக்களும், தத்துவ நுட்பங்களும் செறிந்தது. பயில்தொறும் நூல்நயம் பயப்பது; இறையுணர்வை இனிது வளர்ப்பது; பக்தியுணர்வையும் ஒழுக்கத்தையும் பரப்புவது. தமிழிற் கச்சியப்ப சிவாசாரியர் இயற்றியருளிய கந்தபுராண நூலில், இலக்கியச் சுவைகள் அனைத்தும் நலக்கப் பொருந்தியுள்ளன. தமிழிலக்கியத் தொகுதிகளின் வரிசையில் கந்தபுராணத்திற்குத் தனிப்பெரும் சிறப்பிடம் உண்டு என்பது திண்ணம். சூரபதுமனால் சுவர்க்க வாழ்க்கை இன்பத்தினை இழந்து நின்ற தேவர்கள், பின்னர் முருகப்பெருமானின் திருவருளால் அதனைப் பெற்று, மகிழ்ந்து இன்ப மிக வாழ்ந்தனர் என்பதே, கந்தபுராணக் கதையின் சாரம். ஆதலின், ஜான்மில்ட்டன் (John Milton) என்னும் ஆங்கிலப் பெருங்கவிஞர் பாடிய ''சுவர்க்க இழப்பு—சுவர்க்கமீட்பு'' (Paradise Lost & Paradise Regained) என்னும் நூலோடு, ஒருபுடை ஒப்புமையுடையது கந்தபுராணம் என, அதன் பெருமையை ஒருவாறு சுருங்கக் கூறலாம். இரண்டிற்கும் காப்பியத் தலைமகன், கடவுளேயாவர். கதை நிகழ்களனோ, மீதலம் பாதலம் பூதலம் என்பனவாகும். காப்பியப் பொருளோ, அறிவுடைய நன்மக்கட்கெல்லாம் பொதுவானதாகும்.

''காதை நாயகன் கடவுளே;
கதைநிகழ் களனோ,
மீத லத்தொடு பாதலம்
பூதலம் ;விடயம்
போத மாந்தர்கட் குரியதாம்:
கந்தவேள் புராணம்,
தீதில் சுவர்க்கத்தின் இழப்பொடு
மீட்புமாச் சிறக்கும்''

—ந.ரா.மு.

கவிதைநலம் :

கந்தபுராணத்தின் கவிதை நலனும், காப்பியப் பொருள்நலனும், கற்றோர் உள்ளத்தையும், மற்றோர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு கவர வல்லனவாகும். ''சிறந்ததொரு கவிதையானது திருத்தம் மிக்கதாய், கலை நலம் செறிந்ததாய், நுண்மாண் நுழைபுலம் சான்றதாய், ஆற்றொழுக்கு நடையில் அமைந்ததாய், கற்பவர்க்கெல்லாம் உள்ளக் கிளர்ச்சியும் உவகைப் பெருக்கமும் விளைவிப்பதாய் இருத்தல் வேண்டும்'' என இலக்கியத் திறனாய்வார்கள் யாவரும் இயம்புவர். அத்தகைய நலங்கள்அனைத்தும் அழகுற விளங்குவது கந்தபுராணம்என்பது, தமிழறிஞர் அனைவரும் ஒப்ப முடிந்ததொன்று. எனவே கவிதை நலம் மிக்க அவற்றின் கருத்து நுட்பங்களை ஆராய்ந்துணர்தலே, நம்மனோர்க்கு இன்றியமையாக் கடமையாகும். ஆதலின் கந்த புராணத்தின் நுட்பங்கள் சிலவற்றை ஈண்டு இயன்ற அளவில் ஒரு சிறிது காண்போம்.

(1) தட்ச காண்டம் :

கந்தபுராணம் ஆறு காண்டங்களை உடையது. உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவ காண்டம், தட்சகாண்டம் என்பன அவை. இது நூலின் அமைப்பு முறை. எனினும், வரலாற்று முறைக்கு ஏற்ப முதற்கண் ஆராயத்தக்கது தட்சகாண்டமேயாகும். தட்சன் பிரம தேவரின் புதல்வன். பிரமதேவர் இறைவனின் அருளியல்புகளையும், தவத்தின் சிறப்பினையும், தட்சனுக்கு உபதேசிக்கின்றார். சிவபிரானை வழிபட்டல்லது எவரும் வீடுபேறு எய்துதல் இயலாது என அறிவுறுத்துகின்றார்.

பரசிவன் உணர்ச்சி யின்றிப்
பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க்கு ஈறு எய்தி
வீடுபேறு அடைதும் என்றல்,
உருவமில் விசும்பில் தோலை
உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை இயம்பிற் றென்னில்
பின்னும்ஓர் சான்றும் உண்டோ?

அதுகேட்டுத் தட்சன் தவம் புரிகின்றான். இறைவன் வெளிப்பட்டபோது, பேராற்றலும் பெருந்தலைமையும் பெற்ற அவன், அம்பிகை தனக்கு மகளாகத் தோன்ற வரம் கேட்கின்றான். அதனால் இறைவன் தனக்கு மருமகனாக வருவான். தான் அவனிலும் பெரியவனாகலாம் என மனக்கோட்டை கட்டினான் 'கெடுவான் கேடு நினைப்பான்'. தனது கற்பனை நிறைவேறாத நிலையில் தட்சன் இறைவனைப் பகைத்தான். ததீசி முனிவர் ஆகிய சான்றோர் எவ்வளவோ அறிவுரைகள் பகர்ந்தும் கேளாமல் இகழ்ந்தான். சிவபிரானைப் புறக்கணித்துப் பழித்தான். தீய வேள்வி செய்தான். தேவர்களும் முனிவர்களும் ஒருவகையில் அவனுக்கு உடனிருந்து துணை புரிந்தனர். அதனால் வீரபத்திரர் தோன்றி வேள்வியை அழித்தார். தவத்தால் உயர்ந்த தட்சன் இறுமாப்புக் கொண்டதனால் இழிவுற்றான், சான்றோர்களின் அறிவுரைகளைக் கேளாமையால், இழிந்து கேடுற்றான். சிவநிந்தை புரிந்த அவன், ஆட்டுத்தலை அடைந்து அவதியுற நேர்ந்தது. தீயவேள்வி புரிந்த தட்சன், தான் தண்டனை பெற்றதோடு அன்றி, தனக்கு உடனிருந்து துணைபுரிந்த பிறருக்கும் தீங்கு விளைவித்தான். குற்றம் செய்தவன், செய்யத் தூண்டியவர், உடனிருந்தவர் ஆகிய அனைவரும் தண்டிக்கப் பெற்றனர். இது நமக்கு என்றும் நினைவில் இருத்தற்குரிய சிறந்த செய்தியாகும். இக்காண்டத்தில் சிவபிரானைப் பற்றிய பல்வேறு வரலாறுகளும் ஒருங்கே திரட்டித் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. நான் எனும் அகந்தை கொண்டவன் அழிவான் என்பது தட்சன் வரலாற்றால் தெரிகின்றது.

R. RAJU,
Dy. Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

(2) அசுர காண்டம் :

இப்பகுதியில் சூரபதுமன்-சிங்கமுகன்-தாரகன் முதலிய அசுரர்களின் தோற்றமும் ஆட்சியும் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. சிவ நிந்தைபுரிந்த தட்சனோடு சேர்ந்ததனாலாய தீய விளைவைத் தேவர்கள் அனுபவிக்க நேர்ந்தது. அவர்களைத் துன்புறுத்துதற்கென்றே அசுரர்கள் தோன்றினர். தேவர்கள் பலரும் பற்பல நோக்கம் கொண்டு தட்சன் வேள்விக்குச் சென்றனர். ததீசியாகிய சிவனடியார் நிந்தையும் புரிந்தனர். சிவாபாரதம் பிராயச்சித்தத்தால் தீராது. அதனை அனுபவித்தே தீர்க்க வேண்டும். பாவத்தை மகிழ்ச்சியுடன் செய்தலும், பின்னர்த் துன்பம் வந்தால் அழுதலும் கூடாது.

வினைப்பயனைத் தேவர்களே ஆயினும் அனுபவித்தன்றிக் கழித்தல் இயலாது. வினைப் பயனின்றும் விலகித் தப்பித்துக் கொள்ள ஞானிகள் கருதார். அவற்றை அனுபவித்துத் தீர்த்து விடவே ஞானிகள் விரும்புவர். வினை அனுபவத்தில் நமக்கு மறதி உண்டாகுமாறு இறைவன் தன் பேரருளால் செய்கின்றான். தவறு செய்தால் கொடியவர்களை அடித்துத் திருத்தவும், நல்லவர்களை அணைத்துத் திருத்தவும் வேண்டும். இறைவன் இவ்வாறு செய்தலையே மறக்கருணை, அறக்கருணை என்று சாத்திரங்கள் கூறுகின்றன. இறைவனுக்கு அசுரரும் தேவரும் ஒன்றே! எல்லா உயிர்களும் அவன் பிள்ளைகளே! ஆதலின் அவனுக்கு நல்லார் பொல்லார் என்ற பாகுபாடு இல்லை. தவமுயற்சியால் நாம் நலமனைத்தும் பெறலாம். ''ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தான் வரும்.'' வாழ்வு ஒருகாலம் தாழ்வு பிறிதொரு காலம். இவை மாறி மாறிச் சகடக்கால் போலவரும். முன்பொரு சமயம் தேவர்கள் உயர்ந்து அசுரர்களைத் துன்புறுத்தினர். இப்போது அசுரர்கள் வலிமையுற்றுத் தேவர்களை வருத்த முற்படுவாராயினர். ''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்.''

சூரபதுமன் பெருந்தவம் புரிந்தான். நெருப்பில் விழுந்து உயிர் விடத் துணிந்தான். அவனுக்கு உடல் உணர்வு இல்லையாகி, இறையுணர்வே நிரம்பி நின்றபோது, சிவபெருமான் வெளிப்பட்டருளினார். சூரபதுமன் பிறர் எவரும் பெறாத வரங்கள் பல பெற்றான். சூரனுக்குத் தந்தை காசிப முனிவர். தாய் அசுரப்பெண். தந்தையின் இயல்புக்கேற்பத் தவம் புரிந்தான். தாயின் பண்பைத் தழுவி அசுரத்தன்மையில் பிறரை அடக்கி ஒடுக்கியாள வரங்கள் பெற்றான். தந்தை தாயரின் குணங்களே மைந்தர்கள்பாலும் அமைந்து நிற்கும். இவ்வுண்மை உணர்ந்து பெற்றோர்கள் நடந்து கொள்ளுதல் வேண்டும். சூரனின் ஆட்சியில் தேவர்கள் பல பெரும் துன்பங்கள் உற்றனர். சிவாபராதமாகிய அழுக்கு நீங்கும்வண்ணம், அசுரர்களாகிய கொம்பால், தேவர்களாகிய ஆடையினை, சிவபிரான் வலிதில் கசக்கி அடிக்க நேர்ந்தது. 'தன்வினை தன்னைச்சுடும்' 'தினை விதைத்தவன் தினையை அறுப்பான், வினை விதைத்தவன் வினையை அறுப்பான்' என்னும் உண்மை, அசுரர்கள்பால் தேவர்கள் பட்ட கொடுமையால் புலப்படுத்தப் பெறுகின்றது.

### (3) உற்பத்தி காண்டம் :

தேவர்களுக்கு வந்த துன்பத்தை நீக்குதற்குச் சிவபிரான் திருவுளங் கொண்டருளும் செய்திகளை, இப்பகுதி கூறுகின்றது. தண்டனை அளித்த இறைவனே தண்டனையை நிறுத்தி விலக்க முற்படுகின்றான். அடித்தாலும் அணைத்தாலும் அவனே துணை. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்பர் மணிவாசகர். தண்டனையை அளித்த சிவபிரானே, அதனை நிறுத்திவிலக்க அருள்புரிய, முருகனாய் வந்தான். முருகனின் தோற்றம் பற்றிக் கூறுவதனாலேயே, இது உற்பத்திக் காண்டம் எனப் பெயர் பெற்றது. நாம் வினையால் பிறக்கின்றோம். முருகன், அருளால் பிறந்தான். நாம் நம் விருப்பங் காரணமாகப் பிறக்கவில்லை. முருகனோ தானே விரும்பித் தோன்றினான். நாம் பிறப்பதனால் துன்பமுறுகின்றோம். முருகன் தன் தோற்றத்தினால் அனைவருக்கும் எல்லையில்லா இன்பத்தைத் தந்தருள்கின்றான்.

முருகனின் தோற்றம் பற்றிய உண்மைகள் நினைந்து நினைந்து வியந்து மகிழ்தற்குரியன. பிள்ளைப்பேறு தவத்தினால் வாய்த்தல் வேண்டும். நல்ல தாய் தந்தையர்களுக்கே நல்ல குழந்தைகள் பிறக்கும். குழந்தைகளைச் சையோகத்தால் அன்றித் தவயோகத்தால் பெறுதல் வேண்டும். நல்ல மனைவி வாய்க்க ஆடவரும், நல்ல கணவன் வாய்க்க மகளிரும் தவம் புரிதல் வேண்டும். சிவபிரான் தட்சிணாமூர்த்தியாக இருந்து தவம் புரிந்தார். அம்பிகை மலைமகளாக உதித்துத் தவஞ் செய்தாள். இருவரும் தவம் புரிந்தே ஒருவரை ஒருவர் மணந்தனர். இது நாம் நம் கருத்தில் இருத்துதற்கு உரியது. கணவனும் மனைவியுமாகக் கடிமணம் புணர்தலின் பயன், நன்மகப்பேறு எய்துதலே ஆகும். உலகு உய்யவும் உவப்பவும் நாம் மக்களைப் பெறுதல் வேண்டும். 'தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது'. புலன்களுக்கு அடிமையாகிக் காம வயப்பட்டு மக்களைப் பெறுதல் முறை அன்று. புலன்களை அடக்கி வென்று தவநலத்தால் மகப்பேறு அடைதலே பெரும் சிறப்பாகும். சிவபிரான் 'காமதகனம்' செய்த பின்னரே 'குமார சம்பவம்' நிகழ்ந்தமை உன்னி உணரற்பாலது.

முருகன் சிவபிரானின் கண்ணில் இருந்து ஒளிப் பிழம்பாக வெளிப்பட்டார். அந்தக் கண் காமனை வென்று எரித்து ஒழித்த கண். விந்து வானது ஊர்த்துவ வீரியம் (மேல்நோக்கியது), அதோ வீரியம் (கீழ்நோக்கியது) என இருதிறப்படும். உயிர்களாகிய நாம் அதோ வீரியம் உடையவர்கள். சிவபிரான் ஊர்த்துவ வீரியம் உடையவர். நாம் நம் ஆற்றலைக் கீழ் நோக்கிற் கழிய விடாமல் புனிதப்படுத்தி உயர் நோக்கிற்குப் பயன்படுத்துதல் வேண்டும். அதுவே தவநலம் ஆகும். அதனால் பிறக்கும் மக்களே உலகை உய்விப்பர். காமனை வென்ற கண்ணினின்று முருகன் ஞானப் பேரொளியாக வெளிப்பட்டார். உலகை உய்வித்து வாழ்வித்தார்.

சூரன் இருள், முருகன் பேரொளி. இருளை அழிக்க ஒளியால்தான் இயலும். முருகனின் தோற்றம் ஐந்து பூதங்களிலும் நிகழ்ந்தது. முன்னரே சிவபிரான்பால் ஒடுங்கியிருந்த முருகன் என்னும் சிவசக்தி வெளிவருவதற்கு அசுரர்களின் தீவினையும், தேவர்களின் வேண்டுகோளும் காரணமாயிற்று. தந்தையிலும் மைந்தன் சிறப்புடையவனாதல் விரும்பத் தக்கது. ஐம்முகச் சிவனுக்கு, அறுமுகச் சிவனாக முருகன் அவதரித்தான்.

> அருவமும் உருவும் ஆகி,
> அநாதியாய்ப் பலவாய் ஒன்னறாய்ப்,
> பிரமமாய்நின்ற சோதிப்
> பிழம்பதோர் மேனி ஆகிக்
> கருணைகூர் முகங்கள் ஆறும்
> கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
> ஒருதிரு முருகன் வந்துஆங்கு
> உதித்தனன் உலகம் உய்ய!
>
> மறைகளின் முடிவால் வாக்கால்
> மனத்தினால் அளக்கொ ணாமல்
> நிறைவுடன் யாண்டும் ஆகி
> நின்றிடும் நிமல மூர்த்தி
> அறுமுக உருவாய்த் தோன்றி
> அருளொடு சரவ ணத்தின்
> வெறிகமழ் கமலப் போதில்
> வீற்றிருந் தருளி னானே
>
> —கந்தபுராணம்.

### (4) மகேந்திர காண்டம் :

முருகன், மால் அயன் மகவான் முதலிய தேவர்கள் பலரும் வந்து முறையிட்டுக்கொள்ள அவர்களுக்கு ஆறுதல் கூறி, வீரவாகு தேவரைச் சூரபதுமனின்பால் தூது அனுப்புவதும், அவர் சூரபதுமனது மகேந்திரபுரிக்குச் சென்று தூது உரைத்து மீள்வதும், ஆகிய பல செய்திகளைச் சொல்லுகின்றது. இதன் தொடக்கப் பகுதியில் முருகன் சூரபதுமனின் வரலாற்றைக் கூறுமாறு இந்திரனைப் பணிக்கின்றார். அஃது அறியாமை

யாலன்று. அழுகின்ற பிள்ளையைத் தந்தை முதலில் என்ன நேர்ந்தது என்று விசாரித்து, அழுகையைச் சமனப்படுத்திப் பின்னர்த் தின் பண்டம் முதலியன தந்து உவப்பித்தலைப் போல, முருகன் புரிந்த கருணைச் செயல் அது. முருகன் பணித்தபடி இந்திரன் சூரபதுமனின் வரலாற்றைத் தான் சொல்ல முற்படாமல், பிருகற்பதியைக் கொண்டு சொல்லுமாறு செய் வித்தான். இங்ஙனம் தனது குருவைக்கொண்டு சொல்லுவித்தமை, ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்'' என்பது பற்றியாம்.

முருகன் பின்னர் வீரவாகுவைத் தூது அனுப்பியது. முருகனின் கரையற்ற பெருங் கருணையை உணர்த்துவதாகும். எவ்வளவு தான் பிழைகள் புரிந்தபோதிலும், எத்துணை தான் கொடியவர்களாக இருப்பினும், எடுத்த எடுப்பிலேயே எவரையும் தண்டித்து விடுதல் கூடாது. சாம பேத தான தண்டம் என்னும் நால்வகை உபாயங்களையும் படிமுறையே பின் பற்றுதல் வேண்டும் என்பது நீதிநெறி. இன் சொற்கூறுதல், வேறுபடுத்திப் பிரித்தல், நன் கொடையளித்தல் முதலிய உபாயங்களால், பகைவரைத்திருத்தப் பலவகைகளில் முயலுதல் இன்றியமையாதது. இவை யாவும் பயன் தராத வழியே தண்டனை முறையாற் பகை வர்களைச் சாடி அழித்தல் வேண்டும்.

மற்றுமொன்று கருதுதற்கு உரியது. ''தாம் வளர்த்ததோர் நச்சுமா மரம் ஆயினும் கொலார்'' என்பர் மணிவாசகர். அம்முறை யில் சிவபிரான் அருளால் சூரன் பெற்ற பேராற் றல்களையும் பெருநலங்களையும், சிவபிரா னின் வேறல்லாத மைந்தராகிய தாமே விரைந்து அழித்தொழித்தற்குத் திருவுளம் கொண்டிலன் முருகன்.

ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்கள் அரசோச்சிய சூரனின் திருவும் செல்வ மும், உருவறியா வண்ணம் அழிந்தொழியப் போகின்றனவே என்னும் கழிபேரிரக்கமும் கண் ணோட்டமும் பற்றியும், எடுத்த எடுப்பிலேயே போருடற்றி அவனைக் கொல்ல முற்பட்டிலன் முருகன். இப்பொழுதாயினும் இவன் திருந்தி உய்யமாட்டானா? என்னும் இரக்க உணர் வினாலேயே, அவன்பால் வீரவாகு தேவரைத் தூதுரைத்து வர ஏவினன் முருகப்பெருமான்.

மறைந்து போயசூர் முயற்சியை
மன்னுயிர் தோறும்
உறைந்த நாயகன் கண்டனன்;
ஒரு தனிச்செவ்வேல்
எறிந்து மற்றவன் உயிர்கொள
நினைந்திலன்; இன்னும்
மறிந்து தீயவன் உய்யுமோ
எனும்திரு வருளால்.

பண்டைநாளில் மறத்துறையினும் அறமே நிகழும். இப்பகுதியில் வீரவாகுவின் வீரமும் தூதின் திறமும் செவ்விதின் விளக்கப்பட்டுள் ளன.

கோலம் நீடிய நீதிபதி
வாழ்க்கையும் குறியேன்;
மேலை இந்திரர் அரசினைக்
கனவிலும் வெஃகேன்;
மால்அ யன்பெறு பதத்தையும்
பொருளென மதியேன்;
சால நின்பதத் தன்பையே
வேண்டுவன் தமியேன்''

என்பது முருகன்பால் வீரவாகுதேவர் வேண் டும் வரம். இறைவன்பால் இறவாத இன்ப அன்பைப் பெற்றால், பின்னர் அதுகொண்டே யாவற்றையும் பெறலாம். இவ்வுண்மையுண ராது, வேருக்கு நீர் பாய்ச்சாமல் வெறும் இலைக்கு நீர் தெளிப்பவர்கள்போல், நாம் அன்பை விட்டுவிட்டுப் பிறவற்றையே இறை வன்பாற் கேட்கின்றோம்.

## (5) யுத்த காண்டம் :

வீரவாகுதேவர் தூதுசென்று அறிவுரைகள் பகர்ந்தும், பானுகோபன் சிங்கமுகன் முதலிய வர்கள் முருகனின் பெருமைகளை எடுத்துச் சொல்லியும் கேளாமல், சூரன் போர் புரிந்து மடி வதற்கே துணிந்துநின்றான். ''ஊழிற் பெருவலி யாவுள'' என்பது பொய்யாமொழி யன்றோ!

பேரெழில் இளமை ஆற்றல்
பெறலரும் வெறுக்கை வீரம்
நேரறு சுற்றம் யாக்கை
யாவையும் நிலையா அன்றே!
சீர்எனப் பட்ட தன்றோ
நிற்பது? செறுநர் போரில்
ஆருயிர் விடினும் ,வானோர்
அருஞ்சிறை விடுவ துண்டோ?

இறந்திட வரினும், அல்லால்
இடுக்கண்ஒன் றறினும், தம்பால்
பிறந்திடும் மானம் தன்னை
விடுவரோ பெரியர் ஆனோர்?
சிறந்திடும் இரண்டு நாளைச்
செல்வத்தை விரும்பி, யானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை;
சூரன்என் றொருபேர் பெற்றேன்!

முருகன் ஓர் இமைப்பொழுதில் சூரனைக் கொல் லும் வல்லமை உடையவர். அவர் நினைத்தி ருந்தால், தமது ஒரு சிறு புன்முறுவலினா லேயே அவனை அழித்திருத்தல் இயலும். எனி னும் ஒருவகையில் அவனைப் பெருமைப்படுத் தும் முறையில், அவனுடன் போர் புரிவது போலச் சிறிது திருவிளையாடல்கள் புரிந்தார்.

சூரனே முதலோர் தம்மை,
இமைப்பினில் தொலைக்க உன்னின்,
முரலால் அடுவன்; கொண்ட
முனிவினால் அடுவன்; வாய்மைச்
சீரினால் அடுவன்; நாட்டச்
செய்கையால் அடுவன் என்றால்,
நேரிலா முதல்வன் வன்மை
யாவரே நிகழ்த்தற் பாலார்?

பொருசமர் விளைப்பான் போலப்
பொருக்கெனப் போந்து சூரன்
இருவிழி தன்னிற் காண்பான்
எளிதுதன் வடிவம் காட்டி
அருளது புரிந்தான் என்னின்,
ஆதியங் குமரன் மாயத்
திருவிளை யாடல் யார்க்கும்
தெரிகில போலும் அன்றே!

யுத்தகாண்டம் முருகனது வேலின் பெருமையை விளக்குவது. வெல்லுவது வேல். எது வெல்லும்? அறிவு, ஞானம் என்பனவே வெல்லும். வேல் முருகனுக்கு ஒரு சக்தி. 'சக்திதன் வடிவு ஏதென்னில் தடையிலாஞானம் ஆகும்'. வேல் முருகனுக்கு ஞானசக்தியாக விளங்குவது. வேல் ஞானம், சூரன் அஞ்ஞானம். அஞ்ஞானத்தை ஞானம் வென்றது. வேலின் பெருமையைத் தொகாப்பியரும் 'பெரும்பகைதாங் கும்வேல்' என்று குறிப்பிட்டுச் சிறப்பித்தார்.

வேல் அஞ்ஞானத்தை அறவே ஒழிப்பது. ஆதலின் ஞானம் வேண்டுவோர் வேலைத் தொழுதல் வேண்டும். பண்டை நாளில் வேற்படைக்கும் தனிக்கோயில் அமைத்துத் தொழுது வந்தனர் நம் முன்னோர்! புகார் நகரில் 'வேற்கோட்டம்' இருந்ததாகச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. செவ்வந்திப் புராண ஆசிரியர் 'வாகையே சுமக்கும் வேலை வணங்குவது எமக்கு வேலை' என்று நயம்படக் கூறுகின்றார். நாம் வேலை வணங்குவதே வேலையாகக் கொண்டு உய்ய முயலுதல் வேண்டும். பிறகடவுளர்கள் தம்மை எதிர்த்த அசுரர்களை அழித்துக் கொன்றதாகவே நாம் பெரும்பாலும் அறிகின்றோம். ஆனால் முருகன் சூரனை அழித்திலன். பகைவனையும் காத்து, பண்பார்ந்த அன்பனாக மாற்றி ஆட்கொண்டருளினன். ''பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் தங்கிற்று உலகு.'' சூரனைக் கோழிக் கொடியும் மயில் ஊர்தியுமாக முருகன் ஏற்றுக்கொண்டு உவந்தருள் புரிந்தான். கடவுட்டன்மை காத்தலில் உள்ளதேயன்றிக் கொன்றொழிப்பதில் இல்லை. வைதாரையும் பகைவரையுங்கூட, வாழவைக்கும் பண்பினன் முருகன்.

தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்,
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ?,
அடுமசர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ?
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்!

## (6) தேவ காண்டம் :

சூரனை வென்ற பிறகு, முருகன் தேவர்களைச் சிறையினின்று விடுவித்து, விண்ணுலகில் குடியேற்றினான். தேவேந்திரனுக்கு முடி சூட்டியருளினான். அதனால் பெருநலமும் மகிழ்வும் உற்ற தேவேந்திரன், நன்றியுணர்வுடன் வழிபட்டு, நயந்தினிது வேண்டிக்கொள்ள, முருகன் தெய்வயானையம்மையைத் திருப்பரங் குன்றத்தில் மணம் புணர்ந்து அனைவரையும் மகிழ்வித்தான். வடமொழிக் கந்தபுராணத்தில் வள்ளியம்மையின் திருமணமும் இக்காண்டத்திலேயே கூறப்படுகின்றது. தமிழில் தட்சகாண்டத்தில் கூறப்பெறும். முருகனுக்குத் தெய்வயானையம்மை கிரியா சக்தியும், வள்ளியம்மை இச்சாசக்தியுமாவர். முருகனின் வலப்புறத்தில் வள்ளியம்மையும், இடப்புறத்தில் தெய்வயானையம்மையும் விளங்குகின்றனர்.

இந்திரன் அருளும் மாதும்,
எயினர்தம் மாதும், இவ்வாறு
அந்தரம் சிறிதும் இன்றி,
அன்புடன் அளவ ளாவிச்,
சிந்தையும் உயிரும் செய்யும்
செங்கையும் சிறப்பும் ஒன்றாகக்
கந்தமும் மலரும் போலக்
கலந்துவேறு இன்றி யுற்றார்.

மாயையில் வலியோன் ஆகி
மால்முத லோரை வென்றே,
ஆயிரத்தோ ரெட்டு அண்டம்
அரசு செய்து உகம்நூற்றெட்டுக்
காயமது அழிவின் றாகிக்,
கடவுளர்க்கு அலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற
குமரன்தாள் சென்னி சேர்ப்பாம்.

## முடிவுரை :

கந்தபுராணம் ஒருவகையில் நம் சொந்த புராணம் எனலாம். சூரன் முதலிய அசுரர்கள் எக்காலத்திலோ இருந்து மறைந்தவர்கள் அல்லர். சூரபதுமன் சிங்கமுகன் தாரகாசுரன் என்னும் மூவரும் முறையே ஆணவம் மாயைகன்மம் என்னும் மும்மலங்கள் என்றும், அவர்களாற் சிறையிடப் பெற்ற தேவர்கள் பசுவர்க்கங்கள் என்றும், அசுரர் மூவரையும் அழித்து முருகன் தேவர்களை ஆட்கொண்டமை ஆணவம் முதலிய மும்மலங்களை வீட்டி உயிரை ஞானாசிரியனாகிய கடவுள் ஆட்கொண்டருளுதலாம் என்றும், உள்ளுறை கொள்ளுதற்குரிய நுட்பப் பொருள்கள்பல, கந்தபுராணத்தில் உள்ளன. உண்மையில் ஆய்ந்துணரின் ''கந்தபுராணம் நமது மனிதகுலத்தின் சொந்தபுராணமே யாகும்.'' தேவர்களைச் சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் ஆகிய அசுரர்கள் சிறையில் இட்டுத் துன்புறுத்த, முருகப்பெருமான் தோன்றித் தன்னுடைய வேற்படையால் அசுரர்களை அழித்துத், தேவர்களைச் சிறையினின்று விடுவித்துக் காத்தருளினான் என்பது, தத்துவ நுணுக்கங்கள் அமைந்த சிறந்த உருவக அமைப்புடைய மாட்சிமை மிக்கதாகும்.

தேவர்கள் என்போர் உயிர்களாகிய நாமே. சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் ஆகியமூவரும், நம்மைப் பலவகைகளில் அலைக்கழிக்கும் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களே யாவர். உயிர்களாகிய நம்மை, அசுரர்கள் போற் கொடிய மும்மலங்களின் பிடியினின்று விடுவித்துக் காத்தருளும் ஒப்புயர்வற்ற இறைவனே, முருகப் பெருமான். அஞ்ஞானத்தை ஞானமே வெல்லும். சூரபதுமன் முதலிய அசுரர்களைப் போன்ற மும்மலங்களால் விளையும் அஞ்ஞானத்தை, மெய்ஞ்ஞானமாகிய வேலே வென்றொழித்தது. அருளாசிரியர்

நல்கும் ஞானத்தாலேயே உயிர்கள் வீடுபேறு எய்தும். அதுபோல முருகனது வேற்படையின் துணையினாலேயே, தேவர்கள் சிறையினின்று விடுபட்டுச் சுவர்க்கலோக வாழ்வின்பம் பெற்று மகிழ்ந்தனர். நாம் நம் பகைவர்களை வெறுத்தலும் அழித்தலும் செய்யாமல், அவர்களின் மனத்தை மாற்றித் திருத்தி உய்வித்தல் வேண்டும். நாம் தீமையை வெறுக்கலாமேயன்றித் தீயவர்களை வெறுக்கலாகாது (Hate the sin, but not the sinner). பகைவரிடமும் அன்பு காட்டி நலம்பல புரிந்து, பகைவர்களையும் நண்பர்களாகச் செய்து கொள்ள வல்ல பண்புடைமையே, தலைசிறந்த சான்றாண்மையாயாகும். அதுவே வெற்றிகளுக்கெல்லாம் மேலான சிறந்த பெரு வெற்றியாகும். இதனைத் தமிழ் இலக்கண நூல்கள் ''அரசவாகை'' (மிகமேலான வெற்றி) என்று கூறும்.

கொடியவனாகிய சூரபதுமனை அழித்தொழிக்காமல், அவனது மனத்தினை மாற்றித் திருத்தி, அவனைத் தனது சிறந்த அடியவர்களுள் ஒருவனாக முருகப் பெருமான் ஏற்றுக் கொண்டருளினான். இதுதான் முருகனின் ஈடு இணையற்ற அருட்பெருஞ் சிறப்பியல்பாகும்.

இனி, கந்தபுராணத்தில் வரும் சூரபதுமனின் மதம் ''மிண்டிய மாயாவாதம்'' என்றும், தட்சனின் மதம் பாஞ்சராத்திர மதம் என்றும், தாருகாவன முனிவர்களின் மதம் பூர்வ மீமாம்சை என்றும், இந்திரனின் மதம் உலகாயதம் என்றும், இம்மதங்களெல்லாம் அவற்றிற்குரியவர்கள் அழிக்கவும் அடக்கவும் பட்டதனால் மறுத்தொழிக்கப் பெற்றனவாய், சைவ சித்தாந்தச் செந்நெறியின் சால்பினையுணர்த்தி நிற்கின்றன எனவும், அறிஞர்கள் கூறுவது உண்டு.

இந்திரர் ஆகிப் பார்மேல்
இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச்
சிவகதி அதனிற் சேர்வர்;
அந்தமில் அவுணர் தங்கள்
அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணம் தன்னைக்
காதலித்து ஓது வோரே!

கல்லகம் குடைந்த செவ்வேற்
கந்தன், ஓர் தருவ தாகி,
வல்லியர் கிரியை ஞான
வல்லியின் கிளையாய்ச் சூழப்,
பல்லுயிர்க்கு அருளைப் பூத்துப்
பவநெறி காய்த்திட்டு, அன்பர்
எல்லவர் தமக்கும், முத்தி
இருங்கனி உதவும் என்றும்!

—கச்சியப்பசிவாசாரியர்

R. RAJU,
Dy. Commissioner H.R.&C.E.
(Retd)
...Administration Dept

## கடவுள் ஒருவர் உண்டு

அமெரிக்க நாட்டுப் பேரறிஞர்களுள் தலைசிறந்த ஒருவர் ஆகிய ரால்ஃப் வால்டோ எமர்சன் என்பவர் எழுதியுள்ள பின்வரும் கருத்துக்கள், நாம் சிந்தித்து உணர்தற்கு உரியவை :

''கடவுள் ஒருவர் உண்டு என்பது, நம்மைச் சுற்றி நாடோறும் நடைபெறுகின்ற செயல்களை ஒரு சிறிது உன்னித்துப் பார்த்தாலே நமக்குப் புலனாகும். நமக்கு மேற்பட்ட இயற்கைச் சட்டம் ஒன்று, இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதுதான் உலக நிகழ்ச்சிகளை உருவாக்கி ஒழுங்குபடுத்தி வருகின்றது. ஏதோ நம்மால்தான் எல்லாம் நடப்பதுபோலக் கருதிக்கொண்டு, நாம் மேற்கொள்ளுகின்ற முனைப்பு மிக்க செயல்கள், ஒருவகையில் தேவையில்லாதனவும், முழுவதும் பயனற்றனவுமேயாகும். எளிய இயல்பான ஆடம்பரமற்ற செயல் நிலையில்தான், நாம் வன்மையுடையவர்களாக ஆகின்றோம். செருக்கற்ற பணிவுடைமையினால்தான், நமக்குத் தெய்விகநிலை கிடைக்கின்றது. நம்பிக்கையும் அன்புமே, நம்முடைய ஏராளமான கவலைச் சுமைகளினின்று நம்மை விடுவித்து, நமக்கு நலம் விளைவிக்கின்றன. ஓ! என் அன்பிற் சிறந்த உடன் பிறப்பாளர்களே, கடவுள் இருக்கின்றார்!

இயற்கைப் பொருள்களினுள்ளும், ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தின்கண்ணும், கடவுள் என்ற ஓர் உயிர்ப்பொருள் உலவி நிலவி வருகின்றது. அதுவே நம்மையெல்லாம் இயக்கி வருகின்றது; உலக அமைப்பினை நாம் ஏதும் பிறழச் செய்து விடாதபடி, அதுதான் கவனித்துக் கொள்ளுகின்றது.

உலகப் பொருள்களிலெல்லாம், அது தன்னுடைய ஆற்றல் மிக்க கவர்ச்சித் திறனைப் பாய்ச்சி ஊடுருவச் செய்துள்ளது. அதன் அறிவுரையை உடன்பட்டு ஒழுகும்பொழுது, நாம் வளர்ச்சியும் செழிப்பும் அடைகின்றோம். அதன் சிற்றுயிர்களை நாம் வருத்த முற்படும்போது, அது நம் கைகளைப் பிணித்துவிடுகின்றது; அல்லது நம்மையே தாக்குமாறு செய்கின்றது. உலகப் பொருள்களின் அமைப்புகள் செயல்கள் யாவுமே, கடவுள் ஒருவர் உண்டு என்று நமக்கு உணர்த்தி, நம்பிக்கை கொள்ளச் செய்யும் வகையிலேயே அமைந்திருக்கின்றன.''

—தமிழாக்கம் : ந.ரா. முருகவேள்.

"A little consideration of what takes place around us every day would show us that a higher law than that of our will, regulates events; that our painful labours are very unnecessary and altogether fruitless; that only in our easy, simple, spontaneous action are we strong ,and by contenting ourselves with obedience we become divine. Belief and love and will relieve us of a vast load of Care. O! my bothers! God exists!

There is a soul at the centre of Nature and over the will of every man, so that none of us can wrong the universe. It has so infused its strong enchantment into nature that we prosper when we accept its advice; and when we struggle to wound its creatures, our hands are glued to our sides, or they beat our own breasts. The whole course of things goes to teach us faith.."

—*Ralph Waldo Emerson.*

24-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாதான்மியமும் எனத் தாதான்மிய சம்பந்தம் இரு வகைப்படும்.

அவற்றுள் முன்னையது தாதான்மியம் என்றும், பின்னையது அத்துவிதம் என்றும் வழங்கப் படும். தாதான்மியம் ஆவது, பொருளான் ஒன்றேயாயினும் ஒருவாற்றால் பேதம் ஆதற்கு உரிமையுடைமை; தாதான்மியம் என்னும் சொற்கு 'அது தான் ஆதல்' என்பது பொருள். இறைவனும் உயிரும் ஆகிய இரு பொருள்கள், அதுஅதுவாய் ஒற்றுமைப்பட்டு இரண்டற்றுப் பிரிப்பின்றி ஒன்றாய் நிற்கும் இயல்பினையே அத்துவிதம் என்று, இவ்வெண்பா இனிதெடுத்து விளக்குகின்றது.

(வெண்பா)

**அரக்கொடு சேர்த்தி அணைத்தஅக் கற்போல்**
**உருக்கி உடங்கியைந்து நின்று;—பிரிப்பின்றித்**
**தானே உலகாம்; தமியேன் உளம்புகுதல்**
**யானே உலகென்பன் இன்று**

பதவுரை:

உருக்கி-(அரக்கை) உருகச்செய்து,

அரக்கொடு சேர்த்தி-உருக்கிய அவ்வரக்குடன் கலந்து

அணைத்த அக் கற்போல்-பொருந்திய அந்தக் கற்பொடியைப் போல,

உடங்கு இயைந்து-இறைவன் உயிர்களுடன் ஒருங்கு பொருந்தி,

பிரிப்பின்றி நின்று-பிரிக்கப்பட முடியாமல் உடனாக நிற்றலால்,

தானே உலகாம்-இறைவன் தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம். (அத்தகைய இறைவன்),

தமியேன்-(பாசங்களில் இருந்து நீங்கித்) தனியே நிற்கும் என்னுடைய

உளம்புகுதல்-உள்ளத்தின்கண் சோகம்பாவனையால் நுழைந்து வேற்றுமையின்றி விளங்குதலால்

யானே உலகு என்பன்-யானே உலகமெல்லாம் என்பேன் ஆயினேன்

இன்று-இம்முத்திக் காலத்து.

குறிப்பு:

உருக்கிய அரக்குடன் சேர்க்கப்பெற்ற கற்பொடியானது பிரிப்பின்றிக் கலந்து நிற்கும். இஃது ''முருகன் நற்போர் நெடுவேள் ஆவி, அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண், சிறு காரோடன் பயினொடு சேர்த்திய கற்போற் பிரியலம்'' (2) என்றும், ''சிறு காரோடன் பயினொடு சேர்த்திய கற்போல் நாவினேன் ஆகி, மற்று அது செப்பலென் மன்னால் யாய்க்கே'' (356) என்றும் வரும் அகநானூற்றுப் பாடல்களால் அறியப் பெறும். ஆதலின் இறைவன் உயிர்களுடன் கலந்து பிரிப்பின்றி நிற்றலை, ''அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற்போல் உடங்கு இயைந்து பிரிப்பின்றி நின்று'' என்றார்.

''தானே உலகாம்'' என்னும் தொடர், இரட்டுற மொழிதலால் தானேயாம் (பேதம்) - உலகேயாம் (அபேதம்)-தானே உலகேயாம் (பேதாபேதம்) என்று பொருள்கொள்ள நின்றது.

வாமதேவமுனிவரும், கண்ணபிரானும் போன்றோர், சிவோகம்(சிவம்-அகம்)பாவனை(சிவம்-நான் என்னும் உணர்வு) தலைப்பட்டவர்கள் ஆதலின், அவர்கள் சிவபிரான்போலும் நிலையில் 'யானே உலகெல்லாம் ஆயினேன்' என்று கூறுவாராயினர். சிவோகம்பாவனையின் சிறப்பினையும் இன்றியமையாமையினையும் 'உன்னைப்போல் என்னைப் பாவிக்க மாட்டேன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியிருத்தலால் உணரலாம்.

இறைவன் உயிர்களோடு கலப்பால் ஒன்றாய் நிற்றலான் உலகேயாம் என்பார் 'உடங்கு இயைந்து' என்றும்; பொருட்டன்மையால் வேறாய் நிற்றலால் தானேயாம் என்பார் 'நின்று' என்றும்; உயிர்க்குயிராய் நிற்றலால் தானே உலகேயாம் என்பார் 'பிரிப்பின்றி' என்றும் கூறினார். இவ்வெண்பா 'அவையே தானே யாதல்' என்றதனை உணர்த்திற்று.

## இரண்டாம் அதிகரணம்

''இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும்; ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவல் இட்டாங்கு, அவை அவனது ஆக்கினை ஆகலான் என்றது''.

(வெண்பா)

**உள்ளதே தோற்ற உயிர்அணையும்; அவ்வுடலின்**
**உள்ளதாம் முற்செய்வினை உள்ளடைவே;—வள்ளலவன்**
**செய்பவர் செய்திப் பயன்விளைக்கும் செய்யேபோல்,**
**செய்வன்; செயல்அணையா சென்று.**

பதவுரை:

உள்ளதே-முன்பு உள்ள (புண்ணியம்-பாவம்)ஆகிய சஞ்சித வினையே

தோற்ற-உடம்பினைத் தோற்றுவிக்க

அவ்வுடலின்-அவ்வுடம்பிற் பொருந்தி

உயிர்-உயிரானது

அணையும்-பாவ புண்ணியங்களின் பயனாகியஇன்ப துன்பங்களை (பிராரத்த வினையை) அனுபவிக்கும்.

முன்செய்வினை-முற்பிறவிகளில் செய்த வினையை

உள்ளடைவே-அனுபவித்தற்கு ஏதுவான (விருப்பு வெறுப்புக்களின்) முறைமையிலேயே,

உள்ளதாம்-(உயிருக்கு மறுபிறவிக்குரிய) ஆகாமிய வினை உண்டாகும்.

செய்பவர்-வயலை உழவு செய்பவர்

செய்தி(க்கு)ப் பயன்-செய்யும் உழவு தொழிலுக்குத் தக்க பயனை

விளைக்கும் செய்யேபோல்-விளைவித்துத் தருகிற வயலைப்போல

வள்ளல் அவன் -இறைவன்,

செய்வன்-வினைப் பயன்களை உயிர்களுக்குக் கூட்டுவன்

செயல் சென்று அணையா-செயல்களாகிய வினையே உயிர்களுக்குப் பயனாய் வந்து பொருந்தமாட்டா.

குறிப்பு:

வினை என்பது ஒன்றுண்டு, அதுவே உயிர்களுக்குப் பயனாய் வரும், உயிர்க்கே இயல்பாக உரிய விருப்பு வெறுப்புக்களால் வினைகள் வளரும். ''பல்லாவுள் உய்த்துவிடினும், குழ்க்கன்று வல்லதாம் தாய் நாடிக் கோடலை-தொல்லைப் பழவினையும் அன்ன தகைத்தே; தற்செய்த கிழவனை நாடிக் கொளற்கு'' என்று நாலடியார் கூறுவதுபோல, வினையானதுதானே உயிர்களுக்குப் பயனை விளை வியாது. உழவர்க்கு உழுதொழிலே பயன் தராமல், வயலே பயன் தருகின்றது. அதுபோல இறைவனே உயிர்களுக்கு வினைப் பயனை நுகரும்படி செய்வான் என்பது இதனால் உணர்த்தப்பெற்றது. ''செய்வினையும் செய்வானும் சேர்பயனும் சேர்ப்பானும், மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டே, இவ்வியல்பு சைவ நெறி அல்லவற்றுக்கு இல்லையென, உய்வகையாற் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந் தறிந்தார்'' எனவரும் பெரியபுராணச் செய்யுளும்; ''செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பானும் உய்வான் உளன்என்று உணர்'' என்னும் திருவருட்பயனும் இங்குக் கருதற்பாலன.

(வெண்பா)

**அவ்வினையைச் செய்வதனில், அவ்வினைஞர் தாம்சென்றங்கு,**
**அவ்வினையைக் காந்த பசாசம்போல்—அவ் வினையைப்**
**பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்,**
**ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு.**

பதவுரை:

காந்தபசாசம்போல் - (ஒருவன் எடுத்து நேராகப் பிடித்த வழி) இரும்பினை வலித்துக்கொள்ளும் காந்தம்போல

அவ்வினையை-அவரவர்கள் செய்த அந்தந்த வினைகளின் பயனை

பேராமல்-மாறிப் பிறழ்ந்து விடாமல்

ஊட்டும் - ஊட்டி அனுபவிக்கச் செய்கின்ற

பிரானின்-இறைவனால்

அவ்வினைஞர் தாம்-அவ்வினைகளைச் செய்கின்ற ஆன்மாக்கள் தாம்,

அவ்வினையைச் செய்வதனில் சென்று-அந்த வினைகளைச் செய்வதற்கு நிலைக்களம் ஆகிய உடம் பின் கண் பொருந்தி

அவ்வினையை நுகர்வோர்- அந்தந்த வினைகளின் பயனை அனுபவிப்பர்;

நுகராரேல்- அவ்வாறு அனுபவியாராயின்

ஆர்தாம்-வேறே எவர்தாம்,

ஆங்கு-(அறிவும் சுதந்திரமும் இன்றி உயிர்கள் மலத்தில் மறைப்புண்டு கிடக்கும்) அந்தப் பெத்த காலத்தில்

அறிந்து அணைப்பர்-வினைப் பயன்களை இவரிவர்க்கு உரியதென்று தெரிந்து உயிர்களுக்குக் கூட்டுவிப்பார்? ஒருவரும் இலர்.

குறிப்பு:

உயிர்களுக்குத் தமக்கென்று அறிவில்லாமையானும், வினை சடம் ஆகலானும், மாயை தாரகமாம் அத்தன் தாளில் நிற்பதாகலானும், இறைவனே உயிர்களுக்கு அவ்வவற்றின் வினைப் பயன்களை அறிந்து அணைவிப்பான் என்பது, பாரிசேட (ஒழிபு) அளவையால் பெறப்படும். அதனை வலியுறுத்துதற்கே ''பிரானின் நுகராரேல், ஆர்தான் அறிந்து அணைப்பார்?'' என்றார். பசாசம்-இரும்பு. பேராமல்-மாறிவிடாமல். இது சொற்பொருட்பின் வரும் நிலை அணி.

(வெண்பா)

**நெல்லிற் குமியும், நிகழ்செம்பி னிற்களிம்பும்,**
**சொல்லிற் புதிதன்று, தொன்மையே;—வல்லி**
**மலகன்மம் அன்றுளவாம்; வள்ளலாற் பொன் வாள்**
**அலர்சோகம் செய்கமலத் தாம்.**

பதவுரை:

நெல்லிற்கு உமியும்-நெல்லின்கண் உமியும்,

செம்பினிற் களிம்பும்-செம்பின்கண் களிம்பும்,

சொல்லில்-ஆராய்ந்து சொல்லுங்கால்

புதிதன்று-இடையே புதிதாக வந்தன அல்ல.

தொன்மையே-தொன்றுதொட்டே ஏற்பட்டனவாகும். (அதுபோல)

வல்லி - மாயாமலம்

மலம் - ஆணவமலம்

கன்மம் - கன்ம மலம் (ஆகிய மூன்றும்)

அன்றே - அனாதியே

உளவாம் - உள்ளனவாகும். (இம் மும்மலங்களும் தொழிற்படுதல்),

கமலத்து - தாமரை மலரினது

அலர்சோகம்-மலர்தலும் வாடுதலும்

பொன்வாள் செய் - ஞாயிற்றின் ஒளியால் செய்யப் படுமாறுபோல

வள்ளலால் ஆம்-இறைவனாலேயே ஆகும்.

குறிப்பு:

நெல் தோன்றிய அன்றே உமியும், செம்பு தோன்றிய அன்றே களிம்பும் உடன் தோனறிய வாறு போல, உயிர்கள் என்று தோன்றினவோ அன்றே, உயிர்களை ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் பற்றியுள்ளனவாகும் என்பது கருத்து. இச்செய்யுள் எடுத்துக்காட்டு உவமை அணி.

மாயையானது இறைவனுக்குப் பரிக்கிரக சத்தி (வேண்டும்போது பயன்படுத்திக்கொள்ளப் பெறுவது) ஆதலின், அதனைப் பெண்ணாக உருவகம் செய்து 'வல்லி' என்றார். வல்லி-மாயை. வினைக்குத் தொன்மை கூறுவார், இனமாதல் பற்றி மாயை மலங்களுக்கும் தொன்மை கூறினார்.

குறிப்பு:

பொன்-சூரியன். வாள்-ஒளி. அலர்சோகம்--மலர்தலும் வாடுதலும். ஆணவமலத்தின் காரியம், மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்

டம், விசித்திரம் என்பன. இருவினையின் காரியம் இன்பதுன்பம் முதலாயின. மாயையின் காரியம் தனு, கரணம், புவனம், போகம் என்பன. 'வள்ளலால் ஆம்' எனவே, திரோதான சத்தி உள்ளமை உணரப்படும். உயிர்களுக்குப் பக்குவம் வருவித்தற் பொருட்டு, மலத்தின் வழி நின்று மோகம் முதலிய வற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவசங்கற்பத் திற்கு ஏதுவாதல்பற்றி, இறைவனின் திரோதான சத்தியும் மலம் என்று உபசரித்துக் கூறப்பெறும். இதனால் ஆணவம், கன்மம், மாயை, திரோ தானம், மாயேயம் என்னும் ஐவகைப்பாசமும் உணர்த்தப்பட்டன.

## மூன்றாம் அதிகரணம்:

''இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வரும்; தோற்றமும் ஈறும் உள்ளதற்கு அல்லது உளதாதல் இன்மையால் என்றது.''

வெண்பா:

**கண்ட நனவைக் கனவுணர்வில் தான்மறந்து**
**விண்படர்ந்தத் தூடு வினையினால்—கண் செவிகெட்டு**
**உள்ளதே தோற்ற, உளம்அணுவாய்ச் சென்று, மனம்**
**தள்ள விழும்கருவில் தான்.**

பதவுரை:

கண்செவிகெட்டு-கண் காது முதலிய உறுப்புக்களை உடைய தூலதேகம் அழிந்தவிடத்து,

உள்ளதே-(படைப்புக்காலம் தொடங்கிச் சங்கார காலம் அளவும்) நிலைபெற்று உள்ளதாகிய சூக்கும தேகமே,

தோற்ற-பூதசார உடம்பு முதலியனவற்றைத் தோற்றுவிக்க

உளம்-உயிரானது

அத்தூடு-அப்பூதசாரம் முதலிய உடம்பின் ஊடாக

விண்படர்ந்து-சுவர்க்கம் நரகங்களில் சென்று இன்ப துன்பங்களை அனுபவித்து,

கண்டநனவை-நனவின்கண் கண்டவற்றை

கனவு உணர்வில்-கனாக்காணும் காலத்தில் மறந்து அறிவு வேறுபட்டாற் போல,

மறந்து- முன்பு தூலதேகம், சூக்குமதேகம் பூதசார தேகம் ஆகியவற்றில் அறிவு வேறுபட்டு, அனுபவவித்தவற்றைமறந்து

மனம் தள்ள-மனம் செலுத்துவதனால்

வினையினால்-புண்ணியபாவ இயல்புகளுக்கு ஏற்ப

அணுவாய்ச் சென்று-சூக்குமதேக மாத்திரையாய்ச் சென்று

கருவில் விழும்-ஒருகருவின்கண் சென்று பிறக்கும்.

குறிப்பு:

உயிர்களுக்குப் பூதனா சரீரம் (தூலம்), புரியட்டக சரீரம் (சூக்குமம்), யாதனாசரீரம் (தூலசாரம்) என்னும் மூன்று தேகங்கள் உண்டு. ஐம்பூதங்களால் அமைந்தது தூலதேகம். இது நனவு நிலைக்குரியது. சத்தம், பரிசம், ரூபம்,ரசம் கந்தம், மனம் புத்தி அகங்காரம் என்னும் எட்டி னால் அமைவது சூக்குமதேகம். இது கனவு நிலைக் குரியது. யாதனா சரீரம் என்பது, நரகம் சென்று துன்பம் உழப்பது; அதுவே சுவர்க்கம் சென்று இன்பம் துய்க்குங்கால், பூதசார தேகம் எனப் படும். (சுபக்கம் : 621)

''புலாலுடை யாக்கை பலாலமது அகற்றி,
அற்றம்இல் உயிர்எனப் பெற்றநெற் றிரளைப்,
பூத சாரத்தனு, பூத மகாதனு,
பூத பரிணாமம் புகலுறும் யாக்கை,ஆம்
மூவகைப் பண்டியின் மேவர ஏற்றிப்,
பொன்னிலம் நிரயம் இந்நிலம் என்னும்
இடந்தொறும் ஆங்கவை அடங்க வைத்து...''

—பட்டினத்தடிகள்,
திருக்கழுமல மும்மணிக்கோவை, 25

இவ்வெண்பாவில் உயிர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்பது உண்மையாயின், முற்பிறவிகளில் அனுபவித்தவற்றை உயிர்கள் இப்பிறவியில் ஏன் அறிவதில்லை? என்னும் ஐயம் தெளிவிக்கப்பட் டது. மேலும் இவ்வெண்பாவில் பஞ்சாக்கினி வித்தை (உயிரானது முறையே சுவர்க்கம் மேக மண்டலம் நிலம் தந்தை தாய் என்னும் ஐந்து இடங்களில் தங்கி வந்து பிறக்கும் தன்மை)யின் இயல்பு விளக்கப்பெற்றது.

தூல உடம்பு சூக்கும உடம்பின் காரியமே என்பதற்கு 'உள்ளதே தோற்ற'என்றார். தோற்ற-தோற்றுவிக்க. அணு-சூக்கும உடம்பு. தள்ள-தள்ளுதலால். 'கனவுணர்வில்' என்புழி, இல்வுருபு உவமப்பொருள் குறித்து வந்தது.

'உள்ளதே தோற்ற' என்றதனால் உடல் திரிவும்,'விண்படர்ந்து' என்றதனால் இடத்திரிவும், 'கண்ட நனவைக் கனவு உணர்வில் மறந்து' என்ற தனால் அறிவுத்திரிவும், சுட்டப்பெற்றன. முற் பிறவியின் நிகழ்ச்சிகளை உயிர்கள் அறியமாட்டா மைக்குக் காரணம் கூறியவாறு.

''துறக்கப்படாத உடலைத்
துறந்து, வெம் தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும்பு
ஏறுவன்; ஏறிவந்து
பிறப்பன்; பிறந்தால் பிறையணி
வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ என்றுஎன் உள்ளம்
கிடந்து மறுகிடுமே''

எனவரும் திருநாவுக்கரசரின் திருவிருத்தச் செய்யுள் ''பஞ்சாக்கினி வித்தை''யின் இயல்பினை ஓராற் றாற் குறிப்பிற் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

தொடரும்

# சைவ சித்தாந்த தத்துவம்

'சித்தாந்தச் செல்வர்'

திரு. புலவர் சி. கந்தசாமி அவர்கள், கொழும்பு.

R. RAJU,
Dy Commissioner H.Crs.
HR&CE Administration Dept

சைவ சமயத்தின் பொதுப்பிரமாண நூல் வேதம்; சிறப்புப் பிரமாணநூல் சிவாகமம் என்பர். அந்தச் சிவாகமநூல்கள் கூறுஞ் சாரமான உண்மையைப் பிழிந்தெடுத்துக் கூறும் நூல்களே சித்தாந்த சாத்திரங்கள். இவை மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் அழைக்கப்படும். வேதம் பசு. அதன் பால் ஆகமம். அதிற் கடைந்தெடுத்த நெய் சித்தாந்தம் எனவும்;வேதம் ஒரு கற்பகதரு.அதில் உயர்ந்தோங்கிய உச்சிக்கிளை வேதாந்தம்,அதிற் பழுத்த நறுங்கனியே சைவ சித்தாந்தம் எனவும் கூறுவர் அறிந்தோர்.

வேதாந்த நூல்களில் இரு வேறு கொள்கைகள் உண்டு. ஒன்று சற்பிரபஞ்சவாதம், மற்றையது நிஷ்பிரபஞ்சவாதம். இறைவனும் உயிர்களும் மலங்களும் உள்ள பொருள்கள் என்பது சற்பிரபஞ்சவாதிகள் கொள்கை. இறைவன் ஒருவனே உள்ள பொருள். எனைய எல்லாங் கடலிலே தோன்றுந் திரைநுரைக் குமிழிபோல வெறும் தோற்றமேயாகும். இவை உண்மையில் பொருளல்ல என்பது நிஷ்பிரபஞ்சவாதிகள் கொள்கை. இவ்விரண்டு வகைகளில் சைவ பரமாக உள்ளவை, சற்காரியவாதக் கோட்பாடுடைய உபநிடதங்களேயாம். மேற்குறித்த சற்காரியவாதக் கோட்பாடுகளை அத்திவாரமாகக் கொண்டவையே சிவாகமங்களும், மெய்கண்ட சாத்திரங்களுமாம்.

பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களையும் உள்ள பொருள்களென நிலைநாட்டி, அவற்றின் இயல்புகளை விளக்குவதே சற்காரியவாதம். இதுவே சைவ சித்தாந்தம். சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களின் இயல்பு பற்றி, இங்குச் சிறிது நோக்குவோம்.

## (1) பதி :

அனைத்துலகுக்கும் உயிர்களுக்கும் தனிமுதல்வனாயிருப்பவன் எவனோ, அவனே பதியாம், அவ்விறைவனது இயல்பு சொரூபலக்கணம், தடத்தலக்கணம் என இரு வகைப்படும்.

சொரூபலக்கணம் : உருவம் குணம் குறி செயல் அவையும் இல்லாததாய், நின்மலமாய் ஒன்றாய் என்றுமுள்ளதாய், உயிர்களுக்குள்ளுணர்வாய் விகாரமில்லாததாய் எல்லைக்குள் அடங்காததாய் நித்தியானந்தமாய், என்றும் எவற்றையும் விட்டு நீங்காததாய், எல்லாவற்றுக்கும் புகலிடமாய், சிறியதிற் சிறியதாய், பெரியதிற் பெரியதாய் விளங்குவதே பரசிவத்தின் சொரூபலக்கணமாகும். இவ்வியல்புகளையெல்லாம் அடக்கித் தன்வயமுடைமை, இயற்கைஉணர்வு, முற்றுமுணர்தல், தூய உடம்பின்னாதல், இயல்பாகவே பாசமின்மை, பேரருளுடைமை, வரம்பிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமைஎன்னும்எண்குணங்களுடையான் என்பர். அவற்றையும் சுருக்கி, சச்சிதானந்த மூர்த்தி என்றுங் கூறுவர். என்றுமுள்ள அறிவே வடிவான ஆனந்தமூர்த்தியாயிருப்பது இறைவனது இயற்கையாகும்.

தடத்தலக்கணம் : பேரருளாளனும் அநாதி முத்தனுமான சிவபிரான், அநாதியே பாசபந்தத்தோடு கிடக்கும் ஆன்மாக்களை, அப்பந்தத்தினின்றும் விடுவித்து உய்விக்க வேண்டுமென்ற கருணையால், அவ்வுயிர்களின் பொருட்டுஐந்தொழில்களையும் செய்தருளுகின்றான். அந்த நிலையில் ஐந்தொழில்களையுஞ் செய்வதற்குரியவகையில் தனது திருவருளையே திருமேனியாகக்கொண்டு, ஐவராய் நின்று, அவற்றை இயற்றும் போது, உருவமும்-குணமும்-குறியும்-செயலும்-உடைய மூர்த்திகளாக இருப்பன். இதுவே இறைவனது தடத்த நிலையாகும்.

பரமபதியாகிய பரசிவத்தினது மேலாகிய கருணை பராசக்தி எனப்படும். அப்பராசக்தியினின்றும் இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என்பன தோன்றும். பரமசிவன் அச்சத்திகளைப் பொருந்தி நின்று அருட்டிருமேனியாகக் கொண்டு சுத்த மாயையோடு பொருந்தி வேதாகமம் முதலிய கலைகளைத் தோற்றுவிப்பான். அசுத்தமாயையினின்று உலகங்களைத் தோற்றுவிப்பான். உரிய காலம்வரை உலகை நிலைநிறுத்திக் காத்துப் பின்னுந் தோன்றி முறையே ஒன்றிலொன்று ஒடுங்கிவரச் செய்து, முடிவில் அனைத்தையும் தன்னிலே ஒடுங்குமாறு செய்து பரமபதியாக இருப்பான்.

இவ்வாறு இறைவன்கொள்ளும் திருமேனிகள் நிஷ்களம், நிஷ்கள சகளம், சகளம் என மூவகையாயுள. பிரமன் விஷ்ணு உருத்திரன் மகேசுவரன் ஆகிய நான்கும் சகளத்திருமேனிகள். 'உருவத்திரு

மேனிகள்'. சதாசிவம் - நிஷ்கள சகளத் திருமேனி, 'அருவுருவத்திருமேனி'. அதற்கு மேலுள்ள சத்தியோடு கூடிய சிவம்-நிஷ்களத் திருமேனி. 'அருவத் திருமேனி', இந்த மூவகைத் திருமேனிகளும் தடத்த நிலையாகும். இவற்றுக்கெல்லாம் மேலாகிய சுத்தபரசிவமே சொரூப நிலையாகும்.

பரிபூரணனான இறைவன் குறை யொன்றும் இல்லாதவன். ஆதலால் தடத்த நிலையில் நின்று உலகைப் படைத்தல், அழித்தல் காத்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் தன் பொருட்டுச் செய்ய வேண்டியதும் இல்லை. அவற்றைச் செய்வதால் அவன் விகாரமடைவதுமில்லை. உயிர்களை உய்விக்கும் பெருங் கருணையாலேயே இவற்றைச் செய்கின்றான். அகரவுயிர் ஏனைய எழுத்துக்கள் எல்லாவற்றிலுங் கலந்திருப்பதுபோலவும், வெந்நீரில் வெப்பம் போலவும், இறைவனும் எங்கும் எல்லாவற்றிலும் வியாபித்து அனைத்தையும் இயக்குபவன். ஆன்மாக்களை மலம் நீக்கிச் சிவத்தன்மை அடையச் செய்யும் சத்தியோடு பிரியாதிருப்பவன். பெருமை, நுண்மை, பேரருளுடைமை, பெறுதற்கருமைகளில் ஒப்பிலியாயுள்ளவன். ஐந்தொழிலும் செய்பவன். அருவம் உருவம் அருவுருவம் அறிவுருவம் ஆகிய திருமேனிகளுடையான். உணர்த்த உணரும் உயிர்கள் போலன்றி இயல்பாகவே எல்லாம் அறிபவன். அடியவர்பால் அறிவாய் நீங்காதிருப்பவன். விருப்பு வெறுப்பின்றி எவ்வுயிர்க்குஞ் சுகம் செய்வதால் சங்கரன் என்னும் நாமமுடைய சிவன், நண்ணினர்க்கு நல்லவனாயும், நண்ணாதவர்க்கு நல்லவனல்லன் போலவும் இருப்பன். பிறவிப்பிணிக்கு மருந்தாகிய இறைவன் உள்ள பொருளே. இதில் ஐயமில்லை. ஆதலால், இறைவனை அன்புசெய்து வழிபடுக எனத் திருவருட் பயன் பதியைப் பற்றிக் கூறும்.

## (2) பசு :

ஆன்மா, பாசத்தாற் கட்டுண்டிருத்தலால் பசு எனப்படும். ஆன்மா எண்ணில்லாதன; என்றுமுள்ளன. அநாதியே ஆணவமாகிய இருளால் மறைக்கப்பட்டிருப்பவை. ஆணவமுனைப்பால் இருவினை புரிவன. தாம்புரிந்த இருவினைப் பயனை அனுபவித்தற்கேற்ற உடம்பை, இறைவன் தரப் பெற்றுப் பிறந்து பலவினையை நுகரும்போது, புதுவினைகளையும் பெருக்கிப் பிறப்பாகிய போக்குவரவைப் பொருந்துவன. இப்படி எண்ணிறந்த பிறவிகளை எடுத்து உழலும்போது கல்வி,கேள்வி அறிவு பொருந்திச் சிவபுண்ணியங்கள் புரிவதாலே, இருவினை ஒப்பும் மலபரிபாகமும் பொருந்தும் காலத்தில், திருவருள் பதியப்பெற்றுக் குருதீட்சை பெற்று, மெய்ஞ்ஞானம் விளங்குவதால் சிவகதி சேர்வனவாகும்.

இவ்வான்மாக்களில் முத்திபெற்றவையும் எண்ணிலாதன. முத்திபெற இருப்பவையும் எண்ணில்லாதன. முத்திபெற உள்ள உயிர்கள் மும்மலமுடைய சகலரும், ஆணவமும் கர்மமும் உள்ள பிரளயாகலரும், ஆணவம் ஒன்றே உடைய விஞ்ஞானகலரும் என மூவகையாம். நனவிலே கண்டதைக் கனவிலே மாறுபடக் காணுதலால், ஆன்மாவுக்குச் சுதந்திரமில்லை. பிறரொருவரது ஆணைவழி நடப்பதாகும். ஐம்பொறிகளின் துணைகொண்டு உணர்வதால் ஆன்மாவுக்குத் தானே அறியும் ஆற்றல் இல்லை. குருடனுக்கு இருள் ஒளி பொருள் என்பனவற்றைப் பகுத்தறிய முடியாது. ஆன்மாவுக்கு உணர்த்த உணருந்தன்மை உண்டு. ஆகவே இறைவன் தனது அருளொளியால் அவற்றைப் படைத்து அறிவுபெறச் செய்கிறான். சத்தாகிய சிவம்,அசத்தாகிய மலங்களைப் பொருந்தாது, அசத்தாகிய மலமும் ஒன்றையும் அறியமாட்டாது. சத்தைச் சாரும்போது சத்தாயும், அசத்தைச் சாரும்போது அசத்துப் போன்றும் இருப்பதால், ஆன்மா சதசத்துஎனப்படும். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாயிருப்பது. இறைவனருள் காட்டாவிடின், கோட்டானின் கண்போல ஒளியையும் இருளாகவே காணும் எனத் திருவருட்பயன் கூறும்.

## (3) பாசம் :

இஃது, ஆன்மாக்களைக் கட்டிய கயிறுபோலப் பற்றியிருப்பதால் பாசம் எனப்படும். இதனை மலம் பந்தம் தளை எனவும் அழைப்பர். பாசம் மூன்றுவகை. அவை ஆணவம் கன்மம் மாயை எனப்படும்.

ஆணவம். இது மூலமலம், சகசமலம், இருண் மலம் எனவும் சொல்லப்படும். செம்பிலே களிம்பும் நெல்லில் உமியும் போல ஆன்மா என்றுள்ளதோ, அன்றுமுதல் அதனோடு உள்ளது. ஆன்மாவின் அறிவை அணுவாயடக்கி மறையும்படி இருட்படலம் போல மறைத்து நிற்பதனால் இதனை ஆணவ இருள் என்று கூறுவர். ஆணவமலம் ஒன்று. அது பல சக்திகளை உடையதாய்ப் பல உயிர்களையும் பற்றி நிற்கின்றது. இந்த ஆணவத்தின் செயலே, யான் எனது என்னுஞ் செருக்காக ஆன்மாவில் விளங்குவது.

ஆன்மாவுக்குப் பிறவித்துன்பமும், அதற்குக் காரணமான மலமும், வீட்டின்பமும், அதனைக் கொடுக்கும் திருவருளும் ஆகிய இவற்றை இல்லை என்பது முடியாது. எல்லாவற்றையும் மறைத்துத் தன் மயமாக்கி இருள்போலக் கிடைக்கச் செய்வது இருள்மலமே. இருள் பிறபொருளை மறைத்தாலும் இருளாகிய தன்னையாவது காட்டும். ஆணவ இருளோ பிறவற்றை மறைப்பதுபோலவே, தன்னையும் காணவொட்டாது மறைக்கும். அதனால் அது இருளிலும் கொடியது. இஃது ஆன்மாவினுள் உள்ள சிவத்தைச் சாராது ஆன்மாவை மாத்திரம் புறத்தே பற்றி உள்ளது. ஆணவம் பல ஆன்மாவோடு கூடி நின்றும், அவற்றால் அறியப்படாமல் மறைந்திருக்கிறது. ஆன்மாவுக்கு அறியும் தன்மையைத் தெரியவொட்டாது மறைப்பது ஆணவமே. சிலர் ஆணவம் என ஒன்றில்லை என்பர். சிலர் அது ஆன்மாவின் குணமென்பர். சிலர் அது ஆன்மாவை இடையிலேயே பற்றியதென்பர். இக்கூற்றுக்கள் பொருந்தா. ஏனெனில் ஆணவமில்லையாயின் பிறவித் துன்பமுண்டாகாது. ஆன்மா பிறவித்துன்ப முறுதலால் அதன் காரணமான ஆணவமும் உள்ளதே. அது ஆன்மாவின் குணமாயின் குணத்தை நீக்கவே குணியாகிய ஆன்மாவும் அழியும். ஆணவம் நீங்கிய பின்னும் ஆன்மா இருத்தலால் ஆணவம் ஆன்மாவின் குணமன்று. அசத்தாகிய ஆணவம் தானே உயிரைப் பற்றாது, உயிரும் தானே அத்துன்பத்தைச் சேராது, இறைவனும் சேர்க்கமாட்டான். இடையிலே அது பற்றுமாயின் முத்திபெற்ற ஆன்மாவையும் பற்ற வேண்டும். அப்படிப்பற்றுவதில்லை. ஆகவே இக்காரணங்களால்

அது இடையில் பற்றியதன்று. அநாதியாகவே உள்ளது எனத் திருவருட்பயன் கூறும்.

கன்மம்: மருத்துவன் நோயாளிக்குப் பரிகாரஞ் செய்து குணப்படுத்துவான். அதுபோலவே ஆணவ நோயுள்ள ஆன்மாவைக் குணப்படுத்தும் பொருட்டு வைத்தியநாதனாகிய இறைவன் உலகைப்படைத்து அங்குப் பிறவியைத்தருகிறான். பிறவி எடுத்த உயிர் ஆணவத்தின் முனைப்பினாலே யான் எனது என்ற செருக்கோடு நல்வினை தீவினைகளைப் புரிகிறது. இவ்விரு வினைகளே கன்மம் எனப்படும். இந்த நல்வினை தீவினை இரண்டும் சிவநல்வினை பசுநல்வினை, சிவத்தீவினை பசுத்தீவினை என நான்காகப் பகுக்கப்படும். அவற்றுடன் வெறுவினை, பற்றில்லாத வினை என இரண்டும் சேர்த்து வினை ஆறுவகை எனவும் கூறுவர். வினை எல்லாம் இருவினையுள் அடங்கும். இவ்வினை பிறிதொருவகையால் பிராரத்தம் சஞ்சிதம் ஆகாமியம் என மூன்றாகக் கூறப்படும். பிராரத்தம் என்பது முன்பிறவிகளில் செய்த வினைகளினால் எடுத்த இவ்வுடம்பில் அனுபவிக்க என அளந்து தரப்பட்டது. இதனை விதி ஊழ் தெய்வம் நியதி எனவும் கூறுவர். எடுத்த உடம்பில் பழவினையை அநுபவிக்கும் போதே புதிய வினைகளையும் புரிகிறோம். அதுவே ஆகாமியம். இந்த ஆகாமியத்திலும் ஒரு பகுதி உடனுக்குடன் அனுபவத்துக்கு வரும். அதுவும் பிராரத்தமாய்க் கழியும். முன்னைப் பிறவியிற் செய்த வினைகளிலும், இப்பிறவியிற் செய்த வினைகளிலும் அனுபவத்துக்கு வராமல், ஏனைப் பிறவிகளுக்கு என எஞ்சிக் கிடக்கும் வினை சஞ்சிதமாகும். இவை, வரும் பல பிறவிகளில் பிராரத்தமாய் அனுபவத்துக்கு வரும். வினைகள் செய்யப்படும்போது மனம் வாக்குக் காயம் என்ற மூன்றாலும் செய்யப்படும். நினைப்பது சொல்வது செய்வது எல்லாம் வினைகளே. வினை அனுபவத்துக்கு வரும்போது, தெய்விகம் ஆன்மிகம் பௌதிகம் என மூவகையாய் வரும். பிறப்பு இறப்பு முதலியன தெய்விகமாய் வருவன. புயல் மழை பஞ்சம் முதலியன பௌதிகமாய் வருவன. விடந்தீண்டல் முதலானவை ஆன்மிகமாய் வருவன. ஆன்மாக்கள் தாந்தாம் முன்செய்த வினையைத் தாமே அனுபவிக்க வேண்டியன; தவிர்க்க முடியாத பல பிறவிகளை எடுத்து இருவினை புரிவதும், வினைப்பயன் அனுபவிப்பதுமாய் நிகழ்ந்துவரக் காலகதியில் மெலிந்து வலிகெட, இருவினைகளும் ஒழிய, சிவ புண்ணியத் தொடர்பால் திருவருள் குருவாகி வந்து தீட்சை செய்து ஆட்கொண்டு முத்தி நெறியில் சேர்க்கும்.

அறுவகை வினைகள்: சிவநல்வினையாவது சிவத் தொண்டும், சிவனடியார் தொண்டும் முதலியனவாம். சிவத்தீவினையாவது சிவனையும் சிவனடியாரையும் நிந்தை செய்தல் முதலாயின. பசுநல்வினையாவது உயிர்களுக்குச் செய்யும் பலவகை உபகாரங்கள். பசுத்தீவினையாவது உயிர்களுக்குச் செய்யும் பலவகை அபகாரங்கள். வெறுவினையாவது தும்முதல் கொட்டாவிவிடுதல் துரும்புகிள்ளுதல் போல்வன. பிறர் யாருக்கும் எவ்விதத்திலும் இன்ப துன்பங்கள் விளைவியாதவை வெறு வினைகளாம். பற்றில்லாத வினையென்பது இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம்ஆகிய பக்குவநிலை அடைந்தோர் ''என்செயலால் ஆவதொன்றுமில்லை எல்லாம் அவன் செயலே'' என்ற நிலையில், தம் வசமிழந்து திருவருள் செலுத்தச் செய்யும் வினைகளாம். இப்படிச் செய்யப்படும் பற்றற்ற வினை, இருவினையில் எவ்வினையாயினும் அதன் பயன் செய்தோரைச் சாரா. அவற்றைத் திருவருளே வாங்கிக் கொள்ளும். ''எடுத்துச்சுமப்பன்'' என்று திருவருட்பயன் குறிப்பிடுவது இதனையேயாம். வெறு வினைக்குப் பயன் இல்லை. ஏனைய பசு நல்வினை தீவினைகளுக்கு உலகியலாகிய இன்பமும் துன்பமும் பயனாகும். சிவநல்வினை தீவினைகளுக்குப் பதமுத்தி முதலியனவும், நரகத் துன்பம் முதலியனவும் பயனாக வருவனவாம்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

இவ்வாறு வினைசெய்வதால் ஆணவமும் மெலிவுறும்; வினைப்பயனை நுகர்வதால் கர்மமும் கழியும். இந்நிகழ்ச்சிகள் மாயா காரியமாகிய உடம்பையும் உலகையும் பொருந்தி நின்று உயிர்களால் நிகழ்த்தப்படுவன.

மாயை: இறைவனுடைய அளவிறந்த சத்திகளில் மாயையும் ஒன்றாகும். இம்மாயையை இறைவனுடைய பரிக்கிரக சத்தி என்பர். இறைவனது அருட்சத்தியைத் தாதான்மிய சத்தி என்பர். தாதான்மியசத்தி நெருப்பும் சூடும் போலப் பிரிவிலாத சத்தி. பரிக்கிரகசத்தி முருகனும் அவனுடைய ஊர்தியாகிய மயிலும்போல, வேண்டும்போது கையாளவும், வேண்டாதபோது பிரித்து வைக்கவும் கூடிய சத்தி. இம்மாயை சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என மூவகையாம். சுத்தமாயை சிவதத்துவம் எனவும், சுத்தாசுத்தமாயை வித்தியாதத்துவம் எனவும், அசுத்தமாயை ஆன்மதத்துவம் எனவும் கூறப்படும். சுத்தாசுத்தமாயை மிச்சிரமாயை எனவும், அசுத்தமாயை பிரகிருதிமாயை எனவும் சொல்லப்படுகின்றன. இந்த மூவகை மாயாகாரியமாக அமைந்ததே உயிர் நிலையாகிய உடம்பு. இவ்வுடம்பைப்போல மாயாகாரியமாய் உள்ளதே உலகம். சிவதத்துவம் ஐந்தும், வித்தியா தத்துவம் ஏழும், ஆன்மதத்துவம் இருபத்துநாலும் ஆக முப்பத்தாறு தத்துவங்களைக் கொண்ட உடம்பு. இம் முப்பத்தாறு தத்துவங்களையும் தொண்ணூற்றாறு தத்துவமாக விரித்துக் கூறுவதுண்டு. இவ்வாறமைந்த உடம்பும் (தனுவும்), இவ்வுடம்பிலுள்ள கருவிகளும் (கரணமும்), வசிக்கும் உலகமும் (புவனமும்), இவ்வுடம்பில் நின்று உயிர் அனுபவிக்கும் சுகதுக்க அனுபவங்களும் நின்று, (போகமும்) ஆக நான்கு வடிவங்களாய் மாயை உயிர்களுக்கு உதவுகின்றது. சூரிய ஒளி வரும்வரை இருளில் நிற்பவனுக்கு விளக்குச் சிறிதளவு ஒளிதந்து உதவுவது போல, ஆணவ இருளில் நிற்கும் உயிர்களுக்குத் திருவருளாகிய பேரொளி வந்து சேரும்வரை மாயாகாரியங்களாகிய தநு, கரண, புவன, போகங்கள் சிறிதளவு அறிவு விளக்கம் செய்வன.

சிவ தத்துவம் ஐந்தாவன: நாதம் விந்து சாதாக்கியம் ஈசுவரம் சுத்தவித்தை என்பன. வித்தியாதத்துவம் ஏழாவன: காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மாயை (மூலப்பிரகிருதி) என்பன. ஆன்ம தத்துவம் இருபத்துநாலாவன: அந்தக்கரணம் நான்கு, தன்மாத்திரை ஐந்து, பொறி ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, பூதம் ஐந்து என்பன. அந்தக்கரணம் நான்காவன; மனம் புத்தி சித்தம் அகங்காரம். தன்மாத்திரை (புலன்) ஐந்தாவன: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. பொறி (ஞானேந்திரியம்) ஐந்தாவன: மெய் வாய் கண் மூக்கு செவி என்பன. கர்மேந்திரியம் ஐந்தாவன: நா கை கால் குதம் குறி என்பன. பூதம் ஐந்தாவன: நிலம் நீர் தீ வளி வான் என்பனவாம். சுத்த மாயையாகிய சிவதத்துவங்கள் ஆன்மாவுக்கு

மெய்யுணர்வு விளக்கத்துக்கு உபகரணமாய் நிற்பன.

சுத்தாசுத்தமாயையாகிய வித்தியா தத்துவங்கள் சமநிலையில் நின்று மெய்யுணர்வு விளக்கத்துக்கு உதவுவதோடு, வினைகளைச் செய்யவும் பயனை நுகரவும் தூண்டுவதாயும் உதவும். அசுத்த மாயை ஆகிய ஆன்மதத்துவம் ஆணவத்தின் சார்பாய் அறியாமையை விளைவித்து வினைகளைப் பெருக்க உதவும்.

ஆன்மாவை அநாதியே பற்றியுள்ள ஆணவம் அருவமான சத்தியாய் மறைந்து நிற்கும். அதன் வலியால் ஆன்மா செய்யும் கன்மமாகிய இருவினைகளும் அருவமானவையே. அதன் பயனாகிய இன்பதுன்பங்களும் அருவமே. மாயை ஒன்றுதான் அருவமும் உருவமுமாகிய இரு நிலைகளிலும் நின்று உயிருக்கு உதவுவது. சிதவத்துவம் வித்தியாதத்துவங்களும் அந்தக் கரணங்களும் தன்மாத்திரைகளும் அருவமானவை. பூதங்களும் பொறிகளும் கர்மேந்திரியங்களும் உருவமானவை. மற்றும் உலகும் இன்பதுன்பங்களைத் தரும் பொருள்களும் உருவமாயுள்ளவை. மூலமலமான அழுக்கை நீக்குதற்குப் புதியதாய் சேர்த்த அழுக்கே மாயாமலம். ஆடையிலுள்ள அழுக்கை நீக்கச் சேர்த்த சவர்க்காரம் என்னும் அழுக்கைப்போல உள்ளது மாயை. ஆதலால் இது துணைமலம் எனப்படும். இது அழுக்குமாய், மூலமான அழுக்கை நீக்கும் சாதனமுமாயிருக்கிறது. அதனாலேதான் இது ஆன்மாவுக்கு ஆணவத்தின் சார்பாய் நின்று மெய்யறிவுபெறாதபடி மயக்குவதும், திருவருளின் சார்பாய் நின்று மெய்யறிவுபெற உதவுவதுமாகிய இரு செயல்களையும் புரிகிறது.

செய்திச் சுருக்கம்

# தேவாரம் - திருவாசகம் நீள்இசைத்தட்டு வெளியீட்டு விழா

'இசைப்பேரரசி' திருமதி டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமி அவர்கள் பாடிய தேவாரம்—திருவாசகம் நீளஇசைத்தட்டு வெளியீட்டு நிகழ்ச்சி விழா, சென்னை நுங்கம்பாக்கம், 603-அண்ணா சாலை, இராணி சீதை மன்றத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் இராசாசர் டாக்டர் எம். ஏ. முத்தையச் செட்டியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அதுபோது தமிழ்நாடு அரசின் கல்வியமைச்சர் மாண்புமிகு திரு சி. அரங்கநாயகம் அவர்கள் மேற்படி இசைத்தட்டினை ( L. P. Record Stereo No. s/33 ESX 17536 ) வெளியிட்டார்கள். அவ் இசைத்தட்டின் முதல் பிரதி திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களுக்கு வழங்கப் பெற்றது. முதல் இசைச் தட்டினைப் பெற்றுக் கொண்ட திருமதி சௌந்தராகைலாசம் அம்மையார் அவர்கள், தம்முடைய பாராட்டுரையில், இசைப் பேரரசி டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமி அவர்களின் இசைப்புலமையினையும் தொண்டினையும் பெரிதும் போற்றிப் புகழ்ந்து, தாம் பாடிய அரிய இனிய கவிதையின் வாயிலாக வாழ்த்தியதுடன், ''பண்ணாராய்ச்சி வித்தகி'' என்ற சிறப்புப் பட்டத்தினையும் வழங்கிச் சிறப்பித்தார்கள். அதனை அடுத்துத் தேசிய இயக்கப் பெருந்தலைவர் குலபதி-தமிழவேள் திரு ஏ. பி. சி. வீரபாகு அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்களும், இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் நடிகமணி திரு டி. வி. நாராயணசாமி அவர்களும், 'திருக்கோயில்' ஆசிரியர் புலவர்ஏறு திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். அவர்களும், பாராட்டியல் வாழ்த்துரை நிகழ்த்தினார்கள். இவ்விழாவின் தொடக்கத்தில் அடையாறு கலையியற் பண்பாட்டு நிலையத்தின் மாணவியர், இறை வணக்க இன்னிசை மிழற்றினர். இசைத்தட்டினை வெளியிட்ட சென்னைக் கிராமபோன் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெடின் மேலாளர் திரு வி. இ. மத்தாய் அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் அருமைப் புதல்வர் 'செந்தமிழ்ச் செல்வர்' திரு ச. சிவக்குமார், எம்.ஏ. அவர்கள், சைவத்தமிழ் உலகின் சார்பில் தேவாரம்—திருவாசகம் நீள்இசைத் தட்டு வெளியிடப்பெற்றமை குறித்து, அனைவருக்கும் நன்றியும் வணக்கமும் செலுத்தி, மகிழ்ச்சி தெரிவித்தார்கள். விழாவின் நிறைவில் டாக்டர் திரு. வி. வள்ளியப்பன் அவர்கள், விழாவிற்கு வந்திருந்த பெருமக்கள் அனைவருக்கும் நன்றியுரை நவின்றார்கள். டாக்டர் இராசாசர் எம். ஏ. முத்தையச் செட்டியார் அவர்களும், தமிழ்நாடு அரசின் கல்வியமைச்சர் மாண்புமிகு திரு. சி. அரங்கநாயகம் அவர்களும், இவ் இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டமையும், தமிழிசை ஆர்வலர்கள்—திருமுறை அன்பர்கள்—உயர் அலுவலர்கள் மற்றும் பலதுறைப் பெருமக்கள் ஆகியோர் திரளாக வந்திருந்தமையும் பெரிதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும்.

# கம்பன் காட்டும் கடவுள் நெறி

திரு. கோவை அ. கிருஷ்ணசுவாமி,

நிறுவனர் : கம்பன் கழகம், புதுக்கோட்டை.

கடவுள் தத்துவத்தைப் பற்றிப் பல சமயங்களில் பல படியாகக் கூறப்பட்டுள்ளது. சைவம் வைணவம் பௌத்தம் சமணம் முதலியமதங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பாரத தேசம் முழுவதும் பரவியிருந்தன. கம்பன் வாழ்ந்த ஒன்பதாம் நூற்றாண்டில் சைவ சமயம்தழைத் தோங்கிய காலம். குறிப்பாகச் சோழ மன்னர்கள் தேவாரத் திருமுறைகளிலே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். பர்ாந்தகச் சோழன் தில்லையம்பலத்துத் திருமுகட்டைப் பொன்னால் பொதிந்து அதனைப் பொன்னம் பலமாக்கினான். திருநீற்றுச் சோழன் தாரா சுரத்தில் ஒரு பெரிய சைவக் கோயிலை எடுப்பித்தான். இராசேந்திரசோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழீசுவரம் என்ற சிவன் கோயிலை நிர்மாணம் செய்தான். பின்னால் வந்த இராசராச சோழனும் தஞ்சாவூர் மாபெரும் பெருவுடையார் ஆலயத்தைக்கட்டி முடித்தான்.

புத்தமதம் நாகை போன்ற கடலோரங்களில் தோன்றினாலும், அதில் மன்னர்கள் ஈடுபாடு கொள்ளவில்லை. அதே சமயம் அதற்கு ஊறு விளைவிக்கவும் இல்லை. சைவம் வளர்ந்த அக்காலத்தும் வைணவ சம்பிரதாயத்தின் தமிழ்வேதம் என்று போற்றப்பட்ட நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் மக்கள் மனத்தில் ஊன்றி நின்றது. பழ மறைகள் முறையிடப் பைந் தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே என்று பெருமாளைப் பாடி மகிழ்ந்தவர்கள் அடியார்கள். திருவேங்கடமுடையானையும் சிவபெருமானையும் ஒன்றாகப் பார்த்துப் போற்றியவர்களில் முதல் மூவரில் ஒருவரான பேயாழ்வார் பாடினார்.

தாழ்சடையும், நீள்முடியும்
ஒண் மழுவும் சக்கரமும்
சூழ்அரவும், பொன்நாணும்
தோன்றுமால்-சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய்
இசைந்து

இப்படிப் பாடி ஏகோபித்த ஓர் முடிவு கட்டிச் சைவ வைணவ ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தினார். ஆகவே 'தேவாரத்தையும், திவ் வியப் பிரபந்தத்தையும் வாழ வகுத்த நூல்கள் என்று மக்கள் எடுத்துக் கொண்டனர். இருப்பினும் சில இடங்களில் சமயக் காழ்ப்புணர்ச்சி தோன்றத்தான் செய்தது.

கம்பனுக்கு முன் தோன்றிய கவிஞர்கள் தங்களது இலக்கியப் படைப்புகளில் பலப்பல தனிப்பட்ட தெய்வங்களுக்குக் காப்புச் செய்யுள்கள் இயற்றினர். இதனால் வாதமும் பிரதிவாதமும் தோன்ற ஆரம்பித்தன. இதை நன்கு புரிந்து கொண்டவன் கவிச் சக்கரவர்த்தி. கற்பனையாம் தேரேறிக் கனவுலகில் சஞ்சரித்து அற்புதமாய்க் கண்டவற்றை அமுதொழுகும் இசை நிறைந்த சொற்களிலே தான் படைத்துச் சொல்லும் திறம் படைத்த மாபெருங் கவிஞன் மட்டுமல்ல கம்பன். உயர்ந்த தத்துவஞானியுங்கூட. இவற்றிற்கெல்லாம் மேலாகச் சிறந்த பக்தனாகவும் விளங்கினான். திருமாலின் அவதாரத்தைக் கூறவந்தவன், தான் வைணவன் என்பதை எந்த இடத்திலும் காட்டிக்கொள்ளவில்லை. அதே சமயத்தில் தான் பின்பற்றுவது சைவம் என்றுபறைசாற்றிக் கொள்ளவுமில்லை. இறைவனைப் பற்றிச் சித்தர்கள் ஞானியர்கள் போன்று சூக்கும மொழியில் பேசாமல்,

''எல்லை யொன்றின்மை என்னும் பொருள்
அதனைக் குறிகளால் காட்டும் வல்லவன்''.

என்ற வாக்கிற்கிணங்க, சாதாரண மக்கள் புரியும்படியாக, உணரக்கூடிய வகையில் பக்தியுள்ளத்தோடு இறைவனை நெருங்கி எளிய சொல்லால் விழுமிய பொருளைக் காட்டிச் சென்றவன் கம்பன்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற தமிழர் மரபுக்கேற்ப, நாமரூப பேதமற்ற பரம் பொருளை முதன் முதலில் பாட ஆரம்பிக்கிறான். கடவுளுக்கு இதுதான் இலக்கணம் என்று சுட்டிக் காட்டுகிறான். ஆக்கல், காத்தல் அழித்தல் ஆகிய முப்பெருஞ் செயல்களை இறைவன் குழந்தை விளையாட்டாக, அதே சமயத்தில் திட்டமிட்ட ஒழுங்குமுறையில் அதிசயமாக அற்புதமாக அனாயாசமாக நிகழ்த்துகிறான். இவற்றையெல்லாம் மனதில் கொண்டு காப்புச் செய்யுளைச் சிறந்த சொற்களாலே வடிக்கின்றான்.

உலகம் யாவையும்
　　தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும்
　　நீக்கலும், நீங்கலா
அலகி லாவிளை
　　யாட்டுடை யார், அவர்
தலைவர்; அன்னவர்க்
　　கேசரண் நாங்களே.

கம்பன் தோன்றிய இடம் சோழநாட்டில் காவிரிக் கரையில் அமைந்த திருவழுந்தூர் ஆகும். இத்தலத்தை 'மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கை மன்னன்' என்று அழைக்கப்படும் திருமங்கையாழ்வாரும்; சைவச் சமயச் செம்மலான ஆளுடைபிள்ளை எனப்படும் திருஞான சம்பந்தப் பெருந்தகையாரும் சிறப்பித்துப் பாட்டியுள்ளனர். இவ்விருவரது வாக்கிலிருந்தும் அந்தக் காலத்திலும் இவ்வூர் இயற்கை வளமும் கலைவளமும் கொண்டதென்றும், இங்கே சைவமும் வைணவமும் சிறந்து விளங்கினவென்றும் தெரிகிறது. இவ்வூரில் குடிகொண்டுள்ளவர் செங்கமல வல்லி சமேத ஆமருவியப்பர். எதிர்ப்புறக் கோயிலில் இருப்பவர் வேதபுரீசுவரர். நாள் தோறும் ஒருவர் முகத்தில் மற்றவர் விழிக்க வேண்டும் என்கின்ற நிலை. ஆண்டுதோறும் பங்குனிமாதம் புனர்வசு நட்சத்திரத்தில் ஆமருவியப்பனை இராமனாகக் கோலம் செய்து, வேதபுரீசுவரர் சந்நிதியில் இருத்தி வழிபாடு செய்து மக்களுக்குச் சர்க்கரைப் பொங்கல் விநியோகம் செய்வார்கள். அதே மாதிரி மார்கழி மாதத்தில் திருவாதிரைப் பௌர்ணமியன்று அருணோதயத்தில் வேதபுரீசுவரர் நடராசத் தாண்டவக் கோலத்தில் ஆமருவியப்பன் சந்நிதி முன்பாக ஆருத்திரா தரிசனக்காட்சி தருகிறார். இப்பழக்கம் இன்றுகூட நடைமுறையில் இருந்து வருகிறது. ஆகவே இராமாவதாரக் கலைக் கோயிலைச் சிறப்புறச் செய்வதற்கு ஓர் உயர்ந்த சமரச பக்திச் சூழ்நிலை அமைந்தது, கவிஞனுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றுதான் கொள்ள வேண்டும்.

முனிவர்கள் தேவர்கள் அநுமன் வீடணன் முதலான நற்குணப் பாத்திரங்கள் மட்டுமல்லாமல், விராதன் போன்ற அவுணர்களும் இராம பிரானைப் போற்றிப் பாடுகிறார்கள். பக்தி ரசம் பருக வேண்டுமெனில் கம்பனின் விராதன் வதைப் படலத்தை மட்டுமே படித்தால் போதும்.

''தாயான பசுவைக் கன்று அறியும், அதே போல் தாய்ப் பசுவும் கன்றை அறியும். எல்லாப் பொருள்களையும் நீ அறிவாய். ஆனால் அவைகள் உன்னை அறிவதில்லை. எல்லா இதயத்துள்ளிருந்தும் நீ, ஞானமுண்டான போது ஞானியர்களுக்குத் தென்படுகிறாய், அதனால் ஞானிகளின் இதயத்தில் மட்டும் நீ வந்தாய் என்று சொல்ல முடியுமா என்ன? இந்த உண்மையை நினைக்கும்போதுதான் வாராதே வரவல்லவன் நீ என்று சொல்ல வேண்டியுள்ளது.''

கிருஷ்ணாவதாரத்தில் ஆனிரை மேய்த்து ஆருயிர்களைக் காத்ததால் பசுவையும் கன்றையும் இணைத்துக் கவிஞன் பாடியிருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. இனிக் கம்பன்பாடலைப் பார்ப்போம்.

தாய்தன்னை அறியாத
　　கன்றில்லை ; தன்கன்றை
ஆயும் அறியும் ; உலகின்
　　தாய் ஆகி, ஐய !
நீ அறிதி எப்பொருளும் ;
　　அவையுன்னை நிலையறியா?;
மாயை இது என்கொலோ?
　　வாராதே வரவல்லாய் !

ஆமருவியப்பனைப் பாடிய பிறகு வேதபுரீசுவரர் ஞாபகம் வருகிறது கவிஞனுக்கு.

''உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் பொதிந்து கொண்டிருக்கின்ற உனது திருவடிகளை வேதங்கள் பாடுகின்றன. திருவடிகளிலே அண்ட சராசரங்கள் அடங்கிவிட்டபடியால், உனது முழு உருவம் எத்தகையதாய் இருக்கும் என்று கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லையே. இன்னொரு அதிசயம், கடலில் நிறைந்திருக்கின்றாய். அது மட்டுமா ! பஞ்சபூதங்களில் ஒவ்வொன்றிலும் நிறைந்திருக்கின்றாய். அடட! எப்படிஅவைகள் உன்னைத் தாங்குகின்றன. வியப்பிலும் வியப்பே!''

வேதங்கள் அறைகின்ற,
　　உலகெங்கும் விரிந்தன, உன்
பாதங்கள் இவை என்னில்,
　　படிவங்கள் எப்படியோ!
ஓதங்கொள் கடலன்றி
　　ஒன்றினொடு ஒன்றொவ்வாய் ;
பூதங்கள் தொறும் உறைந்தால்
　　அவையுன்னைப் பொறுக்குமோ!

ஆகவே ஆமருவியப்பனுக்கும் வேதபுரீசுவரர்க்கும் சமரசமான பத்தியை விராதன் வாயிலாக வெளிப்படுத்துகின்றான் கவிச் சக்கரவர்த்தி.

இந்து மதத்திலே முப்பெரும் பிரிவுகள், அத்வைதம் துவைதம் விசிஷ்டாத்வைதம் என்பன. இவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. ஒன்றை மற்றையது பூரணமாக்கும் வகையில் அமைந்தது. எத்தகைய கருத்திற்கும் உடன்பட்டவன் இறைவன்.

''ஒருவனாக உள்ளான்; ஆனாலும் பல வகைப்பட்ட தனித்த இயக்கங்கள் போலவும் தோற்றமளிக்கின்றான். இறைவன் ஓர்பொருள் இடத்து இருக்கின்றான் என்றும் சொல்லலாம். இல்லையென்றும் சொல்லலாம். பெருங்கடலைச் சமுத்திரம் என்று சொல்லப்படுகிறது. அதில் உள்ள வளைகுடாவும், நெடுங்கழியும் அதைச்

சார்ந்தவைகளே. கடவுள் தத்துவமானது அநாதியாய் இறுதியில்லாத காலத்தையே எட்டுவதாய் எங்கும் ஊடுருவி நிற்பதால் உள்ள ஒரு நியதித் தத்துவம்தான்''. இக்கருத்தை யுத்தகாண்டக் கடவுள் வாழ்த்துப் பாடலாகச் சின்னஞ்சிறு சொற்களாலேயே மிக அழகாகப் பாடுகின்றான்.

''ஒன்றே என்னில் ஒன்றேஆம்;
பலஎன்று உரைக்கின் பலவேஆம் ;
அன்றே என்னில் அன்றேஆம்;
ஆம்என்று உரைக்கின் ஆமேஆம்;
இன்றே என்னின் இன்றேஆம் ;
உளதுஎன்று உரைக்கின், உளதேஆம்;
நன்றே நம்பி குடிவாழ்க்கை!
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு?
அம்மா!''

இதற்கு மேலாகவும் வியாக்கியானம் செய்கின்றான்.

''பரம்பொருள் ஒன்றாக இருப்பவன். சந்திர சூரியர்களாய் இரண்டாய் இருப்பவன். மும்மூர்த்திகளாக இருப்பவன். நான்கு வேதமாக இருப்பவன், பஞ்சபூதங்களாக இருப்பவன். அவன் ஒருவனே தெய்வம். அவனை நெஞ்சில் வைப்போமாக.''

ஒன்றுஆய், இரண்டு சுடர்ஆய்,
ஒருமூன்றும் ஆகி,
பொன்றாத வேதம்ஒரு நான்கொடு,
ஐம்பூதம் ஆகி,
அன்றுஆகி, அண்டத்து ஆகத்துஆகிப்
புறத்தும் ஆகி,
நின்றான் ஒருவன் நீள்கழல்
நெஞ்சில் வைப்பாம்

பஞ்சபூதங்களின் விருத்தியை ஓரேபாட்டில் அமைத்து ஆஞ்சநேயப் பெருமானை வாழ்த்தி வணங்குகிறான்.

அஞ்சிலே ஒன்று பெற்றான்,
அஞ்சிலே ஒன்றைத் தாவி,
அஞ்சிலே ஒன்று ஆறுக,
ஆர்உயிர் காக்க ஏகி,
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண்டு, அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான்,
அவன் எம்மை அளித்துக் காப்பான்!

இப்பாடல் சில விஷ்ணு தலங்களிலே, நாள் தோறும் பாராயணம் செய்யப்பட்டு வருவதை இன்றும் கண்கூடாகக் காணலாம்.

''அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் இறைவன் இருக்கின்றான். சராசரங்களில் உள்ள உயிர்கள்தோறும் உறைகின்றான். நன்மையும் நல்லறிவும் அவனே ஆகித், தீமையை அழிப்பவனும், தீயோரைக் கடிபவனும், நல்லோரைக் காப்பவனும் ஆகிப் பல நிலைகளிலும் இறைவனை உணரும்போது அவன் எல்லாமும் ஆகின்றான். தீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற கொள்கையில் தன்னால் தன்னுள் உறையும் இறைவனால் நிகழ்கின்றது'

இக்கருத்தை இந்திரன் இராமனைத்துதிக்குமிடத்து அவன் வாயிலாகக் கவிஞன் வெளிப்படுத்துகிறான் :

ஒன்றுஆகி, மூலத்து உருவம் பலஆகி,
உணர்வும் உயிரும்பிறிது ஆகி, ஊழி
சென்று ஆசறும் காலத்து அந்நிலையது ஆகி,
திறத்து உலகம்தான் ஆகி, செஞ்சவேநின்ற
நன்று ஆய ஞானத் தனிக் கொழுந்தே! எங்கள்
நவைதீர்க்கும் நாயகமே! நல்வினையே
நோக்கி
நின்றாரைக் காத்தி; அயலோரைக் காய்தி
நிலை இல்லாத் தீவினையும்நீ தந்ததுஅன்றே?

நாலு வேதத்திற்கும் வேலி போன்றவன் வாலி, அளப்பரிய வரபலம் பெற்றவன். கடலைக் கடைந்து தேவர்க்கு அமுதம் ஈந்தவன், அப்பேர்க் கொத்த வலிமையையும் பெருமையையும் உடைய வாலி, இராமனது அம்பால் அடியுண்டு வீழ்ந்தவன், இறையுணர்வு பெற்றவுடன் அவனது வாக்கால் 'அத்வைத சித்தாந்தத்தைக் கவிஞன் கோடியிட்டுக் காட்டுகிறான்.

ஏவுகூர் வாளினால் எய்து, நாய்அடியனேன்
ஆவிபோம் வேலைவாய், அறிவுதந்து
அருளினாய் !
மூவர் நீ! முதல்வன்நீ! முற்றும்நீ! மற்றும் நீ!
பாவம்நீ! தருமம்நீ! பகையும்நீ! உறவும்நீ!

சமயங்களின் உண்மை நிலையை நோக்கும் போது அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டவை அல்ல என்பது தெளிவாகும். எல்லா நதிகளும் கடலையே நோக்கி ஓடுகின்றன. அதுபோல எல்லாச் சமயங்களும் இறைவனையே நோக்கிச் செல்கின்றன. ஒரே பொருளுக்கு வெவ்வேறு மொழியில் வெவ்வேறு பெயர்கள் இருப்பது போவும், ஒரே பொருளின் தனித்தனிப் பகுதிகளை மட்டும் கண்டு அதுதான் முழுப்பொருள் என்று கருதிப் பெயரிடுவது போலவும் தான், உலகத்தில் பற்பல சமயங்கள் உள்ளன. பாடுகின்றான்.

கல்லிடைப் பிறந்து, போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்,
எல்லைஇல் மறைகளாலும்
இயம்பரும் பொருள் ஈது என்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித்,
துறைதொறும், பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
பொருளும்போல், பரந்தது அன்றே

R. RAJU, Dy. Commissioner H.Qrs. (Retired) HR&CE Admn. Dept.

தோள் கண்டார், தோளே கண்டார்:
தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார், தாளே கண்டார்;
தடக்கை கண்டாரும், அஃதே
வாள் கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத்து அன்னான்
உருவு கண்டாரை ஒத்தார்.

உபநிடதக் கருத்துக்களை உன்னிப்பாகப் பயின்றவன் கம்பன், ஈசாவாஸ்ய உபநிடதம், ''உயிர்கள் அனைத்தும் ஈஸ்வரன் படைப்பு. ஆகையால் அவனுக்கு எல்லாம் அர்ப்பணித்து விட்டுத் தியாகமயமான வாழ்க்கை நடத்து. பிற - பிறர்பொருள்களில் நாட்டம் கொள்ளாதே'' என்று கூறுகின்றது. இதை அப்படியே தமிழில் கவியாக்குகின்றான்.

ஓம் எனும் ஓர்எழுத்து
அதனின், உன்உயிர்
ஆம் அவன், அறிவினுக்கு
அறிவும் ஆயினான்;
தாம மூவுலகும்
தழுவிச் சார்தலால்,
தூமமும் கனலும் போல்,
தொடர்ந்த தோற்றத்தான்!

ஓங்காரத்தின் உச்சியில் நரசிம்மர் தூணிலிருந்து தோன்றி இரண்ய வதம் நடைபெறுகிறது. நரசிம்மத்தின் சீற்றமும் கோபமும் அடங்கவில்லை. சிங்கப்பெருமான் விஸ்வரூபத்தின் பேராற்றலைக் கண்டு வியப்பதுடன் நடுங்கவும் செய்கிறார்கள். பிரம்மதேவன் தான், பணிந்து வணக்கம் செலுத்திப் பேசுகின்றான்.

''உன்னுடைய எங்கும் நிறைந்த பரிபூரணமான தத்துவத்தில் இருந்து பல்லாயிரக் கணக்கான அண்டங்கள் உற்பத்தியாகின்றன. அவைகளின் தன்மை கடலில் எண்ணிறந்தளவாகத் தோன்றி மறையும் நீர்க்குமிழிகள்போல அளப்பரிய ஆற்றலைக் கொண்டவனாகிய நீ, இச்சிறு குழந்தைக்காக இந்த மூர்த்தம் எடுத்தாயே! அதனால் வரம்பில்லாத உனக்கு ஒரு வரம்பு ஏற்பட்டது. ஒரு பெரிய குறையல்லவா''

பல் ஆயிரகோடி
அண்டம் பனிக்கடலுள்
நில்லாத மொக்குள்எனத்
தோன்றுமால் நின் உழையே;
எல்லா உருவமுமாய்
நின்றாய்க்கு, இவ்வுருவம்
வல்லே படைத்தால்,
வரம்புண்மை ஆகாதோ?

பிரம்மதேவனுக்குச் சத்திய லோகத்தில் தன் நிலை தெரியவில்லை. இப்பொழுதுதான் உணர ஆரம்பிக்கிறான். 'இறைவன்' பேரண்டத்தில் நீதான் ஒரு வஸ்துவாய் நிறைந்திருக்கிறாய். அநாதியாய் அல்லாமல் எங்கும் எக்காலத்தும் நிறைந்திருக்கிறாய். யார் எது செய்தாலும் அது உன் செயல்தான். உண்மை இப்படியிருக்க, 'இது என் சிருஷ்டி' என்று குறித்துச் சொல்ல என்ன இருக்கிறது. நீ பொன்மயம். அதற்குள்ளே ஒரு பொற்கொல்லனை அந்தப் பொன்னே சிருஷ்டி செய்து கொண்டால், அந்தப் பொற்கொல்லனுக்கு ஏது பெருமை. அது போன்றுதான் என் படைப்பும்

நின்னுளே என்னை
நிருமித்தாய், நீயல்லா(து)
என்னுளே எப்பொருளை
யாவரையே யானீன்றேன்,
பின் இலேன், முன் இலேன்,
எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியதோர்
பொற்கொல்லன் போல்கின்றேன்!

ஆயிரம் ஆயிரம் நாமரூப பேதங்கள் இருந்தாலும் பரம்பொருள் ஒன்றுதான் என்பதைக் கதைப் போக்கில் அடிக்கடி சுட்டிக் காட்டத் தவறவில்லை, கம்பன். அயோத்தி வள்ளல் யாரென்பதை இராவணனுக்கு அநுமன் வாயிலாக உணர்த்துகிறான்.

''எங்கும் எப்பொழுதும் நிறைந்தவன் இறைவன். அதனால் அவனுடைய உருவத்தில் முடியென்றும், நடுஎன்றும், அடியென்றும் கிடையாது. அவன்அனாதியாய் உள்ளவன். எந்தத் தத்துவம் கொண்டும் அளக்க முடியாதவன். சிந்தையாலும் தொட முடியாதவன். வைகுண்டம், சத்தியலோகம், கயிலையங்கிரி இவைகளையெல்லாம் விட்டு, மும்மூர்த்திகளும் தம் சின்னங்களைத் துறந்து ஒருமூர்த்தியாகக் கோதண்டம் தரித்து வந்தவன் இராமன்.''

மூலமும் நடுவும் ஈறும்
இல்லையாய் மும்மைத்தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன், கைவில் ஏந்திச்
சூலமும் திகிரிசங்கும்
கரகமுந் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்பும்விட்(டு), அயோத்திவந்தான்!

இக்கருத்தை நம்ப மறுத்த இராவணேசுவரன் இறுதிநாட் போரில் இராமன் யாரென்று உணர்ந்து சொல்லுகிறான்.

'சிவனோ? அல்லன்; நான்முகன்
அல்லன்; திருமாலாம்
அவனோ! அல்லன்; மெய்வரம்
எல்லாம் அடுகின்றான்;

தவனோ என்னின், செய்து
முடிக்கும் தரமல்லன்;
இவனோதான் அவ்வேத
முதற்காரணன் என்றான்!

கம்பன் காலத்திற்கு முன்னால் இராமனுக்குத் தனியாகக் கோயில்கள் இருந்தனவா என்று கேட்டால் தெளிவாகச் சொல்ல முடியாது. ஆனால் அவனது இராமாயணக் காவியப்படைப்பிற்குப் பின், பல இடங்களில் தமிழ் நாட்டில் சிறந்த கோயில்கள் உருவாகியுள்ளன. காரணம் இராமனை வெறும் காப்பியத் தலைவனாக மக்கள் கொள்ளவில்லை. பெருந்தெய்வம் என்றே கொண்டாடினார்கள். கம்பராமாயணப் பிரசங்கிகள் என்று கதை சொல்லுகிற பரம்பரையே உருவாயிற்று. இராமபக்தி இயக்கம் சமுதாயத்தில் நன்கு பரவலாயிற்று. இதன் காரணமாகவே கும்பகோணத்தின் மையத்தில் 15ஆம் நூற்றாண்டில் அற்புதமான இராமசாமி கோயில் உருவாகியது. இங்கு சீதாராமன் பட்டாபிஷேக கோலத்தில் எழுந்தருளியுள்ளான். பக்திக் கோயிலாக மட்டுமல்லாமல், கலைக்கோயிலாகவும் காட்சியளிக்கிறது.

இதோடு மட்டுமல்லாமல், பொன்னிவள நாட்டில் நீடாமங்கலம், முடிகொண்டான், தில்லைவிளாகம், அடம்பர், வடுவூர், தலைஞாயிறு ஆகிய இந்த ஊர்களில் எல்லாம் இராமனுக்குத் தனிப் பெரும் ஆலயங்கள் உருவாகியுள்ளன. கங்கைக் கரையில் பிறந்து வளர்ந்தவனைக் காவிரிக்கரைகளில் எல்லாம் நிலைத்து நிற்கச் செய்ததோடு மட்டுமல்லாமல், பொதுவுடைமைத் தெய்வம் என்று ஆக்கி, வடக்கையும் தெற்கையும் இணைத்துப் பாரதத்தின் கலாச்சாரத்தையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்தச் செய்தவன் கம்பன் என்றுகூடச் சொல்லலாம்.

இராமபிரானது வள்ளல் தன்மையைத் தமிழினத்திற்கு வெள்ளிடைமலைபோல் எடுத்துக் காட்டியவன் கம்பநாடு உடைய வள்ளல், சிரஞ்சீவி வரம் பெற்ற இருபெரும் வைணவ நம்பிகளாகிய ஆஞ்சநேயனின் தாஸ்ய பக்தியையும், விபீஷண ஆழ்வாரின் சரணாகதி பக்தியையும் விஸ்தாரம் செய்தவனும் அவனே.

பெருமாளின் பெருமையைத் தங்களது அருளிச் செயல்களால் உலகத்திற்கு உணர்த்தியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். அவர்களின் அப்பணியைத் தொடர்ந்து செய்து இராம பக்தி இயக்கம் தழைத்தோங்கச் செய்தவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன் என்று துணிந்து சொல்லலாம். வால்மீகி மகரிஷி-ஆழ்வார்கள்-அவர்கள் வழிவந்த குரு பரம்பரையினர்-ஆகியோரின் பக்திநெறிக் கூட்டு மேதாவிலாசத்திற்குக் கம்பன் சரிநிகர் சமானமாக நிற்கின்றான் என்று சொன்னால் அது வெறும் புகழ்ச்சியில்லை. முற்றிலும் உண்மை.

***

K. RAO
Dy. Commissioner H.Qrs
(Retired)
HR&CE Administration Dept

# திருவாய்மொழிச் சிறப்பு

திருவாய்மொழி உறுதிப் பொருள்களைத் தெளிவுறக் கூறுகின்ற பிரபந்தங்களில் முதன்மை பெற்றது; பகவானுடைய குணங்களை அனுபவித்தலால் உண்டான பெருமகிழ்ச்சியின் விளைவாக வெளியிடப் பெற்றது; திருவருளால் விளைந்த ஞானத்தின் பயனாகத் தோன்றியது; வேதப் பொருள்களை அறிந்த பெரியோர் அனைவரும் அங்கீகரித்தது; திருமகள் கேள்வனே இப்பிரபந்தங்களுக்குத் தலைவன்; எம்பெருமானின் திருவடிகளுக்குத்தொண்டு செய்ய விழைந்திருப்போர் எவரும் கற்கத் தகுவது இது ; முமுட்சுக்களும் முத்தரும் நித்தியரும் எம்பெருமானும் இவற்றின் சுவையை அநுபவிக்கின்றவர்கள்; பகவானுக்குச் செய்யப்படும் கைங்கரியம் ஆகிய நிரதிசய புருஷார்த்தம் இத்தகையதாக இருக்கும் என்பதனைத் திருவாய்மொழியினால் யாவரும் தெளிய உணரலாம்.

மேலும், திருவாய்மொழியானது வேதப் பொருள்களையெல்லாம் தமிழ் மொழியினால் எளிது இனிது அருளிச் செய்வது; தெளியாத மறைநிலங்களையெல்லாம் தெளிய விளக்கி நலஞ் செய்வது; எம்பெருமான் தானே பல பிறவிகள் எதிர் சூழல் புக்குத் தொடர்ந்து பற்றுதற்குரிய நற்பேறு மிக்கவரும், எப்பொழுதும் பகவானின் திருவருளுக்குக் கொள்கலமாக விளங்குபவரும், தத்துவ இதங்களில் வல்லவராய், அவற்றினுடைய உபதேசத்தில் மூண்டவருமாய்த் திகழ்ந்த நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தது; பெரியோர்கள் மிக்குள்ள நாடுகள் எங்கும் வழங்குவது; பிற தேசங்களிலே பிறந்து சிறப்பு வாய்ந்தவராக உள்ள பெரியோரும் இவற்றின் வேறொன்றற்கில்லாத சிறப்பைக் கேட்டு, ‘இதனைக் கற்கைக்குத் தகுதியாக இம்மொழி வழங்கும் நாட்டிலே பிறக்கும் பேறு பெற்றிலோமே!’ என வியந்து புகழ்வது; எம்பெருமானின் பெருமைகளைக் கூறி, அவரை உள்ளங்கை நெல்லிக்கனியைப் போன்று நாம் அறிந்து கொள்ளும்படி செய்வது; பக்தியைத் தோற்றுவிப்பதுடன், தோன்றிய பக்தியினை மேன்மேலும் வளர்த்துப் பெருகுவிப்பது; கற்றல் கேட்டல் செய்யும்பொழுதே எல்லையற்ற பெருவிருப்பையுண்டாக்குவது. இவ்வாற்றால் திருவாய்மொழியின் அருமை பெருமைகளை யாவரும் இனிதுணரலாம்.

—ஆசிரியர்

# இசையும் கோயிற் சிற்பங்களும்

டாக்டர் திரு மெ. சுந்தரம், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், மாநிலக் கல்லூரி, சென்னை,

இறைவன் உருவே இசை. ஆதிகாலந் தொட்டு ஒரு பழந்தமிழ் மரபு, இறைவனது அருவத் திருமேனியே இசையாகும் என்பது. அவன் ''ஏழிசையாய் இசைப்பயனாய்'' இயங்குகின்றான் என்றார் சுந்தரர். ''ஓசையொலியெலாம் ஆனாய் நீயே'' என்றார் அப்பரும். அதன் விளக்கமே நடராசரது ஆனந்தத் தாண்டவ ரூபமாகும். ஆடிய பாதனின் ஒரு கையில் உள்ளது உடுக்கை. அப்பெருமான் அதனை இயக்கி இசையுடன் நடனமாடுகிறான். அப்போது சகல லோகங்களும், சகல உயிருள்ளனவும், அல்லனவும் தோன்றுகின்றன; இயங்குகின்றன. நடராசர் தாண்டவமாட, கலைமகள் வீணையை மீட்ட, இந்திரன் வேணு கானஞ் செய்கின்றான். பிரம்மாவின் தாளத்துடன் சிறப்புற்ற திருமகள் இசையோடு பாடுகின்றாள். திருமால் மிருதங்கம் வாசிக்க, தேவர்கள் நின்று அம்பலக் கூத்தனைச் சேவிக்கின்றனர். நடராசரது தாண்டவம் இறைவனது ஐந்தொழில் தத்துவத்தை உருவாக்குகின்றது. உடுக்கையின் இசையால் உலகம் தோற்றமாகின்றது. இந்த தேவகோஷத்தின் நாதமும், நடனமும் உலகத்தில் பிரதிபலிக்கின்றன. உலகத்திலுள்ள பல்வகைத் தோற்றமும் இந்த இசையினால் இயங்குகின்றன. இவ்விசையே அதன் உயிர்த் தன்மையுமாகும்.

**நம் கலைகள்:**

இசை, நடனம், சித்திரம், சிற்பம் என்பன ஒரு நாட்டின் சிறந்த கலைகளாகும். அவை அந்த நாட்டின் பழமையையும் பண்பையும் புலப்படுத்துவன. மற்ற நாட்டுக் கலைகள் பொதுவாக மனவெழுச்சிக்கானவை ; அழகுத் தன்மைக்கானவை; இன்னும் தனிப்பட்ட காரணங்களைக் கொண்டவையுமாகும். ஆனால் நமது நாட்டுக் கலைகளுக்கு ஒரு தனிப்பட்ட சிறப்புண்டு. அதுதான் அவைகளின் உயிர்த்தன்மையாகும். மனவெழுச்சி குறைபடலாம். அழகு, பல காரணங்களால் ஒரே தன்மைத்தானதன்று. ஆனால் அவைகளின் உயிர்ப்பண்பு கலைப்பொருள்களை விட்டு விலகுவதன்று. எக்காலத்தும், எவ்வகை மனத்தையும் இயக்கவல்லதாகும். ஆதலால் தான், நம் கலைகளை உலகம் போற்றுகின்றது.

**நம் கலைக் களஞ்சியங்கள்:**

நம் திருக்கோயில்களே நம் கலைக்களஞ்சியங்களாகும். நாடெங்கும் சிறிதும் பெரிதுமாக எழுப்பப் பெற்றுள்ள கோயில்கள் இக்கலைகளைத் தம்முள்ளே பொதிந்து, அவைகளின் நிலைக்களஞ்சியமாயின. அவற்றின் பிறிதொரு சிறப்பு, நம் ஆன்றோர்கள் மனதிற் கெட்டாத பரம்பொருளை அங்குக் கோயில் கொள்ள இடஞ் செய்துள்ளவையேயாகும். ஆண்டவன் உறையும் கோயில் அழகும், உயிர்த் தன்மையும் பெறவேண்டுவதல்லவா ? அருளே உருவாகிய ஆண்டவன் அங்கு அழகுடன் திகழ்கிறான். அன்பும் அருளும் அங்கு இணைந்தன. அவைகளின் உயிர்த்தன்மை அங்குள்ள இசையிலும் நடனத்திலும், சித்திரத்திலும் விளங்குகின்றன.

**கோயிற் சிற்ப உருவங்கள்:**

இவைகளில் பெரும்பாலும் கோயில் திருமேனிகளேயாம். சரஸ்வதி வீணையும், இந்திரன் குழலும், பிரமா தாளமும், விஷ்ணு மத்தளமும், வேணுகோபாலமூர்த்தி வேய்ங்குழலுடனும் திகழக் காண்கிறோம். சிற்சில இடங்களில் சிவனார் வீணையைத் தாங்கி வீணாதர தட்சிணாமூர்த்தியாகக் காண்கிறோம். சிவன் தட்சிணாமூர்த்தம் கொண்டெழுந்தருளியிருக்கும்போது தும்புரு, நாரதர், சுகர் முதலிய ரிஷிகள் இசையுடன் சாம வேதத்தை வீணையில் தரிசித்துத் தங்களுக்கு அருள் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தனராம். அந்த அவதாரமே வீணாதர தட்சிணாமூர்த்தம் எனச் சிவ நூல்கள் கூறுகின்றன. இதன் அழகிய சிற்பமொன்று புதுக்கோட்டைப் புராதனப் பொருட்காட்சிச் சாலையிலுள்ளது. அது 10ஆம் நூற்றாண்டினதாகும். அங்குத் தட்சிணாமூர்த்தி வீணையின் கல்வெட்டுக்கள் நன்றாய்த் தெரிகின்றன. வலக்கையில் விரல்கள்மெட்டுக்களைத் தொட்டு வாசித்தும், இடக்கைவிரல்கள் தந்திகளை மீட்டவும் காண்பது ஓர் அரிய வாசிப்பாகும். இதனையொத்த மற்றொரு சிற்பம் அலகாபாத் கோட்டைக் குகைக்கோயிலிலுள்ளது. தென்னிந்தியக் கோயில் பலவற்றுள் இம்மூர்த்தம் பஞ்சலோகச்சிற்பமாகவும்காணப்படுகிறது. தஞ்சைப் பிரகதீசர் கோயிலிலுள்ளது சிறப்புடையது. ஆனால் எக்காரணத்தாலோ சிவனார் தாங்கிய வீணையின் சிற்பம் நீங்கியுள்ளது.

பழமையான சமய நூல் ஒன்றில் காண்பதாவது, கின்னரேசன் மனைவியர், பரமேசுவரனைக் குறித்து வீணா கானஞ்செய்து தோத்தரித்துத் தங்கள் விரல்களால் வாசித்துக்

கானஞ் செய்வதைக் காட்டிலும், தாங்களே வீணைரூபமாகி வாயிற்பாடுவதுபோல அவ் வீணையை ஈசுவரகானம் செய்ய வரந்தர வேண்டினாரென்பது, அவ்வரம் பெற்றுச் கின்னரமாதர் உருத்திரவீணை ரூபமாக இருந்து ஈசுவரனைக் கானஞ் செய்கின்றனர் என்பது, இதன் சிற்பங்கள் பலதிருக்கோயில்களில்எங்கும் வாசற்படிகளின் மேலுள்ள நிலைகளில் காணலாம். கி. பி. 7ஆம் நூற்றாண்டினரான அப்பர் சுவாமிகள் 'மாசில்வீணையும்மாலைமதியமும்' என்று குறிக்கின்றார். பாணபத்திரனுக்காக சிவபெருமான் மதுரையில் விறகுத் தலைவனாக விறகு விற்றபோது வீணைதாங்கி வாசித்து ஏமநாதனை விரட்டினார் என்பது ஒன்று. மாணிக்கவாசகர் காலத்தும் யாழும், வீணையும் இருந்தன என்பதற்கு ''இன்னிசை வீணையர் யாழினரொருபால்'' என்பதும் சான்றாகும்.

## நம் பழைய இசை நூல்கள்:

பல இசைநூல்களில் அக்காலத்திலிருந்த இசைக்கருவிகளைப் பற்றிய குறிப்புகள் இருந்தன. ஆனால் இக்காலத்தில் அந்நூல்கள் பெரும்பாலும் அழிந்தொழிந்தும் சிற்சில குறிப்புகள் நமக்கு இப்போது கிடைத்துள்ளன. அவைகளைச் சிவாகமங்கள், தியானசுலோகங்கள், அக்கினிபுராணம் போன்ற சமயநூல்கள், சிலப்பதிகாரம் போன்ற சங்க நூல்களிலுமே காணலாம். ஆனால் அவ்வகை இசைக்கருவிகளின் உண்மைத் தோற்றங்களை ஊகித்தே அறிய வேண்டியதாகின்றது. இந்நிலையில் நமக்குக் கிடைத்ததொரு பெருவாய்ப்பு நம் திருக்கோயில்களிலுள்ள இசைக் கருவிகளைத் தாங்கிய உருவச் சிற்பங்களேயாகும்.

இவை, திருக்கோயில் சுவர்களிலும் கூரைகளிலும் கோபுர விமானங்களிலும் மண்டபத் தூண்களிலும், காஞ்சிபுரம், சிதம்பரம், கும்பகோணம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை முதலிய பெருங்கோயில்களிலும் சிறிய கோயில்களிலும்கூட ஆங்காங்கே காண்கிறோம். தமிழகத்தை மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை ஆண்ட அரச பரம்பரையில் பல்லவர், முதன்மை பெற்றவராவர். தொண்டமண்டலத்தில் காஞ்சிபுரமே அவரது தலைநகரமாகும். அக்காலத்தில் அந்நகர் மிகச் சிறப்புற்றிருந்தமை இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேம்பட்டும், அதன் தொன்மையும் எழிலும் அதனுள் இப்போது விளங்கும் சிவாலயங்களும், வைணவ விண்ணகர்களும் சான்று பகரும். காஞ்சியில் பல்லவர் பல கோயில்களை எழுப்பித்தனர். பின்னர் வந்த அரச பரம்பரையினரும் அவ்வப்போது பல கோயில்களை எழுப்பித்தனர். அவைகளில் பழுதுபட்டவை போக எஞ்சியவை பலவாகும்.

## சில இசைச் சிற்பங்கள்:

இவற்றில் முதன் முதலாகக் கற்களால் கட்டப்பட்ட திருக்கோயில் கயிலாசநாதர் கோயிலாகும். இக்கோயில் கச்சிக்கற்றளிஎனத் தமிழ் நூல்களிலும் கல்வெட்டுகளிறலும்சிப்புப் பெற்றுள்ளது. இதனைக் கட்டியவன் 8-ஆம் நூற்றாண்டில் அங்கு அரசு செலுத்திய இராசசிம்ம பல்லவனாவான். இவன் இசையில் நிபுணன் என்றும், வீணைவாசிப்பதில் நாரதனையொத்தவன் என்றும், அக்கோயில் சாசனங்கள் கூறுகின்றன. இக்கோயிலிலுள்ள சிற்பங்கள் பல அக்கால இசைக்கருவிகளுடன் தோன்றுவது நமது இசை ஆராய்ச்சிக்கு ஒரு பெருத்த வாய்ப்பாகும். இக்கோயிலைக் கட்டிய அரசனதும் சிற்பியினதும், இசை ஆர்வத்திற்கு இச் சிற்பங்கள் எடுத்துக்காட்டாகும். இக்கயிலாசநாதர் கோயிலில் சிவபெருமான் வீணாதரனாக இரண்டு சிற்பங்களில் காண்கிறோம். இவ் விரண்டிலும் சிவனார் வீணையைக் கையில் ஏந்தியுள்ளார். இச்சிற்பங்களில் உள்ள வீணைகளுக்கும், தற்காலத்தே உபயோகிக்கும் வீணைக்கும் பலவேற்றுமைகள் உள்ளன. இக் கோயில் சிற்பங்களிலுள்ள வீணைகளுக்கு ஒரே சுரைக்காய்தான் உள்ளது. இச் சுரைக்காயைச் சிவன் தன் இடத்தோள்மேல் சார்த்தித் தண்டத்தில் மேல் அமைந்திருக்கும் தந்திகளை மீட்டுகின்றார். ஒரு சிற்பத்தில் வீணைக்கு நான்கு நரம்புகளும், மற்றொரு சிற்பத்தில் ஒரே நரம்பும் செதுக்கப்பட்டிருக்கின்றது.

இக்கோயிலின் மற்றுமொரு பாகத்தில் பார்வதி கையில் ஒரு வீணையுள்ளது. இச் சிற்ப வீணையை ஏறக் குறையத் தற்கால வீணைக்கு ஒப்பிடலாம். ஆனால் இதற்கு மெட்டுகள் அமைக்கப்படவில்லை. தண்டத்தின் நுனியில் மகர முகத்துக்குப் பதிலாக ஒரு இலை போன்ற வடிவம் அமைந்திருக்கிறது. இம் மாதிரியான வீணைகளைச் சிதம்பரம் நடராசர் கோயிற் சிற்பங்களில் காணலாம். மற்றுமொரு வீணை தாங்கிய பெண்ணொருத்தியின் அழகிய சிற்பம் கும்பகோணம் இராமசாமி கோயில் தூண்களில் காணப்படுகிறது. பண்டையதமிழ் நூல்கள் யாழ் என்ற சிறந்த நரம்பு இசைக் கருவியையும் ஒழல் என்ற துளைக் கருவியையுமே சிறப்பாகக் கூறுவதால் வீணை பிற்காலத்தில் வடநாட்டினின்று தென்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட இசைக்கருவி எனலாம். 2ஆம் நூற்றாண்டினதான திருக்குறளிலும், சிலப்பதிகாரத்திலும் வீணையைப் பற்றிய குறிப்பொன்றும் இல்லை. மாணிக்க வாசகர் யாழும். வீணையும் வெவ்வேறு இசைக்கருவிகள் என்பதற்குத் திருவாசகத்தில், ''இன்னிசை வீணையர், யாழினர், ஒருபால்'' எனக்கூறுவதும், அப்பர் சுவாமிகள் ''மாசில் வீணையும், மாலை மதியமும்'' என்று கூறுவதும், 5 ஆவது 8ஆவது நூற்றாண்டுகளில் வீணை ஒரு சிறப்புற்ற இசைக்கருவியாய் இருந்திருப்பதற்குச் சான்றாகத் திகழ்கின்றது. வீணை தஞ்சாவூரை ஆண்ட இரகுநாத நாயக்க மன்னரின் (கி. பி. 1600-1634) காலத்தில்தான் பூரண சொரூபம் அடைந்தது என்றும், இதிலுள்ள சில இசை சம்பந்தமான வசதிகள் யாழில் இல்லாததால் 12 ஆம் நூற்றாண்டில் கைவிடப்பட்டதென்றும் இசை நூலறிஞர் கருதுவர்.

பண்டைத் தமிழ் நாட்டினரின் சிறந்த இசைக்கருவி யாழ் ஆகும். ஆயிரம் நரம்பு

களையுடைய பேரியாழ் முதலாக, பாலையாழ் குறிஞ்சியாழ், மருதயாழ், நெய்தல்யாழ், சீறியாழ், மகரயாழ், சகோடயாழ் இன்னும் சாதாரண யாழ் வரை பலவகைப்பட்ட யாழ்களைப் பற்றிச் சிலப்பதிகாரம், முதலிய சங்க நூல்களில் ஆதாரங்கள் கிடைக்கின்றன. திருஞானசம்பந்தமூர்த்திகளது காலத்தவரான திருநீலகண்டயாழ்ப்பாணர் யாழில் தம்மைப்பாடிக் கொண்டிருக்கும்போது, சிவன் அவருக்கு ஆசனந் தந்து யாழ் கேட்டனர் எனப் பெரிய புராணம் கூறும். திருப்பாணாழ்வாரைப் பற்றிய நமது வைணவ நூல்களும் விவரமாகக் கூறுகின்றன. தமிழ் நூல்களில் வர்ணித்துள்ள யாழ்களை யொட்டி இரண்டு இசைக்கருவிகள் கயிலாசநாதர் கோயிற் சிற்பங்களில் உள்ளன.

அண்மையில் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள திருமெய்யம் கோயிலில் பள்ளிகொண்ட பெருமாள் கருவறைச் சுவர்மீது ஒரு அழகிய யாழ்ச்சிற்பத்தைக் கண்டு பேராசிரியர் சாம்பமூர்த்தி ஐயர் விளக்குகின்றார். அந்தச் சிற்பத்தில் ரிஷிக்கூட்டத்தின் நடுவில் நாரதர், யாழுடனும் தும்புரு வீணையுடனும் விளங்குகின்றார். நாரதர் யாழ் வாசிக்கும் முறையில் காணப்படுகிறார். அடிப் பக்கத்தில் படக்கைப்போன்ற பாகமும் அதன் ஒரு ஓரத்திலிருந்து கிளம்பும் தண்டியும் காணப்படுகின்றது. நாரதரின் இடக்கை தண்டியின்மேலும், வலக்கைவிரல்கள் தந்தியின் மேலும் காணப்படுகின்றன. இந்தச் சிற்பம் பல்லவ அரசன் மகேந்திரவர்மன் (கி.பி. 600-630) காலத்தில் ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது. நமக்கு இதுவரை கிடைத்த யாழின் உருவங்களில் திருமெய்யம்கோயிற் சிற்பம் பல வகையாலும் சிறந்த தென்பர்.

பல்லவ அரசர்கள் இசையில் வல்லவர்கள். மகேந்திர வர்மன் இசை காரணமாக மத்த விலாசன் என்ற விருதுபெற்றான். இவனே குடுமியான்மலையிலுள்ள பெயர்பெற்றஇசைக் கல்வெட்டிற்கும் காரணமாயிருந்தவன். இந்தக் கல்வெட்டில் அவ்வரசன் காலத்தில் மறைந்து கொண்டு போயிருக்கும் பழைய இராகங்களைக் காப்பாற்றியதுபோல், திருமெய்யம்கோயிலில் இவ்வரிய சிற்பத்தில் மறைந்துகொண்டுபோயிருக்கும் இசைக் கருவியாகிய யாழைக் காப்பாற்றியிருப்பது போற்றத்தக்கதாகும். மகேந்திரவர்மனது பேரன் இராசசிம்மன் காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலைக் கட்டியவன். இவன் பெயர்பெற்ற இசையாளன். இவனை 'வாத்திய வித்யாதரன், ஆதோத்தியதும்புரு, சீர்வசன நாரதன் என்று விருதுகள் கூறுகின்றன. ஆதோத்தியம் என்பது வீணை முரசு குழல் தாளம் என்ற நான்குவகை இசைக்கருவிகளைக் குறிக்கும். இசை பற்றிய கல்வெட்டுக்கள் குடுமியான் மலையில் மட்டுமின்றி, திருமெய்யம்கோயில் சுவரிலும் உள்ளன. தம்புரா என்பது பக்கச்சுருதிக்கு உதவும் நரம்புக் கருவிகளில் ஒன்றாகும். பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் நடனத்தைச் சேர்ந்த இன்னிசைக்குத் தம்புராவைப் பெரும்பாலும் உபயோகித்து வந்ததாகத் தெரிகிறது. காஞ்சி கயிலாசநாதர் கோயிலில் மூன்று விதமான தம்புராவைக் காணலாம்.

தாளம் என்பதும் ஒருவகை இசைக்கருவியாம். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்' திருக்கோலக்காவில் பதிகம் பாடிக் கைத்தாளமிட்டுப் பண்ணோடு பாடுதலைக் கண்டு கருணை கூர்ந்து பரமேசுவரன், பொற்றாளம் அருளினான் என்பதும், அம்மையார் அப்பொற்றாளத்திற்கு ஓசை அருளினார் என்பதும் சிவபுராணக்கூற்று. அதனைச் சிற்பமாக அக்கோயிலில் காணலாம்.

'அகப்பைக் கின்னரி' என்ற இசைக் கருவியொன்று கயிலாசநாதர் கோயில் சுவரில் செதுக்கப்பட்டிருக்கிறது. இதையொத்த அகப்பைக் கின்னரி இராமேசுவரம் கோயிலில் ஒரு கின்னரமரத்தின் கையிலும் தோன்றுகிறது.

கயிலாசநாதர் கோயிலில் எங்கெங்குச் சிவனது தாண்டவக்கோலச் சிற்பத்தைக் காண்கிறோமோ, அங்கெல்லாம்சிவகணங்கள் வாயில் புல்லாங்குழலை வைத்துக் கொண்டு உற்சாகத்துடன் ஊதுவதைக் காணலாம். சிதம்பரம் கீழைக்கோபுர வாயில் நடனச் சிற்பங்களுடன் ஒரு பூதகணம் கையில் குழலேந்தி நடனத்தை ரசிப்பதுபோல் தோன்றும்.

---

## திருத் தவத்துறைப் பெருந் திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ்

''அருவம் உருவம் அருவுருவம் அமையும் ஒருநான்கு ஒருநான்குஒன்று
ஆக ஒன்பான் திருமேனி அடிகள் நிலைக்குத் தகஉயிர்கள்
பொரும்மும் மலப்பா தகக்குழிசிப் புலைப்புன் தொடக்கைப் பெறவருவான்
பொருளா கியசத திநிபாதம் பொருந்தி அகன்று சிவானந்தத்து
ஒருவாது உறையச் சத்திமுதல் ஒளிரும் வாணி ஈறாக
ஓர்ஏழ் பேத மாய்நிற்கும் உமையே அமையா வளம்மிக்க
மருவார் சோலைத் தவத்துறையில் வாழ்வே வருக வருகவே
வான்தோய் குடுமி வரைமுளைத்த மருந்தே வருக வருகவே''

(திருத்தவத்துறை—லால்குடி)

—பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

# உலகியலில் இறைமை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், M.A., Ph.D.,
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-20

மனிதனின் பகுத்தறிவு இறைமையை உருவாக்குகின்றது. ஒரு நெறிமுறையுடன் செயற்படும் அண்டசராசரங்களும், மனிதனால் அடக்கலாகா ஐம்பூதத்தின் செயல் நிலையும், ஆய்வுக்கும் அறிவுக்கும் எட்டாத பல உலகியல் உண்மைகளும், அனைத்திற்கும் அடிப்படையாக அமையும் அளவிட்டறியாப் பேராற்றலை நினைந்து, அதனை இறைமையாக ஆக்குகின்றன. கற்பனையால் அப்பேராற்றலுக்கு உருவமும் பண்பும் செயற்பாடுகளும் சேர்கின்றன. தனிப்பட்ட மனிதனின் உளநிலைக்கு ஏற்பவும் அறிவுநிலைக்கு ஏற்பவும் இவை விரிந்தும் வேறுபட்டும் செல்கின்றது.

உலகம் அனைத்திற்கும் காரணமாக, தோற்றுவித்தவராக, வாழ்விப்பவராக, இயக்கிக் கொண்டிருப்பவராக இறைவன் அமைகின்றான். ஒன்றாயும், உடனாயும் வேறாயும் இருந்து உலகக் காட்சியைக் கண்டுகொண்டு இருக்கின்ற இறைவனை, உலகின் தலைவனாகக் கருதுகின்றான் கம்பன். அத்தகைய இறைவன் பற்றிய உலக எண்ணங்களை உலகோர் கருத்துக்களை-மக்கள் நினைவுகளை—சான்றோர் சிந்தனைகளை மிக அழகாக அங்கங்குக் காட்டிச் செல்கின்றான் கம்பன். மானிடர் உணரும், அல்லது கூறும் எல்லா நிலைகளிலும் இறைவனைப் புலப்படுத்தும் கோட்பாட்டினவாகக் கவிஞன் அமைதலால் இறைக் கொள்கையிலும் உலக நோக்குப் பொருந்துகின்றது.

இறைவன் ஒருவன்தான் என்கின்றனர் ஒரு சாரார். அதனை ஏற்காத சிலர் பலதேவர் உளர் என எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். வேண்டுதல் வேண்டாத இறைவன் எப்பண்புகட்கும் அப்பாற்பட்டவன் என்கின்றனர் சிலர்; அவ்வாறு அமையாது ஆண்டவனின் அருட்பண்புகள் இவையிவை என வரையறுக்கின்றனர் வேறு சிலர். இவர்கள் ஒருபுறம் இருக்க, ஆண்டவன் என்று ஒருவன் இல்லை எனச் சாதிக்கின்றனர் பிறிதொரு சாரார். இருப்பதாலேயே இல்லை என்கின்றனர் இவர் என மறுத்துப் பல சான்று காட்டி அவன் உளன் எனும் உண்மையை வலியுறுத்துகின்றனர் மற்றையோர். இறையியல் வாதிகளும், அறிவு வாதிகளும் கொள்ளும் இம்முரண்பாட்டை உலகியலில் காண்கின்றான் கம்பன். அத்வைதச் சிந்தனையாளரும் வேதாந்திகளும் சித்தாந்திகளும், அறுவகைச் சமயத்தாரும், பகுத்தறிவு வாதிகளும் கொண்ட எண்ண வேறுபாட்டில் கருத்துச் செலுத்துகின்றான் கவிஞன். எல்லாவற்றிலும் எல்லாமாகி அமையும் இறைவன் உள்ளோருக்குஉள்ளோனாகவும், இல்லாருக்கு இல்லானாகவும் தென்படும் உலகியலை உட்கொள்ளுகின்றான். இயல்பு இதுதான் என்று அறுதியிட முடியாத இறைமையை உலகோர் அணுகும் இயல்பு இதுதான் எனக் காண்கின்றான். இவர்களின் கூற்றுக்களுக்கும் வரையறைகளுக்கும் எல்லாம் ஏற்புடையானாகி, இன்னும் யாரேனும் ஏதேனும் கூறின் அதற்கும் இடமளிப்பானாகி அமையும் இறையை, இவர்கள் சொல்லாலே சுட்டி, அதன் எல்லையின்மையையும் வரையறைக்குள் அடங்காமையையும் உள்ளத்தறிவால் உணரலாகா நிலையையும், கடந்து உள்நிற்கும் தன்மையையும் காட்டி விடுகின்றான்.

''ஒன்றே என்னின் ஒன்றே ஆம்
பல என்று உரைக்கின் பலவே ஆம்
அன்றே என்னின் அன்றே ஆம்
ஆமே என்னின் ஆமே ஆம்
இன்றே என்னின் இன்றே ஆம்
உளது என்று உரைக்கின் உளதேஆம்
நன்றே நம்பி குடி வாழ்க்கை
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு
அம்மா!

கவிநயத்தால் உலகுணர்வு வாயிலாக இறைவனை இனம் காட்டும் இக்காட்சியில் பெரிய குணநிறைவுடைய இறைவனின் இயல்பு நிலை புலப்படுத்தப்படுகின்றது.

காப்பியத் தொடக்கத்தில் அமைத்த கடவுள் வாழ்த்தோடு நின்றுவிடாது, காண்டங்கள்தோறும் கடவுள் வாழ்த்துடன் தொடக்கம் செய்த கவிஞன், காப்பியத் தலைவன் இராமனை, இறைவன் என்ற கோட்பாடுடனேயே கதைக்களன் முழுமையிலும் படைத்தமையால் இறையியல்பைப் பன்முறை அவனைக் காட்டியே உணர்த்தி விடுகின்றான். கவிக்கூற்றாகவும், இயல்பு உரைத்தலாகவும், உவமை யாட்சியிலும் அமைப்பதோடு, பிற பாத்திரங்கள் வழியாகவும் உணர்த்துகின்றான். இயற்கையிலும் இறைச் சூழலைக் காண்கின்றான். மெய்ப்பொருள் விவாதங்களும் விளக்

கங்களும் வாய்ப்பு ஏற்படும் இடத்தில் தருவதன் மூலம், காப்பியம் எங்கும் இறை உணர்வு பரவச் செய்கின்றான்.

இறைத் தத்துவ வெளியீட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டு, மூலநூலிலிருந்து வேறுபட்டுக் காப்பியக்களனில் இரணியன் வதையைக் கிளைக் கதையாகக் கம்பன் அமைப்பதாகத் தெரிகின்றது. மூலமுதலான இறைவனை உணர்ந்த பிரகலாதன் வாயிலாக அறிவுக்கு முடிவிடமான இறைமையைப் புலப் படுத்துகின்றான் கவிஞன். இறைத் தத்துவப் பிழிவாகவே அமையும்படிக்கு இப்படலத்தை வாய்ப்பாகக் கொள்ளுகின்றான். நீக்கமற எங்கும் எதிலும் நிறைந்து, அனாதி ஆகி, பழமைக்குப் பழமை ஆகி, புதுமைக்குப் புதுமை ஆகி, தோற்றமும் முடிவும் ஆகி, அனைத்திற் கும் மூலமும் முதலுமாய் அமையும் இறைமை, இரணியனுக்கு அளிக்கும் பிரகலாதனின் அறி வுரையில் வடிக்கப்படுகின்றது.

*தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை*
*தன்னுளை நின்றுதான் அவற்றைத்தாங்குவான்*
*பின்இலன், முன்இலன், ஒருவன், போகிலன்*
*தொல்நிலை ஒருவரால் துணியற் பாலதோ?*

தனக்கு எவரும் ஒப்பில்லாத இறைவனின் 'ஒரு தனி' நிலைமையும், அவனே உலகப்படைப்பு அனைத்திற்கும் காரணம் ஆனமையும் பர மாத்மாவாகி எங்கும் பரந்தும், சீவாத்மாவாகி எவ்வுயிரிலும் தங்கியமையும், சுயம்பு ஆனமை யும், அழிவற்ற தன்மையினனாதலும், மாறா தவனாதலும் இங்கு உணர்த்தப்படுகின்றன. கருதலளவையால் துணியப் பெற்ற முதற் கடவுளது இயல்பினை விரித்து உரைக்கும் முறையில், இது அமைவதாகக் கொள்வர். சிலம்பி தன் வாயின் கூர்நூல் இயையக் கூடு இயற்றுவதில் இறைமையைக் காட்டும் பாங் கும் இதனுடன் இணைத்து நோக்கற்பாலது.

இறைவனை அறியும் முயற்சியில் எழுந்த எண்ணக் கோவையான வேதங்களும் இறை வனை முழுமையாக அறியவோ காட்டவோ இல்லை. இறைவனைப் பற்றி வேதங்கள் ஒரு தன்மையாகக் கூறாமல் பல வகையாகக் கூறு கின்றமையின், அவ் இறைவனுடைய மாயச் செயல்கள் அறிதற்கு அரியனவாக அமைகின் றன. பரம்பொருள் ஒன்று என்றும், பல வென்றும், அகக் கண்ணாகிய ஞானத்தால் காணத்தக்க ஒளிப்பொருள் என்றும், புறக் கண்ணால் காணத்தக்க சூரியனாகிய பொருளே என்றும், ஆனந்த மயமானது என்றும், முக்- கரணங்களுக்கு எட்டாது அயலாக இருப்ப தென்றும் வேதங்கள் பலபடியாகக் கூறுவதை, நாகபாசப் படலத்தில் கருடன் உரையில் இராம னுக்கு வெளிப்படுத்தும் வாயிலாகப் படைக் கின்றான் கம்பன்.

*தான் அந்தம் இல்லை ; பல என்னும் ஒன்று;*
*தனி என்னும் ஒன்று, தவிரா*
*ஞானம் தொடர்ந்து சுடர் என்னும் ஒன்று,*
*நயனம் தொடர்ந்த ஒளியால்*
*வானம் தொடர்ந்த பதம் என்னும் ஒன்று: மறை*
*நாலும் அந்தம் அறியாது*
*ஆனந்தம் என்னும்; அயல்என்னும்; ஆர்இவ்*
*அதிரேக மாயை அறிவார் ?*

வேத விளக்காகியது தான், முடிவில்லை ஆத லால், மனமும் வாக்கும் செய்கையும் 'யானும் நீதானே' என்று சொல்லும், இது இருக்கு வேதக் கருத்து. 'யானுந் தானாய் ஒழிந்தானே' என்று சொல்லும் யசுர் வேதம். 'நீங்காத அறிவைக் கூடிய சோதி அவன் என்னாகி ஒழிந் தான்' என்று சொல்லும் சாமவேதம். இரண்டு கண்களும் பற்றிச் செல்லுகிற சோதியாலே பரமாகாசமாகக் கூடப் பெற்ற இடம் 'யானே நீயாகி என்னை ஆள்வானே' என்று கூறும் தகுதி பெற்றது அதர்வணவேதம், இவ்வாறு இறைவனின் அந்தம் அறியா வேதங்கள் வழி யாக இறைவனை முழுநலம்(ஆனந்தம்) என்ற அவ் ஆனந்தத்துக்கு இடமாகிய முழுவுணர்வு என்றும் கூறுமளவிற்கு, இறைவன் ஞானானந்த மயனாக அமைகின்றான்.

உலக அறிவியலுக்கு எட்டாது அமையும் இவ் இறைமை, பலராலும் ஏற்றுக் கொள்ள முடியாத, சர்ச்சைக்குரிய விஷயமாகவும் அமை கின்றது. இதனைப் போன்றே வினை, விதி, பிறப்பு, மறுமை பற்றிய செய்திகளும் சில ரால் உலகியலுக்கு உட்படாதனவாகவும், பகுத்தறிவுக்கு ஏற்காதனவாகவும், மூடநம் பிக்கையாகவும் கடியப்பட வேண்டியனவாக வும் கருதப்படுகின்றன. ஆயின் இக்கருத்துக் களை எதிர்க்கும் அதே உலகம், இவற்றை ஏற்றும், சார்ந்தும், நம்பியும், ஒட்டியும் செல் கின்ற மதத்தினையும் மக்களையும் கொண்டு இயல்வதால், இக்கொள்கைகள் வேரூன்றிய வாழ்வியலையும் பெருகக் காட்டுகின்றது. மதமே வாழ்க்கையாக, இறைமையே பற்றுக் கோடாக, வினையும் விதியுமே நெறியாக, இம்மையிலும் மறுமை நோக்கிய வாழ்வும் பிறப்பறுக்கும் விருப்பும் கொண்டு அமையும் நிலையில், இது உலகியலாகி முழுமை பெறு கின்றது எனக் கூறலாம்.

கம்பன் காட்டும் காப்பியக் கதைக்களவில் விதி மிகுதியாகச் செயலாற்றுகின்றது. தேவர் விருப்பும் முனிவர் விழைவும் நிறைவேற்ற அரக் கர் எனும் மரம் அழித்து அறத்தை மீட்கும் அடிப்படை நோக்கத்திற்காகப் பரம்பொருள் இராமனாக அவதரித்தான் என்பதில் ஏற் கெனவே நிச்சயிக்கப்பட்டுவிட்ட விதிநிலை புலப்படுகின்றது.

விதியின் வன்மையும் ஆற்றலும், இயற்கை யிலும் மாந்தரிடமும், செலவும் செல்வாக்கும் கொண்டு அமைகின்றன. இதனால் எதிர் பாராத பல செயல்கள், தீமைகள் நிகழ்ந்து விடுகின்றன. காரண காரியம் கற்பிக்க இய லாத அளவுக்கு நிகழ்வுகள் ஏற்படுகின்றன. எதிர்பாராதவரிடமிருந்து, ஆய்ந்தும், சிந்தித் தும் முயன்றும் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அமையும் இத்திருப்பங்களை விதி யின் செயலாக முடிவு செய்கிறோம். தடுக்க முடியாத, முயன்றும் வெற்றி பெறாத, மாற்ற

முடியாத இச்செயற்பாடுகளை நியாயப்படுத்த நமக்கு அப்பாற்பட்ட ஒரு பேராற்றலினை ஆக்கி, விதி எனப் பெயரிடுகின்றோம். இயல்பு நிலைக்கு வேறுபட்டுத் தீமையுறும்போது விதியை நோதல் போல, எதிர்பாரா நன்மை ஏற்படும்போதும் விதியை வியக்கின்றோம். தீமையால் உழலாது, துன்பத்தால் வருந்தாது, நன்மையால் மகிழாது, இன்பத்தால் திளைக்காது, அடங்கிய மனநிலைக்கு மனிதனைச் செயற்படுத்தி இறைமைக்கு நேராக நெறிப்படுத்த இவ்விதியும் ஒரு கருவியாக உருவாகியுள்ளமையைச் சமயமும் சமய நம்பிக்கையும் புலப்படுத்துகின்றன.

கூனியின் சூழ்ச்சியால், கைகேயியின் சூழ்வினையால் இராமனுக்கு முடியில்லை என அறிந்து சினந்து சீறி, நாணொலி எழுப்பிய இளவலை அமைதிப்படுத்தும் இராமன் உரையில், இவ்விதிபற்றிய எண்ணங்களை இயைக்கின்றான் கம்பன். எத்தீமைக்கும் தீயநிகழ்வுக்கும் ஒன்றையோ, ஒருவரையோ பழி கூறிவிடலாம்; ஆனால் அப்பிழை அல்லது குறை அவ் ஒன்றாலன்றி, விதியினைத் தடுக்கவும் மாற்றவும் இயலாத ஆற்றலால் நிகழ்ந்ததாகவும் இருக்கலாம்; விதியின் இப்பெரு வன்மையை உணருமிடத்துப் பிறரைப் பழிகூறும் உணர்வு மாய்ந்து ஒழிகின்றது. வரம் அளித்த தசரதனோ, வரம் கேட்ட கைகேயியோ, அரசு பெற்ற பரதனோ அன்றி, விதியே செயல்படுகின்றது; நீரின்மை நதியின் குற்றமன்றாதல் போல இராமன் முடியிழத்தலும் இவர் குற்றமன்று என்பது உணர்த்த, விதி பற்றிய கோட்பாடு இடமளிக்கின்றது.

நதியின் பிழை அன்று நறும்புனல்
இன்மை, அற்றே
பதியின் பிழை அன்று, பயந்து
நமைப் புரந்தாள்
மதியின் பிழை அன்று, மகன்பிழை
அன்று, மைந்த,
விதியின் பிழை, நீ இதற்கு என்னை
வெகுண்டது என்றான்

விதி என்பது நாம் அடக்கி ஆளலுக்கு அப்பாற்பட்ட ஒன்று எனும் இங்குப் புலப்படும் கருத்து, இலக்குவனால் எதிர்க்கப்படுகின்றது. வில்லாற்றலால் எல்லாம் ஆகும் எனும் செயற்பாட்டு நம்பிக்கையில் வெளிப்பட்டதாக இம்முரண் அமைகின்றது. செயலும் முயற்சியும் விதியை வெல்ல முடியும் எனவும், விதியை விதிக்கும் புதுமைபயக்க முடியும் எனவும், இளவல் எண்ணம் அமைகின்றது. இராமன் கூறிய அறிவுரைக்கு உடன்படாது, 'கோள் இழைத்தாள் மதிக்கும் மதி ஆய், முதல் வானவர்க்கும் வலீஇது ஆம் விதிக்கும் விதி ஆகும்; என் வில்தொழில் காண்டி' என மறுத்து உரைக்கும் இடம் இக்கருத்து வெளிப்பாட்டை அளிக்கின்றது. ஆயின் உணர்ச்சிப் பொங்கலில் கொப்பளித்த இவ்எண்ணம் பின்பு மாறிவிட்டதை அவனது, 'வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ' எனும் உரை காட்டுகின்றது. விதிவயப்பட்ட கதையையே கவிஞன் படைத்தலால், அதை எதிர்த்தலும், எதிர்க்க முயலுதலும் இன்றியே காப்பியம் அமைந்துவிடுகின்றது.

R. RAJU
Dy Commissioner H.Qrs.
(Retired,
HR&CE Administration Dept

முயற்சியால் விதியைப் புறங்காண முடியும் என்ற உலகியல் நம்பிக்கை போன்றே, அறிவாற்றலால் விதியை வெல்ல இயலும் என்ற அறிவியல் நம்பிக்கையும் உலகியலில் அமைகின்றன. ஆயின் கம்பன் கதைச் சூழலால் இதனை ஏற்காமையைக் காண்கின்றோம். அரக்கனின் சூழ்ச்சியால் சீதையை இழந்து நின்ற இராமனையும் இளவலையும் ஆறுதல் படுத்தும் சடாயுவின் உரையில் மதியால் வெல்லலாக விதிநிலையைக் கவிஞன் வெளிப்படுத்துகின்றான்.

அதிசயம் ஒருவரால் அமைக்கல் ஆகுமோ
துதி அறு பிறவியின் இன்ப துன்பம்தான்
விதிவயம் என்பதை மேற்கொள்ளா விடின்
மதிவலியால் விதியை வெல்ல வல்லமோ

சடாயு மைந்தர்க்குக் கூறிய இவ் ஆறுதல் மொழி, உலகியலில் துன்பப்படும் மக்கட்கு ஏற்ற ஆறுதல் மொழியாகவும் அமைகின்றது. துன்பமும் இன்பமும் வரும்போது அவற்றை விலக்கும் வன்மை மனிதனுக்கு இல்லை. ஏற்கனவே குறிக்கப்படாதிருந்தால் எந்தப் புதுமையும் மனிதன் செய்ய முடியாது. துன்பம் கண்டு நெஞ்சு வருந்தி அமைவது அறியாமை; விதியின் வன்மையை ஏற்றுக் கொள்ளும்போது அது சுவையாகித் துன்பம் மிகுவிக்காது அமையும்; மேற்செல்லும் பணியின்பால் ஈடுபாடு கொண்டு துவண்டுவிடாதிருக்க உதவும் எனத் தள்ளுற்ற அறமும் தேவர் துயருமே விதியாகியமையைச் சடாயு வாய்மொழி உணர்த்துகின்றது

ஆக்குவதும் அழிப்பதும் செயற்படுத்துவதும் இவ்விதியே என்ற நிலையில் இது இறைமையை மிக நெருங்கிச் செல்கின்றது. மனித வாழ்க்கையில் விதியே ஒளிச்சுடராக அமைகின்றது. விதி மனித வாழ்க்கையில் ஆட்சி செலுத்துவதையும் செயற்படுவதையும் காட்டிக் காலமும் மனிதன் செய்யும் பாவபுண்ணியமும் உதவுகின்றன. தசரதன் பிரிவால் துயருறும் இராமனுக்கு வசிட்ட முனிவர் கூறும் தேறுதல் மொழிகளில் விதியின் இவ்வாழ்வியல் தொடர்பினைப் படைத்தளிக்கின்றான் கவிஞன். வாழ்வில் செய்த நற்செயல்களே புண்ணிய நறுநெய்யாகின்றன; யாருக்காகவும் நிற்காத—செயற்பட்டுக் கொண்டே இருக்கின்ற-எதிர்த்து வெல்ல இயலாத காலமே வாழ்வு எனும் விளக்கின் திரியாக அமைகின்றது. இந்நெய்யையும் திரியையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தி அமைகின்றது விதி எனும் நெருப்பு. காலத் திரி தீர்ந்து புண்ணிய நெய் வற்றும்போதுதான் விதி மனித வாழ்வை விட்டு நீங்குகின்றது. அதுவரை ஆட்சி செய்ய அவ்வொளிச்சுடர்வாழ்வை விளக்கம் ஆக்குகின்றது.

புண்ணிய நறுநெயில், பொருஇல் காலம்ஆம்
திண்ணிய திரியினில், விதிஎன் தீயினில்
எண்ணிய விளக்குஅவை இரண்டு எஞ்சினால்,
அண்ணலே, அவிவதற்கு ஐயம் யாவதோ

விதியோடு ஓரளவு தொடர்புற்றே வினை பற்றிய எண்ணங்கள் அமைகின்றன. ஆயின் விதி, காரண காரியத் தொடர்பு காட்டாது அமைய, வினை அது காட்டி நிற்கின்றது. ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட நெறிவழிச் செல்வதாக விதி அமைய, செய்யும் நன்மையும்தீமையுமான செயல்கள்-தொழில்கள் பற்றி வினை அமைகின்றது. தீய செயல் செய்தார் தீமையுறலும், நற்செயல் புரிந்தார் நன்மை அடைதலும் வினையின்பாற்படுகின்றது. இவ்வாறு செயல்-பயன் எனக் காரண காரியத்தொடர்பு காட்ட முடியாதபோதே விதிபற்றிய கோட்பாடு உருவாகின்றது.

இப்பிறப்பின் செயலால், இம்மையிலேயே நன்மையோ தீமையோ ஆனபயன் விளைவது வினை என்றும், ஒரு பிறப்பின் செயலின் நன்மை தீமைப் பலன்கள், மறு அல்லது பிறிதொரு பிறவியில் அமைதல் ஊழ் எனவும் பிரித்துக்காண முயலுவதுண்டு. இந்நிலையில் ஊழ், பிறவித் தொடர்பு காட்ட முடியாத சூழலில் விதியோடுஓரளவு ஒத்து அமைகின்றது. ஊழின் செயற்பாட்டை, 'ஊழ்வினை' என்பதால் உணர்த்தி, விதியைப் போன்றே இதுவும் வெல்லற்கும், வேறுபடுத்தற்கும் அரியது என்ற முடிவுக்கு வருகின்றனர் உலகோர்.

நன்முடி சூடத் தயாரான இராமன், திடீர்த் திருப்பத்தால் முடியிழந்து கானேகும் சூழல் ஏற்பட்டபோது, வசிட்டனின் வருத்தமுறும் சிந்தனையாக இவ்உலகோர் எண்ணத்தைப் புலப்படுத்துகின்றான் கம்பன். விதியையே விதிக்கும் இயற்றும் ஆற்றலுடை நான்முகனாலும், ஒழிக்க ஒல்லாததாக இங்கு ஊழ்வினை சுட்டப்படுகின்றது.

வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்
தாழ்வினை அதுவர, சீரை சாத்தினான்;
சூழ்வினை நான்முகத்து ஒருவன் சூழினும்,
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?

வாழ்வுக்குரிய செயல்கள் வகுக்கப்பட்ட அன்றே எவ்வித முன் எச்சரிக்கையும் இன்றித் தாழ்வுக்கு நேரான செயல்கள் ஏற்பட்ட முழுமாற்ற நிலையில் வெளிப்படும் இவ்ஊழ்வலியை 'வினை' என்ற சொல்லால் மட்டுமே உணர்த்தலும், தொடர்ந்து வசிட்டன் உரையில் அமைகின்றது. ஒருவர் இழைத்த தீமை பிறிதொருவரிடம் வந்து கட்டிய நிலையில் இச்சொல்லாட்சி பொருத்தமுடையதாகக் கருதலாம்.

முன் இழைத்த தீமையால், அறியாமைச் செயலால் பின்வந்த தீப்பயனைத் தொடர்புபடுத்தி விளக்குமிடத்து இவ்வினை பற்றிய எண்ணங்கள் புலப்படுகின்றன. செய்த செயலின் வினைப்பயன் வந்து தவறாது என்பதனை இராமன் பிரிவால் உயிரிழந்த தசரதன் நிலை காட்டுகின்றது. கண்ணால் காணாது, ஒலி மேல் சென்ற கணையால் முனி மகன் இறந்தது ஊழாக அமைந்தபோதும், அச்செயலால்பெற்ற சாபம் விளைந்து, ஒத்த தீது பயந்தபோது, வினையின் செயற்பாடு புலப்படுகின்றது.

இவ்வாறே, இராமன் தான் ஏகல் 'விதி' யாகக் காட்டப்பட்டபோதும், குழந்தைப் பருவத்தில் அவன் உண்டை எறிந்து கூனிக்கு இழைத்த தீமையே பின் நிகழ்வில் விளைகின்றது. சுக்கிரீவனுக்கு இராமன் உணர்த்தும் நல்லரசில் தன் வினை தன்னைச்சுடும் இச் செயல் காகுத்தன் வாயிலாகவே வெளிப்படுவது இவ்எண்ணத்தைத் தருகின்றது.

சிறியர் என்று இகழ்ந்து நோவு
செய்வன செய்யல்: மற்றுஇந்
நெறி இகழ்ந்து யான் ஓர்தீமை
இழைத்தலால், உணர்ச்சி நீண்டு
குறியது ஆம் மேனி ஆய,
கூனியால், குவவுத் தோளாய்
வெறியன் எய்தி, நொய்தின்
வெந் துயர்க் கடலில் வீழ்ந்தேன்.

இவ்வினை விளைவும் விதிபற்றிய நம்பிக்கையும், இன்னும் பிறபல நம்பிக்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் மக்கள் உள்ளத்தைஇட்டுச் செல்கின்றன.

நல்வினையாயினும் தீவினையாயினும் அதன் பயனை அனுபவித்து முடியாவிடின் பிறப்பு உறும் என்பதில் பிறவிபற்றிய நம்பிபிக்கை தொடர்கின்றது. இருவினையும் அறுத்தவரே வான் உலகு எய்துவர் என்பதனைச் சரபங்கன் பிறப்புநீக்கம் காட்டுகிறது. தீப்புக்கு வீடுபெறும் முயற்சியில் ஈடுபட்ட சரபங்கன், இராமனுக்குக் கூறும் உரையில், 'போயின இருவினை, இனி ஒரு வினை இல்லை' எனல் இதனை விளக்குகின்றது.

தொல்வினையும் பிறப்பும் தொடர்புறுகின்றன. இலக்குவன், தனக்கு இப்பிறவியும் இதன் துன்பங்களும் ஏற்பட்டது வினையால் போலும் எனக் கருதுமிடத்து இவ் உலகியல் நம்பிக்கையைப் புலப்படுத்துகின்றான் கம்பன். சீதையின் சினந்துரைக்கு இலக்காகி, மாயமானின் குரல்வழி இராமனைத் தேடிப் புறப்படுகின்ற இலக்குவன் தன் நெஞ்சுடன் வருந்தி, 'தொல் வினைப் பிறந்து போந்து இதுபடும் பேதையேன்' என நொந்துரைத்தலாக இது அமைகின்றது.

இறை அவதாரமான இராமனிலும் இவ் உலகியல் உணர்வைப் பொருத்திக் காட்டுகின்றான் தத்துவக் கவிஞன். 'ஆக்கமும் கேடும் தாம்செய் அறத்தோடு பாவம் ஆம்' என்று உணர்த்த இராமன், இதனையும் சுக்ரீவனுக்கு நல்லரசு உணர்த்துமிடத்தில் சுட்டுகின்றான். செய்தவினை காரணமாகப் பிறப்பு அமைகின்றது; வினை முடிவே பிறப்பின் முடிவாகிப் பிறப்பறுத்தல் வழிப் பிறவாமைக்கு வாயில் ஆகின்றது.

இறத்தலும் பிறத்தல் தானும்
என்பன இரண்டும், யாண்டும்
திறத்துளி நோக்கின், செய்த
வினைஎனத் தெரிந்த அன்றே?

புறத்து இனிஉரைப்பது என்னே?
பூவின்மேல் புனிதற் கேனும்
அறத்தினது இறுதி, வாழ்நாட்கு
இறுதி; அஃதுஉறுதி அன்ப.

இறக்கும் உயிர்கள் மீண்டும் பிறக்கும் இயல்பை மாலையில் மறைந்து மீண்டும் காலையில் எழுந்துதோன்றும் கதிரவனிலும் காண்கிறான் கம்பன். வரம்பு இன்றித் தோன்றும் எண்ணற்ற மாக்கள் இறத்தலும் பிறத்தலும், பிறத்தலும் இறத்தலும் எனப் பல்பிறவி எடுத்து உழல்கின்றனர்.

இறத்தலும் பிறத்தலும் இயற்கை என்ற போதும், அறத்துறை வழி நிற்றலும், துறவு மேற் கொள்ளலுமே இப் பிறவி உழற்சியை ஒழிக்கும் இயல்பின என்ற உலகக் கோட்பாடும் அமைகின்றது. துறவே தெப்பமாகிப் பிறவிக் கடல் கடக்கும் வன்மையும் ஆற்றலும் இல்லாத உயிர்கள் உண்மையில்லாப் பிறவிகளாக அமைகின்றது. இக் கோடிக்கணக்கான உயிர்கள் கண்ணோட்டம் இல்லாக் கூற்றுக்கு இரையாகின்றன.

இறப்புப் பற்றிய இத்தகு எண்ணங்களைச் சார்ந்து மீண்டும் பிறப்பெடுக்கும் மறுபிறவி பற்றிய கருத்துக்கள் அமைதல் போன்று, மறுமை பற்றிய சிந்தனைகளும் அமைகின்றன. இறப்புக்குப் பிந்தைய நிலை என்ன எனும் கேள்வி எழுப்பிய ஆய்வில், மீண்டும் பிறப்பு என்பதும் மறுமை என்பதும் இருவகை முடிவு நிலையாக அமைகின்றன. மீண்டும் இவ்வுலகில் துறத்தல் என்பது முன்னதிலும், பிறவி இன்றித் பிறக்கம்-நரகம் போன்ற மறுவுலகு செல்லல் என்பது பின்னதிலும் பொருந்துகின்றன.

மறுமை எய்தாதவர் பிறப்பர்; பிறப்பு நீங்கியவர் மறுமை அடைவர் எனும் உலகோரின் நம்பிக்கை வயப்பட்ட எண்ணத்தைக் கம்பனும் தருகின்றான். பிறப்பற்ற தூய நிலையில் மறுமையாகத் துறக்கம் எய்தலைக் காலைக் கதிரவன் வருணனை அமைக்குமிடத்து வியப்பு மொழியாகச் சுட்டுகின்றான்.

துறக்கமே முதல ஆய
தூயன யாவை யேனும்
மறக்குமா நினையல் அம்மா
வரம்புஇல தோற்றும் மாக்கள்
இறக்குமாறு இதுஎன்பான் போல்
முன்னைநாள் இறந்தான் பின்நாள்
பிறக்குமாறு இதுஎன்பான் போல்
பிறந்தனன், பிறவா வெய்யோன்

துறக்கம் எத்துணை தூய்மையுடையதேனும், அதனை மறக்கும்படி பிறப்புப் பற்றிய நினைவுகள் உலகில் நிறைந்து அமைகின்றன. நல்லோர் எய்தும் இத்துறக்க நிலையைத் தசரதன் மறைவுக்குப்பின் வசிட்டன் உரையில் அமைக்கின்றான் கவிஞன். 'புண்டரீகத் தனி முதற்கும் போக்கு அறு விண்டுவின் உலகிடை விளங்கினான் அரோ' எனத் தசரதனின் மறுமை வாழ்வில் உயர்வும் சிறப்பும் புலப்படுத்தப்படுகின்றன.

தீயிடைப் புக்குத் தன் தூய்மை நிறுவும் சீதையைக் காட்டுமிடத்திலும், தசரதனின் துறக்கவாழ்வு சுட்டப்படுகின்றது. இராமனைத் தெருட்டுமாறு துறக்கத்திலுள்ள தசரதனுக்குச் சிவபெருமான் பணித்தலைப் பாடுமிடத்துக் கம்பன்இம் மறுமைநிலை உணர்த்துகின்றான். 'பெருந்தகைப்புதல்வனைப் பிரிந்த இன்னலால் உயிர் துறந்து, இருந்துறக்கத்துள் இருந்த மன்னவன்' எனத் தசரதன் சுட்டப்படுகின்றான்.

நன்மையுற்றோர் துறக்கம் எய்தி இன்புறும் இந்நம்பிக்கை வயப்பட்ட கோட்பாடு போன்றே, தீயோர்-வெவ்வினைப்பட்டோர் நல்லோர் நல்லதோர் நரகத்தில் ஆழ்தலும் தொடர்புடைக் கோட்பாடாக வெளிப்படுகின்றது. மறுபிறவி வினையாலாயது என்பது போன்றே இந்நரகமும் வினைவயப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

இவ் உலகத்தினும் இடருளே கிடந்து
அவ் உலகத்தினும் நரகின் ஆழ்ந்துபின்
வெவ்வினை துய்ப்பன விரிந்த யோனிகள்
எவ்அளவில் செயல் எண்ணல் ஆகுமோ

பல்வகைப் பிறப்பு வகைகளும் (யோனிகள்) இவ்வுலகத்தில் உறும் துன்பமுடை வாழ்வும், மறுமையின் நரகமும் தீவினையின் தொடர்ச்சி காட்டி அமைகின்றன.

வினை நீக்கும் இறைமையை, இராமனின் கால் கரம் தீண்டலாலும் பிறவற்றாலும் சாப நீக்கம் பெறும் அகலிகை, கவந்தன், விராதன் போன்றவரின் வழித் தெளியலாம். பிறப்பறுக்கும் பெற்றியை இறைமை அருளலைச் சபரி, சரபங்கன் போன்றோர் காத்திருந்து இராமனைக் கண்டு மறுமை எய்துதலில் புலப்படுவதாகக் கொள்ளலாம். விதிவகுக்கும் இவ் இறையே விதிநெறிப்பட்டு மனிதனாகி விதி வழிச் சென்று வினையறுக்கும் பாங்கில், விதியிலும் வலிய இறைமை புலப்படுத்துவதாகத் தெரிகின்றது. காணற்கும் காட்டற்கும் அரிய பல வெளிப்பாட்டு நிலையைத் தொடர்புடைய இவையனைத்தும் புலப்படுத்தி நிற்கின்றன.

# கலையும் சமயமும்

டாக்டர் சி. கிருஷ்ணமூர்த்தி, M.A., Ph.D.,
தொல்பொருள் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

சோழர் காலம் தென்னிந்திய வரலாற்றில் மிக உன்னத இடத்தைப் பெற்று விளங்குகின்றது. அக்காலத்தில் சமய சகிப்புத் தன்மையும், கட்டிடக் கலையின் வளர்ச்சியும், ஊராட்சி முறையும், நிலச் சீர்திருத்தமும், சிறந்து விளங்கின. மேலும் நாடகம் நடனம் இசை ஆகியவையும் பெரும் வளர்ச்சியடைந்தன. முறையாக அனைத்தையும் பார்க்கும்போது, எல்லாமே சமயத்தின் அடிப்படையில்தான் நடைபெற்றன என்பதை நாம் அறியலாம். கலையின் வளர்ச்சி, சமயத்தை வளர்ப்பதற்காக அமைக்கப்பட்ட எழிற்கூடமாக விளங்கியது. நிலச்சீர்திருத்தம் சமயத்தை வளர்ப்பதற்கு மிகவும் பயன்பட்டது. அதனைப் போன்றே நாடகம், நடனம், இசை ஆகியவையும் சமயத்தை வளர்ப்பதற்குப் பெரிதும் பயன் பட்டன.

நாடகம், நடனம் ஆகிய கலைகள் பொழுதுபோக்கு நினைவுடன் அமைக்கப்பட்டன என்று வெளிப்படையாகத் தோன்றிய பொழுதிலும், அக்கலைகளின் மூலமாகத் தமிழர் பண்பாடு பறைசாற்றப்பட்டதோடு சைவசமய நெறிகளும் எடுத்துக் காட்டப்பட்டன. தூக்கிய காலோடு நின்று நடனமாடும் தில்லையம்பலவனின் ஆடலுக்கு மனதைப் பறிகொடுக்காதவர் யாருளர்? அவன் இசையில் தானே உலக அசைவுகள் அனைத்தும் நடைபெறுகின்றன. நாளெல்லாம் உழைத்துஓடாகி உலவி வரும் உழைப்பாளிக்கு உண்ண உணவு இருந்தால் மட்டும் போதுமா? கண்ணாரக் கண்டு களிக்கவும், காதாரக் கேட்டு மகிழவும் அவனுக்கு விருந்து வேண்டாமா? சோழர் காலத்தில் அத்தனையும் இருந்தது; அத்துடன் சைவ சமயமும் தழைத்து வளர்ந்தது.

நாடகம் பற்றிய சிறு குறிப்புக்கள், கல்வெட்டுக்களில் காணப்பட்ட பொழுதிலும், அவைகள் கொண்டிருந்த கரு என்ன என்பதை அறிய முடியவில்லை. சிலவற்றை அதன் தலைப்பைக் கொண்டு ஆராயும்பொழுது தெளிவாக விளங்கும். நாடகங்கள் நடத்துவதற்கெனக் கோவில்களிலேயே நாடக சாலைகள் இருந்தன. சில நாடகசாலைக் கூடங்களில் நாடகம் மட்டுமின்றி வேறுபல நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அவற்றை, நானாவித நாடக சாலை என்று கூறுவர். திருவாவடுதுறையில் இவ்வித நாடகசாலை இருந்ததைப் பற்றிய குறிப்புக் கிடைக்கின்றது.

மேலும் அத்தகைய நாடக சாலைகளைப் பராமரிப்பதற்கென வழிமுறைகளும் வகுக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, திருவதிகையிலுள்ள திருவீரட்டானேசுவரர் ஆலயத்தின் சுப்பிரமணியர் அறையில் காணப்படும் ஒரு தூண் கல்வெட்டொன்று,

தன்னால் நிறுவப்பட்ட நாடகசாலையைப் பராமரிப்பதெற்கென நிவந்தம் அளித்த ஒருவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு, உத்தம சோழனின் 14-ஆம் ஆண்டு காலத்தைச் சார்ந்தது.

அவ்வாறு அமைக்கப்பட்ட நாடக சாலைகளில் சைவசமயத்தைப் பரப்புவதற்கென அமைக்கப்பட்ட நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன. மன்னர்களின் முயற்சியால் கட்டுவிக்கப்பட்ட கோயில்களின் தலவரலாறு, நாயன்மார்களின் வரலாறு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டொன்று, ''ஸ்ரீராஜராஜ விஜயம்'' என்ற நாடகத்தை நடிப்பதற்கு நாரணன் பட்ட திட்டன் என்பவனுக்கு நிலத்தை நிவந்தமாக அளித்ததைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு திருப்பூந்துருத்தியிலுள்ள புஷ்பவனேசுவரர் ஆலயத்தில் காணப்படுகின்றது. முதலாம் இராஜேந்திரனின் ஆறாம் ஆண்டில் வெளியிடப்பட்ட மற்றொரு கல்வெட்டு, தஞ்சைப் பெரியகோயிலின் வடக்குப்புறவெளிச் சுவரில் காணப்படுகின்றது. அதில், வைகாசித் திருவிழாவில், இராஜராஜேசுவர நாடகம் நடிக்கின்ற கலைஞர் குழுவிற்குத் தினசரி மான்யம் அளிப்பதற்கு வழிசெய்யப்பட்டதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவற்றில், முன்னதாகக் கூறப்பட்ட 'ஸ்ரீராஜராஜ விஜயம்' என்ற நாடகம் முதலாம் இராஜ ராஜனின் படையெடுப்புகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

இரண்டாவதாகக் கூறப்பட்ட இராஜராஜேசுவர நாடகம், தஞ்சைப் பெரிய கோயிலை அமைக்க ஏற்பட்ட காரணங்கள், அவற்றைக் கட்டி முடிப்பதற்கு உண்டான செலவு, அதன் சிறப்பு ஆகியவற்றைஅடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இதனைப் பற்றிய முழுச் செய்தியும் கல்வெட்டுக்களில் குறிப்பிடவில்லை. இவ்வாறு நகரில் நடிக்கப் படும் நாடகத்திற்குப் பல ஊர்களிலிருந்தும் மக்கள் வருகை புரிந்து கோயிலின் சிறப்பையும் அதன் பெருமையையும் அறிந்து செல்வர்.

மேலும் இராஜராஜேசுவர நாடகத்தை 'சாந்திக்கூத்தன் திருவாலன் திருமுதுகுன்றன்' என்றழைக்கப்படும் விஜயராசேந்திர ஆச்சாரியன் மற்றும் அவனது குழுவும் நடித்துக் காட்டியதற்காக 120 கலம் ஒருவருடத்திற்கு அளிக்கப் பட்டது.

முதலாம் குலோத்துங்கனின் 41ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று பூம்புலியூர் நாடகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்நாடகத்தை இயற்றியவர் கமலாலயபட்டர் என்று காணப்படுகின்றது. இந்நாடகத்தின் விளக்கத்தைப் பற்றி முழுக் குறிப்பு நமக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் பூம்புலியூர் நாடகம் என்று காணப்படுவதால், திருப்பாதிரிப் புலியூரில் நடந்த நிகழ்ச்சியையும், அத்தலத்தின் பெருமையையும் அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். திருநாவுக்கரசர் சூலைநோயால் வருந்தியதும், பின் மன முருகிச் சிவனை வழிபட்டு அந்நோய் நீங்கியதும், மகேந்திர வர்மன் திருநாவுக்கரசரை மீண்டும் சமண சமயத்தைத் தழுவும்படி துன்புறுத்தி முடியாமல், பின் தான் சைவசமயத்தைத் தழுவியதும் இந்நாடகத்தின் பொருளாக இருக்க வேண்டும். இந்நாடகமும் சைவ சமயம் பரவுவதற்கு அமைக்கப்பட்டதாகவே விளங்குகின்றது.

நான் முன்பு குறிப்பிட்டபடி நாயன்மார்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டும் நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன. உதாரணமாக, தஞ்சைப் பெரிய கோயிலின் கருவறையின் மேற்குப்புறச் சுவரில் காணப்படும் முதலாம் இராசராசன் ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டொன்று, திருமூலநாயனார் நாடகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. திருமூலநாயனார் நாடகம் தஞ்சைப் பெரியகோயிலில் புரட்டாசி மாதத்தில் நடைபெறும் ஏழுநாள் உற்சவத்தில் நடித்துக் காட்டப்பட்டது. மேலும் இந்நாடகம் திருமூலநாயனாரின் நட்சத்திரமான பூரட்டாதியில் நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. இந்நாடகத்தின் மூலம் திருமந்திரத்தின் சைவ சமய நெறிகள் தெளிவாக வளர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கண்ட சில உதாரணங்களின் மூலம் சைவசமயம் நாடகங்களின் மூலமாகப் பரவுவதற்குச் சோழர் காலத்தில் வகைசெய்யப்பட்டது என்பதை அறியலாம். நாடகங்கள் திருவிழாக் காலங்களில் நடத்தப்பட்டதோடு, கோயில்களில் காணப்படும் நாடகசாலைகளில் நடிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பெரும்பாலான கோயில்களில் நாடக சாலைகள் அமைக்கப்பட்டதன் விளைவாக நாடகம் சைவ சமயம் பரவுவதற்கு ஒரு சிறந்த அமைப்பாக இருந்திருக்க வேண்டும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

நாடகத்தைப் போன்றே நடனமும் சைவ சமய வளர்ச்சிக்குப் பெரும்பணி ஆற்றியுள்ளது. சோழர் காலத்தில் நடன வளர்ச்சியைப் பற்றி அறியச்சிதம்பரத்தின் கிழக்குக்கோபுர வாயிலில் காணப்படும் 108 நடன வடிவமைப்புக்களும், மற்றும் தஞ்சை, திரிபுவனம், திருவாரூர் போன்ற இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்களும் சிறந்த எடுத்துக்காட்டு. நடனம், பெரும்பான்மையாகக் கோயில்களுக்கே உரிய கலையாக அமைக்கப்பட்டிருந்தது. கோயில்களுக்குப் பணிபுரிவதற்கெனப் பெண்கள் இருந்தனர். கோயில்களுக்குத் தங்களை விற்றுக்கொண்டு பணி செய்த பெண்களைப் பற்றிய கல்வெட்டுக்கள் நமக்குச் சில கிடைத்துள்ளன. அத்தகைய பெண்கள் வறுமை காரணமாகத் தங்களை விற்றுக்கொண்டார் என்று கூறுவதை விடச் சிவனுக்குத் தொண்டு செய்யத் தங்களை அடிமையாக்கிக் கொண்ட தேவரடியார்கள் என்றே கூறல் வேண்டும். அவர்களைப் பற்றி ஆராய்வதைவிட அவர்கள் செய்த பணி எவ்வாறு இருந்தது என்பதை மட்டும் இங்குக் காண்போம்.

நடனத்தைப் பயிற்றுவிக்கும் ஆசிரியருக்குக் கூத்தரசன், நிருத்தப் பேரரரையன் நட்டுவ ஆசான் என்று பெயர். அவர்கள் கோவில் களிலேயே தங்கி நடனம் பயிற்றுவித்தனர். அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருளைப் பெற அவர்களுக்கு நிலங்கள்விடப் பட்டன. அதற்கு 'நட்டுவக்காணி அல்லது நட்டுவநிலை' என்று பெயர். நடனங்களில் நாடக நடனம் சிறப்பு வாய்ந்து விளங்கியது. ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து, சாந்திக்கூத்து போன்றவை அவற்றில் சில.

மேற்கண்ட கூத்துக்களை வைகாசி விசாகம், தைப்பூசம், சித்திரைத் திருவிழா ஆகிய காலங்களில் கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களில் ஏழு அல்லது ஐந்து நாட்கள் நடித்து நடனமாடிக் காட்டினர். ஒவ்வொன்றிலும் சைவ சமயக் கருத்துக்கள் புகுத்தப்பட்டுப் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டன.

நடன மாதர்கள் ஒவ்வொரு சிவன்கோவிலிலும் இருந்து பணிபுரிந்து வந்தனர். அம் மாதர்களுக்குச்சூலப்பொறி இடப்பட்டிருந்தது. தஞ்சைப் பெரிய கோவிலின் வடக்குப்புற வாயிலின் வெளிப்புறத்தில் காணப்படும் கல்வெட்டொன்று முதலாம் இராசராசனின் ஆணை

ஒன்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அதில், 400 நடன மாதர்களைப் பல கோவில்களி லிருந்து வருவித்தான் என்று குறிப்பிடுகின்றது. இதன்மூலம் ஒவ்வொரு கோயிலிலும் நடன மாதர்கள் இருந்து சிவத்தொண்டு செய்து வந்த னர் என்று தெரிகின்றது. அவர்கள் தங்கள் வாழ்க்கையையே கோவில் பணிக்கு அர்ப் பணித்துக் கொண்டு இருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. நடனமாதர்கள் சுவாமியின் ஊர் வலத்தின்பொழுதும் தெருக்களில் நடனமாடி மக்களை மகிழ்வித்தனர். உதாரணமாக, சித்த லிங்க மடத்தில் காணப்படும் கன்னரதேவனின் 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் மேற் கண்ட நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் திருப்புலிப்பகவர் நிருத்த விடங்கை என்ற நடனப்பெண் கன்னர தேவனின் முன்பாகத் திருவிழா ஊர்வலத்தின்பொழுது நடனமாடி னாள் என்றும், அவளைக் கௌரவிக்கும் பொருட்டு அவன் நிலத்தை அவளுக்கு நிவந் தம் அளித்தான் என்றும் குறிப்பிடுகின்றது.

சோழர் காலச் சைவ சமய வளர்ச்சியில் கலையின் மகத்தான இடத்தை மேலும் பல கல்வெட்டுக்களும், இலக்கியங்களும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. சைவசமய வளர்ச்சிக் குக் கலையின் பங்கை என்றும் நிலைத்து நிற் கும்படி சோழர்கள் ஆற்றிய பங்கு வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

——o——

# செயல் அலுலர்கள் நியமனம்

1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டத்தின் 45 (1) பிரிவின்கீழ் கோயில்களில் நல்ல நிர்வாகம் நடைபெறுதல் குறித்துப் பின்வருமாறு செயல் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் :—

(1) சென்னை-21, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள அருள்மிகு பெரிய பாளையத்தம்மன் கோயில், சென்னை-1 முல்லா சாகிப் தெருவில் உள்ள அருள் மிகு அரங்கநாதசாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நாள் 30-10-1981.

(2) தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், திருகவல்லி அருள்மிகு மங்கள புரீச்வரர் என்னும் திருச்சோபநாதசுவாமி கோயில், தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், திருவகீந்திரபுரம் அருள்மிகு தேவநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நாள் 30-10-81.

(3) தென் ஆற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், நகரம், எம். ஆர். எஸ். இரயில்வே கேட், அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில், தென் ஆற்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டம், நகரம், அருள்மிகு இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட் டுள்ளார். நாள் 30-10-1981.

(4) பெரியார் மாவட்டம், கோபி வட்டம், கலிங்கம் கிராமம், அருள்மிகு காரைக்கால் அம்மன் கோயில், பெரியார் மாவட்டம், கோபி வட்டம் பாரியூர் கிராமம் அருள் மிகு கொண்டத்துக் காளியம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நாள் 30-10-1981.

(5) வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டம், காங்கேயநல்லூர், அருள்மிகு காங்கேய ஈசுவரர் கோயில், வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், அரங்கபுரம், அருள்மிகு கோதண்டராமசுவாமி கோயில், வட ஆற்காடு மாவட் டம், குடியாத்தம் வட்டம், காங்கேயநல்லூர் அருள்மிகு சுந்தரவரதராசப் பெருமாள் கோயில் ஆகிய மூன்று கோயில்களும், வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், நகரம், லாங் பசார் (நீள அங்காடி), அருள்மிகு வேம்புலி யம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட் டுள்ளார். நாள். 30-10-1981.

(6) திருநெல்வேலி சந்திப்பு, சிந்துபூந்துறை (பேரூந்து நிலையம்), அருள்மிகு பாக் கிய விநாயகர் கோயில், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலிச் சந்திப்பு, மேலவீரராகவபுரம், அருள்மிகு வரதராசப் பெருமாள் கோயிலுடன் இணைக்கப் பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நாள் 31-10-1981.

(7) தென் ஆற்காடு மாவட்டம், பண்ருட்டி வட்டம், கொட்டாலம்பாக்கம் அருள் மிகு சிதம்பரேசுவரர் மற்றும் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில், தென் ஆற்காடு மாவட்டம், பண்ருட்டி வட்டம் மற்றும் நகரம், அருள்மிகு வரதராசப் பெருமாள் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப் பட்டுள்ளார். நாள் 31-10-1981.